தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

அலுவலக வெளியீடு

தொகுதி - 23.

எண் - 1

6 ஏப்ரல் 1992

வெளியீடு 14-11-1992 Issued 14-11-1992

820/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கள் கிழமை, ஏப்ரல் 6, 1992 - தொகுதி 23 எண். 1
Monday, the 6th April 1992 - Volume 23 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

| | பக்கங்கள். |
|---|---|
| திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் .. | 48—35 |
| திரு. அ. பாப்பா சுந்தரம் .. | 53—57 |
| திரு. க. பழனிசாமி .. | 57—61 |
| திரு. என். பன்னீர்செல்வம் .. | 62—65 |
| டாக்டர் தே. குமாரதாஸ் .. | 65—70 |
| திரு. த. க. இராதாகிருஷ்ணன் .. | 70—73 |
| *திரு. வ. சத்தியமூர்த்தி .. | 73—76 |
| திரு. ஜி. பழனிசாமி .. | 76—80 |
| திரு. வே. கண்ணன் .. | 80—83 |
| திரு. ஏ. டி. செல்லசாமி .. | 83—86 |
| திரு. தி. சாத்தையா .. | 86—89 |
| டாக்டர் அ. செல்லக்குமார் .. | 89—96, 98—100, 103,104 |
| அவை நடவடிக்கைகளைத் திரித்து வேறுபொருள் வருகிற வகையிலோ திசைதிருப்புகிற வகையிலோ செய்திகள் வெளியிட வேண்டாமென்று பத்திரிகைகளுக்கு வேண்டுகோள் .. | 44—45 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 138 |


164976

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, சர்க்கரைப்பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுகாகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்டத்துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு, நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராம தானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

5. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர்மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல்பொருளியல்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

9. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

10. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.

11. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற குடிநீர் வழங்கல்.

12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள்.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. ரகுபதி: தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி.

15. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு.டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

16. சமூக நலத்துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம்.

18. மீனளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மீனளம்.

19. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

**Thiru BHISHMA NARAIN SINGH**

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister .. **The Hon. Dr. J. JAYALALITHA :** public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All-India Services. District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics, and Newsprint Control.

2. Minister for Finance.. **The Hon. Dr. V.R. NEDUNCHEZHIAN :** Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law .. **The Hon. Thiru K. A. KRISHNASAMY:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of Companies.

4. Minister for Revenue .**The Hon. Thiru S.D. SOMASUNDARAM :** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes.

5. Minister for Backward Classes .. **The Hon. Thiru ERAAMA VEERAPPAN:** Backward Classes, Most Backward Classes & Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen.



6. Minister for Education .. **The Hon. Dr. C. ARANGANAYAGAM :** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare and Archaeology.

7. Minister for Health.. **The Hon. Thiru S. MUTHUSAMY :** Health, Medical Education, Family Welfare, and Environmental Pollution Control.

8. Minister for Transport **The Hon. Thiru K. A. SENGOTTAYAN :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forest and Cinchona.

9. Minister for Handlooms and Textiles. ..**The Hon. Thiru E. MADHUSUDHANAN :** Handlooms and Textiles.

10. Minister for Public Works. ..**The Hon. Thiru S. KANNAPPAN :** Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity and Non-Conventional Energy Development and Iron and Steel Control.

11. Minister for Local Administration. ..**The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU :** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.

12. Minister for Food and Co-operation.. **The Hon. Thiru G. VISWANATHAN :** Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

13. Minister for Labour..**The Hon. Thiru S. RAGUPATHY :** Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

14. Minister for Agriculture. ..**The Hon. Thiru Ku. Pa. KRISHNAN :** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture Sugarcane cess and Sugarcane Development.

15. Minister for Housing and Urban Development. .. **The Hon. Thiru T. M. SELVAGANAPATHY :**
Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development, Madras Metropolitan Development Authority.

16. Minister for Social Welfare. .. **The Hon. Thirumathi R. INDIRAKUMARI :**
Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. .. **The Hon. Thiru M. ANANDAN :**
Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development,

18. Minister for fisheries .. **The Hon. Thiru D. JAYAKUMAR :**
Fisheries.

19. Minister for Rural Industries. .. **The Hon. Thiru S. NAGOORMEERAN :**
Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.



**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.**

**பேரவைத் தலைவர் :**

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

**பேரவைத் துணைத் தலைவர் :**

பேராசிரியர் க. பொன்னுசாமி.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :**

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

**செயலாளர்.**

திரு. செ. சு. ஜானகிராமன்

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி).

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகர், திரு. ஆர்., பி.ஏ. | துணைச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர். |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. ச., பி.எஸ்ஸி. | குழு அலுவலர். |
| வெங்கடராமன், திரு. ப. சீ., பி.காம். | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வெ., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| கணேசன், திரு. சா., பி.ஏ., பி. ஜி. எல். | சார்புச் செயலாளர். |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா, திருமதி பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |



| | |
|---|---|
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம்.ஏ. | தலைமை நிருபர். |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. | தலைமை நிருபர். |
| ஜெயதேவ் திரு., பி. சி. | தலைமை நிருபர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) பெயர்களும் தொகுதிகளும்.

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1. அண்ணாமலை, திரு. எஸ். | .. | ஆலந்தூர். |
| 2. அபரஞ்சி, திரு. பெ. | .. | அரூர் (செ.வ.). |
| 3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. | மயிலாடுதுறை. |
| 4. அமர்நாத், திரு. ஓ. எஸ். | .. | மதுரை கிழக்கு. |
| 5. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | | கன்னியாகுமரி. |
| 6. அரங்கநாதன், திரு. ஆர். டி. | .. | விருத்தாசலம். |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | .. | தொண்டாமுத்தூர். |
| 8. அர்ச்சுனன், திரு. க. | .. | வீரபாண்டி. |
| 9. அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம். |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. | .. | ஒரத்தநாடு. |
| 11. அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 12. அன்பழகன், திரு. எஸ். | .. | நாமக்கல் (செ.வ.). |
| 13. ஆசைமணி, திரு. எஸ். | .. | குத்தாலம். |
| 14. ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம். |
| 15. ஆண்டித் தேவர், திரு. எஸ். | .. | திருப்பரங்குன்றம். |
| 16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 17. ஆறுமுகம், திரு. செ. | .. | வானூர் (செ.வ.). |
| 18. ஆனந்தன், திரு. எம். | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 19. இந்திரகுமாரி, திருமதி இரா. | .. | நாட்ராம்பள்ளி. |
| 20. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | | மேலூர். |
| 21. இராசாராமன், திரு. சோ. | .. | பாபநாசம். |
| 22. இராசாராம், திரு. க. | .. | பனமரத்துப்பட்டி. |
| 23. இராதாகிருஷ்ணன், திரு. த. க. | .. | திருமங்கலம். |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 25. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | | திருவாடனை. |
| 26. இராமசுவாமி, திரு. சி. | .. | சங்கராபுரம். |
| 27. இராமச்சந்திரன், திரு. மா.சா.மா. | | இளையான்குடி. |
| 28. இராமச்சந்திரன், திரு. ஒ. ஆர். | .. | கம்பம். |
| 29. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. | சாத்தூர். |
| 30. இராமச்சந்திரன், திரு. ச. | .. | பண்ருட்டி. |
| 31. இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். | .. | செஞ்சி. |
| 32. இராமநாதன், திரு. இராம. | .. | கும்பகோணம் |
| 33. இராஜமன்னார், திரு. சு. சே. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 34. இராஜன்பாபு என்கிற தணிகை பாபு, திரு. கி. | .. | திருத்தணி. |
| 35. இராஜேந்திரன், திரு. பி.வி. | .. | வேதாரண்யம். |
| 36. இராம வீரப்பன், திரு. | .. | காங்கேயம். |
| 37. இலதா பிரியகுமார், திருமதி | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 38. இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.). |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 41. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | .. | பள்ளிப்பட்டு. |
| 42. கண்ணப்பன், திரு. எஸ். | .. | திருப்பத்தூர். |
| 43. கண்ணன், திரு. வே. | .. | திருவண்ணாமலை. |
| 44. கந்தசாமி, திரு. கே. | .. | தலைவாசல் (செ.வ.). |
| 45. கருப்புசாமி, டாக்டர், எம். | .. | குன்னூர் (செ.வ.). |
| 46. கலியபெருமாள், திரு. ப. | .. | திருவையாறு. |
| 47. கலைச்செல்வி, திருமதி கே. எம். | .. | காட்பாடி. |
| 48. கவிநிலவு தர்மராஜ், திருமதி | .. | மொடக்குறிச்சி. |
| 49. கற்பகம் இளங்கோ, திருமதி | .. | காரைக்குடி. |
| 50. கனகவல்லி, திருமதி என். சி. | .. | விளாத்திகுளம். |
| 51. காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | .. | உத்திரமேரூர். |
| 52. காந்திராஜன், திரு. ச. | .. | வேடசந்தூர். |
| 53. காளன், திரு. கோ. | .. | வில்லிவாக்கம். |
| 54. காளிராஜன், டாக்டர் மு. | .. | சமயநல்லூர் (செ.வ.). |
| 55. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. | ஆயிரம்விளக்கு. |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 56. கிருஷ்ணன், திரு. எஸ். எம். .. | தாம்பரம். |
| 57. கிருஷ்ணன், திரு. கு. ப. .. | ஸ்ரீரங்கம். |
| 58. கிருஷ்ணன், திரு. சி. .. .. | ஓமலூர். |
| 59. குப்பன், திரு. க. .. — | திருவொற்றியூர். |
| 60. குமரி அனந்தன், திரு. .. .. | சாத்தான்குளம். |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர். |
| 62. குழந்தைவேலு, திரு. சி. .. | குளத்தூர் (செ.வ.). |
| 63. கோடிமாரி, திரு. ஆர். .. .. | நாகப்பட்டினம். |
| 64. கோபால கிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 65. கோபால், டாக்டர் க. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 66. கோவிந்தராசு, திரு. மா. .. | ரிஷிவந்தியம். |
| 67. சக்குபாய், திருமதி ரா. .. | கும்மிடிப்பூண்டி. |
| 68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி... | திருவள்ளூர். |
| 69. சஞ்சய் ராமசாமி, திரு. .. .. | விருதுநகர். |
| 70. சண்முகநாதன், திரு.எஸ். .. | ஆலங்குடி. |
| 71. சண்முகம், திரு. எஸ்.வி. .. | மதுரை மேற்கு. |
| 72. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 73. சந்திரசேகர், திரு. வி.பி... .. | பொள்ளாச்சி. |
| 74. சம்பத், திரு. எ. .. .. | வாணியம்பாடி. |
| 75. சரஸ்வதி, திருமதி அ. தி... .. | சத்தியமங்கலம். |
| 76. சரஸ்வதி, திருமதி ப. .. .. | கபிலர்மலை. |
| 77. சரோஜா, டாக்டர் வெ. .. | சங்கரி (செ.வ.). |
| 78. சாத்தையா, திரு. தி. .. .. | இராஜபாளையம் (செ.வ.). |
| 79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர். |
| 80. சிங்காரம், திரு. ஆர். ... .. | பேராவூரணி |
| 81. சிங்காரம், திரு. கே. .. .. | மொரப்பூர். |
| 82. சிங்கை கோவிந்தராசு, திரு. .. | சிங்காநல்லூர். |
| 83. சியாமளா, திருமதி ரெ. .. | கோவில்பட்டி. |
| 84. சிவசுப்பிரமணியன், திரு. கு. .. | குறிஞ்சிப்பாடி |
| 85. சிவபதி, திரு என். ஆர். .. .. | தொட்டியம். |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 86. சின்னசாமி, திரு. கா. .. .. | சேந்தமங்கலம் (ம.ப.). |
| 87. சின்னசாமி, திரு.ம. .. .. | கரூர். |
| 88. சின்னசாமி, திரு. வி.கே. ... | பவானிசாகர் |
| 89. சின்னப்பன், திரு. கே. கே. .. | ஜெயங்கொண்டம். |
| 90. சீனியம்மாள், டாக்டர் மு. ... | அவினாசி (செ.வ.) |
| 91. சீனிவாசன், திரு. ஆ. கு. .. | பெரணமல்லூர். |
| 92. சீனிவாசன், திரு. கு. .. | மன்னார்குடி. |
| 93. சுதர்சனம், திரு. டி. ... | பூந்தமல்லி. |
| 94. சுந்தரசாமி, திரு. எம். .. | கலசப்பாக்கம். |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. ... | விளவன்கோடு. |
| 96. சுந்தரம், திரு. எம். கே. ... | தண்டராம்பட்டு. |
| 97. சுந்தரராஜ், டாக்டர் எஸ். .. | பரமக்குடி (செ.வ.) |
| 98. சுந்தரவேல், திரு. ஏ.கே.சி. .. | திருப்பத்தூர். |
| 99. சுந்தராம்பாள், திருமதி செ. .. | மேட்டூர். |
| 100. சுப்பிரமணியம், திரு. வ. மு. .. | மானாமதுரை (செ.வ.). |
| 101. சுப்பிரமணியன், திரு. வி. என். .. | பெருந்துறை. |
| 102. சுப்பிரமணியன், திரு. வீ. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 103. சுப்புரத்தினம், திரு. ஆ. ... | பழனி (செ.வ.). |
| 104. சுலோசனா, செல்வி எல். .. | மேட்டுப்பாளையம். |
| 105. சுவாமிநாதன், திரு. சி. .. | புதுக்கோட்டை. |
| 106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிசெட்டி பாளையம். |
| 107. செல்லக்குமார், டாக்டர் அ. .. | அண்ணா நகர். |
| 108. செல்லசாமி, திரு. ஏ. டி. .. | ஒட்டன்சத்திரம். |
| 109. செல்லதுரை, திரு. ஆ. .. | திருச்செந்தூர். |
| 110. செல்வகணபதி, திரு. டி. எம். .. | திருச்செங்கோடு. |
| 111. செல்வராசன், திரு. அ. — | துறைமுகம். |
| 112. செல்வராஜ், திரு. கே. ... | கோயம்புத்தூர் மேற்கு. |
| 113. செழியன், திரு. தா. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 114. சேகர், டாக்டர் எம். பி. ... | பெரம்பூர் (செ.வ.). |
| 115. சேகர், திரு. எம். ஜி. — | பாலக்கோடு. |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 116. சொக்கலிங்கம், திரு. பீ. | மதுராந்தகம். |
| 117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. | தஞ்சாவூர். |
| 118. ஞானசேகரன், திரு. சி. | வேலூர். |
| 119. டேனியல்ராஜ், திரு.எஸ் | ஸ்ரீவைகுண்டம். |
| 120. தங்கமுத்து, திரு.கு. | திருவோணம். |
| 121. தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம். |
| 122. தங்கவேல், திரு. எம். | முசிறி. |
| 123. தண்டாயுதபாணி, திரு.வி. | குடியாத்தம். |
| 124. தமிழரசன், திரு. செ.கு. | வந்தவாசி (செ.வ.). |
| 125. தமிழரசு, திரு.வெ. | ஆத்தூர். |
| 126. தம்புசாமி, திரு.வே. | திருவாரூர் (செ.வ.) |
| 127. தர்மலிங்கம், திரு.கி. | அணைக்கட்டு. |
| 128. தர்மலிங்கம், திரு.பே. | பாளையங்கோட்டை |
| 129. தவசி, திரு.கே. | ஆண்டிப்பட்டி. |
| 130. தனபால், திரு.ம. | திருப்போரூர் (செ.வ.). |
| 131. தாமரைக்கனி, திரு.இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 132. தாமோதரன், திரு.சி. | நெல்லிக்குப்பம். |
| 133. திருநாவுக்கரசு, திரு.எஸ். | அறந்தாங்கி. |
| 134. துரை, திரு.எஸ். எம். | ஆத்தூர். |
| 135. துரைமுருகன், திரு. கு. சு | பல்லடம். |
| 136. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில். |
| 137. தெய்வநாயகம், திரு.எ. | மதுரை மத்தி. |
| 138. தென்னவன், திரு.மு. | இராமநாதபுரம். |
| 139. தேவராஜ், திரு.அ. | செய்யாறு. |
| 140. தேனி பன்னீர்செல்வம், தி | போடிநாயக்கனூர் |
| 141. நடேசன், திரு.இரா. | திருவட்டாறு. |
| 142. நடேசன், திரு.மு. | சேலம்-2. |
| 143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குநேரி. |
| 144. நாகூர்மீரான், திரு. எஸ். | கடையநல்லூர். |
| 145. நிர்மலா, செல்வி பி. | திண்டுக்கல். |
| 146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி. |
| 147. பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 148. பட்டாபிராமன், திரு. கா. ப. | காஞ்சிபுரம். |
| 149. பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 150. பரமசிவம், திரு. ஆர். பி. | சின்னசேலம். |
| 151. பரமசிவன், திரு. ஏ. எம். | சோழவந்தான். |
| 152. பலராமன், திரு. உ. | பூங்காநகர். |
| 153. பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம். |
| 154. பழனிசாமி, திரு. க. | எடப்பாடி. |
| 155. பழனிசாமி, திரு. நா. சா. | கிணத்துக்கடவு. |
| 156. பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர். |
| 157. பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 158. பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம். |
| 159. பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர். |
| 160. பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம். |
| 161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர். |
| 162. பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி. |
| 163. பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 164. பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி. |
| 165. பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 166. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167. பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை. |
| 168. பாலன், திரு. எம். கே. | சைதாப்பேட்டை. |
| 169. பாலையா, திரு. ஆ. | குளச்சல். |
| 170. பீட்ரிக் டி, சோசா, டாக்டர் | நியமனம் |
| 171. பீட்டர் அல்போன்ஸ், திரு.எஸ். | தென்காசி. |
| 172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி. |
| 173. புரட்சிமணி, திரு. ச. | மங்களூர் (செ.வ.). |
| 174. புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம். |
| 175. பூராசாமி, திரு. எம். | பூம்புகார். |
| 176. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.). |
| 177. பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம். |
| 178. பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.). |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 180. பொன்னுசாமி, பேராசிரியர் க. | .. | மருங்காபுரி. |
| 181. பொன்னுசாமி, திரு. பெ. | .. | தருமபுரி. |
| 182. பொன்னுவேலு, திரு. ஏ. தா. | .. | வரகூர் (செ.வ.). |
| 183. போளூர் வரதன், திரு. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 184. மணிமேகலை, டாக்டர் சு. | .. | அரியலூர். |
| 185. மணிமேகலை, திருமதி வி. ஜி. | .. | அருப்புக்கோட்டை. |
| 186. மணிவாசகம், திரு. கே.பி. | .. | உடுமலைப்பேட்டை. |
| 187. மதுசூதனன், திரு.இ. | .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188. மரியம் உல் ஆசியா, திருமதி கே. | .. | அரவக்குறிச்சி. |
| 189. மல்லிகா, செல்வி கோ. | .. | புவனகிரி. |
| 190. மனோகரன், திரு. கே.ஏ. | .. | ஓசூர். |
| 191. மாணிக்கம், திரு. சி. | .. | ஈரோடு. |
| 192. மாலா, டாக்டர் ஜி. ஆர். | .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 193. முத்துசாமி, திரு.சு. | .. | பவானி. |
| 194. முத்தையா, திரு.இரா. | .. | சேடப்பட்டி. |
| 195. முருகானந்தம், திரு. சே. ஆர். | .. | சிவகங்கை. |
| 196. முருகையா பாண்டியன், திரு. ஆர். | | அம்பாசமுத்திரம். |
| 197. முனிரத்தினம், திரு. ஏ. எம். | .. | சோளிங்கர். |
| 198. முனிவெங்கடப்பன், திரு. கே. | .. | கிருஷ்ணகிரி. |
| 199. முனுசாமி, திரு. கா.பூ. | .. | காவேரிப்பட்டினம் |
| 200. முஹமது ஆசிப், திரு. | .. | திருவல்லிக்கேணி. |
| 201. மூர்த்தி, திரு.து. | .. | சீர்காழி (செ.வ.). |
| 202. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில். |
| 203. ரகுபதி, திரு. செ. | .. | திருமயம். |
| 204. ரங்கநாதன், திரு .ப. | .. | புரசைவாக்கம். |
| 205. ரங்கராஜன், திரு. டி.எம். | .. | மயிலாப்பூர். |
| 206. ரத்தினவேல், திரு. த. | .. | திருவெறும்பூர். |
| 207. ரமணி நல்லதம்பி, திருமதி | .. | ராதாபுரம். |
| 8. ரமேஷ், திரு. வி. பி. ஆர். | .. | தூத்துக்குடி. |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 209. ரவிக்குமார், திரு.ஏ. | .. | பொன்னேரி (செ.வ.). |
| 210. ரவிச்சந்திரன், திரு.வி. | .. | உப்பிலியாபுரம் (ம.ப.). |
| 211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | .. | ஆலங்குளம். |
| 212. ராஜு, திரு. எச்.எம். | .. | உதகமண்டலம். |
| 213. ராஜு, திரு. கே. ஆர். | .. | கூடலூர். |
| 214. ராஜு, திரு. கே.பி. | .. | பேரூர். |
| 215. ராஜேந்திரன், திரு. என்.ஆர். | | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 216. லட்சுமணன், திரு. வி. கே. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 217. லாரன்ஸ், திரு. கு. | .. | பத்மநாபபுரம். |
| 218. லோகாம்பாள், திருமதி ஜெ. | .. | லால்குடி. |
| 219. வரதராஜன், திரு. செ.து. | .. | செங்கல்பட்டு. |
| 220. விசுவநாதன், திரு. ஜி. | .. | ஆற்காடு. |
| 221. வீரபாண்டியன், டாக்டர் பெ. | .. | செங்கம் (செ.வ.) |
| 222. வெங்கடராம ரெட்டி, திரு. மு. | .. | தளி. |
| 223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | | கடலூர். |
| 224. வேடியப்பன், திரு. தா. | .. | போளூர். |
| 225. வேணுகோபால், திரு. என். ஜி. | .. | ராணிப்பேட்டை. |
| 226. வேலையா, திரு. டி. | .. | திருநெல்வேலி. |
| 227. ஜனார்த்தனன், திரு. தே. | .. | விழுப்புரம். |
| 228. ஜானகிராமன், திரு. கோ. | .. | மேல்மலையனூர். |
| 229. ஜீனத் சர்புதீன், திருமதி | .. | சேப்பாக்கம். |
| 230. ஜெயக்குமார், திரு. எஸ். | .. | தியாகராய நகர். |
| 231. ஜெயகுமார், திரு. டி. | .. | ராயபுரம். |
| 232. ஜெயராமன், திரு. எஸ். ஆர். | .. | சேலம்-1. |
| 233. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | .. | பர்கூர். |
| 234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | .. | ஆரணி. |
| 235. ஸ்ரீதரன், டாக்டர் அ. | .. | வால்பாறை (செ.வ.). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.

| | | |
|---|---|---|
| சுப்பிரமணியன், திரு. கே. | .. | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## பங்குனி 24, பிரஜோற்பத்தி–திருவள்ளுவர் ஆண்டு 2023, 1992 ஏப்ரல் 6, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்."

குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவர் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்றும் இல்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் அமைச்சர் திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவையின் முன் மொழிகிறேன்:

முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சருமான திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாச்சி அவர்கள் 3–4–1992 அன்று மறைவுற்ற செய்தி கேட்டு இப் பேரவை மிகவும் வருந்துகிறது. திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் பொதுத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்ட மன்றப் பேரவைக்கும், 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை தென்னார்க்காடு மாவட்டம் நெல்லிக்குப்பம் பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணி யாற்றியுள்ளார். மேலும், அவர் 1954 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்று, சிறப்புறப் பணியாற்றியவர் ஆவார். 1966 ஆம் ஆண்டு முதல் 1978 ஆம் ஆண்டு வரை, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1980 ஆம் ஆண்டு முதல் 19[illegible] ஆம் ஆண்டு வரை மக்களவை உறுப்பினராகவும் நல்லமுறை[illegible]

பணியாற்றியுள்ளார். சமுதாயத்தில் நலிந்த பிரிவு மக்களின் முன்னேற்றத்திற்காகவும், மேன்மைக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்து சேவை புரிந்த பெருமகனாகவும் திகழ்ந்து வந்துள்ளார். அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்த குடும்பத்திற்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், இயற்கை எய்திய பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.)

## 2. மானியக் கோரிக்கைகள், 1992–93,—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

### (ஆ) கோரிக்கை எண் 54 —தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளுக்காக, 3–4–1992 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானங்கள் மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்திற்குப் பதிலுரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டை எதிர்கொண்டிருக்கிற பொருளாதாரச் சிக்கல்களும், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிலைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளும் நாம் இதுவரை பின்பற்றி வந்த தொழில் கொள்கைகளுக்குத் தற்போது தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்கிற படிப்பினையை நமக்கு வழங்கியுள்ளது. ஆகவே, தேசிய அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில் முன்னேற்றக் கொள்கையைச் சார்ந்தும், தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தை முன்னுரிமையோடும், வேகத்தோடும், தூண்டுகிற வகையிலும் சில சிறப்பு நடவடிக்கைகளை எங்கள் அரசு எடுத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.



முற்பகல் 9-35

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இந்திய மற்றும் தமிழ்நாட்டிலுள்ள முன்னணி தொழிலதிபர்களை நான் அழைத்து, தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே முதன்மை நிலை அடையச் செய்வதற்காக, அவர்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்டறிந்தேன். அந்தக் கூட்டத்தில் தொழிலதிபர்கள் அளித்த சில ஆலோசனைகளைக் கருத்தில்கொண்டு, சென்ற ஆண்டு இந்தப் பேரவையில் நடைபெற்ற தொழில் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, சில அறிவிப்புகளையும் வெளியிட்டேன். அவற்றின்மீது தற்போது தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் சிலவற்றை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக மிகவும் பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு அளிக்கப்படும் மானியம், நிலையான சொத்துக்களின் மீது செய்யப்பட்ட முதலீட்டில் 15 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடு ஆகவும், உயர்ந்தபட்ச மானியம் ரூ. 15 இலட்சத்திலிருந்து ரூ. 20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொழில்கள் தொடங்கப்பட்டு, அவை போதிய அளவு வளர்ச்சியடைய அடிப்படை வசதிகள் இன்றியமையாதது. இதனை நிறைவேற்றும் வகையில் ஏற்கெனவே அமைந்துள்ள தொழிற்பகுதிகள், தொழில் வளாகங்கள் மற்றும் தொழிற்பேட்டைகள் ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்காக, ''தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்'' Tamil Nadu Corporation for Industrial Infrastructure Development TACID நிறுவப்பட்டு செயலாற்றி வருகிறது.

தொழில்கள் ஏற்கெனவே வளர்ந்துள்ள பகுதிகளில், மேலும் விரைவான வளர்ச்சியை அடைவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் முனைவோருக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, தேவைப்படும் நிதியைக் கடனாக அளித்தல், தொழில் கழிவுகளைச் சுத்திகரிப்புச் செய்தல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் வளர்ச்சி மையங்களைத் தோற்றுவித்தல் போன்ற பணிகளை இக்கழகம் இந்த ஆண்டு மேற்கொள்ள இருக்கிறது. இக்கழகத்திற்கு அரசின் பங்கு மூலதனமாக ரூ. 5 கோடி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் வளம் பெருக இம்மாநிலத்திற்குள்ளும், வெளியிலும் உள்ள தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து, இம்மாநிலத்தில் தொழில்களைத் துவக்க ஊக்கமும், ஆலோசனைகளும் வழங்கவும் அவர்கள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான பல்வேறு துறைகளின் அனுமதிகளைப் பெற்றுத்

தரவும், உற்பத்தி செய்யும் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவும் வகையில், தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம் அதாவது Industrial Guidance and Export Promotion Bureau ஒன்று அமைக்கப்பட்டு விரைவில் பணியைத் துவக்க இருக்கிறது.

பெருமளவில் ஏற்றுமதி செய்யும் தொழில்கள் அமைந்துள்ள திருப்பூர், ராணிப்பேட்டை, திண்டுக்கல், வாணியம்பாடி போன்ற நகரங்களுக்கு அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்கு மத்திய அரசின் உதவி நாடப்பட்டுள்ளது. மத்திய அரசும் இச்செயற் குறிப்பைக் கவனிப்பதாகத் தெரிவித்துள்ளது.

தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குகிற எங்கள் அரசின் நோக்கம் அனைவரும் அறிந்ததே. தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில், 30 விழுக்காட்டுக்கு மேல் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் புதிய தொழில்களுக்கு, கூடுதல் சலுகையாக, முதலீட்டில் 5 விழுக்காடும், உச்ச அளவாக ரூ. 5 இலட்சம் சிறப்பு மானியமும் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் எல்லா புதிய தொழிற்பேட்டைகளிலும், தொழில் வளாகங்களிலும் உள்ள தொழிற்கூடங்களில், மகளிர் தொழில் முனைவோர்களுக்காக, 30 விழுக்காடு தொழிற்கூடங்கள் அல்லது மனைகள் ஒதுக்கப்படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டு, 800 மகளிருக்கு, தொழில் முனைவோருக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

<u>புதிய தொழில் கொள்கையின் முக்கிய அம்சங்கள்</u>:— தொழில் அதிபர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டை, தொழில் வளர்ச்சியில் முன்னிலையில் நிறுத்தும் அடுத்த கட்ட நடவடிக்கையாக, இந்த அரசு முதன் முதலாக புதிய தொழிற்கொள்கை ஒன்றை 20-1-1992 அன்று, முன்னணி தொழிலதிபர்களின் முன்னிலையில் வெளியிட்டது, இக்கொள்கையில், மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதின் முக்கியத்துவத்தைப் பற்றியும், தனியார் துறையின் மூலம் மின் உற்பத்தித் திட்டங்களை அமைப்பது குறித்தும், மாநிலத்தில் பெருந்தொழில்கள் நிறுவுவதற்கான ஒப்புதல்களை விரைவில் பெறுவது குறித்தும், தொழில் துறையின் முதலீட்டைப் பெருக்குவது குறித்தும், அயல்நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்வதை ஊக்குவிப்பது குறித்தும், வரிச் சலுகைகள் குறித்தும், தொழில் வளர்ச்சிக்கான ஊக்கத் திட்டங்கள் குறித்தும், தொழிலாளர்கள்—தொழில் முனைவோர் உறவு பற்றியும். பொதுத் துறை நிறுவனங்களைப் பற்றி அரசின் கொள்கை பற்றியும், சிறுதொழில்வளர்ச்சி மற்றும் விரைவான வளர்ச்சிக்கு வாய்ப்புகள் மிகுந்துள்ள தொழில்களைத் துவக்குதல் பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



முற்பகல் 9-40

தமிழகத்தில் தனியார் துறையில் புதிதாக தொழில்கள் துவங்க முன்வரும் நிறுவனங்களுக்கு, T!DCO மற்றும் ELCOT நிறுவனங்கள், ஆலோசனைகளையும் மற்ற உதவிகளையும் வழங்கும் வகையில் இவ்விரு நிறுவனங்களிலும், 'வழிகாட்டும் சேவைத் துறை' (ESCORT SECTOR PROJECTS) என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் தனியார் நிறுவனங்களுக்கு 1 சதவீதம் பங்கு மூலதன உதவி அளிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தனியார் நிறுவனங்ளுக்கு தொழில்கள் துவங்கத் தேவையான அனுமதிகள் பெற்றுத் தரப்படும். தனியார் நிறுவனங்களின் நிர்வாகத்தில் அரசின் தலையீடு கூடாது. என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப, இத்திட்டத்தினால் தனியார் நிர்வாகக் குழுவில், அரசின் பிரதிநிதிகள் இடம் பெற மாட்டார்கள்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் வகையில், அவர்களை ஈர்ப்பதற்கு, புது டில்லியிலுள்ள தமிழக அரசின் ஆணையர், RESIDENT COMMISS.ONER தலைமையில், 'வெளிநாட்டு முதலீட்டு வளர்ச்சிப் பிரிவு, 'FOREIGN INVESTMENT PROMOTION CO-ORDINATION CELL' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெரும் தொழிற்சாலைகள் இம்மாநிலத்தில் அமைய ஊக்கமளிக்கும் வகையில் ரூ. 200 கோடிக்கு மேல் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு, முன்பு இருந்த ரூ. 50 இலட்சம் என்ற மானியத்தை, ரூ. 1 கோடியாக உயர்த்தவும், (மேசையைத் தட்டும் ஒலி) ரூ. 300 கோடிக்கு மேல் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு, ஏற்கெனவே உள்ள 6 ஆண்டு விற்பனை வரி தள்ளுபடி என்பது 7 ஆண்டுகளாகவும், 12 ஆண்டு விற்பனை வரி ஒத்திவைப்பு என்பது 14 ஆண்டுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொழிற் பிரிவுகளை சீரமைத்து நவீனப்படுத்தும் பொழுது, பாதிக்கப்படும் தொழிலாளர்களின் நலனுக்காக 'தொழிலாளர் மறுவாழ்வு நிதி' (LABOUR REHABILITATION FUND)' என்ற ஒரு புதிய திட்டம். எங்கள் அரசின் புதிய தொழில்கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய திட்டம் நம் மாநிலத்தில்தான் முதன் முதலாக கொண்டுவரப்பட்டுள்ளது. புதிய தொழில் கொள்கையில் கண்டுள்ள அம்சங்களைச் செயல்படுத்த, ஆணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

சிறு தொழில் அதிபர்களின் கூட்டம் ஒன்றினையும், 4-3-1992 அன்று கூட்டி, சிறு தொழில் தொடர்பான அவர்களது குறைகளைக் கேட்டறிந்தேன். அவர்கள் கோரிக்கைகளின் அடிப்படையில், சில நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அவை:

சிறு தொழில்களின் நடைமுறை மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்ய, ரிசர்வ் வங்கி மற்றும் முன்னோடி வங்கிகளுடன் கலந்துரையாடி அவர்கள் விரைவில் மூலதனம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

சிறு தொழில்களைப் பதிவு செய்யும் முறையை எளிதாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தற்போது அதில் உள்ள இடர்பாடுகள் களையப்படும்.

மாவட்டத் தொழில் மையங்களைப் பலப்படுத்தி, ஒரு கூரையின்கீழ் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவில் தீர்வு செய்ய SINGLE WINDOW CLEARANCE அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

அதிகாரம் அளிக்கப்பட்டகுழு, (EMPOWERED COMMITTEE) ஒன்று, நலிவடைந்த சிறு தொழில்களின் புனரமைப்பிற்காக தொழில் துறைச் செயலாளரின் தலைமையில் அமைக்கப்படும்.

பொது நிறுவனங்கள், சிறு தொழிற்சாலைகளிலிருந்து வாங்கும் பொருட்களுக்கு, 30 நாட்களுக்குள் பணம் வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதைக் கண்காணிக்க ஒரு தனிக் குழு (MONITORING COMMITTEE) அமைக்கப்படும்.

சிறு தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் நிதி வழங்கப்படாததால் தாமதமாகின்றது என்ற குறையைப் போக்குவதற்கு, இம்மானியத் தொகை ரூ. 300 இலட்சத்திலிருந்து ரூ. 853.75 இலட்சமாக 1991-92 ஆம் ஆண்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்த மின் அழுத்த மானியமாக வழங்கப்பட்ட ரூ. 25 இலட்சத்தை, ரூ. 77.87 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மின்சாரம் தயாரிக்கும் GENERATOR SET வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டிய மானியத்திற்காக, ரூ. 24.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆண்டுகளில், தமிழகத்தில் 1 இலட்சம் சிறு தொழில்கள் அமைவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த, எங்கள் அரசு ஏற்கெனவே அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதை நீங்கள் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) துணை மற்றும் சார்புத்தொழில்கள் துவங்குவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றிய கணக்கெடுப்பு, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நிதி நிறுவனங்களின் உதவியுடன், ஆண்டொன்றுக்கு 20,000 சிறு தொழில்களைத் தகுந்த தொழில் முனைவோர்களைக் கொண்டு அமைக்கும் பொறுப்பை, மாவட்டத் தொழில் மையங்களிடம் ஒப்படைக்க உள்ளோம். இதற்கென ஒரு செயல் திட்டத்தைத் தொழில் துறை இயக்குநர் தயாரித்து வருகிறார்.



இந்தத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்தி, தமிழகத்தில் சிறு தொழில் வளர்ச்சியை, அரசு கணிசமான வகையில் உயர்த்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 9-45

<u>தொழில் வளர்ச்சி மையங்கள்:</u>

நிலக்கோட்டை வட்டத்தில் வேளாண் தொழில் வளாகத்தை அமைத்திடத் தேவையான, 413.35 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 4 புதிய தொழில் வளர்ச்சி மையங்கள், தர்மபுரி மாவட்டம் பர்கூர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கங்கை கொண்டான், பெரியார் மாவட்டம் பெருந்துறை மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் மனங்குடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன. ஒவ்வொன்றும் சுமார் ரூ. 20 கோடி முதல் ரூ.30 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி.) புதிய தொழில் வளர்ச்சி மையங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அரக்கோணம் பகுதியில், தொழிற்சாலைகள் அமைக்க பெரும்பாலான அடிப்படை வசதிகள் இருந்தபோதிலும் போதுமான தண்ணீர் வசதி இல்லை. அதன் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய, சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், கொடுங்கையூரிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக் குழாய் வழியாக அரக்கோணத்திற்கு வழங்க முன் வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே விரைவில் அரக்கோணத்தில், ஒரு தொழில் மையம் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வேதாரண்யம் உப்பு தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உப்பைப் பயன்படுத்தி, காஸ்டிக் சோடா தயாரிக்க, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத் துறை நிறுவனமான, Tamil Nadu Petro Products நிறுவனத்திற்கு, மைய அரசு இவ்வாண்டு பிப்ரவரி திங்களில் இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை விரைவில் அமைக்க, பெட்ரோ ப்ராடக்ட்ஸ் நிறுவனம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த அரசு எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக, 2½ ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம், இந்த ஆண்டு பிப்ரவரி திங்கள் 3 ஆம் நாள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) இந்நிறுவனத்தைத் திறப்பதற்காக அரசு ரூபாய் 3 கோடியை குறைந்த வட்டியான 9 சதவீதத்தில் கடனாகக் கொடுத்துள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமான, தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனம், இந்நிறுவனத்தில் பங்கு மூலதனமாக, ரூ.6.03 கோடி முதலீடு செய்யவும் அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும் விற்பனை வரி ஒத்தி வைத்து செலுத்தும் சலுகையினையும், ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது. இந்நிறுவனம் திறக்கப்பட்டதால், 2,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.) ஏனைய 1,000 தொழிலாளர்கள் விருப்ப ஓய்வுக்கு இசைவு தந்துள்ளனர்.

தமிழ்நாடு எஃகு நிறுவனத்தை நவீனப்படுத்துதல் :

தமிழ்நாடு எஃகு நிறுவனம், டிட்கோவின் துணை நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நிறுவனம் 1991–92-ல், 31–12–1991 வரை, ரூ. 214.84 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆலையின் உற்பத்தி இந்த ஆண்டில், சுமார் 69,746 டன்களாகும். நாட்டிலுள்ள புதிய எஃகு உருக்காலைகளுக்கு இணையாக, இதனை மேம்படுத்தும் வகையில், இந்நிறுவனத்தினை சுமார் 23 கோடி ரூபாய் முதலீட்டுச் செலவில் நவீனமயமாக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு உத்தேசித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.)

அயல்நாட்டு முதலீடு:

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத்தில் தொழில் துவங்கவும், தமிழகத்திலுள்ள தொழில்களில் முதலீடு செய்யவும், அவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளை துரிதப்படுத்துகின்ற வகையில், சிப்காட்டில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இக்குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடி, தமிழகத்தில் தொழில் அமைக்க விரும்பும் அயல்நாடு வாழ் இந்தியர்களின் தேவைகளைக் கவனித்து, உதவி வருகிறது. இதுவரை மொத்தம் ரூ. 108.60 கோடி முதலீட்டில், 60 தொழில் பிரிவுகளை அயல் நாடு வாழ் இந்தியர்கள் அமைத்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் ரூ. 51.06 கோடி முதலீட்டில், 19 தொழிற் பிரிவுகளை அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 9-50

குறிப்பாக சிங்கப்பூரில் உள்ள தொழில் அதிபர்கள் சிலர் நமது நாட்டில் தொழில் துவங்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்காக மத்திய அரசு, இந்தியா–சிங்கப்பூர் தொழில் இணைப்பு மையம் (INDIA-SINGAPORE INDUSTRIAL CORRIDOR ஒன்றினை அமைக்கக் கருதியுள்ளது. இதன்மூலம் சிங்கப்பூர் தொழிலதிபர்கள், இந்தியாவில் தொழில்களை அமைக்க முன்



வருகிற வாய்ப்புகள் பெருகும். சென்னையில் பெரிய துறைமுகம், பன்னாட்டு விமான நிலையம் மற்றும் இவை சார்ந்த அடிப்படை வசதிகள் ஆகியவை, ஏற்கெனவே சிறந்த நிலையில் உள்ளதால், இந்த இணைப்பு மையத்தினை சென்னையில் அமைக்கும்படி கோரி, மைய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இதன் மீது தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கும் முயற்சியினை மேற்கொள்ள உயர்மட்டக் குழு ஒன்றும் அமைக்கப்படும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்:

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் சிறிய, மிகச் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்காக நிதியுதவி செய்து வருகிறது. கோவை மாவட்டம், திருப்பூரில் இந்நிறுவனத்தின் கிளை ஒன்று இந்த ஆண்டு திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தற்போது தொழில் முனைவோர்களுக்கு நிலம், கட்டிடம், இயந்திர தளவாடங்கள் வாங்குவதற்கு கடன் வசதி அளிக்கிறது. அவர்களுக்கு மேலும் வசதி செய்து தரும் நோக்கத்துடன், இந்நிறுவனமே தளவாடங்களை வாங்கி, குத்தகை அடிப்படையில் தொழில் முனைவோருக்குக் கொடுப்பதற்கான குத்தகை நிதியுதவித் திட்டத்தை, அதாவது LEASE FINANCE திட்டத்தை நடப்பாண்டில் அறிமுகப் படுத்தும்.

1991–92 ஆம் ஆண்டு கடன் வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ. 225 கோடியாகும். குறிப்பாக 29–2–1992 முடிய இதுவரை 4,070 தொழில் பிரிவுகளுக்கு ரூ. 239 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 3,903 சிறு தொழில் பிரிவுகளுக்கு ரூ. 185 கோடி கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1992–93 ஆம் ஆண்டு கடன் வழங்குவதற்கான இலக்கு ரூ. 250 கோடியாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்நிறுவனத்திடம் கடன் பெற்றோர், கடன் தவணைகளை குறித்த காலத்தில் செலுத்தினால்தான், மேலும் பல புதிய தொழில்களுக்கு நிதியுதவி தர வாய்ப்பு ஏற்படும். எனவே, தொழில் முனைவோர் இதற்கு முழு ஒத்துழைப்பினை நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மின்னணுத் தொழில் :

ஒருங்கிணைந்த சுற்றுகள் (INTEGRATED CIRCUITS) என்ற மின்னணுப்பாகம், பாதுகாப்பு, தொலைத் தொடர்பு, தொலைக் காட்சி மற்றும் வானொலி போன்ற பல்வேறு துறைகளில் பயன் படும் மின்னணுச் சாதனங்களைத் தயாரிக்கத் தேவைப்படும்

அடிப்படை பாகமாகும். ஒருங்கிணைந்த சுற்றுகளைத் தயாரிக்கும் ஒரு தொழில் திட்டத்தை எல்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. இந்தத் தொழில் திட்டத்தை ரூ. 300 கோடி செலவில் கூட்டுத் துறையில் அமைக்க எல்காட் நிறுவனம் ஆராய்ந்து வருகிறது. இத்திட்டம் நாட்டின் மின்னணுத் தொழில் வளர்ச்சிக்குப் பேருதவி புரியும் வகையில் அமையும்.

எல்காட்டின் தொலைத் தொடர்புப் பிரிவு ரூ. 10 கோடி திட்ட மதிப்பீட்டில் செய்தி மற்றும் தகவல் விவரங்களை பரிமாறிக் கொள்ள வகை செய்யும், நுண்ணலை தொலைத் தொடர்பு கருவிகள், அதாவது DIGITAL MICROWAVE COMMUNICATION EQUIPMENT தயாரிக்கும் திட்டத்தை மேற்கொள்ள உள்ளது.

வெளிநாட்டு முதலீடு, தொழில் நுட்பம், மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் உருவாக்கப்பட்டால்தான், தமிழ்நாட்டின் மின்னணுத் தொழிற்சாலைகள் உலக அளவில் பெருமை அடைய முடியும். இந்த நிலையை உருவாக்க உலகிலேயே மின்னணுத் தொழில் நுட்பத்தின் முன்னோடியாக விளங்கும் அமெரிக்காவில் உள்ள SAN FRANCISCO நகரத்தில் ஒரு தொடர்பு நிலையம்-OVERSEAS WINDOW ஏற்படுத்த எல்காட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மின்னணுப் பொருள் விற்பனை மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி நிறுவனம்—ELECTRONICS TRADE AND TECHNOLOGY DEVELOPMENT CORPORATION மின்னணு மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி நிறுவனம் ELECTRONICS AND SOFTWARE EXPORT PROMOTION ORGANISATION ஆகிய மத்திய அரசு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், இந்தத் தொடர்பு நிலையம் செயல்படும். இத்தொடர்பு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் செயலாக்கப் பணிகளில், அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். அவர்களின் ஆர்வத்தையும் வியாபாரத் திறமையையும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், இந்தத் தொடர்பு நிலையம் அமைக்கப்படும். இந்த நிலையம், தமிழ் நாட்டின் மின்னணுத் தொழில்கள், உலக அளவில் வளர்ச்சி பெற உதவும்.

முற்பகல் 9-55

## மணலி ஆரோமேடிக்ஸ் தொழில் வளாகம் (AROMATICS COMPLEX):

சென்னை மணலியில் 'நாப்கோ' நிறுவனத்தால், (NAPCO) பெட்ரோலிய இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஆரோமேடிக் பொருட்கள் உற்பத்தி வளாகம் ஒன்றினை அமைப்பதற்குத் தேவையான 1655.92 ஏக்கர் நிலங்களைக் கையகப் படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த, சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு முதலீட்டு அனுமதி வழங்குமாறு, மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது.



## ஏற்றுமதி தொழில் வளர்ச்சி:

தமிழகத்திலிருந்து ஏற்றுமதியைப் பெருக்க, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 100 விழுக்காடு ஏற்றுமதிக்கான உற்பத்தி செய்யும் தொழில் பிரிவுகளுக்கு, மின்வெட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதியைப் பெருக்கிட குறுகிய காலத் திட்டம், மற்றும் நீண்ட காலத் திட்டம் வகுத்தளிக்கவும், ஏற்றுமதிக்கான தொழில் பிரிவுகளில் சிக்கல்களைக் களையவும், அரசுக்கு ஆலோசனைகள் வழங்கிட, தொழில் அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட உயர்மட்ட ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசு நிறுவி வருகிற, 'தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம்' (INDUSTRIAL GUIDANCE AND EXPORT PROMOTION BUREAU), இம்மாநிலத்தில் ஏற்றுமதி செய்யக்கூடிய தொழிற்பிரிவுகள் அமைத்திடவும், அவைகள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், தேவையான உதவிகளை நல்கும்.

தரமணியில் அமைக்கப்படும் நிரந்தரத் தொழில் பொருட்காட்சி வளாகமும், இம்மாநிலத்தின் ஏற்றுமதியைப் பெருக்குவதற்குப் பெரிதும் உதவும். ஏற்றுமதித் தொழில் நிறைந்த திருப்பூர், ராணிப்பேட்டை, வாணியம்பாடி, திண்டுக்கல் போன்ற நகரங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க, மைய அரசின் உதவியை இந்த அரசு நாடியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

## கிராபைட் மேம்படுத்தும் திட்டம்:

தமிழ்நாடு கனிம நிறுவனம், கிராபைட் மேம்படுத்தும் தொழிற்சாலையை சிவகங்கையில் அமைப்பதற்கு, இந்த அரசு அனுமதி அளித்துள்ளது. இத்தொழிற்சாலையை நிறுவும் பணிகள் அனைத்தும், ஒரே ஒப்பந்தக்காரர் மூலம் செய்கின்ற வகையில், TURN KEY BASIS-ல் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்ய தமிழ்நாடு கனிம நிறுவனம் செய்துள்ள பரிந்துரைகள், அரசின் ஆய்வில் உள்ளது. ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட 15 மாதங்களில், தொழிற்சாலை உற்பத்தியைத் துவக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு, 66,000 மெட்ரிக் டன் கிராபைட் கனிமத்திலிருந்து, 9,240 மெட்ரிக் டன் அளவிலான மேம்படுத்தப்பட்ட கிராபைட்டை உற்பத்தி செய்யும்.

## சர்க்கரை ஆலைகள் :

தமிழகத்தில் தற்போது 31 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. மதுராந்தகம், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி மற்றும் திருத்தணி

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை விரிவுபடுத்தும் திட்டமும், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நவீனப்படுத்தும் திட்டமும், இந்த ஆண்டு செயலாக்கப்படும்.

அரூரில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும் சர்க்கரை ஆலை, 1992 ஆம் ஆண்டின் இறுதியில் கரும்பு அரைவையைத் தொடங்கவுள்ளது. பொதுவாக சர்க்கரைத் தொழில் தமிழகத்தில் நன்கு செயல்பட்டு வருகிறது. மேலும் வரும் ஆண்டுகளில் 5 புதிய சர்க்கரை ஆலைகளை, (1) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், (2) தஞ்சாவூர் மாவட்டம், (3) நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டம், (4) தென்னாற்காடு மாவட்டம், (5) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் அமைக்க, பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப்படும். தேவையானால், தனியார் துறையில் நிறுவுவதைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

<u>மின் உற்பத்திப் பெருக்கம்:</u>

விரைந்த தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். நம் மாநிலத்தில் உள்ள பொதுத்துறை மின் நிறுவனங்களாகிய நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவைகளில் கூடுதல் முதலீடு செய்து மின் உற்பத்தியை அதிகரிக்குமாறு மைய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

மைய அரசின் புதிய தொழில் கொள்கையின்படி, மின் உற்பத்தியில் தனியார் துறை பங்கேற்க வழி காணப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்ட சோழபுரம் பகுதியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி, 7,000 கோடி ரூபாய் செலவில் 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யத் திட்டமிட்டு, கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-00

இந்நிறுவனத்திற்குத் தேவைப்படும் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்க, மைய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேலும், ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்து, அனல் மின் நிலையம் ஒன்றினை, தனியார் அல்லது கூட்டுத் துறையில் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)



மத்திய அரசின் திட்டங்கள். இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்காக மைய அரசின் முதலீடு 1969 ஆம் ஆண்டில் 10 விழுக்காடாக இருந்தது, 1989 ஆம் ஆண்டில் 5.21 விழுக்காடாகக் குறைந்து விட்டது. எனவே மைய அரசு முதலீடு இம்மாநிலத்தில் மேலும் உயர்ந்திட இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

தென்னக எரிவாயுக் குழாய் திட்டம் (சதர்ன் காஸ் கிரிட்) நெய்வேலி பழுப்பு நிலக்கரி விரிவாக்கத் திட்டம், எண்ணூர் துணை துறைமுகத் திட்டம் ஆகியவற்றை விரைவில் செயல்படுத்த மத்திய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>புதிய கிரானைட் கொள்கை,</u> ( New granite policy) அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து பல்வேறு வண்ண கிரானைட் பாறைகளை வெட்டியெடுப்பதற்கான குத்தகை உரிமத்தை தற்போது மெருகூட்டும் தொழில் கூடத்தை வைத்துள்ளவர்களுக்கும், மெருகூட்டும் தொழில் கூடத்தை இரண்டாண்டுக் கால அளவில் துவக்க திட்டத்தை வகுத்துள்ளவர்களுக்கும் வழங்கப்படுவதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. இவ்வுரிமங்கள் மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர் மூலம் அளிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். பட்டா நிலங்களில் கிரானைட் பாறைகளை வெட்டி எடுப்பதற்கான அனுமதி மெருகூட்டும் தொழில் கூடம் நிறுவி உள்ளவர்களுக்கும், இரண்டாண்டுகளில் துவக்கத் திட்டம் வகுத்துள்ளவர்களுக்கும் மட்டுமே வழங்கப்படுகிறது. இத்தொழிலைத் துவங்கத் திட்டமிட்டுள்ளவர்களுக்கு முதலில் உறுதிக் கடிதம், (Letter of commitment) வழங்கப்படுகிறது. இவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டவர்கள் தொழில் கூடத்தை நிறுவிய பின் முறையான குத்தகை உரிமம் வழங்கப்படுகிறது. அரசு புறம்போக்கு நிலங்களில் கிரானைட் கற்கள் முறையாக வெட்டி எடுக்கப்படவில்லை என்பதும், இவ்வாறு வெட்டி எடுக்கும் கற்களை பணி நிறைவு பெற்ற கற்களாக உருவாக்குவதில் அதிக சேதாரம் ஏற்படுகிறது என்பதும், இதனால் நமக்குக் கிடைக்க வேண்டிய அன்னியச் செலாவணி வருவாய் குறைந்து விடுகிறது என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழகத்திலே கிடைக்கும் பல்வேறு வண்ண கிரானைட்டை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில் இப்போதுள்ள கிரானைட் கொள்கையை மாற்றுவது குறித்து தீவிர பரிசீலனையை அரசு செய்தது. இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட கொள்கை முடிவுகளை அறிவிக்கிறேன்:

(1) இனிமேல் அரசு புறம்போக்கு நிலங்களில் உறுதிக் கடிதம் வழங்கப்பட்டவர்கள் தவிர மற்ற நபர்களுக்கு கிரானைட் குத்தகை வழங்கப்படமாட்டாது. (மேசையைத் தட்டும் ஒலி) புதுக்குத்தகைகள் இனிமேல் அரசுக்குச் சொந்தமான 'டாமின்' நிறுவனம் மற்றும் அதன் கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

(2) இனிமேல் பட்டா நிலங்களில் கிடைக்கும் விலை மதிப்புள்ள பாரடைசோ, காஷ்மீர் ஒயிட் போன்ற குறிப்பிட்ட கிரானைட் கற்களை வெட்டி எடுப்பதற்கு வழங்கும் குத்தகையில் அரசு நிறுவனங்கள் அல்லது கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படும்.

(3) பட்டா நிலங்களில் கிரானைட் வெட்டி எடுக்க அனுமதி பெறும் குத்தகைதாரர்கள் தொழில் திட்டம் வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுகிறது.

(4) பட்டா நிலமோ, அரசு புறம்போக்கு நிலமோ, எத்தகைய நிலங்களிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட அனைத்து வர்த்தகமும் அரசுக்குச் சொந்தமான 'டாமின்' நிறுவனம் மூலமாகத்தான் நடத்தப்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி) கிரானைட் வணிகமானது பாதிக்கப்படாமலும், அதேநேரத்தில் இவ்வணிகம் பெருகுவதற்கு வகை செய்யும் நோக்கத்துடன் வேண்டிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டு விரைவில் அறிவிக்கப்படும். அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து கிரானைட் கற்களை வெட்டி எடுக்கவும், வெட்டி எடுக்கப்பட்ட கற்களை செயல்முறைப்படுத்தவும் பல புது நிறுவனங்கள் கூட்டுத் துறையிலே அமைக்கப்படுவதை அரசு வரவேற்கும். அதாவது இப்போது அறிவிக்கப்பட்ட புதிய கிரானைட் கொள்கையின்படி the entire trade in granite is being canalised through TAMIN, பட்டா நிலமோ, புறம்போக்கு நிலமோ, யார் கிரானைட் வெட்டி எடுத்தாலும் அதை 'டாமின்' வழியாகத்தான் விற்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10·05

பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டங்கள் 3: தமிழகத்தில் ஏற்கெனவே 31 வட்டங்கள் மிகவும் பின்தங்கிய வட்டங்களாகவும், 76 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பட்டியலில் கோவை மாவட்டத்தில் அவினாசி, காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், சேலம் மாவட்டத்தில் இராசிபுரம், புதுக்கோட்டை வட்டம், சிதம்பரனார் மாவட்டத்தில் சாத்தான்குளம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை ஆகிய வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களின் பட்டியலில் இந்த ஆண்டு முதல் சேர்க்கப்படுகின்றன என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வட்டங்களும் அரசின் சலுகைகளை இனி பெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் புதிய தொழிற் கூடங்கள்; கோவை மாவட்டம் திருப்பூரில் தொழிற்பேட்டையை அமைப்பதற்காக தனியார் தொழில் முனைவோர்களால் வாங்கப்பட்ட நிலத்தில் தொழிற்பேட்டையை அமைப்பதற்கான அடிப்படை வசதிகளை தமிழ்நாடு சிறு தொழில்



வளர்ச்சி நிறுவனம் செய்துள்ளது. அத்தொழிற்பேட்டையில் தனியார் துறையில் பின்னலாடை ஏற்றுமதி தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு அவைகள் செயல்பட்டு வருகின்றன.

அதேபோன்று இந்த ஆண்டு இன்னும் 3 இடங்களில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவி கொண்ட தனியார் தொழிற்பேட்டைகள் நிறுவப்படும். மதுரை மாவட்டம் வேடத்தகுளம், மற்றும் வல்லகுண்டு கிராமங்களில் பின்னலாடை தொழிற்பேட்டையும், பெரியார் மாவட்டத்தில் வடமுகம், காங்கேயம்பாளையம் கிராமத்தில் பல்தொழிற்பேட்டையும், சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லில் ஆட்டோ உதிரிப் பாகங்கள் தயாரிப்பு தொழிற்பேட்டை ஒன்றும் தனியார் துறையில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மின் உற்பத்திப் பெருக்கம்; கூட்டுத் துறையில் ஜெயங்கொண்டபுரத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுத்து அதன் மூலம் மின் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

நாகப்பட்டினம் காயிதே—மில்லத் மாவட்டத்தில் பிள்ளைப் பெருமாநல்லூரில் காவேரிப் படுகையில் கிடைக்கும் நிலவாயுவைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு முதலில் மின் உற்பத்திக்காக நாள் ஒன்றுக்கு 2 மில்லியன் கன மீட்டர் அளவு நிலவாயுவை மின் உற்பத்திக்காக நம் மாநிலத்திற்கு அளிப்பதாகக் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து இருந்தது. ஆனால், தற்போது 0.25 மில்லியன் கன மீட்டர் நில வாயுவை மட்டுமே கொடுக்க முடியும் என்று கூறியுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்று கூட்டுத் துறையில் பிள்ளைப்பெருமாநல்லூரில் பிஒய்-1 என்ற கடற்பகுதியில் சோதனைகள் மேற்கொண்டு நிலவாயுவை எடுப்பதற்கும் அதனைக்கொண்டு மின் உற்பத்தி செய்வதற்கும் ஒருங்கிணைந்த முறையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அயல்நாட்டு இந்தியர் மற்றும் வெளிநாட்டு முதலீடு: அயல்நாட்டு வாழ் இந்தியர்கள் மற்றும் ஏனைய அயல் நாட்டினர்கள் முதலீடு தமிழகத்தில் பெருகுவதற்கு தீவிர முதலீடு ஊக்குவிப்பு இயக்கம் (Investment Campaign) மேற்கொள்ளப்படும். அரசுத் துறை அலுவலர்களும் தொழிலதிபர்களும் அடங்கிய சிறப்புக் குழுவினை அயல்நாடுகளுக்கு அனுப்பி நமது மாநிலத்தில் தொழில் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளை கருத்தரங்கு, வீடியோ

படக்காட்சிகள் ஆகியவைகள் மூலம் விளக்கிக் கூறி, அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள் நம் மாநிலத்தில் முதலீடு செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளை தொழிலாளர்களின் நலன் கருதி மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகின்றது என்பதை இந்த மாமன்றம் அறியும். சென்னையில் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனம் தற்போது திறக்கப்பட்டு 2 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். அதேபோன்று பின்னி மில்லை வருகிற தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று அதாவது 13–4–1992 அன்று (மேசையைத் தட்டும் ஒலி) திறப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து உள்ளது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நான் நேரிடையாக 4–2–1992 அன்று பின்னி மில் தொழிற்சங்கத்துடனும், அரசியல் கட்சித் தலைவர்களுடனும் பின்னி மில் நிர்வாகத்துடனும் பேச்சு வார்த்தை நடத்தி தொழிலாளர் நல ஆணையர், நிர்வாகம் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு முத்தரப்புக் குழுவினை அமைத்து ஆலையைத் திறப்பதற்கு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தி அறிவுரைகள் வழங்கினேன். இவ்வாலையின் பதப்படுத்தும் நிலையத்தை புவனகிரிக்கு மாற்றுவதைத் தவிர்க்க முடியாது என்று எடுக்கப்பட்ட முடிவை தொழிற் சங்கமும் ஏற்றுக்கொண்டது. இதனால் புவனகிரிக்குச் சென்று பணி செய்ய விரும்பாதவர்களை வேலையிலிருந்து நீக்கக் கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் மேம்பாட்டு வங்கியின் மூலம் நிதி உதவி பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாலையில் பணியாற்றிய எல்லாத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகம் இவ்வாலையைத் திறக்கும் நாளன்று ஒரு மாத ஊதியத்தை கருணைக் கொடையாக வழங்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, தொழிற் சங்கம், நிர்வாகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இவ்வாலை 13-4-1992 அன்று திறக்கப்படும்.

முற்பகல் 10.10

<u>மால்கோ:</u> மேட்டூர் மால்கோ நிறுவனம் தற்போது மூடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. தொழிற்சங்கங்கள் இந்த ஆலையைத் திறந்து, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றன. அதன் தொடர்பாக அலுவலர்களுடனும், நிர்வாகத்துடனும் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளேன். நிர்வாகம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, ஏறத்தாழ ரூ. 25 கோடி மின்சாரக் கட்டணத்தை, பாக்கித் தொகையாக வைத்துள்ளது. அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை 'அலுமினியம் ரெகுலேசன் நிதி'



யிலிருந்து கட்டவும், மீதமுள்ள தொகையைத் தவணை முறையில் செலுத்துவதற்கும் நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இந்த நிறுவனத்திற்கு ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஒரு ரூபாய் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு சலுகைக் கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கவும், நான்கு ஆண்டு சலுகைக்காலம் முடிந்ததும், அப்போதைய கட்டண விகிதத்தின்படி மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தற்போது மால்கோ நிறுவனம் உயர்ந்த பட்ச மின் சுமையின் (Maximum demand) அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச மின்கட்டணம் செலுத்தி வருகிறது. அதை மாற்றி 1–4–1991 முதல் with retrosp.ctive effect எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறதோ அந்த அளவுக்கு மட்டும் மின்கட்டணம் செலுத்த, இந்த அரசு சலுகை அளித்துள்ளது. மேலும், 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரியை ஒத்தி வைக்கும் சலுகையையும் அளிக்க, அரசு முன் வந்துள்ளது. இந்தச் சலுகைகள் அனைத்தும், தொழிலாளர்களின் நலன் கருதியே, அரசு இந்த நிறுவனத்திற்கு அளிக்க முன் வந்துள்ளது. இவற்றைப் பயன்படுத்தி, மால்கோ நிறுவனம் அலுமினியத் தொழிற்சாலையை மூன்று மாத காலத்திற்குள் மீண்டும் திறந்து, அனைத்துத் தொழிலாளர்களுக்கும், முழுமையாகப் பணியினை அளிக்கும் நிலைமை உருவாகும் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தொழில் மற்றும் நிதிபுனரமைப்புக் குழுமத்தினால் Board of Indust ial Finance and Re-const.ction புனரமைப்பு செய்யப்படும் நலிவுற்ற நிறுவனங்களுக்கு, தற்பொழுது 3 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்தி வைத்து செலுத்தும் சலுகை, வழங்கப்பட்டு வருகிறது. இனிமேல் தகுதி வாய்ந்த நலிவுற்ற நிறுவனங்களுக்கு, விற்பனை வரி ஒத்தி வைத்து செலுத்தும் சலுகை ஐந்து ஆண்டுகள் வரை வழங்கப்படும்.

<u>தீப்பெட்டித் தொழில்:</u> முழுவதும் இயந்திர மயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்திச் செய்யப்படும் தீப்பெட்டிகளைத் தவிர, நம் நாட்டில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகள் முழுமையும், தமிழகத்தில் உள்ள சிறு தொழில் மற்றும் மிகச் சிறிய தீப்பெட்டித்தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்கண்ட மூன்று வகை தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு, தனித்தனியாக விதிக்கப்பட்டுள்ள இன்றைய ஆயத்தீர்வை முறை, சிறு மற்றும் மிகச் சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பாதிக்கிறது. தீப்பெட்டி, ஒவ்வொருவர் வீட்டிலும் உபயோகப்படுத்தப்படும் பொருளாக உள்ளது. இத்தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, சிறு மற்றும் மிகச்சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு, ஆயத் தீர்வையிலிருந்து முழு விலக்

களிக்க, மைய அரசை நாட இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இச்சலுகையினால் சிறு தொழிற்சாலைகள். பெரிய தொழிற்சாலைகளுடன் போட்டி போட்டு, தங்களுடைய பொருட்களை விற்பனை செய்யும் வாய்ப்பினைப் பெறும்.

அரசு முதலீட்டைத் திரும்பப் பெறுதல் : நேரடி உற்பத்தியிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு, தனியார் | துறைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதிலும், ஊக்கச் சலுகைகளை அறிவிப்பதிலும் அரசு கவனத்தைச் செலுத்தும் என ஏற்கெனவே இந்த அரசு அறிவித்துள்ளது. இந்த அடிப்படையில் 9 கூட்டுத் துறை நிறுவனங்களில், தொழில் வளர்ச்சிக் கழகம் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெற முடிவெடுத்துள்ளோம். மேலும் நான்கு கூட்டுத் துறை நிறுவனங்களில், செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெறும் நடவடிக்கை, முடிவடையும் தருவாயில் உள்ளது. பொதுத் துறை நிறுவனங்களில் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெற, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும். முதல் கட்டமாக, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வெடி மருந்துக் கழகம் ஆகிய நிறுவனங்களைக் கூட்டுத் துறைக்கு மாற்றவும், பின் இந்நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில், அரசின் முதலீட்டை சிறிது சிறிதாகத் திரும்பப் பெறுவது எனவும் உத்தேசித்துள்ளோம். சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட், தமிழ்நாடு உப்பு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மெக்னிசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களைத் தனியார் துறைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புது நிறுவனங்கள்: இந்தியத் தொழில் கடன் மற்றும் தொழில் முதலீட்டுக் கழகத்தின் Industrial credit and Investment Corporation of India ஆதரவுடன் சென்னையின் ஒரு நிர்வாக பயிற்சி நிலையம் Institute of Management அமைக்கவும் வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் வகையிலும் அனைத்து அடிப்படை வசதிகளுடன், ஏற்றுமதி ஊக்குவிப்பு நகர் ஒன்றை Export City கிழக்குக் கடற்கரையில் உருவாக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி),

முற்பகல் 10–15

மோட்டார் வாகனத் தொழிற்சாலை : இந்தியாவில் முன்னணியில் உள்ள அசோக் லேலண்ட் நிறுவனம் சுமார் 550 கோடி ரூபாய் முதலீட்டில் ஹோசூரில் மோட்டார் வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசை அணுகியுள்ளது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் பேசுகின்ற போது, அரசின் புதிய கொள்கையை, தொழில் கொள்கையை அறிவித்த பிறகு, பெரிய தொழில்கள் துவங்க இங்கே யாரும் முன்வரவில்லையே என்று கேட்டார். அவருக்கு இது பதிலாக அமையும் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இத்தொழிற்சாலையை நிறுவிட, அடிப்படை வசதிகள் மற்றும் வேறு பல உதவிகளையும், சலுகைகளையும் அளித்திட அசோக் லேலண்ட் அரசை வேண்டியுள்ளது. இது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இத்தொழிற்சாலை மிக விரைவில் அமைக்கப்படும் என்று நம்புகிறேன். இதனால் ஹோசூரைச் சுற்றிலும் தொழில் வளர்ச்சி மேலும் பெருகும். மற்ற தொழில் அதிபர்களையும் இதுபோன்ற மிகப்பெரும் தொழில்களை தமிழகத்தில் அமைக்க வரும்படி இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக இந்த அரசு எல்லா உதவிகளையும் அளிக்கும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய தொழிற்சாலைகள்; 'டிட்கோ' நிறுவனம் ரூ. 75 கோடி செலவில் அலுமினியம் உருட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிதாக கூட்டுத் துறையில் நிறுவ உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரில் கூட்டுத் துறையில் பழங்கள் பதனிடும் ஆலை ஒன்றை நிறுவுவதற்காக சந்தை நிலவர ஆய்வு-அதாவது market survey தொழில் நுட்ப ஆய்வு போன்ற முதன்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் டன்களாகும். இத்திட்டத்தின் முதலீடு ரூ. 15 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களை விரைவில் செயல்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தொழில் துறையைப் பொறுத்தவரையில். கொள்கை பற்றி விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். எம். எஸ். அபுல ஹஸன், திரு. இரா. நடேசன், திரு. ஆர். சிங்காரம், திரு. என். பன்னீர்செல்வம், ஆகியோர் உட்பட மொத்தம் 12 உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர். தொழில் துறை கொள்கை பற்றி இத்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளதால், அதில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களையே என்னுடைய விளக்கங்களாக எடுத்துக் கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கராஜ் அவர்கள், திரு. சி. ஞானசேகரன் அவர்கள், தங்களுடைய தொகுதிகளில் கரும்புத் தொழிற்சாலை அமைப்பது பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதற்கு அந்தப் பகுதியில் கரும்பு உற்பத்தி, தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆகியவை கருத்தில் கொள்ளப்படும். தற்போதைக்கு அவர்கள் கொடுத்துள்ள 3 இடங்களிலும், சர்க்கரை ஆலை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில். அழியாநிலை அல்லது நாருடியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவுவதில் ஏற்பட்டுள்ள கால தாமதம் குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டத்தில் கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலை அமைப்பதற்கான விண்ணப்பத்தை மாநில அரசு 1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது. மத்திய அரசின் அப்போதைய கொள்கைப்படி இந்த ஆலை தினசரி 1,250 டன் கரும்பு பிழியும் திறன் கொண்டதாக அமைய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய அரசு இந்த ஆலையின் முழு உற்பத்தித் திறனுக்குத் தேவையான கரும்பை இப்பகுதியில் பயிரிட வாய்ப்பு இல்லை என்ற நிலையில் உரிமம் தர மறுத்துவிட்டது. 1987ஆம் ஆண்டு சர்க்கரை ஆலையை அமைப்பது பற்றி மத்திய அரசின் புதிய தொழில் கொள்கைகளின் அடிப்படையில் தினசரி 2,500 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட ஒரு சர்க்கரை ஆலையை இப்பகுதியில் நிறுவவேண்டுமென மாநில அரசு பரிந்துரை செய்தது. இந்த ஆலைக்கு வரையறுக்கப்பட்ட பகுதிகள், தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி வட்டங்கள், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், திருமயம், ஆலங்குடி, குளத்தூர் மற்றும் புதுக்கோட்டை வட்டங்களாகும். இதற்கான உரிமம் 1988ஆம் ஆண்டு மத்திய அரசால் வழங்கப்பட்டது. பிறகு, தமிழக அரசு சர்க்கரை ஆலையை அமைப்பதற்காக அழியாநிலை என்ற கிராமத்தைத் தேர்ந்தெடுத்துப், அதற்கான அரசு ஆணையை வெளியிட்டது. ஆலை அமைப்பதற்கான பூர்வாங்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது ஆலைக்கு வரையறுக்கப்பட்ட பகுதிகளில் அப்போது இருந்த நீர்ப்பாசன வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகளைக் கொண்டு, தேவையான கரும்பை உற்பத்தி செய்ய இயலாது எனத் தெரிய வந்தது.

முற்பகல் 10-20

இந்த நிலையில் இந்த ஆலைக்குத் தேவைப்படும் கரும்பை உற்பத்தி செய்ய கூடுதல் நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குவது அவசியமாயிற்று. அந்த நோக்கத்தோடு இந்தப் பகுதிகளில் 825 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கத்திட்டமிட்டு அதற்கென நபார்டு நிறுவனத்திடம் ரூ. 10.69 கோடி கடனாகப் பெற விண்ணப்பம் செய்யப்பட்டது. நபார்டு நிறுவனத்திலிருந்து வந்த ஆய்வுக் குழு இந்த கரும்பாலைக்கு உரிய பகுதிகளில் நிலத்தடி நீர் வளத்தை ஆய்வு செய்ததில் சுமார் 300 ஆழ்குழாய்க்கிணறுகளை மட்டுமே இப்பகுதியில் அமைக்க முடியும் எனவும் 825 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை எனக் கண்டறிந்து தெரிவித்தது. எனவே நாள் ஒன்றுக்கு 2,500 டன் கரும்பு பிழி திறன், அதாவது 'கிரஷிங் கெபாசிட்டி' கொண்ட



ஒரு ஆலையை அங்கே அமைத்து அதனைத் தொடர்ந்து இயக்குவதற்குத் தேவையான கரும்பு கிடைப்பதை உறுதி செய்ய முடியாது என்ற உண்மையை 1991–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வல்லுநர்கள் தந்த விரிவான ஆய்வறிக்கை தெளிவுபடுத்தியது. மேலும் ரூ. 37 கோடி முதலீடு செய்து இந்தச் சர்க்கரை ஆலையை அமைத்தால் தேவையான கரும்பு கிடைக்க வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் இந்த ஆலைக்காக வங்கிக் கடனாகப் பெற்ற ரூ. 22.22 கோடிக்குக் கூட வட்டி கட்டமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்று நிதி நிலை அறிக்கைகள் குறிப்பிட்டன. இத்தகைய சூழ்நிலையில்தான் மத்திய அரசு அனுமதி பெற்றிருந்தும் அரசாணை வெளியிடப்பட்டிருந்தும்; அறந்தாங்கி வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க இயலாது என்பது தெரிய வந்துள்ளது. கசப்பாக இருந்தாலும் இதுதான் உண்மை. நாங்கள் ஆட்சிக்கு வரும்முன்பே அறந்தாங்கியில் சர்க்கரை ஆலை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் முழுமையாக இல்லை என்ற உண்மை கண்டறியப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்தச் சர்க்கரை ஆலை கட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டது என்று சிலர் கூறுவது உண்மைக்குப் புறம்பான செய்தி என்பதை இந்த மாமன்றத்தில் உள்ள (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் புரிந்து கொள்வார்கள், புரிந்துகொண்டும் விட்டார்கள் என்று நம்புகிறேன். மீண்டும் நான் தெளிவுபடுத்த விரும்புவது, நபார்டின் அறிக்கை ஏப்ரல் மாதம் 1991--லேயே வந்துவிட்டது. நாங்கள் வந்தது ஜூன் மாதத்தில்தான். எனவே நிச்சயமாக அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இதை நான் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நபார்டு நிறுவனம் கொடுத்துள்ள அறிக்கையின் அடிப்படையில்தான்....... .... (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) திரு. எஸ். திருநாவுக்கரசு.

*<u>திரு. எஸ். திருநாவுக்கரசு:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலேயே அவ்வாறு முடிவு எடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். எனவே இப்போது மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இன்னொரு தடவை மறு ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலேயே, மத்திய அரசு கொடுத்த அந்த ஆலை, வருகிற விதத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? ஏனென்றால் பின்தங்கிய மாவட்டம் என்கின்ற அடிப்படையிலே, மத்திய அரசு கொடுத்த உரிமம் என்கின்ற அடிப்படையிலே மீண்டும் அரசு மறு பரிசீலனையைக் கனிவோடு செய்யுமா என்பதைக் கேட்டுக் கொள்ள விருப்பப்படுகிறேன்.

[1992 ஏப்ரல் 6

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கனிவோடும், பரிவோடும் எத்தனை முறை ஆய்வுகளை மேற்கொண்டாலும், இல்லாத சாத்தியக் கூறுகளை எப்படி வரவழைக்க முடியும்? இந்த ஆலையை நிறுவ வேண்டுமானால் 825 ஆழ்குழாய்க் கிணறு களைப் போடவேண்டும். ஆனால் அங்கே 300 ஆழ்குழாய்க் கிணறுகள் மட்டும்தான் போட முடியும் என்று நபார்டு நிறுவனமே கூறியிருக்கிறது. நாங்கள் என்ன செய்யமுடியும்? நபார்டு நிறுவனம் கொடுத்துள்ள அறிக்கையின் அடிப்படையில் தான் எனது விளக்கங்களைத் கொடுத்துள்ளேன். இருப்பினும் இந்தச் சர்க்கரை ஆலை குறித்து எடுக்கப்பட வேண்டிய மேல் நடவடிக்கைகள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை சர்க்கரைத் துறை ஆணையாளரிடமிருந்து இந்த அரசு பெற்றுள்ளது. இந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து சரியான முடிவினை விரைவில் இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி. வி. இராஜேந்திரன் மற்றும் திரு. சிங்காரம் ஆகியோர் படித்த இளைஞர்களுக்குத் தொழில் செய்ய வழங்கப்படும் கடன்கள் பற்றி வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களில் 600 படித்த இளைஞர்களைத் தேர்தெடுத்து அவர்களுடைய படிப்பின் அடிப்படையில், தேர்ந் தெடுக்கப்பட்ட தொழில்களுக்கு வங்கிகளின் மூலம் கடன் உதவி மற்றும் மானியம் அளித்து தொழில்களை துவக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நல்லதொரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பல்க 10.25

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. சுவாமிநாதன், திரு. ஆர். தங்கராஜ், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் உள்ளிட்ட 15 சட்டமன்ற உறுப்பினர்கள் தத்தம் தொகுதி களிலும், மாவட்டங்களிலும், புதிய தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்பேட்டைகளை அமைத்து தொழில் வளர்ச்சியைத்துரிதப் படுத்த வேண்டும் என்று கேட்டு 45 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இந்த வெட்டுத் தீர்மானங்கள் எல்லாம் ஒரே பொருள் தொடர்பானவை என்பதால் ஒட்டு மொத்தமாக எனது பதிலை அளிக்க விரும்புகிறேன்.

காவேரிப் படுகையில் கிடைக்கும் நிலவாயுவைப் பயன்படுத்தி உரத் தொழிற்சாலை ஒன்று நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புகளூரில் உள்ள



1992 ஏப்ரல் 6] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அரசு காகிதத் தொழிற்சாலையை 475 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தவும் தென்னார்க்காடு மாவட்டத்தில் 1000 கோடி ரூபாய் செலவில் புதிய காகிதத் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் திட்டமும் அரசிடம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

வேதாரண்யத்தில் கிடைக்கின்ற உப்பைப் பயன்படுத்தி காஸ்டிக் சோடா தொழிற்சாலை ஒன்றினை அமைக்க தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற முன்னோடி நடவடிக்கைகளை தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனம் எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவை தவிர சில தொழிற்சாலைகளை அமைப்பதற்காக நமது அரசு மத்திய அரசிடம் அனுமதி கோரியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நார் பொருளை (காயிர்) அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலை ஒன்றை அமைக்க இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக 'வேர் கிளம்பி' என்னும் இடத்தில் 24.12 இலட்சம் ரூபாய் செலவில் ரப்பர் ஒட்டிய கயிறு மிதியடிகள் தயாரிக்கும் தொழிற்சாலை தொழிற் கூட்டுறவு அமைப்பின் மூலம் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் (நேஷனல் கோவாப்பரேட்டிவ் டெவலப் மெண்ட் கார்ப்பொரேஷன்) நிதி உதவியுடன் இந்தத் தொழிற் சாலையை வெகு விரைவில் அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சிதம்பரனார் மாவட்டம் 'குதிரைமொழித்தேரியில்' கிடைக்கும் இல்மெனைட் மணலைப் பயன்படுத்தி இங்கிலாந்து நாட்டிலுள்ள டை—ஆக்ஸைடு நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஆண்டொன்றுக்கு 50,000 டன் டைட்டேனியம் டை—ஆக்ஸைடு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை 450 கோடி ரூபாய் செலவில் நிறுவ தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) திட்ட மிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கும் ரப்பரைப் பயன் படுத்தி 400 கோடி ரூபாய் முதலீட்டில் டயர் மற்றும் டியூப் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை தகுதி வாய்ந்த தொழில் முனைவோர்களுடன் சேர்ந்து கூட்டுத் துறையில் நிறுவுவதற்கு டிட்கோ நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 400 கோடி ரூபாய் செலவிலான ரப்பர் தொழிற்சாலை எப்போது நிறுவப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் கேட்டார்கள். டிட்கோவுடன் சேர்ந்து தொழில் முதலீடு செய்வதற்கு ஒரு நிறுவனம் கோ- புரொமோட்டர் என்றைக்கு கிடைப்பார்களோ அன்றே தொடங்கப்படும். அந்த அளவில்தான் டிட்கோ ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 6

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும், ஆயிரக்கணக்கான மக்களுக்கு அதில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற எண்ணத்தில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால், எல்லா இடங்களிலும் அரசே முதலீடு செய்து தொழிற்சாலைகளை அமைத்து நடத்துவது என்பது இயலாத காரியம் ஆகும். தனியார் தொழில் முனைவோர்கள் தமிழகத்தில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கருத்தில் கொண்டும், புதிய தொழில் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தும் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க முன் வருவார்களேயானால் அவர்களை இந்த அரசு வரவேற்று ஆதரவு தரத் தயாராக இருக்கிறது. அவர்கள் தொழில் தொடங்க வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் அவர்களது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசே எல்லாத் தொழிற்சாலைகளையும் ஆரம்பித்து நடத்த வேண்டும் என்று எதிர்பார்த்தால் தற்போதைய இக்கட்டான நிதி நிலைமையில் அதற்கு வாய்ப்பு இல்லை. மேலும் அவ்வாறு எதிர்பார்த்துக் காத்திருந்தால் நமது தொழில் வளர்ச்சி காலதாமதம் ஆவதோடு மட்டுமின்றி அது மாபெரும் குந்தகத்தையும் விளைவிக்கும். எனவே, தனியார் துறையிலும், கூட்டுத் துறையிலும் தொழிற்சாலைகளைத் தொடங்க நாம் அனைவரும் பெருமுயற்சி எடுக்க வேண்டும். தொழிற்சாலைகளைத் தனியாரால் நடத்த முடியாது என்ற நிலை எங்கு இருக்கின்றதோ அந்த இடங்களில் மட்டும் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து அரசு அங்கு தொழிற்சாலைகளைத் தொடங்கி நடத்த முன்வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக இன்றைக்கு பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை அறிவித்திருந்தாலும் கூட புதுக்கோட்டையை பொறுத்தவரையில் சர்க்கரை ஆலை துவங்குவதற்குரிய ஏற்பாடுகள், என்னென்ன கோளாறுகள் இருக்கின்றன என்பதையெல்லாம் இங்கே அறிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் அமைச்சர் பொறுப்பிலே இருந்தபோது அவருடைய தொகுதிக்கு இந்த ஆலையை எடுத்துச் செல்ல வேண்டும் என்கின்ற ஆர்வத்தின் அடிப்படையில் அங்கே இந்த ஆலையை எடுத்துச் சென்றார்கள். உள்ளபடியே நிலநீர் ஊற்று ஆய்வாளர்கள் அந்தப் பகுதியில் ஆழ்குழாய்....



1992 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இன்னொரு விவாதத்திற்குப் போய்விடக் கூடாது. அவர் ஏற்கனவே கேட்டிருக்கிறார். அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். பிறகு அது அங்கே போயிற்று என்று சொல்வதால் (குறுக்கீடு) அவர் எதற்கு வருகின்றார் என்பது தெரியாதா, அதை என் தொகுதியில் அமைத்துக் கொடுப்பீர்களா என்பதற்கு வருகின்றார். அதை நேரடியாக ஒரே வரியில் கேட்டு விடுங்கள்.

திரு. சி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது நபார்டு ஆய்வு செய்ததில் 800 ஆழ்குழாய் கிணறுகள் அந்த மாவட்டத்தில் அமைப்பதற்குரிய வாய்ப்பு இல்லை என்று இங்கே சொன்னார்கள். ஆனாலும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்கு பதில் சொல்கின்றபோது அமைக்கப்பட்ட 950 ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே கொடுக்கப்பட்ட ஆழ்குழாய் கிணறுகள் என்பது—அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு அங்கே கரும்பு விவசாயம் மிகத் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இன்னொரு விவாதத்திலே போய்க் கொண்டிருக்கிறீர்கள். நேரடியாக உங்களுடைய கோரிக்கையை மட்டும் சொல்லலாம்.

திரு. சி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை அமைத்த இடம் அறந்தாங்கி தவிர, ஆலங்குடி அல்லது புதுக்கோட்டை தொகுதியிலே அந்த ஆலையை அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்தால் அங்கே நில நீர் ஊற்றும், கரும்பு சாகுபடிக்கு வேண்டிய நிலமும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெளிவாகக் கூறினேன். நபார்டு இந்தக் குறுகிய தொழிற்சாலை அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் மிகவும் ஆழமான ஒரு ஆய்வை நடத்தியுள்ளது. அதாவது அழியாநிலை என்ற கிராமத்தில் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டுமானால் அதற்காக வரையறுக்கப்பட்ட வட்டங்கள் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், புதுக்கோட்டை, திருமயம், குளத்தூர்—இது போன்ற வட்டங்களில் எல்லாம் ஏற்கனவே நபார்டு ஆய்வு நடத்திவிட்டது. இப்பொழுது மத்திய அரசின் கொள்கைப்படி ஒரு நாளுக்கு 2,500 டன் பிழி திறன் கொண்டுள்ள ஒரு ஆலையைத்தான் அங்கே நிறுவ வேண்டும். அப்படிப் பார்த்தால் அதற்கு 825 ஆழ்குழாய்க் கிணறுகள் தேவைப்படுகின்றன. அதற்கு

வரையறுக்கப்பட்ட பகுதிகளில் தான் இந்த ஆழ்குழாய்க் கிணறு
களைப் போட வேண்டும். அப்படி ஆய்வு செய்ததில் 300
கிணறுகளை மட்டுமே போட வேண்டும் என்று ஆய்வில் தெரிய
வந்துள்ளது. எனவே, ஒரு புதிய ஆலையைத் தொடங்குவதற்கு
நிலம் மின்சாரம் தேவைப்பட்டால், அதை நாம் கொடுக்க
முடியும். வேறு வசதிகள் தேவைப்பட்டால் கொடுக்க முடியும்.
தண்ணீர் இல்லை என்றால் அதற்கு என்ன செய்ய முடியும்?
அதுவும் கரும்பு, சர்க்கரை என்பது, இந்தத் தொழிலே—
it is a water intensive industry. மாண்புமிகு உறுப்பினர்
எம். சுந்தரதாஸ் அவர்கள் சிவகாசியில் தீப்பெட்டித் தொழிற்
சாலை தொழிலதிபர்கள் அங்கே பணி புரியும் குழந்தைத்
தொழிலாளர்களுக்கு பள்ளி ஒன்றைக் கட்டாயமாக நடத்த
வேண்டும். இல்லையேல் குழந்தைத் தொழிலாளர்களை
வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாது என்று கருத்துத்
தெரிவித்தார். தேசிய குழந்தைத் தொழிலாளர் நலத் திட்டம்
(National Child Labour Project) என்ற திட்டத்தின் கீழ் சிவகாசியில்
குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி அறிவை மேம்படுத்த 100
முறைசாராக் கல்வி மையங்கள் (Non-formal schools) 11-2-1988
முதல் மூன்று ஆண்டுகளுக்குச் செயல்பட்டன. இந்த மையங்
களுக்கான செலவினத்தை மத்திய அரசும், மாநில அரசும் சம
அளவில் பகிர்ந்து கொண்டன. இதில் 2500 குழந்தைத் தொழி
லாளர்களுக்கு முறைசாரா கல்வி (Non-formal education) அளிக்கப்
பட்டது. இந்தத் திட்டம் மார்ச் 1991-உடன் முடிவு அடைந்து
விட்டதால் இந்த நல்ல திட்டத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு
நீட்டிக்க வேண்டும் என்று நாம் மத்திய அரசைக் கேட்டுக்
கொண்டுள்ளோம். மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன்
மீண்டும் இந்த முறைசாராக் கல்வி மையங்கள் ஆரம்பிக்கப்படும்
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

இது தவிர 1,200 குழந்தைகள் பயன்பெறும் வகையில்
27 சிறப்புப் பள்ளிகள் (Special schools) மத்திய அரசின் முழுமை
யான நிதி உதவியோடு 11 சமூக சேவை நிறுவனங்கள் (Voluntary
Agencies) மூலமாக நடைபெற்று வருகின்றன. முறையான
ஆரம்பக் கல்வி அளிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இந்தக்
குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்களாக மாறுகின்ற அவல
நிலையைத் தடுப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.
இப்பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை
சொல்லித் தரப்படுகின்றது.

முற்பகல் 10.35

தொழிலாளர்கள் நலம் காப்பதில் தீராத ஆர்வம் காட்டி
செயல்படும் இந்த அரசு பொறுப்பேற்றவுடன், குழந்தைத்
தொழிலாளர் நலவாழ்வு நிதி Child Labour Welfare Fund ஒன்றினை



ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு ஒரு தொழிலாளிக்கு இரண்டு ரூபாய் வீதம், தீப்பெட்டித் தொழிற்சாலை நடத்தும் தொழிலதிபர்கள், அவர்களது பங்காக செலுத்தவேண்டும். மாநில அரசும் அதே அளவு தொகையை இந்த நிதிக்குத் தனது பங்காகச் செலுத்தி வருகிறது. இந்த பங்குத் தொகையை இரண்டு ரூபாயிலிருந்து, பத்து ரூபாயாக அரசு உயர்த்த முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). தொழில் அதிபர்களும் தங்களது பங்காக இனி பத்து ரூபாய் செலுத்த வேண்டும். இந்த நிதி, குழந்தைத் தொழிலாளர்களுடைய கல்வி வசதிக்காகவும், மருத்துவ வசதிக்காகவும், மற்ற வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் என்றும், அதற்குரிய திட்டங்கள் வகுத்து செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. காளன் அவர்கள் போளூரில் ஒரு சர்க்கரை ஆலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று கேட்டுள்ளார். போளூர் தவிர அம்பாசமுத்திரம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் அரசு சர்க்கரை ஆலை அமைக்க அனுமதி கோரி மத்திய அரசின் அனுமதி 'Letter of intent' இதுவரை கிடைக்கப்பெறவில்லை. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் இப்புதிய சர்க்கரை ஆலை அமைப்பது குறித்து பரிசீலனை செய்து தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்புகளிலே கடந்த ஓராண்டு காலத்தில் எத்தனை தொழில்களுக்கு உரிமம் கேட்டு மத்திய அரசுக்கு மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கிறது? எத்தனை தொழில்களுக்கு உரிமங்கள் கிடைத்திருக்கிறது? எத்தனை மனுக்கள் இன்னும் டில்லியிலேயே நிலுவையாக இருக்கின்றது என்ற விபரங்கள் கொடுக்கப்படவில்லை என்று கூறினார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தகவலுக்காக இந்த விபரங்களைத் தெரிவிக்கின்றேன்

சென்ற ஆண்டு அதாவது 1.4.1991 முதல் 31.3.1992 முடிய 201 விண்ணப்பங்களை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளோம். அவற்றில் 133-க்கு அனுமதி கிடைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). 7 நிராகரிக்கப்பட்டுள்ளது. மீதம் 61 நிலுவையில் உள்ளது. மத்திய அரசு அனுமதி வழங்கிய 133 விண்ணப்பங்களின் விபரத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். 'Letter of intent' அனுமதி பெற்றவை 21. Memorandum cases 90; Permission Accorded 22. ஆக மொத்தம் 133 விண்ணப்பங்களின் மீது சாதகமான ஆணைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி). நிலுவையில் உள்ள 61 விண்ணப்பங்களில் அரசு அனுப்பி வைத்தவை 9 மட்டுமே. மீதமுள்ள 52

விண்ணப்பங்கள் தொழில் துறை இயக்குநரகத்தால் அனுப்பப் பட்டவை. அவைகளின் மீதும் விரைவில் அனுமதி வழங்கக்கோரி மைய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ள சில புள்ளி விவரங்களைத் தெரிவித்து தமிழகத்தின் தொழில் வளர்ச்சி குறைந்து விட்டது என்ற கருத்தை இங்கே தெரிவித்தார். அவை பற்றிய உண்மையான நிலையை இந்த அவைக்கு தெரிவித்து, தெளிவு படுத்துவது என் கடமை என்று கருதுகிறேன்.

அதாவது திட்ட ஒதுக்கீட்டில் பார்த்தால் 1990–91-லே ஆகியிருக்கின்ற உண்மையான செலவு ஏறக்குறைய 46 கோடி ரூபாய் என்றும், 1991–92-லே திட்ட மதிப்பீடு 45 35 கோடி என்றும், ஆனால் 1992–93ல் இது 41.50 கோடியாகக் குறைந்திருப்பது வேதனைக்கு உரியது என்று கூறி வருந்தியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது குறித்து எவ்விதக் கவலையும் கொள்ள வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி). 1991–92-ன் திட்ட மதிப்பீடான 45.35 கோடியை மட்டுமே அவர் இங்கே குறிப்பிட்டார். அந்த ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீடு 57.46 கோடி என்பதைக் கூற ஏனோ மறந்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி).

இதோ பாருங்கள், இந்தப் புத்தகத்திலுள்ள அந்தப் பக்கத்திலேயே இங்கே 3-வது காலத்தில் ரிவைஸ்டு எஸ்டிமேட் என்று இருக்கிறது. அதை ஏன் பார்க்கத் தவறிவிட்டார் என்று புரியவில்லை.

தற்போது கையேடுகளில் குறிப்பிட்டுள்ள 41.50 கோடி ரூபாய் 1992-93 ஆண்டுக்கான திட்ட மதிப்பீடுதான். எனவே இந்த ஆண்டு இறுதிவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுத்திருந்து உண்மை நிலை என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது 41.50 கோடி என்பது ஒரு பட்ஜெட் எஸ்டிமேட்தான். இன்னும் எவ்வளவோ செலவு செய்வோம் ஆண்டு இறுதிக்குள். (குறுக்கீடு) உட்காருங்கள் நான் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறேன்.

முற்பகல் 10.40

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் அன்றைக்குப் பேசினீர்கள். நான் பதில் சொல்கிறபோது, பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு. இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில்



சொல்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்கு உங்களுடைய பேச்சில் குறுக்கிடவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பதில் சொல்கிறபோது நீங்கள் குறுக்கே எழுந்து கொண்டால் பிறகு புள்ளிவிவரங்களில் எப்படிப் பதில் சொல்ல முடியும்? உட்காருங்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, பிளான் புரவிஷன்ஸ் என்ற கையேட்டில், அவர் சொன்னது, 1990–91-இல். ஆக்சுவலாக செலவானது 46 கோடி என்பது. பட்ஜெட் எஸ்டிமேட் ஃபார் 1991–92-இல் 45 கோடி என்பதை அவர் சொல்லியிருக்கிறார், எனவே, குறைந்துவிட்டது என்கிறார். ஆனால் அதன் பக்கத்திலேயே நான்காவது காலத்தில் ரிவைஸ்டு எஸ்டிமேட், 1991–92 என்று 57 கோடி கொடுத்திருக்கிறது. அதை ஏன் கவனிக்கவில்லை என்றுதான் இங்கே கேட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்தபடியாக, பெருந்தொழில்கள், கொள்கை விளக்கக் குறிப்பில் (ஆங்கிலம்) பக்கங்கள் 26 மற்றும் 27-இல் கொடுக்கப் பட்டுள்ள சில புள்ளிவிவரங்களை எடுத்துச்சொல்லி சர்க்கரைத் தொழில், டிட்கோ, சிப்காட், எல்காட் போன்ற நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு திட்டமதிப்பீடுகள் குறைக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு வழங்கும் ''லெட்டர் ஆஃப் இன்டென்ட்'' அனுமதியின் அடிப்படையில்தான் புதிய சர்க்கரை ஆலையோ அல்லது ஏற்கெனவே இயங்கும் ஆலைகளின் விரிவாக்கமோ செய்ய முடியும். அந்த அடிப்படையில் தற்போது 500 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). தேவையின் அடிப்படையில் இது எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்தப் படும் என்பதையும், நிதி ஒதுக்கீடு இல்லாததால் புதிய சர்க்கரை தொழிற்சாலை தமிழகத்தில் தொடங்க முடியவில்லை என்ற நிலை நிச்சயமாக ஏற்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டிட்கோ நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் சென்ற ஆண்டு 1900 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருந்ததை 1690 இலட்சம் ரூபாயாக குறைத்து இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தாகக் குறிப்பிட்டார். இது பெருந் தொழில்கள் கொள்கை விளக்கக் குறிப்பின் பக்கம் 26-இல் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங் களின் அடிப்படையிலானது. அதே கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 27-இல் பகுதி 5-இல் டிட்கோ நிறுவனம், நிலக்கரியை வெட்டி எடுத்து மின்சாரம் உற்பத்திச் செய்யும் கூட்டுத் துறை திட்டத்திற்கு முதலீடு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 250 இலட்சம் ரூபாயை கவனிக்கத் தவறி விட்டார் என்று நினைக் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவை இரண்டையும்

சரியாகக் கூட்டிப்பார்த்தால் இந்த ஆண்டு ஒதுக்கீடு 1940 இலட்சம் ரூபாய் ஆகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே புத்தகத்திலே 26-ஆவது பக்கத்தில் டிட்கோவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை, பட்ஜெட் எஸ்டிமேட்டை இங்கே போட்டு அதன் அடுத்த பக்கத்திலேயே, 'Tamil Nadu Industrial Development Corporation for establishment cf an integrated lignite mining and power generation project in joint sector, என்று போடப்பட்டிருக்கிறது. இரண்டுமே டிட்கோ தானே. இரண்டையும் கூட்டிப்பார்த்தால் கடந்த ஆண்டைவிட அதிகம் என்பது தெரிய வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சிப்காட் நிறுவனத்தின் திட்ட மதிப்பீட்டில் சென்ற ஆண்டு ஒதுக்கீடான 2150 இலட்சம் ரூபாய். தற்போது 1635 இலட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றார். ஏற்கெனவே சிப்காட் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வந்த சில திட்டங்களை தனியே பிரித்து, புதிதாக, Tamil Nadu Infrastructure Development Corporation என்ற அமைப்பை அரசு உருவாக்கியுள்ளது என்பதை அனைவரும் அறிவீர்கள். இந்தப் புதிய கார்ப்பரேஷன் தொழில்துறைக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை வகுத்து, கட்டுமானப் பணிகளையும் அடிப்படைத் தேவைகளையும் விரைவில் அமைத்துத் தருவதற்காக அமைக்கப்பட்டது. இந்தக் கார்ப்பரேஷன் மத்திய அரசு முதலீட்டையே நம்பியிருக்காமல் பொதுச் சந்தையிலும் கடன்கள் பெற்று, நிதி நிறுவனங்களிலிருந்தும் உதவிகள் பெற்று பெருமளவு தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய நிறுவனத்திற்கு 500 இலட்சம் ரூபாய் முதலீடாக இந்த ஆண்டிற்கு அரசு வழங்கியுள்ளது. இந்தத் தொகையையும் சிப்காட்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகையுடன் சேர்த்துக் கொண்டால் 2135 இலட்சம் ரூபாய் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்படி இதைச் சேர்த்தாலும் சென்ற ஆண்டைவிட 15 இலட்சம் ரூபாய் குறைவுதானே என்று வாதிடலாம். ஆனால் உண்மை நிலை என்னவென்றால், சென்ற ஆண்டு தொழில் வளர்ச்சிக்கு சிப்காட் நிறுவனம் செய்த உதவிகளைக் காட்டிலும் இந்த ஆண்டு இந்த இரு நிறுவனங்களும் செய்ய இருக்கின்ற உதவிகள் மிக அதிகமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆண்டு இறுதி வரை சற்றுப் பொறுத்திருந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் குறிப்பிட்ட ஒவ்வொரு கருத்திற்கும் பதில் கூறிக் கொண்டே போகலாம். ஆனால் நேரத்தின் அருமை கருதி ஒன்றிரண்டை மட்டும் சுருக்கமாகச் சொல்லி அவருக்குப் பதில் அளித்து முடிக்கலாம் என்று கருதுகிறேன்.



முற்பகல் 10.45

சிப்காட்டைப் பொறுத்தவரைக்கும் கொடுக்கப்பட்ட கடன்கள் குறைந்திருக்கின்றன என்று ,கூறி, சில புள்ளி விவரங்களை அவைக்குத் தெரிவித்திருக் கின்றார். அதில் 1990–91 ஆம் ஆண்டில் 60 தொழில்களுக்கு 36.58 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது என்றும், 1991–92 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 64 தொழில்களுக்கு 30.38 கோடிதான் கொடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். இது 'Performancc Review–Majcr Industries–1991–92' என்ற கையேட்டில், பக்கம் 11-இல் 'direct fininicial assistance-Term loans' என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட விவரங்கள்தான். அதில் பிப்ரவரி 1992 வரை 64 தொழில்களுக்கு 30.38 கோடி ரூபாய் வழங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 11 மாத காலத்தின் சாதனையை எப்படிச் சென்ற 12 மாத கால சாதனையுடன் ஒப்பிட முடியும்? எனவே இந்த ஒப்பீடே தவறு என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிறுவனம் 31-3-1992 வரை 74 தொழில்களுக்கு 40.72 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இது சென்ற ஆண்டைவிட அதிகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதாவது at the timeof gcing to print இந்த கையேடு அச்சடிக்கின்ற நேரத்தில், அதுவரைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதையே கொண்டு, 11 மாத கால சாதனையை 12 மாத கால சாதனையோடு ஒப்பிடுவது தவறு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தின் செயல்பாட்டில் எப்படியாவது குறை கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆதங்கத்தில் இந்தக் கையேடுகளைச் சரியாகப் படிக்காமல் தவறி விட்டு விட்டார் என்றுதான் நான் கருதுகிறேன். அவர் கவனத்தில் கொள்ளத் தவறியது என்னவென்றால், டிட்கோவின் கீழ் கொடுக்கப்பட்டு இருக்கிற allocation ஐப் பார்த்தார், பட்ஜெட் எஸ்டிமேட்டைப் பார்த்தார் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் இந்த lignite–ஐ அடிப்படையாக வைத்து ஒரு பெரிய 'electricity generation project'–ஐ நாம் துவங்க இருக்கிறோம். அதுவும் டிட்கோவின் கீழ்தான் வருகிறது. ஆனால் அது மிகப்பெரிய ஒரு புதிய ப்ராஜக்ட் என்பதால் அதைத் தனியாகப் பிரித்திருக்கிறோம், எனவே, அவை இரண்டையும் தனித்தனியாக அவர் பார்த்துவிட்டு டிட்கோவிற்கு allocation குறைந்துவிட்டது என்றார். இரண்டையும் கூட்டிப் பார்த்தால், கடந்த ஆண்டைவிட அதிகமாகத்தான் இருக்கிறது. அதைப்போலவே, சிப்காட் இதுவரை Infrastructure வேலைகளையெல்லாம் கவனித்து வந்தது. இப்பொழுது infrastucture-ஐக் கவனிப்பதற்காக 'Infrastructure Development Corporation' என்ற ஒரு தனி நிறுவனத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். எனவே,

இதற்கு தனி அலொகேஷன் அதற்கு தனி அலொகேஷன் என்று அறிவித்திருக்கிறோம். இவை இரண்டையும் கூட்டிப் பார்க்காமல், இதற்குக் குறைந்துவிட்டதே என்று கூறுகிறார்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் ஜெயகுமார் அவர்கள் சொன்னதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், கொடுக்கப்பட்டிருக்கின்ற கையேடுகளைச் சரியாகப் படித்துப் பார்த்துவிட்டு இங்கே தன் கருத்துக்களைச் சொல்லி யிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோலவே, அதே கையேட்டில் பக்கம் 12–இல் 'State Capital Subsidy' என்ற தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், 1990–91 ஆம் ஆண்டு வழங்கப் பட்ட தொகையான 5,19 கோடி ரூபாயைவிட, 1991–92 இல் கொடுக்கப்பட்ட தொகையான 3.83 கோடி ரூபாய் மிகவும் குறைவு என்றார், 1991–92 இல் 31–3–92 வரை இந்த நிறுவனம் 6.20 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. எனவே இதிலும் குறைவு இல்லை, சென்ற ஆண்டைவிட அதிகம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக டிக் நிறுவனத்திற்கு வருவோம். இந்நிறுவனத் தால் 1990–91 இல் ஏறக்குறைய 7,800 தொழில்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் சென்ற ஆண்டு 1991–92 இல் சுமார் 4,070 தொழில்களுக்காக கடன் கொடுக்கப்பட் டிருக்கிறது. அதிலேயும் குறைவு என்று கூறியுள்ளார். சரியாகச் சொல்லப்போனால், 7,770 தொழில்களுக்குத்தான் 1990–91 ஆம் ஆண்டிலும் 4070 தொழில்களுக்கு 1991-92-ம் ஆண்டிலும் இந்த நிறுவனம் கடன் வழங்கியுள்ளது. இந்த 7,770 தொழில்கள் என்னவென்று இனம் பிரித்துப் பார்த்தால், அதில் 3,923 தொழில்கள் முந்தைய அரசால் அறிமுகப்படுத்தப் பட்ட மாபெரும் மறுமலர்ச்சித் திட்டமான இயந்திரம் பொருத்தப் பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களும், ஆட்டோ ரிக்ஷாக்களும், டாக்சி களும் வாங்குவதற்காக மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் மிகக்குறைந்த தனி நபர் முதலீட்டில் அதிக மானியத்துடன் வழங்கப்பட்ட கடன் உதவிகளாகும்.

முற்பகல் 10.50

இதில் பயன் பெற்றவர்கள் யார் என்பது வேறு பிரச்சினை. ஆனால், இவற்றைத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி என்று கருத முடியுமா? எனவேதான், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற வுடன், இதுபோன்ற விளம்பரத் திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தோம். உண்மையான தொழில் வளர்ச்சிக்கு உதவ முன் வந்தோம்.



இங்கே மேலும் ஒன்றினைக் குறிப்பிட்டால் இன்னும் தெளிவு பெறலாம் என்று நம்புகிறேன். மேற்கூறிய சிறப்புத் திட்டத்தையும் சேர்த்து 1990–91 ஆம் ஆண்டு 7,770 தொழில்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவி 104.17 கோடி ரூபாய். ஆனால், சென்ற 1991–92 ஆம் ஆண்டு 4,070 உண்மையானத் தொழில்களுக்கு 31-3-1992 வரை வழங்கப்பட்ட தொகை எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்? அது 158 கோடி ரூபாயாகும் (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர், அப்போது 7,770 தொழில்களுக்குக் கடனுதவி செய்தார்கள். ஆனால், நீங்கள் 4,070 என்று குறைத்து விட்டீர்களே என்று கேட்கிறார், ஆனால், இந்த விவரத்தை அவர் மறைத்து விட்டார். 7,770 தொழில்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவி 104.17 கோடி ரூபாய். ஆனால், 4070 உண்மையான தொழில்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவி 158 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கும் அவர் கூறிய குறைபாடுகளுக்கும், எனது பதில் அவருக்குப் போது மான விளக்கங்களை அளித்து தெளிவுபடுத்தி இருக்கும் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தை, இந்தியாவிலேயே முதலிடம் பெறச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எங்கள் அரசு, தொழில் வளர்ச்சிக்கு செய்துள்ள ஒதுக்கீடுகள் நிறைவானதாக அமைந்துள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், மேலும், Interest-free Sales-taxes loans பற்றி குறிப்பிடுகையில், உறுப்பினர் திருநாவுக் கரசு அவர்கள் சென்ற ஆண்டு 200 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ததாகவும், இந்த ஆண்டு 100 லட்சமாக அது குறைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்தத் திட்டம் ஏற்கெனவே கைவிடப்பட்ட திட்டமாகும். தற்போது புதிதாகத் தொழில் துவங்குபவர்களுக்கு sales-taxes deferral திட்டம்தான் அமலில் உள்ளது. இருந்தபோதிலும், பழைய திட்டத்தின்கீழ் தொடங்கப் பட்ட தொழில்களுக்கு ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட கடனுதவி வழங்குவதற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடு தான் இது. எனவே, இதனால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் உரையாற்றும்போது, அவர் கூறிய பல கருத்துக்களுக்கு அன்றே எனது பதில்களை அளித்தேன். அவரும் அவற்றை ஏற்றுக் கொண்டார். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தை மீண்டும் திறப்பது குறித்துப் பேசும்போது. அரசு கொடுக்கும் உதவிக் கடனாக இல்லாமல், பங்கு முதலீடாக இருந்தால்தான் பயனுள்ளதாக அமையும் என்று குறிப்பிட்டார். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரையில். அதில் பணி புரியும் தொழிலாளர்களின் வீட்டில் விளக்கு எரிய வேண்டுமென்ற

நல்லெண்ணத்தில் எங்களது அரசு பெருமுயற்சி எடுத்து உதவியுள்ளது. அவர்களுக்கு 3 கோடி ரூபாய் கடனாக அரசு வழங்கியதோடு மட்டுமல்லாமல், 6 கோடி ரூபாய் மதிப்புக்கான பங்குகளை தமிழ்நாடு பெட்ரோ-புராடக்ஸ் நிறுவனம் வாங்கியும் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவையெல்லாம் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள், தனது கருத்திலைத் தெரிவிக்குகு முன்னரே நடந்து விட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி). அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், அன்று பேசிய கருத்துக் களை ரிப்போர்ட் செய்யும்போது, ஒரு பொறுப்புள்ள ஆங்கில ஏடு, "The Hindu" ரிப்போர்ட் செய்யும்போது, அதில் குறிப் பிட்டிருக்கிறது. "Mr Pa, rt Ramacharcran ma aged ic wrest and assura ce from the Ciief Minister that nc prc f ɛole verture cf the Gover mert would be sold cr prvatsed" என்று கூறியிருக் கிறது. "Managed tc wrest a assurarce frcm the Clief M. scr" என்றால் என்ன அர்த்தம்? அதாவது, ஏதோ இந்த அரசு இலாபகர மாக இயங்கி வருகிற தொழிற்சாலைகளையெல்லாம் எதையாவது விற்றுவிடவேண்டுமென்று ஏற்கெனவே திட்டம் போட்டிருப்பது போலவும்அதை மாண்புமிகு உறுப்பினர்பண்ருட்டி இராமச்சந்திரன அவர்கள் இங்கே எழுந்து வாதாடியதால்தான், அரசு அந்த அந்த எண்ணத்தைக் கைவிட்டது என்பது போலவும், ஒரு பொறுப்புள்ள நாளேட்டில், இப்படி ரிப்போர்ட் செய்தது. misc.iev usrep rti g,mctvated rcp rti.g என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி அதற்கு எனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்டாண் டர்டு மோட்டார்ஸ் பற்றி, அன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, பங்குகளாகப் பெற்றால் நன்றாக இருக்குமென்று ஆலோசனை கூறினார்கள். இவர் ஆலோசனை கூறுவதற்கு முன்னரே, நாங்கள் ஏற்கெனவே இதைச் செய்தாகி விட்டது. அதைப்போலவே, ஏதே இவர் சொன்னதால்தான். "he ma aged to wrest an assurance from the C.ief Mi. istor" என்றால் என்ன அர்த்தம்? அப்படியானால், இந்த அரசு ஏற்கெனவே லாபகரமாக இயங்கிவருகிற தொழிற்சாலைகளை விற்றுவிட வேண்டுமென்று முடிவெடுத்ததா?

முற்பகல் 10.55

அப்படி இலாபகரமாக இயங்கி வருகின்ற தொழிற்சாலை எதையாவது விற்றிருக்கிறோம் என்று நீங்கள் சுட்டிக்காட்ட முடியுமா? (மேசையைத்தட்டும் ஒலி) எத்தகைய நிறுவனங்களை விற்றுவிட வேண்டும் அல்லது கூட்டுறவுத் துறைக்கு மாற்ற வேண்டும் என்று அரசுமுடிவு எடுத்திருக்கிறது. sick units. அதிலும் public suctcr உள்ள sick units மீண்டும்



இவற்றை சீரமைக்கவே முடியாது. எவ்வளவு முதலீடு செய் தாலும் இவற்றை இலாபகரமாக இயங்க வைக்க முடியாது. எனவேதான், தொடர்ந்து மக்கள் வரிப் பணத்தை இப்படி நட்டத்தையே காட்டிக் கொண்டிருக்கும் நிறுவனங்களில் விரயமாக்கக் கூடாது என்ற எண்ணத்தோடுதான் அத்தகைய sck espublc sctor urt சிலவற்றைத்தான் விற்க வேண்டுமென்று அரசு முடிவு எடுத்திருக்கிறதே தவிர, por able venture லாபம் சம்பாதிக்கின்ற எந்த ஒரு தொழிற்சாலையும் விற்க வேண்டு மென்ற எண்ணம் அரசுக்கு இல்லை. ஏற்கனவே அதைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். எனவே இதுபோன்ற mischevous aeporti g-இல் ஈடுபட வேண்டாம் என்று பத்திரிக்கை உலக நண்பர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்ஒலி)

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றி பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன. நாட்டில் தொழில் வளர்ச்சி அடைந்த மாநிலங்களில் முன்னணியில் இருந்து வந்த நமது மாநிலம், 1967 முதல் 1903 ஆம் ஆண்டுகளில் கீழ் இறங்கி வந்துள்ளதாகச் சிலர் கூறுகின்றனர். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி, வி. இராஜேந்திரன் அவர்கள்கூட. தமிழ்நாடு 12-வது அல்லது 13-வது இடத்தில் உள்ளது என்று குறிப்பிட்டார். 1966-67 முதல் 1987-88 வரை உள்ள காலத்திற்கான தொழில் நிலைமைகளைப் பற்றி ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில் நான் ஒரு சில விளக்கங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சி அங்குள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, நிலையான மூலதன முதலீடு, உற்பத்தி மதிப்பு, தொழிற்சாலைகளினால் மதிப்பு உயர்வு value added facts நிதி நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவிகள் போன்ற வற்றை அளவு கோல்களாகக் கொண்டுதான் ஒரு மாநிலத்தில் வளர்ச்சியை அளவிட முடியும்.

இதன் அடிப்படையில் பார்த்தோம் என்றால், 1966-67 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் எண்ணிக்கையைப் பொறுத்த மட்டில் மூன்றாம் இடத்தை வகித்து வந்த நாம் தொடர்ந்து 1987-88 இறுதி வரையிலும் அதே மூன்றாவது இடத்திலேயே தான் இருக்கின்றோம்.

நிலையான மூலதன முதலீட்டை Fixed Capi al Empcyled பொறுத்தவரை 1966-67 இல் மூன்றாவது இடத்தை வகித்து வந்த நமது மாநிலம், 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளில்தான் கீழே தள்ளப்பட்டு ஐந்தாவது இடத்திற்கு வந்தது. அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் யார் என்று நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி). அது உங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நிலைமை 1987-88 ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளது.

1966-67 ஆம் ஆண்டில் Industrial out put உத்தி மதிப்யின்
அடிப்படையில் மூன்றாவது இடத்தை வகித்து வந்த நாம்
1973-74 முதல் 1976-77 ஆம் ஆண்டுவரை நான்காவது இடத்
திற்குச் சென்றோம். 1977-78 ஆம் ஆண்டுமுதல், அதாவது
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப்
பொறுப்பேற்ற பின்னர்தான் மீண்டும் மூன்றாவது இடத்தை
நமது மாநிலம் அடைந்தது. (மேசையைத தட்டும் ஒலி) அதனை
1987-88 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தக்கவைத்துக்கொண்
டுள்ளோம்.

தொழிற்சாலைகளினால் ஏற்படும் மதிப்பு உயர்வினை அள
விடும்போது (Value atted by Factarios) 1966-67 ஆம் ஆண்டில்
மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்த தமிழ்நாடு, 1973-74
முதல் 1975-76 வரை நான்காவது இடத்திற்குத் தள்ளப்பட்டு
அதன் பின்னர் மூன்றாவது இடத்தைத் தக்க வைத்துக்
கொண்டது.

எந்த ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியும், அம்மாநிலத்
தில் செய்யப்படும் மத்திய அரசின் முதலீட்டையும் Central
Investment அதுபோல நிதி நிறுவனங்களின் கடன் உதவி
களையுமே பெரும் அளவில் சார்ந்து இருக்கும். மத்திய அரசின்
முதலீட்டைப் பொறுத்தவரையில், பல ஆண்டுகளாக ஐந்தாவது
இடத்தை வகித்து வந்த நமது மாநிலம், பெரிய அளவிலான
பின்னடைவைத் தாங்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்
பட்டது. 1969-70 ஆம் ஆண்டு முதல் 1975-76 ஆம் ஆண்டு
வரை, நமது மாநிலம் ஐந்தாவது இடத்தில் இருந்து வந்தது.
ஆனால், 1976-77 ஆம் ஆண்டிலிருந்து, இந்நிலையில் வேகமான
சரிவு ஏற்பட்டு, 1988—89 ஆம் ஆண்டு இறுதியில் ஒன்பதாவது
இடத்திற்குக் கீழிறங்கியது. அதாவது 1969 ஆம் ஆண்டில்
10 சதவீதமாக இருந்த மத்திய அரசின் முதலீடு, 1989 ஆம்
ஆண்டில் 5.21 சதவீதமாகக் குறைந்து விட்டது. ஆனால்
அதேசமயம் 1969-70 ஆம் ஆண்டில் 9-வது இடத்தை வகித்து
வந்த ஆந்திர மாநிலம் 1988-89 ஆம் ஆண்டில் 3-வது இடத்
திற்கு உயர்ந்துவிட்டது என்பதும், அதைப்போல 1969-70-ல்
7-வது இடத்தில் இருந்த மகாராஷ்டிரம் 1988-89-ஆம் ஆண்டு
முதல் இடத்திற்கு உயர்ந்துவிட்டது என்பதும் இங்கே குறிப்பிடத்
தக்கது.

முற்பகல் 11-00

எனவே இது குறித்து நாம் வகிக்கும் இடத்தை நிர்ணயிப்பது
இந்த அரசு அல்ல; மாநில அரசு அல்ல என்பதை மட்டும்
தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மத்திய அரசின் முதலீட்டைப் பெருமளவு உயர்த்த வேண்டு
மென்று நாங்கள் ஏற்கெனவே கேட்டு வருகிறோம். அதனை
மீண்டும் வலியுறுத்துவோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். இதிலே நான் தெளிவுபடுத்த விரும்பியது என்ன
வென்றால் தமிழ்நாடு இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில்



13-வது இடத்திற்குச் சரிந்துவிட்டது, 14-வது இடத்திற்குச்
சரிந்துவிட்டது என்பதெல்லாம் சரியான தகவல் அல்ல. அதை
இங்கே நான் கொடுத்த விளக்கங்களாலேயே உங்களால் புரிந்து
கொள்ள முடியும்.

மற்றைய டிபார்ட்மென்ட்ஸை எடுத்துக்கொண்டோமானால்,
மற்றைய செக்ஷன்ஸை எடுத்துக்கொண்டோமானால் தமிழகம்
3-வது இடத்தில் இருக்கிறது. ஆனால் சிற்சில செக்ஷன்களில்
5-வது இடத்திற்குக் கீழ் இறங்கவே இல்லை. ஆனால்
சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் என்று வரும்போதுதான் 9-வது
இடத்திற்கு இறங்கி இருக்கிறது. மற்ற செக்டார்ஸை எடுத்துக்
கொண்டோமானால் தமிழகம் 1988 இறுதிவரை மூன்றாவது
இடத்திலேயேதான் இருக்கிறது. தமிழகத்தின் தொழில்
வளர்ச்சியை உண்மையாகவே விரைவுபடுத்த வேண்டுமென்ற
உறுதியான முடிவின் அடிப்படையில்தான் நாங்கள் பல
திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முனைந்துள்ளோம்.

எங்கள் திட்டங்களை நாங்கள் வகுக்கும் முன் சிறிது
சிந்தித்துப் பார்த்தோம். நாடு சுதந்திரம் அடைந்து 40 ஆண்டு
களுக்கு மேலாகியும் நாம் தொழில் துறையில் எதிர்பார்த்த
அளவு, ஏன் நாம் தற்போது கூறிக்கொள்ளும் அளவு முன்னேற்றம்
அடைந்துள்ளோமா என்று பார்த்தால் இல்லை என்ற பதில்
தான் கிடைக்கின்றது. இதற்கு மூல காரணம் என்ன? ஏன்
நமது நாடு, அமெரிக்கா அல்லது ஜப்பான் போன்ற உலக
அளவில் தொழில் வளர்ச்சி அடையவில்லை என்ற கேள்விக்கு
நம்மிடம் உள்ள ஒரே பதில் நாம் அரசையே தொழில் வளர்ச்சிக்கு
நம்பிக்கொண்டிருக்கிறோம் என்பதுதான்.

அமெரிக்க நாடு இன்று உலகத்திலேயே ஒரு வல்லரசாக 'சூப்பர்
பவர்'-ஆக விளங்குகிறதென்றால் அந்த நாட்டின் தொழில்கள்
அனைத்தும் தனியார் துறையில் இருப்பதால்தான். நமது
இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் அவர்களைப்
போல ஒட்டுமொத்தமாக அனைத்துத் தொழில்களையும்
தனியாருக்கு விட்டுவிடவும் முடியாது. ஆனால் தனியாரை
முற்றிலுமாக ஒதுக்கிவிட்டு அரசே பொது நிறுவனங்களின் மூலம்
மக்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யவும்
முடியாது. இந்நிலையில் காலத்திற்கும், நடைமுறைக்கும் ஏற்ற
ஒரு தொழில் கொள்கைதான் நாட்டின் வளர்ச்சிக்கு உதவ
முடியும். அந்த அடிப்படையில்தான் எங்களது புதிய தொழில்
கொள்கையை வகுத்திருக்கின்றோம். முடங்கிக் கிடக்கும், ஏன்
முடக்கப்பட்டுள்ள தனியார் கைவசம் உள்ள முதலீடுகளை
வெளிக் கொணர வேண்டும். அவற்றைக் கொண்டு அவர்கள்
தமிழகத்தில் பல தொழில்களைத் தொடங்க வேண்டும் என்ற

முயற்சியில்தான் நாங்கள் ஈடுபட்டு உள்ளோம். பொதுத்துறை நிறுவனங்களுக்கு நாங்கள் எதிரிகள் அல்ல. சிறப்பாகச் செயல் பட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனங் களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும், அவற்றை விரிவு படுத்தவும் எங்கள் அரசு தயங்காது. ஆனால் நலிந்த நிலை யிலும் நாள்தோறும் இழப்பை அதிகமாக்கிக் கொண்டு இலாப கரமாக இயக்கவே முடியாத பொதுத்துறை நிறுவனங்களை முடிந்தால் கூட்டுத்துறையாக மாற்ற முயற்சி செய்யலாம் என்றும், அல்லது அவை மீண்டும் சீரமைக்க முடியாது என்ற தொரு நிலையை அடைந்துவிட்டாலும் அவற்றைத் தனியாருக்கு விற்றுவிடலாம் என்ற கொள்கை முடிவினைத்தான் எங்கள் அரசு எடுத்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிவரும் பொதுத்துறை நிறு வனங்களுக்கு அவற்றை நடத்த வேண்டுமே என்ற ஒரே கட்டா யத்திற்காக அரசு, மக்களின் வரிப்பணத்தைத் திரும்பப் பெற முடியாத சூழ்நிலை நிலவியும் அவைகளுக்குக் கடனாகவும் முதலீடாகவும் வழங்குவது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை. எனவேதான் அவைகளை நஷ்டத்தில் இருந்து மீட்க அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் தோல்வி அடையும் நிலையில் அவற்றை மூடிவிடுவதைத் தவிர அல்லது விற்பனை செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்ற நிலையில் அது போன்ற முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

தற்போது, மத்திய, மாநில அரசுகளின் நிதிநிலையை நீங்கள் நன்கு அறிவீர்கள். மீண்டும், மீண்டும் அரசுப் பணத்தை முதலீடு செய்து புதிய புதிய தொழிற்சாலைகளை மக்கள் எதிர் பார்ப்பதுபோல் தொடங்க வாய்ப்பில்லை. இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்களின் பெரும்பான்மையான கோரிக்கை தங்கள் பகுதிகளில் புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்பதுதான். இந்த மானியக் கோரிக்கையின் மீது விவாதித்த பல மாண்புமிகு உறுப்பினர்களும் இதையேதான் வலியுறுத்தினார்கள். அவர்கள் அனைவரின் கோரிக்கைகளிலும் நியாயம் இருப்பதை நான் உணர்கிறேன். பல சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிய தொழில்களை அவர்களது பகுதியில் அமைப்பதற்கு அனைத்து சாத்தியக்கூறுகளும், வசதிகளும் இருந்தபோதிலும் அரசு முன் வந்துதான் அவற்றை அமைத்துத் தரவேண்டும் என்பதால் தேக்க நிலை ஏற்படுகிறது. ஏன், முடியாமல் கூட போய்விடு கிறது. எனவே இதனைத் தவிர்க்கத்தான் "எஸ்கார்ட் செக்டார்" என்ற ஒரு புதிய முன்னோடித் திட்டத்தை வகுத்துச் செயல் படுத்தி வருகின்றோம். இத்திட்டத்தின் கீழ் அரசு 1 சதவீதம் பங்கு மூலதனம் மட்டுமே செய்யும். தொழிற்சாலை அமைப் பதற்குத் தேவையான. நிலம், நிதி நிறுவனக் கடன் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கு முன்நின்று



அவர்களுக்கு உதவும். இது தவிர புதிய Ass:ciate S ctcı–ன் கீழ் அரசு 11% பங்கு மூலதனம் மட்டுமே செய்யும் திட்டத் தையும் செயல்படுத்தி வருகிறோம். இத்திட்டங்களினால் ஒன்று இரண்டு தொழில்களுக்கு மட்டுமே உதவக்கூடிய 26% பங்கு மூல தனம் செய்யும் கூட்டுத் துறையை (Joint S c or) விடவும் 100% பங்கு வரை மூலதனம் செய்யும் பொதுத் துறையை விடவும், அதே தொகைக்கு இப்புதிய இரண்டு திட்டங்களின் கீழ் பல தொழில்களுக்கு உதவ வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் தொழில் தொடங்க முன் வரும் தொழில் முனைவோர்களுக்கு எங்கள் அரசு பூரண ஒத்துழைப்பு நல்கும் அனைத்து உதவிகளையும் செய்யும் என்று இத்தருணத்தில் உறுதி கூறுகின்றேன்.

முற்பகல் 11-05

தனியார் துறையினை ஊக்குவித்தால்தான் நமது மாநிலம் நாம் எதிர்பார்க்கும் தொழில் முன்னேற்றத்தை அடையும் என்பதற்கு மாறுபட்ட கருத்திற்கு இடம் இல்லை. அவர்களை எவ்வாறு ஊக்குவித்து, ஆர்வம் காட்டச் செய்யலாம் என்ற முயற்சியில்தான் எங்கள் அரசு தற்போது ஈடுபட்டுள்ளது.

நமது இந்தியத் திருநாடு எப்பொழுது உலகில் ஒரு Sup r P. w r நாடாகும் என்ற ஆதங்கம் நம் மனதில் தோன்றியுள்ளது. அது தாமதப்பட்டாலும், நாம் நமது தமிழ்நாட்டை இந்திய அளவில் ஒரு Sup r P w r மாநிலமாக ஆக்கும் முயற்சியில் தொய் வில்லாமல் தொடர்ந்து செயலாற்றுவோம். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் தமிழகத் தொழில் முனைவோர்களும், தமிழக மக்களும் உறு துணையாக இருக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

எங்கள் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் தொழில்துறை வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது என்பதை நன்கு நீங்கள் அறிவீர்கள். எங்களுடைய கட்சியின் தேர்தல் அறிக்கையில், தமிழகத்தை தொழில்துறையில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்கு வோம் என்று உறுதியளித்துள்ளோம். அதனை விரைந்து செயல் படுத்தும் முகத்தான், பல புதிய உத்திகளைக்கையாண்டு, தொழிற் சாலைக்கு அவசியமான அடிப்படை வசதிகளையும் மற்றும் மூலதன நிதி உதவிகளையும் தங்குதடையின்றி கிடைக்க, புதிய நிறுவனங்களை உருவாக்கி இருக்கின்றோம். அதே நேரத்தில் அரசின் முயற்சியால் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளைத் திறப் பதன் மூலம், தொழிலாளர்களின் நலன் பேணப்பட்டு, அவர்கள் பயன் அடையச் செய்கின்ற புதிய அணுகுமுறையை, எங்கள் அரசு தொடர்ந்து செயல்படுத்தும். Standard Motor & B & C Mills

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 6

ஆகிய மூழ்கிக் கிடந்த ஆலைகளைத் திறந்து, தொழிலாளர்
களுக்குப் புனர் வாழ்வு அளிக்கும் நற்பணியில், எவர் மனதையும்
புண்படுத்தாமல் இந்த அரசு வெற்றி பெற்றிருக்கிறது.
தொழிலதிபர்களின் தொழில் ஊக்க முயற்சிகளுக்கு ஆதரவும்,
தொழிலாளர் நல்வாழ்விற்குத் தேவையான அரவணைப்பினையும்
நல்கிவரும் எங்கள் அரசு, ஒட்டுமொத்தமாக தொழில் துறையின்
நலன் காப்பதில், தாய்மை உணர்வோடு செயல்படும் என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்நாட்டில் மின்சார வெட்டு
இல்லை என்ற சாதனை (மேசையைத் தட்டும் ஒலி)
தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்திற்கு மேலும் உதவுகின்ற
நிலையில், விரைவில் எங்கள் இலட்சிய இலக்கை அடைந்தே
தீருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறிய கருத்துக்
களுக்கும், அவர்கள் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானங்களுக்கும்
பெரும்பாலும் என்னுடைய உரையில் பதில் கிடைத்திருக்கும்
என்று நம்புகிறேன். சில கருத்துக்களுக்குப் பதில் கிடைக்கவில்லை
என்றாலும், அவர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பேட்டில்
உள்ளன. அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்
பதைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ள
மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக்
கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம் இருங்கள்.
அன்றைக்கே பேசிய உறுப்பினர்களுக்கெல்லாம் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொன்னார்கள். மிச்ச
சொச்சம் இருந்தவைகளுக்கு இன்றைக்குத் தெளிவாக, நுட்பமாக
திட்டவட்டமாகப் பதில் சொல்லியதற்குப் பிறகும், (குறுக்கீடு)
இன்றைய அலுவல்கள், சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்
பற்றிய அலுவல்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) அதை முடிப்
பதற்கே நேரம் போதாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.
அன்றைக்கே உங்களுக்கும் விளக்கம் அளித்தார்கள்.
நீங்கள் பேசப்பேச ஒவ்வொன்றுக்கும் விளக்கம் அளித்தார்கள்.
(குறுக்கீடு) வேண்டாம். இருங்கள். அன்றைக்கு
முழு விளக்கம் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கு
மேலே இன்றைக்கு வேண்டாம். இன்றைய அலுவல்களுக்கே
நேரம் போதாது. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.
மானியக் கோரிக்கை எண் (குறுக்கீடு) இல்லை. இல்லை அவர்கள்
பதிலுரைக்குப் பிறகு வேண்டாம். அன்றைக்கு, நீங்கள் பேசிய



1992 ஏப்ரல் 6] [பேரவைத் தலைவர்]

போதே வரிக்கு வரி அப்போதும் பதில் சொல்லியிருக்கிறார்கள்.
இப்போது எந்தெந்தப் பிரச்சினைகளுக்கு உங்களுக்குப் பதில்
வரவில்லை என்று எண்ணிக்கொண்டிருந்தீர்களோ அதற்கும்
முழுமையான பதிலை இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள்.
ஏற்கெனவே அன்றைக்குச் சொல்லியிருக்கின்றார்கள். மேற்
கொண்டு கேட்டால். இன்றைய அலுவல்கள், சமுதாய நல
வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அலுவல்கள் முடிப்பதற்கே நேர
மாகிவிடும். திரு. ச. இராமச்சந்திரன்.

முற்பகல் 11-10

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஜெயம்கொண்டம் அனல்மின் நிலையத் திட்டத்தில்
கூட்டுத் துறையில் அரசு எந்த நிறுவனத்தோடு கூட்டு சேர்ந்திருக்
கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதாவது Mc Nelli
Bharath Engineering என்கின்ற பிர்லா, கெய்தான் ஆகியவர்
களுடைய நிறுவனத்தோடு கூட்டு சேர்ந்திருக்கிறது என்ற செய்தி
இருக்கிறது. அது உண்மையா இல்லையா என்பதை அறிய
விரும்புகிறேன்.

அதேபோல டான்செம் போன்ற தொழிற்சாலையை தனியார்
ஒருவரிடத்தில் கொடுத்து கூட்டுத் துறை என்று சொல்வதைவிட
இந்திய அரசு செய்வதைப் போல் அதனுடைய பங்குகளை, பங்கு
மார்க்கெட்டிலே விற்றால் அதன் மூலம் அரசுக்கு ஆதாயம் வரும்;
நிர்வாகமும் அரசின் கையிலே இருக்குமே, அதைப்பற்றியும்
அன்றைக்கு நான் பேசினேன். மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் என்ன கருதுகிறார்கள்? அரசு இலாபகரமாக நடத்துகிற
ஒரு தொழிற்சாலையை யாருக்கும் விற்கமாட்டோம் என்ற
கருத்து வரவேற்கத்தக்கது என்பதை நான் ஏற்கெனவே சொல்லி
யிருக்கிறேன். ஆனாலும் அரசு நடத்திய பீர் தொழிற்சாலை
தனியாருக்கு விற்கப்பட்டிருக்கிறது. அது பற்றியும் அவர்கள்
விளக்கம் அளிப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் கேட்டது Bharath
Mc Nelli Ltd., பற்றிய கேள்வி. அது உண்மைதான். Bharath
Mc Nelli Ltd., என்ற நிறுவனத்தோடு டிட்கோ சேர்ந்து வேறு
ஒரு புதிய நிறுவனத்தை அமைத்திருக்கிறது. அந்த நிறுவனத்தின்
பெயர் தற்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் ஒரு புதிய
நிறுவனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இரண்டாவது கேள்வியான டான்செமைப் பொறுத்தவரையில்
நான் ஏற்கெனவே சொன்னேன். அரசுக்கு எந்தவிதத்திலும்
நஷ்டம் ஏற்படுத்தாத வகையில் டான்செமைப் பற்றி ஒரு நல்ல
முடிவை அரசு எடுத்திருக்கிறது. அரசைப் பொறுத்தவரை
அதைக் கூட்டுத் துறையாக மாற்றத்தான் முடிவு எடுத்திருக்கிறது

அப்படி இருக்கிறபோது Controlling power அரசிடம் தான் இருக்கிறது. கூட்டுத் துறை என்றாலே அரசுக்கு 26 பெர்சன்ட், தனியாருக்கோ புரமோட்டருக்கோ 25 பெர்சன்ட் மீதி பப்ளிக் ஈக்விட்டி, எனவே, the interest of the Government will be fully protected. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றபடி லாபகரமாக இயங்கி வந்த அந்த எம்.பி. டிஸ்டிலரியை தனியாருக்கு அரசு ஏன் விற்றுவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். ஒரு பீர் டிஸ்டிலரி என்பது வேறு, மற்ற ஆக்கப்பூர்வமான தொழில்கள் என்பது வேறு. இந்த அரசின் கொள்கை மலிவு விலை மதுவை ஒழிக்க வேண்டும் என்பது. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றபடி படிப்படியாக பூரண மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கையாகும். அப்படி இருக்கின்றபோது, அரசு மலிவு விலை மதுவை ஒழித்த நேரத்தில் அரசே மதுவைத் தயாரிக்கின்ற காரியத்தில், அந்தத் தொழிலில் ஈடுபடக் கூடாது என்பதால்தான்(மேசையைத் தட்டும் ஒலி) எம்.பி. டிஸ்டிலரீஸ் தனியாருக்கு விற்கப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு மேல் வேண்டாம். விவாதம் முடிவுற்றது. இந்தப் பிரச்சினை ஏற்கனவே பேசப்பட்டுவிட்டது. இதே பீர் தொழிற்சாலை பற்றி ஆயத் தீர்வை மானியக் கோரிக்கைக்கான பதில் உரையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக ஆயத் தீர்வை மானியக் கோரிக்கை மீது பேசுகிறபோது, இந்த பீர் தொழிற்சாலையைப் பற்றி ஏன் விற்றோம் என்பதற்கு மதுவிலக்கில் பரிபூரண நம்பிக்கையுள்ள இந்த அரசாங்கம் இந்த வடிசாலையை எல்லாம் வைத்துக்கொண்டிருக்காது, ஆகவே விற்றோம் என்று தெரிவித்தார்கள். ஏற்கெனவே தெரிவித்திருக்கிற பிரச்சினைகளுக்குள் திரும்பத் திரும்பப் போகவேண்டாம்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.பி. டிஸ்டிலரீஸ் விற்றது பற்றி மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு நான் பதில் அளித்தபோதே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டேன். அன்று மாண்புமிகு உறுப்பினர் அவைக்கு வரவில்லையோ என்னவோ. அதற்காக, சம்பந்தம் இல்லாத இந்த மானியக் கோரிக்கையின்மீது நடைபெறுகிற விவாதத்தில் இத்தகைய கேள்விகளை எழுப்புவது சரியல்ல.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



## (அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள்.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எம். ஆண்டி அம்பலம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை. வெட்டுத்தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி:</u> இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.15,95,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

## (ஆ) கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மானியக் கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

<u>திரு. ஆர். சிங்காரம்:</u> இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 18,68,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

முற்பகல் 11-15.

## 3. அவை நடவடிக்கைகளைத் திரித்து, வேறு பொருள் வருகிற வகையிலோ திசை திருப்புகிற வகையிலோ செய்திகள் வெளியிட வேண்டாமென்று பத்திரிகைகளுக்கு வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் பதிலுரை தெரிவிக்கிறபோது, பத்திரிகையாளர்கள் அவையில் நடைபெறுகிற சில விவாதங்களைத் திரித்தும் வேறு பட்டபொருள் அமைகிறபடியும் செய்திகள் வெளியிடுவது பற்றிய தன்னுடைய மனவருத்தத்தை இங்கே வெளியிட்டார்கள். மாண்புமிகு முதல் அமைச்சரவர்களுடைய அந்தக் கருத்தை ஏற்று பத்திரிகையாளர்களுக்கு நானும் அந்த வேண்டுகோளை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக இந்த அவை என்பது தன்னாட்சி உரிமை மிக்க ஓர் அவை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். பத்திரிக்கை சுதந்திரத்தைப் பேணி காக்க வேண்டும், பத்திரிகைகளுக்கு அத்தகைய உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்பதில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கடந்த 8, 9 மாதக்காலமாக இந்த அவையிலும், வெளியிலும் மிகத் தெளிவாக சில கருத்துக்களைச் சொல்லி வருகிறார்கள். பத்திரிக்கைகளே எங்களுக்கு எதிர்க்கட்சியாக இருந்தால்கூட வரவேற்கிறோம் என்று, அந்த அளவுக்குக் கூறி வந்திருக்கிற ஒரு முதலமைச்சர் இந்த அவையில் நடைபெற்ற ஒரு விவாதத்திலே கலந்து கொண்டு பேசியதைத் திட்டமிட்டு இப்படித் திசை திருப்புகிற வகையில் வெளியிடுவது தவறான முன்னுதாரணத்தை உண்டாக்கும் என்பதைப் பத்திரிகைத் துறையினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இதைப்போல 2, 3 பத்திரிகைகள் அவையின் நடவடிக்கைகளைப் பற்றித் திரித்துக்கூறியதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, உரிமைக் குழுவும் தனது அறிக்கையை முழுமையாகக்



கொடுத்திருக்கிறது. இரண்டொரு நாட்களில் இங்கே அதை வைக்க இருக்கிறோம். இதற்குப் பிறகு பத்திரிகைகள் இந்த அவையினுடைய நடவடிக்கைகளைத் திரித்து வெளியிடுவதென்பது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள முடியும். தன்னாட்சி மிக்க ஒரு அவையைப் பற்றி இப்படித் திட்டமிட்டுச் செய்கிற பத்திரிகைகள், பத்திரிகைகளுக்கு இருக்கிற உரிமை என்கிற வகையில் இன்னொரு தன்னாட்சி மிக்க அமைப்பான நீதித்துறையைப் பற்றி ஏதாவது மூச்சு விடுகிறீர்களா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அவ்வளவு பயப்படுகிறார்கள். ஆனால் இங்கே நடக்காத சம்பவங்களை நடந்ததாக எழுதுவது அல்லது நடந்ததைத் திரித்து எழுதுவது என்பது எவ்வளவு பெரிய தவறான காரியம் என்பதைப் பத்திரிகையாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொடர்ந்து இத்தகைய திசை திருப்பும் முயற்சியில் பத்திரிகைகள் சட்டமன்றப் பேரவையைப் பொறுத்தமட்டில் ஈடுபடலாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய ஜனநாயகத்தில் சட்டமன்ற, நாடாளுமன்ற மரபுகள் நாளைக்குத் தகர்த்து எறியப்பட்டால் நீங்கள் விரும்புகிற அந்தப் பத்திரிகைச் சுதந்திரம் என்னவாகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரிக்கைச் சுதந்திரம் என்ற அந்த ஓரே ஒரு கருத்தை மட்டும் நீங்கள் வைத்துக்கொண்டு, இந்த அவையைக் கொச்சைப்படுத்துகிற முயற்சி அல்லது பாராளுமன்ற மரபுகளைப் கொச்சைப்படுத்தி பொது மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை உருவாக்குவது பத்திரிகை சுதந்திரத்தையும் சேர்த்து அழிக்கிற முயற்சியாக அமையும் என்பதைப் பத்திரிகையாளர்கள் புரிந்துகொண்டு, அவையின் நடவடிக்கைகளை முறையாகவெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 2. மானியக் கோரிக்கைகள், 1992-93 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்.

(ஈ) கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்.

(உ) கோரிக்கை எண் 50—நகராட்சி நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் மற்றிய 28.ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 380,92,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம். வெட்டுத் தீர்மானம் எண் 1661, திரு. சா. பன்னீர்செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, ''ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட குடிநீர் விநியோக விஸ்தரிப்பின்கீழ் மயிலம் ஊராட்சி ஒன்றியம், விழுக்கம் பழைய காலனி, மேட்டுத் தெரு, பள்ளத் தெரு இவைகளுக்குக் குடிநீர் விநியோகம் வழங்குவது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 380,92,54,000ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 49--குடிநீர் வழங்கல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''குடிநீர் வழங்கல் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 171,06,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம். வெட்டுத் தீர்மானம் எண் 1751, திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

''நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் தொகுதிகட்கு பயன்தரும் தாமிரபரணி குடிநீர்த் திட்டத்தை உடனடியாகத் துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க'' நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''குடிநீர் வழங்கல் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக் கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,71,06,65,000-ல் ரூ. 100- குறைக்க வேண்டும்.''



மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50—நகராட்சி நிருவாகம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''நகராட்சி நிருவாகம் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 69,09,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம். வெட்டுத் தீர்மானம் எண். 1790, திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''to discuss the need to construct a bus stand at Marthandam in Kanyakumari District within the Kuzhithurai Municipality''
நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நகராட்சி நிருவாகம் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 69,09,18,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை பேரவையில் நான் படித்ததாக அவைக்குறிப்பில் பதிந்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். * அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்த பிறகு இறுதியில் என்னுடைய பதிலைத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதே நேரம் 11.22 ஆகிவிட்டது என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு உறுப்

*139–211ம் பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

பினர்கள் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்குத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு உள்ளாட்சி நிருவாகம் சிறந்த முறையில் செயல் பட்டு வருகிறதா என்றால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத் தினர்கள் இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் இல்லை. இந்த அரசாங்கம் தேர்தல் நடத்துவதாக முன் கூறினார்கள். ஆனால் இன்னும் அந்த உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தாமல் காலம் கடத்திக் கொண்டிருக்கிறது. இதை நீங்கள் கண்டிப்பாக கூடிய விரைவில் அந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தேர்தல்களை நடத்துவதில் எந்தவிதமான சிரமமும் கிடையாது. குறிப்பாக காங்கிரஸ் கட்சியும், அண்ணா தி.மு.க.வும் ஒற்றுமையாகச் செயல்பட்டாலே, தேர்தலில் வெற்றி பெறுவது நிச்சயம். இந்த அரசு நிச்சயமாக கூடிய விரைவில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்கக்கூடிய அதிகாரியின் அந்தந்த ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகளில் முழுமையாக செயல்பட வேண்டியது அவசியம். ஆனால் மாற்றுப் பணிகளாக கண் சிகிச்சை முகாம், சிறு சேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு போன்ற பணிகளை அவர்களிடம் ஒப்படைக்கிறார்கள். அந்தப் பணியை அவர்கள் செய்வதற்கே நேரம் போதாத நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதை நீங்கள் தடுத்து நிறுத்தி, அவர்களை வளர்ச்சிப் பணிகளில் மட்டுமே ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இப்போது 3 அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆணையாளர், கூடுதல் ஆணை யாளர், டெபுடி ஆணையாளர் என்ற மூன்று அதிகாரிகள் இருக் கிறார்கள். ஒரு ஆணையாளருக்கே போதிய வேலை இல்லாத நேரத்தில் மூன்று பெரிய அதிகாரிகளை வைத்து, அரசினுடைய சம்பளங்கள் எல்லாம் அதிகமான அளவில் செலவு செய்யக்கூடிய நிலைமையில் நிருவாகம் இன்றைக்கு இருக்கிறது.

முற்பகல் 11-25

அது போக விஸ்தரிப்பு அதிகாரிகள் என்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 12 பேர் இருக்கிறார்கள். அதெல்லாம் தேவைதானா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அது போக இப்போது கிராம சேவக்குகள் போதுமான அளவிற்கு



எல்லா ஊராட்சி ஒன்றியத்திலும் இருக்கிறார்கள். இந்த விஸ்தரிப்பு அதிகாரிகளை எல்லாம் குறைத்துவிட்டு, கிராமசேவக்கு களை நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல மாவட்ட அளவிலே திட்ட அலுவலர் இருக்கிறார். அவருக்கு உதவியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏழு ஏ.பி.ஓ.க்கள் இருக்கிறார்கள். இது தேவையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஏ.பி.ஓ.விற்கும் ஏறத்தாழ ஐந்தாயிரம் ரூபாய் தருகிறார்கள். இது தேவைதானா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக தன்னிறைவுத் திட்டத்தின் வழியாக ஒரு கோடி ரூபாய் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கொடுத்திருக்கிறார் கள். நிச்சயமாக அது பாராட்டுதலுக்கு உரியது. ஆனால் அதிலே நடக்கக்கூடிய குறைபாடுகளை நான் இங்கே எடுத்துக் கூறுவது எங்களுடைய கடமையாக எண்ணுகிறோம். இப்போது எங்களது மாவட்டத்திலே இந்த சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலோ அல்லது தனியாக ஒரு கூட்டத்தையோ மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரையில் கூட்டி, எங்களை அழைத்து இதைப்பற்றி விவாதிக்கவில்லை. இதை விவாதிப்பதற்கு தாங்கள் ஒரு சிறப்பான ஏற்பாட்டை செய்து தரவேண்டும். இப்போது குறிப்பாக எங்களது மாவட்டத்திலே எங்கள் பகுதிக்கு என்ன தேவை என்று நாங்கள் விரும்புகிறோமோ அதைச் செய்யாமல் 50 இலட்சம் ரூபாயை இப்போது செலவு செய்து முடித்துவிட்டதாக கூறுகிறார்கள். இதிலே அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டும். அவ்வாறு தலையிட்டு செய்தால்தான் அங்கே நீங்கள் கொடுக்கக் கூடிய ஒரு கோடி ரூபாய் அந்த ஏழையெளிய மக்கள் நலன்கள் பெறுவதற்கு உதவி யாக இருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவரும், அதற்குமேல் இருக்கக்கூடிய அதிகாரிகளும் ஒரு முடிவை எடுத்து வேலை களைச் செய்கிறார்கள். அந்த வேலைகள் அந்தந்த பகுதிக்குத் தேவையா, தேவை இல்லையா என்பது மக்கள் பிரதிநிதிகளாக உள்ள உங்களுக்குத் தான் தெரியும். எங்களுடைய ஆலோசனை களை பெற்று அவர்கள் நடக்க வேண்டும். அவ்வாறு நடந்தால் தான் ஒரு கோடி ரூபாய் அந்தந்த பகுதி மக்களுக்குத் தேவை யான நலன்களைச் செய்ய முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது எங்களது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் என்னென்ன திட்டங்கள் வருகின்றன, அது எவ்வாறு செயல் படுகின்றன என்பது உங்களால் தெரிந்து கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. இதற்கு அங்கே இருக்கக் கூடிய மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகினால் சரியான பதில் வருவதில்லை. உடனடியாக நீங்கள் தலையிட்டுச் செய்ய வேண்டும். இப்போது

ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து தந்தால் விவசாயிகளுக்கு உதவி யாக இருக்கும் என்று நாங்கள் கூறினோம். ஆனால் அரசு, விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் அந்த திட்டம் இப்போது இல்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் எங்களது மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர், சிலசில இடங்களில் இது போன்று கிணறுகளை அமைக்க உத்தரவு பிறப்பிக்கிறார். ஆனால் நாங்கள் சொல்லுவதை அவர் எடுத்துக்கொள்வதில்லை. இது போன்ற திட்டங்கள் உள்ளனவா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் நகராட்சிகளுடைய நிர்வாகம் இன்னும் சிறப்பாக அமைய வேண்டும் என்பது என்னுடைய கருத்து. என்னுடைய தொகுதியிலே தேவகோட்டை நகராட்சி இருக்கிறது. அந்த நகராட்சியைப் பொறுத்த வரையில் இப்போதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் அதை விட்டுச் சென்றிருக்கிறது. ஆனால் இது இன்னும் திராவிட முன்னேற்றக் கழகத்தாருடைய பராமரிப்பிலே இயங்கி வருகிறது. குறிப்பாக அங்கே குத்தகைகள் ஏலம் விடும்போது அந்த குத்தகைக்கான ஏலத் தொகை இது வரையிலும் வசூல் செய்யாத நிலை அந்த நகராட்சியிலே இருக்கிறது. அதிலே பல இலட்ச ரூபாய் தனியார் கையிலே இருக்கிறது. உடனடியாக உத்தரவிட்டு அந்த தொகைகளை எல்லாம் ஏலம் எடுத்தவர்களிடமிருந்து வசூல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் தொண்டி பேரூராட்சி இருக்கிறது. அங்கே சாக்கடை தெருக்கள் முழுமையும் ஆக்கிரமித்துக் கொண்டி ருக்கிறது. அந்த சாக்கடை நீரை அகற்ற பாதாள சாக்கடை முறையை ஏற்படுத்தித் தர வேண்டும். தொண்டி பேரூராட்சிக்கு ஒரு நிலையான பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அடுத்தபடியாக குடிநீர். குடிநீர் எங்கள் பகுதியில் மிக மிக மோசமான நிலையிலே இருக்கிறது. தேவகோட்டை நகரத்திலே போதுமான அளவிற்கு தண்ணீர் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். அதேபோல தேவ கோட்டை வட்டாரத்திலே இருக்கக்கூடிய மக்களும் குடிதண்ணீ ருக்காக மிக மிகக் கஷ்டப்படுகிறார்கள். திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தமட்டில் குடிதண்ணீர் நிலைமை கடைசிக் கட்ட நிலைமைக்குச் சென்று இருக்கிறது. அங்கே நிலத்தடி தண்ணீர் அதிகமாக இருந்தும், பல கிணறுகள் தோண்டப்பட்டும், தண்ணீர் நிறைய இருந்தும், ஆனால், இதுவரையிலும் அந்தப் பகுதிக்கு போதிய தண்ணீர், சரியான முறையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தாத காரணத்தால் குடிநீர் கிடைக்காத நிலைமை இருந்துவருகிறது. குறிப்பாக முள்ளுமலை, காரங்காடு போன்ற பகுதிகளிலே ஒரு



குடம் தண்ணீரின் விலை 5 ரூபாய்க்கு மக்கள் வாங்குகிறார்கள் 5 ரூபாய் அவர்கள் கொடுத்தால் கூட இன்றைக்கு குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டு இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள், இந்த அரசு நிச்சயமாக குடிதண்ணீர் வசதி செய்து தரும் என்று கூறிக்கொண்டு இருக்கிறார்கள். நான் நேற்று அங்கே சென்று இருந்தேன். அப்போது குடிதண்ணீர் கொடுக்க முடியாத நீங்கள் ஏன் எங்கள் ஊருக்கு வருகிறீர்கள் என்று அவர்கள் கேட் கிறார்கள். நான் பல தடவை இது குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கின்றேன். ஆனால், நான் ஒன்றைமட்டும் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் கூட வந்தால் நீங்கள் அமைச்சராக வர வேண்டாம்; ஒரு மாறுவேடத்தில் வாருங்கள்; அங்கே என்ன நிலை என்று பாருங்கள்; அதைப் பார்த்த பிறகாவது அதைச் செய்துவிடுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாறு வேடத்திலு வந்தாலும் அவர் அமைச்சராகத் தான் வர முடியும்.

<u>திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்:</u> வேறு வழி இல்லை. உங்களை அமைச்சராக நான் அழைத்துச் சென்றால் அதிகாரிகள் நிச்சயமாக நீங்கள் வரும்போது அந்தக் குழாய்களில் தண்ணீரை வரவழைத்துவிடுவார்கள்; நீங்கள் சென்றவுடன் அந்தத் தண்ணீர் அங்கே வருவதில்லை. நீங்கள், தயவுசெய்து குடிநீர்வடிகால் வாரியத்தை அழைத்து அவர்களுக்குச் சரியான தகவலைக் கொடுத்து எங்கள் பகுதிக்கு அவர்களை அனுப்புங்கள். உண்மை யிலேயே இன்றைக்கு ஒரு குடம் தண்ணீர் 5 ரூபாய்க்குக் கிடைக்க வில்லை. அங்குள்ளவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்றே எங்களுக்குப் புரியவில்லை. எனவே நீங்கள் அவர்களுக்கு உடனடியாக குடிதண்ணீர் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, இவ்வளவு மோசமான நிலைமை இருக்கக்கூடிய குடிதண்ணீர் பற்றாக்குறை இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே, காரைக்குடியிலே ஒரு நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் இருந்தது. அதேபோல் திருவாடானையிலும் ஒரு நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் இருந்தது. அந்த இரண்டு அலுவலகங் களையும் இன்றைக்கு மாற்றி இருக்கிறீர்கள். அப்போது அந்தத் துறைக்கு பொறுப்பேற்ற அமைச்சர் வேறு ஒருவர் இருந்தார் அவர்களிடம் இதைப்பற்றி விவரமாகக் கூறினேன். இப்போது புதிதாக இன்னொரு அமைச்சர், நீங்கள் பொறுப்பேற்று இருக்கிறீர்கள். நிச்சயமாக எங்கள் பகுதியிலே மாற்றப்பட்ட அந்த இரண்டு நிர்வாகப் பொறியாளர் அலுவலங்களையும் எங்கள் பகுதிக்கு திரும்ப வர வேண்டும். அந்தத் துறை அதிகாரிகளை நான் சந்தித்து கேட்டபோது இன்றைக்கு நாங்கள் மாற்றப்பட்டு இருக்கிறோமேயொழிய, எந்தவிதமான வேலையும் இல்லாமல் பரமக்குடியில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறோம்

என்று கூறுகிறார்கள். எனவே, நீங்கள் நிச்சயமாக அந்த இரண்டு நிர்வாகப் பொறியாளர் அலுவலங்களையும் எங்கள் பகுதிக்கு மீண்டும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற குடிதண்ணீர்ப் பிரச்சினைகளில் தப்புச் செய்தவர் களுக்கு சரியான தண்டனை கொடுங்கள். குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொந்தமான பைப்புகளை உடைத்து தண்ணீர் எடுத்துவிடுகிறார்கள் என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் ஒரு தகுந்த தண்டனையைக் கொடுத்து, இதுபோன்ற தப்புகள் இனி நடக்காமல் நீங்கள் தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இராமநாதபுரத்தைப் பொறுத்த அளவில் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிற நேரத்திலே பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அந்தத் திட்டங்களை நிறைவேற விடாமல், ஒரு ஊருக்கு பக்கத்து ஊரில் தண்ணீர் எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிற மக்களை எல்லாம் சமாதானப்படுத்தி அந்தத் திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்துக் கிடையாது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நீங்கள் தண்ணீர் எடுத்துச் செல்வதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அப்படி எடுத்துச் செல்லக் கூடிய இடத்திலே முதலிலே நீங்கள் தண்ணீரை கொடுங்கள். பிறகு, மேலும் இருக்கக்கூடிய தண்ணீரை நீங்கள் வேறு இடத் திற்கு எடுத்துச் செல்வதிலே எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் என்னதான் திட்டம் வகுத்தாலும் அங்கே இருக்கக்கூடிய பகுதிகளில் நிலத்தடித் தண்ணீர் உப்பாக இருக்கிறது. அதற்கு ஒரே வழி நீங்கள் இப்போது ஒரு புதிய திட்டத்தை வகுத்து இருக்கிறீர்கள்; கடல்நீரை குடிநீராக மாற்றுவது என்று சொல்லி இருக்கிறீர்கள். அதேபோல் கடலோரப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு வசதியாக நீங்கள் ஒரு யூனிட்டை செய்து கொடுத்தால் நிச்சயமாக அது பிரயோஜனமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி



உங்களுக்குக் கொடுக்கக்கூடிய புள்ளிவிவரங்கள் முழுவதும் தவறு என்று நான் கூறுகிறேன். ஏனென்றால் நீங்கள் இப்போது நமது முதலமைச்சர் அவர்கள் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படும் என்று கூறி இருக்கிறார்கள். அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் நிச்சயமாக இப்போது வாருங்கள். இரண்டு பஞ்சாயத்துக்களை என்னால் காட்ட முடியும். ஒரு குடம் தண்ணீர் 5 ரூபாய்க்கு இப்போது வாங்கிக் கொண்டிருக் கிறார்கள். அதுவும் கிடைக்கவில்லை என்று நேற்று கூறுகிறார்கள். இந்த நிலையை தயவுசெய்து நீங்கள் உடனடியாக தலையிட்டு மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மானியம், குடிநீர் வழங்கல் மானியம், சமுதாய நல வளர்ச்சி மானியம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், தங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து என் கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

உள்ளாட்சித் துறை என்பது மக்களோடு பிணைந்து இருக்கும் ஒரு துறையாகும். உள்ளாட்சித் துறையில் அத்தியாவசியத் திட்டங் களைப் போடுவதன் மூலமாக அது ஒரு அரசினுடைய சிறப்பைப் பிரதிபலிக்கும் துறையாகும். ஆகவே, அதை நன்றாக உணர்ந்து தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் இன்றைக்கு எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் கூட ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று வழங்கி அந்தத் துறையை சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அதன்மூலமாக இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் சத்துணவுக் கூடங்கள் இல்லாத இடங்களில் சத்துணவுக் கூடங்களைக் கட்டுவதற்கும், பள்ளிக் கட்டடம் கட்டாத நிலையிலிருக்கும் இடங்களில் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கும், சாலைகள் போடுவதற்கும் இன்றைக்கு உதவிகர மாக இருக்கிறது. முந்தைய ஆட்சியில் கிராமப் பகுதிகளை நீங்கள் சென்று பார்த்திருப்பீர்கள். இந்த ஆட்சியில் சாலைகள் போடுவது எவ்வளவு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக் கிறது என்பதை அறிவீர்கள். ஆகவே, அந்தவகையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வர், இதய தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகம் எங்கும் பல்வேறு ஊராட்சிகளில் நிதி இல்லை யென்றாலும் கூட நிதி இல்லாத ஊராட்சிகளுக்கு நிதி யாதாரத்தைத் தந்து எல்லா ஊர்களிலும், எல்லா தெருக்களிலும்

விளக்கு எரியவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்து இந்த பொங்கல் நாளுக்குள் எரியவேண்டுமென்று சொல்லியிருந்தார்கள், அவர்கள் சொல்லியிருந்தாலும் கூட சில இடங்களில் பல்புகள், சோக்குகள் கிடைக்காத காரணத்தால் தடைபட்டிருந்தாலும் கூட, இன்றைக்கு எல்லா இடங்களிலும் தெரு விளக்குகள் எரிவதை நாம் காண்கிறோம். முன்பெல்லாம் நிதிநிலை இல்லாத ஊராட்சி களில் நாம் விளக்குகளைப் பார்க்க முடியாது. குடிதண்ணீரைப் பார்க்க முடியாது. இன்றைக்கு எல்லா ஊராட்சிகளிலும் குடிதண்ணீர் ஆதாரத்தைப் பெற்று, விளக்குகள் எரியத் தொடங்கியிருக்கின்றன. அருமை சகோதரர் மாண்புமிகு சட்ட மன்றஉறுப்பினர் இராமசாமி அவர்கள் பேசுகிறபோது கூட சில ஊராட்சிகளில் தண்ணீர் இல்லையென்று சொன்னார்கள். உண்மை தான். சில ஊராட்சிகளில் சில இடங்களில் தண்ணீர் எடுத்துக் கொண்டு செல்ல முடியாத நிலையிருப்பது உண்மைதான். ஆனால் அரசு அங்கே போர் பைப்புகளைப் போட்டிருந்தாலும் கூட சில இடங்களில் உவர் தண்ணீர், உப்பு தண்ணீர் வருகிற காரணத்தால், அந்த குறை இருக்கிறது. அது அரசின் கவனத் திற்கு வந்திருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, அதை பரிசீலிக்க வேண்டும். அதிகாரிகள் சொல்கிறபோது அந்த இடத்தில் சர்வ்ட் ஏரியா என்று சொல்லிவிடுகிறார்கள். அந்த இடத்தில் போர் பைப் இருக்கிறது. என்று சொல்லிவிடுகிறார்கள். போர்பைப் இருந்தாலும் சில இடங்களில் தண்ணீர் ஆதாரம் இல்லாமல் இருக்கிறது. சில இடங்களில் தண்ணிர் நான் முன்பே சொன்னதைப்போல உப்புநீர் இருக்கிற காரணத்தால் அதையும் பரிசீலித்து தண்ணீர் கொடுக்க அரசு முனைப்போடு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல ஊராட்சி மன்றங்களில் முன்பெல்லாம் உங்களுக்கு தெரியும், முந்தைய ஆட்சிக்காலத்தில் டாஸ்மாக் கமிட்டி என்று ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுப்பதற்கு கமிட்டி அமைத்து இருந்தார்கள். அந்த கமிட்டி யாருக்கு கடன் கொடுக்க முடியும் என்பதைத் அந்த ஆட்சியாளர்கள் சார்பில் அமைத்தபடி யால் அந்த கட்சிக்காரர்களுக்கு மட்டும் கடன்களை வழங்கியிருந் தார்கள். நான் முன்பே அதை குறையாகச் சொல்லியிருந்தாலும் கூட, அதை இப்போதும் சொல்வதற்கு காரணம், அவர்கள் கண்ட நபர்களுக்கு அதாவது யார் யாருக்கோ கடனைக் கொடுத்த காரணத்தால் அந்த கடன்கள் திரும்ப வங்கிகளுக்கு செலுத்தப்பட வில்லை. இன்று டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பொது நலனோடு ஏழை எளியவர்களுக்கு அந்தக் கடன் வழங்க வேண்டும் என்றும், அதில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்றும் சொல்கிற காரணத்தால், இன்று சட்டமன்ற உறுப்பினர்கள் கூட சில ஏழை எளியவர்களுக்கு பரிந்துரை செய்தாலும் வங்கிகளில் சொல்கிற பதில், முன்பு கொடுத்த கடன்கள் திரும்ப வரவில்லை. இப்போது நாங்கள் நலிந்த பிரிவினருக்கு கொடுக்க இயலாது என்று சொல்கிறார்கள். ஆகவே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுப்பதற்கு,



அரசு வங்கிகளை கலந்து சில ஆலோசனைகளை வழங்கி நலிவுற்ற மக்களுக்கு கடனைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றை உங்களுக்கு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன் பேருராட்சிகளைப் பொறுத்தவரையில் சில பேருராட்சிகளில் 10 கி.மீ. அளவுக்கு கிராமங்களை அமைத்து இருக்கிறார்கள். 10 கிலோ மீட்டர் என்றால், அங்குள்ள 30 ஊர்களையும் சேர்த்து, ஒரு பேருராட்சியை அமைத்திருக்கிறார்கள். அங்கே மச்சுவீடுகளே கிடையாது. வீடுகளே கிடையாது. சரியான பெரியவீடுகள் கிடையாது. அங்கே தெருக்கள்கூட இல்லாத இடங்களை எல்லாம் சேர்த்து, பேருராட்சியாக மக்களுடைய கணக்கை வைத்து செய்திருக்கிறார்கள், முந்தைய ஆட்சியிலே. ஆகவே, அந்த ஊர்களுக்கு எல்லாம் இன்றைக்கு நிதி ஆதாரங்கள் இல்லை. அங்கே வீடுகள் இருந்தால்தானே சரியான வசூல் செய்ய முடியும். தொழில்கள் இருந்தால்தானே, தொழில் வரி கிடைக்கும். ஆகவே, அந்த மாதிரி ஊர்களை எல்லாம், பெரும் ஊராட்சியாக இருப்பதைப் பிரித்து, சிறு ஊராட்சிகளாக ஆக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11-40

உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால் எங்கள் தொகுதியிலே குளித்தலையில், நங்கவரம் பேரூராட்சி என்று ஒன்று இருககிறது. அது 15 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்று 30 ஊர்களை உள்ளடக்கிய ஊராட்சியாக இருக்கிற காரணத்தால் நிதி இல்லாத காரணத்தால், அந்த ஊராட்சி செம்மையாகச் செயல்பட முடியவில்லை. அதேபோன்று, மருதூர் பேரூராட்சி. ஆகவே, இதுபோன்று தமிழகத்தில் இருக்கிற பல பேரூராட்சி களை ஆராய்ந்து, நீங்கள் சிறு ஊராட்சிகளாக ஆக்கினால், அரசு நிதியும் அந்த ஊராட்சிகளுக்குக் கிடைக்கும் ஆகவே, அந்த அடிப்படையில் நீங்கள் பரிசீலிக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், நகராட்சிகளை எடுத்துக் கொண்டால், நகராட்சி களிலே ஒரு காலத்திலே வரியை விதித்திருக்கிறார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளைப் பற்றி எனக்குத் தெரியாது. முடிந்தவரையில் 90 சதவீதம் நகராட்சிகளுக்கு நிதி இல்லை என்று தான் சொல்லப்படுகிறது. இன்று எங்கள் பகுதியைச் சேர்ந்த மணப்பாறை நகராட்சியிலே நிதி இல்லாத காரணத்தால், நகராட்சியில் பல வளர்ச்சிப் பணிகள் தேக்கப்பட்டு இருக்கின்றன அதற்குக் காரணம் அங்கே கட்டப்பட்டு இருக்கிற ஒருசிலருடைய வீடுகளுக்கு சரியான வரியை விதிக்காமல், அந்த வீட்டினுடைய மதிப்பை, சரியான படத்தைப் பார்த்து மதிப்பீடு செய்யாமல் இருக்கிற நிலைமை இருக்கின்றது. இதை எல்லாம் உயர் அதிகாரிகளைக் கொண்டு, நிர்வாகப் பொறியாளர்களைக்

கொண்டு நீங்கள் மீண்டும் மதிப்பீடு செய்து, அந்த நகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய வகையில், அந்தக் கட்டிடங்களுக்கு எல்லாம் நீங்கள் வரி விதிக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கிராமப்புற பஞ்சாயத்துக்களுக்கும் ஒன்றியங்களுக்கும் நிதியைப் பெருக்குவதில், நீங்கள் இந்த செஸ் வரியை அதிகமாக உயர்த்தி இருக்கிறீர்கள், நிதி ஆதாரம் அதிகாமாக வரும் என்று ஒரு பக்கம் பார்த்தாலும், சில நஞ்சை நிலங்கள் உள்ள ஊர்களிலே அந்த வரியை அதிகமாக உயர்த்தி இருப்பதால் விவசாயிகள் சற்று பீதி அடைகிறார்கள். எனவே, முடிந்தவரையில் பரிசீலனை செய்து, அதை ஓரளவிற்குக் குறைக்க முடியுமா என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் என் தொகுதியைப் பொறுத்தவரையில், முசிறி-- குளித்தலை பகுதியில் காவிரிப் பாலம் கட்டப்பட்டு இருப்பதால் அந்தப் பகுதி, மணப்பாறையிலிருந்து குளித்தலை வருகிற சாலை ஒருவழிச் சாலையாக இருப்பதால் அந்த ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக ஆக்கித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், எவ்வளவு முனைப் போடு நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும். தமிழக முதல்வர் அவர்களும் செயல்படுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்திலே 6 கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப் பட்ட மணப்பாறை கூட்டுக் குடிநீர் திட்டம் இடையிலே நான் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக 2 ஆண்டுக்காலம் இருந்த போது, தேக்க நிலையில் இருந்தது. பிறகு, நமது மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகு. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்பதற்குப் பிறகு, 6 கோடி ரூபாய்க் குடிநீர்த் திட்டம் என்பதை 10 கோடியாக இன்று விரிவாக்கி, 1993 ஜூன் மாதத்திற்குள் மணப்பாறை, அதைச் சுற்றியுள்ள 90 கிராமங்களுக்கும் குடிநீர் ஆதாரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்று விரைவாக வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், என் தொகுதி மக்கள் சார்பாக. இந்தக் குடிநீர் வழங்கு விழாவிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மற்றத் துறை அமைச்சர்களும், மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களும் கலந்து கொண்டு, எங்கள் பகுதியைச் சிறப்பிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன்.



மணப்பாறையையும், குளித்தலையையும், நீங்கள் வறட்சி வட்டங்களாக அறிவிக்கவேண்டும். குளித்தலையில் ஓரத்தை மட்டும் நீங்கள் பார்த்து வருவதால். அங்கேயிருக்கிற தென்னை மரங்களை இரண்டு கிலோ மீட்டர் தூரம் வரையில் உள்ள வளர்ந்ததைப் பார்த்துவிட்டு, குளித்தலை வளமான பகுதியாக இருக்கிறது என்று எண்ணிக்கொள்கிறார்கள். எனவே, அப்படி எண்ணாமல், அந்த பகுதிகளை வறட்சி வட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், தோகைமலை யின் கீழ்ப்பகுதியில் உள்ள 8 ஊராட்சிகள் மிகவும் வறட்சிப் பகுதிகளாக இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதிகளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு, காவிரியிலோ அல்லது பக்கத்தில் இருக்கிற கட்டளைக் கால்வாயிலிருந்தோ குடிநீர் ஆதாரத்தைப் பெருக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த நல்ல மானியத்தைத் தந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் களுக்கும் நம்முடைய தமிழகத்தினுடைய காவல் தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள், ஒவ்வொருவரும் 7 நிமிடங்களில் தங்களது உரையை முடித்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். இன்று அமைச்சர் அவர்கள் பதில் உரை தருவதற்கு நேரம் தரவேண்டும். திரு. க. பழனிசாமி.

முற்பகல் 11.45

*திரு. க. பழனிசாமி : சமுதாய நல வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிர்வாகம் மீது பேசுவதற்கு வாய்ப்பு உருவாக்கித் தந்த மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேசுவதற்கு வாய்ப்புத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கி எனது சில கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

அனைத்து நாட்டு மக்களுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதில் அதிக பங்கு வகிப்பது இந்தத் துறை. இந்தத் துறையின் மூலமாக கிராமத்திலே வாழ்கின்ற ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கும் மற்றும் நகர்ப்புற மக்களுடைய அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் இந்தத் துறையை மையமாகக் கொண்டுதான் நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக ரூ. 1 கோடியை நிதியாக அளித்து, அதற்கான முத கட்டப் பணியாக இந்த ஆண்டு மிகச் சிறப்பான முறையிலே

நடைபெற்றுக் கொணடிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாகத் தான் கிராமப்புற மக்களுடைய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமாக, அந்தக் கிராமப்புற மக்கள் ஓரளவு முன்னுக்கு வருவதற்கு இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தி, இந்தத் திட்டம் சிறப்பான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை கிராமப்புறத்திலே வாழ்கின்ற மக்கள் மிகவும் சிறப்பாக வரவேற்கிறார்கள். இதை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஐ. ஆர். டி. பி. திட்டத்தின் மூலமாக கடன் பெறுகின்றவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே அரசால் தேர்வு செய்யப்பட்டு அங்கேயிருக்கின்ற வங்கிகளுக்கு கடன் தேர்வு செய்து அனுப்பப்படுகின்ற போது வங்கிகளிலிருக்கின்ற அதிகாரிகள் கொடுக்க மறுக்கின்றார்கள். ஏற்கெனவே வாங்கிய கடனை செலுத்தாத காரணத்தால் அவர்களுக்குக் கடன் கொடுக்க இயலாது என்று கூறுகின்றார்கள். அதுவும் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுக்குக் கொடுக்க மறுக்கின்ற காரணத்தால், இதை அரசு பரிசீலனை செய்து அவர்களுக்குக் கடன் கிடைப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் கூட்டுறவு வங்கிகளிலே மகளிருக்கு என்று அரசாங்கம் குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கித் தந்திருக்கிறது. இதிலே கடன் வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் பேரில் நிலமோ அல்லது சொத்தோ இருந்தால்தான் கடன் கொடுக்கப்படும் என்று வங்கி அதிகாரிகள் குறிப்பிடுகின்ற காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் பெறமுடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே மகளிர் கடன் பெறுகின்றபோது இந்த நிலையை மாற்றி, அவர்களுக்கு இந்தத் திட்டத்திலிருந்து விதி விலக்கு அளித்து அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறிப்பிட்ட அளவிற்கு ஆதிதிராவிட மக்களுக்கோ அல்லது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கோ, கடன் வழங்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில கிராமங்களில் பின்தங்கிய மக்களிலே நிறைய பேர் கடன் பெற்றிருக்கின்ற காரணத்தால் அங்கே கடன் கொடுக்கப்படாத சூழ்நிலையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அந்தக் கடன்களைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறத்திலுள்ள இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக நமது அரசு பல்வேறு நன்மைகளைச் செய்ய இருக்கிறது. அதை ''நான் வரவேற்கிறேன். அதேபோல கிராமப்புறத்திலே இருக்கின்ற கைப் பம்புகள் எல்லாம் நிறைய இடங்களிலே இப்போது பழுதடைந்திருக்கிறது. அதைச் சீர்



செய்வதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அது அனைத்துப் பகுதிகளுக்கும் வந்து சேரவில்லை. உதிரி பாகங்கள் கிடைக்காதிருக்கின்ற இந்த நேரத்தில், உதிரிப் பாகங்கள். சரியான முறையில் கிடைப்பதற்கு அமைச்சரவர்கள் ஆவனசெய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், அந்த ஊராட்சிப் பகுதியிலே இருக்கின்ற மேல்நிலைத் தொட்டிகளின் மோட்டார்கள் பழுதடைந்திருக்கின்ற காரணத்தால் பல மாதங்களாகியும் குடிநீர் வழங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றுவதற்காக, அதைப் போக்குவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 2, 3 மோட்டார்கள் வாங்கித் தந்தால் உடனடியாக பழுதடைந்த உடனே, அந்த மோட்டார்களை அங்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கித்தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

100 ஏக்கர் பாசனம் பெறும் பகுதியை சிறு பாசனத் திட்டத்தின் மூலமாக ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் மாற்றப்பட்டுள்ளதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக 1992–93 ஆம் ஆண்டிற்காக ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக எங்கள் தொகுதியில் பக்கநாடு ஊராட்சியிலே பெரும்பள்ளம் என்று ஒரு ஓடை இருக்கிறது. மழைக் காலங்களில் அதிகமாகத் தண்ணீர் வருகின்ற காரணத்தால் இந்த ஓடையிலே 3, 4 இடங்களில் சிறு சிறு அணைகளாக கட்டித் தண்ணீரைத் தேக்கி, அதைச் சுற்றியுள்ள பகுதிகளுடைய நிலத்தடி நீரை அதிகப்படுத்தி, பாசனம் பெறுகின்ற ஒரு நிலையினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் இதனால் அங்குள்ள விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள் என்று சுட்டிக் காட்டி, அதுமட்டுமன்றி எங்களுடைய தொகுதியில் குறும்பப்பட்டி என்ற ஊரிலே கடந்த மழைக்காலங்களில் புங்கனேரியில் உடைப்பு ஏற்பட்டு, பல மாதங்களாகியும் கூட அது இன்னும் சீர் செய்யப்படாமல் உளளது. அதைச் சீர்செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மழைக் காலங்களில் பத்தநாடு ஊராட்சியிலே பெரும்பள்ளம் ஓடையிலே அதிகமாக தண்ணீர் வருகின்ற காரணத்தால் அந்த ஓடைக்கு அருகேயிருக்கின்ற பல்லாயிரக் கணக்கான மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதுவும் குறிப்பாக சொல்லப்போனால், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆகவே இதையெல்லாம் கருத்திலே கொண்டு பெரும்பள்ளம் ஓடைக்கு அருகே ஒரு சிறிய பாலம் கட்டித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தொகுப்பு விடுகள் கட்டுகின்ற போது, இப்போதெல்லாம் சிமெண்ட்டு, கம்பி மற்றும் செங்கல் ஆகிய வற்றின் விலை அதிகமாகிக் கொண்டே வருகின்ற காரணத் தால், அதனுடைய தொகையை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்றும், அப்போது தான் தரமான வீடுகளைக் கட்டி அவர்கள் பயன்பெற முடியும் என்றும் தெரிவித்துக்கொண்டு, அந்த வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் இடதுசல்சாலை என்று ஒரு பேரூராட்சி மிகவும் பெரிய பேரூராட்சியாக இருக்கிறது. கிட்டத்தட்ட 30,000 மக்கட்தொகைக்கு மேலே இருக்கின்ற காரணத்தால் அந்த பேரூராட்சியை இரண்டு ஊராட்சிகளாகவும் ஒரு பேரூராட்சியாகவும் பிரித்து, நிர்வாக வசதிக்காகவும், மக்களுடைய அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கின்ற விதத்திலேயும், ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொங்கணாபுரம் பேரூராட்சியில் ஒரு ஆழ்துளைக் கிணறு மடத்தூரில் போடப்பட்டு, பல ஆண்டுக்காலமாகிறது. அதிலே 3 மேல்நிலைத் தொட்டிகள் இருக்கின்றன. இந்த 3 மேல்நிலைத் தொட்டிகளுக்கும் தண்ணீரை ஏற்றி அங்கு குடிநீர் வசதியை பெருக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல எடைப்பாடி நகராட்சியின் வளர்ச்சிக்காக இந்த ஆண்டு 1.2 கோடி ரூபாய் அளவிலே மேம்பாட்டு பணிக்காக நிதியை ஒதுக்கித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். எடைப்பாடி நகராட்சி உருவாக்கப்பட்டதிலிருந்து இருந்து வந்த துப்புரவுப் பணியாளர்கள் தான் இன்று வரையில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அதேபோல தெருவிளக்குகளையும் பராமரிப்பதோடு தெரு விளக்குகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல எடைப்பாடி நகராட்சியிலே கடந்த ஆண்டு மட்டும் கிட்டத் தட்ட 20 லட்சம் ரூபாய்க்கு மேலாக வரி வசூல் பாக்கியிருக்கிறது. அந்த பில கலெக்டர்கள் எல்லாம் சரியான முறையிலே வரி வசூல் செய்யாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்து வரி வசூல் உடனடியாக செய்து, அதன் வளர்ச்சிப் பணிகளுக்கு அதனை ஈடுபடுத்திக் கொடுக்க வேண்டும்



என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல நகராட்சிப் பகுதியில் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிக மாக இருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் இலவசமாக தொகுப்பு வீடு களைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல எடப்பாடியிலிருந்து ராசிபுரம் வரையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் இருக்கிறது. அதிலே என் தொகுதியிலே பல்வேறு பகுதிகள் விடுபட்டு போய்விட்டன. அந்த விடுபட்ட பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் 5, 6 தினங் களுக்கு முன்பாக பூலாம்பட்டியிலிருந்து ஜலகண்டாபுரம் வரையில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த திட்டத்தின் மூலமாக— எனது தொகுதியிலே கிட்டத் தட்ட 7, 8 ஊராட்சிகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அவை இப்போது சேர்த்துக் கொள்ளப்படாவிட்டால் பிறகு எந்தக் காலத்திலும் அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டு விடும். ஆகவே நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்திலே, அனைத்துக் கிராமங்களுக்கும் தண்ணீர் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல புதிய ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சேலம், தென்னாற்காடு, திருவண்ணாமலை-சம்புவரையர் மாவட்டம், தர்மபுரி போன்ற 4 மாவட்டங்களுக்கு 5 ஆண்டு காலத்தில் பத்தாயிரம் ஆழ் துளை கிணறுகள் அமைத்துக் கொடுப்பதாக கொள்கை விளக்க குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். எங்கள் சேலம் மாவட்டம் கடுமையான வறட்சிக்கு உள்ளாகி இருப்பதால் அந்த மாவட்டத்திற்கு அதிகமான ஆழ் துளைக் கிணறுகளை ஒதுக்கித் தந்து அவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியிலே மங்களஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் கொங்கணாபுரம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியங் களில் கடுமையான குடிநீர்ப்பிரச்சினை இருக்கிற காரணத்தால் அதிகமான ஆழ் துளைக் கிணறுகளை அமைத்துக் கொடுத்து அந்தக் குடிநீர்ப்பிரச்சினையை போக்கித்தர வேண்டும் என்று கூறி இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, அமைகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.**

திரு. என். பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தில்லு முல்லு செய்த கழகங்களைத் திரும்பிப் பார்க்காமல் ஓடச் செய்து, ஐஸ் கட்டி பார்வை பார்த்தவர்களை அக்னிப்பார்வை பார்த்து, ஜாதியைச் சொல்லி ஏமாற்ற நினைத்த எதேச்சாதிகாரத்தினை முறியடித்து, இந்திய நாட்டின் புகழை சீர்குலைய வைத்தவர்களை, ஒற்றைக் கண்ணர் களாக்கி, சிவப்பு செங்கதிர்களை செல்லாக் காசாக்கி, தானைத் தளபதிகள் துணை கொண்டு ஆட்சியை அழகு படுத்தி, செங் கோல் ஏந்தி செங்கோட்டையில் ஆளும் ராணுவ நடையும், வீரம் விவேகம், அன்பு, பாசம், பரிவு இவை அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் ஆட்சியில் தீட்டப்பட்ட நகராட்சி, ஊராட்சி வளர்ச்சித்திட்டங்களை தமிழக காங்கிரஸ் தலைவர் வாழைப்பாடி திரு. கே. ராமமூர்த்தி அவர்களின் செயலாக்கத் திட்டங்களை வரவேற்கும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் வரவேற்கிறேன்.

அரசு எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்களுக் கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினாலும் கிராமங்களில் அடிப் படை வசதிகளாகிய குடிதண்ணீர் வசதி மின்சாரவசதி மற்றும் சாலை வசதிகள் இல்லை என்றால் மக்கள் அரசின் மீது அதிருப்தி கொள்கிறார்கள். அரசின் திட்டங்கள் செயல் முறையில் இருந்தும் அதிகாரிகளின் செயலற்ற தன்மையினால் இந்த குறைபாடுகள் ஏற்படுகின்றன. இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முழு அதிகாரம் வழங்க அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட நபர்களுக்கு ஊராட்சி வாரியாக கணக்கெடுப்பு செய்து மத்திய அரசிடமிருந்து பெறப்படும் மானியத்தில் ஒரு பகுதியினை ஊராட்சிக்கு வரவு வைத்திடல் வேண்டும்.

ஆற்றுப் படுகைகளில் மணல் குவாரிகள் ஏலம் விடும் தொகை யினை அந்தந்த ஊராட்சிகளுக்கே வரவு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள பகுதி நேர எழுத்தர்கள் பதவிகளை உடனடி யாக நிரப்பி பணிகளை செவ்வனே நடைபெற அரசு ஆணையிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், ஊராட்சிகளிலும் அவ்வப்போது மின் விளக்குகள் பழுது ஏற்பட்டுள்ளதை நிவர்த்தி செய்ய பேரூராட்சியில் தற்போது நடைபெறுவது போல மின்சார வாரியத்திடமிருந்து அயல்பணி அடிப்படையில் 10 ஊராட்சிகளுக்கு 1 மின்கம்பியாளர் (ஓயர்மேன்) என்ற அடிப்படையில் ஒன்றிய ஆணையர் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.



தற்சமயம் 100 எண்ணிக்கைக்கு ஒரு பம்பு பிட்டர் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிகிறார். ஒரே நபர் தொடர்ந்து உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யமுடியாமல காலதாமதம் ஏற்படுகிறது. 50 எண்ணிக்கைக்கு ஒரு நபர (பம்புபிட்டர்) நியமனம் செய்து பழுது பார்க்கும் பணியினையும் சேர்த்து ஆணை பிறப்பிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

கரும்பு உற்பத்தி திட்டம் தற்சமயம் கிராமங்களில் கரும்பு உற்பத்தி திட்டத்தின் கீழ் அதிகமான அளவு கரும்பு உற்பத்தி செய்து கரும்பாலைக்கு கரும்புகள் ஏற்றிச் செல்வதற்கு அதிக மான அளவு லாரி, டிராக்டர் வண்டிகள் வருவதால் ஊராட்சி சாலைகள் அடிக்கடி பழுது ஏற்படுகின்றன எனவே கரும்பு வளர்ச்சி கார்ப்ரேஷனில் இருந்து, கரும்பு உற்பத்தி செய்யும் ஊராட்சிகளுக்கு சாலை மேம்பாட்டிற்காக கரும்பு உற்பத்தி செய்யும் நிலப்பரப்பிற்கு ஏற்ப கணிசமான தொகையினை அந் தந்த ஊராட்சிக்கு மான்யமாக சாலை பராமரிப்புக்கு வழங்கிட அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு ஐ.ஆர்.டி.பி. லோன் 1990-91-லே 1155 நபர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 398 நபர் களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அதிகத் தொகை யாக உயர்த்த வேண்டும். இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற ஐ.ஆர்.டி.பி. லோன்களை உடனடியாக கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்றிய கிராம நிர்வாக பணியாளர்களை தவறு செய்தால் நீக்கவும், தண்டிக்கவும் அதிகாரம் மாவட்ட ஆட்சியாளரிடம் உள்ளது. அதை ஊராட்சி ஆணையர்களிடம் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பாக செயல்பட்டு வரும் மருத்துவ முகாமில் ஆயிரக் கணக்கான மக்கள் பயன்பெற்று வருகின்றனர். இருப்பினும் இம்மருத்துவ முகாம்களில் போதுமான அளவிற்கு மருந்து மாத் திரைகள் வழங்கவும் சிறப்பு பயிற்சி பெற்ற மருத்துவர்களை இம்முகாமில் கலந்து கொள்ளவும் தக்க வகையில் ஆணைகள் பிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்திற்கு தலப்பாட்டை மான்யமாக ரூ. 2.5 லட்சம் வழங்கப்படுகிறது. இத்தொகை ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் சாலை பணியாளர்கள் ஊதியத்திற்கே போதுமான தாக இல்லை. இந்நிலையில் ஊராட்சி ஒன்றிய சாலைகளை பராமரிப்பது இயலாத காரியமாகஉள்ளது. ஆகவே தலப்பாட்டை மான்ய தொகையை உயர்த்திக் கொடுக்க ஆவன செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

1990-91 ஆம் ஆண்டு பள்ளிக் கட்டிடம் பழுது நீக்கம் செய்வதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மான்யம் வழங்கப்பட்டது. அதுபோலவே இனிவரும் ஆண்டுகளுக்கும் மான்யம் வழங்கி பள்ளிக் கட்டிடங்களை பழுது நீக்கம் செய்யத்தக்க வகையில் ஆணைகள் வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

49 சத்துணவு மையங்கள் என்னுடைய யூனியனிலே இயங்கி வருகின்றன. இதில் 10 சத்துணவு மையங்களுக்கு சொந்த கட்டிடம் கட்டப்பட கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய கேட்டுக் கொள்கிறேன். ஒன்றியத்தில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் அனைத்தும் ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வீடுகளில் நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வீடுகள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அவைகளில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்ய கேட்டுக்கொள்கிறேன். வாரம் ஒருமுறை பி.டி.ஓ அவர்கள் தன் கீழ் உள்ள அலுவலர்களை அழைத்து கூட்டம் கூட்டி வளர்ச்சி பணி சம்பந்தமாக பேச அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என் , கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் ஒரு கோரிக்கையை முன் வைக்கிறேன். கும்பகோணம் நகராட்சியில் ஒரு கோடி ரூபாய் செலவில் பஸ் நிலையத்தின் சாலை மேம்பாடு மற்ற வேலைகளுக்காக டெண்டர் விடப்பட்டது. உதாரணத்திற்கு 19 இலட்சம் சாலை வேலை என்று அரசாங்கம் அறிவித்து டெண்டர் கோரப்பட்டது. ஆனால் 19 இலட்சத்தில் வேலை செய்ய முடியாது என்று கூறி 15 சதவீதம் அதிகம் கேட்டு தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவர், ரூ. 23 இலட்சத்திற்கு ஒருவர் மட்டும் போட்டியின்றி எடுத்ததாகத் தெரிகிறது. இதில் அரசாங்கத்திற்கு 4 இலட்சம் நஷ்டம் என்பதோடு 1 கோடி ரூபாய் வேலையில் 15 சதவீதம் அதிக காண்டிராக்டர்கள் அதிகாரிகளுடன் கலந்து பேசி டெண்டர் போட்டதில் சுமார் 15 லட்சம் அரசாங்கத்திற்கு நஷ்டம் என்று தெரிகிறது. இது தற்போது அமைச்சர் வசம் கையொப்பத்திற்கு வரும் நிலையில் உள்ளது. உடன் பரிசீலனை செய்து மறு டெண்டர் வைத்து அரசுக்கு ஏற்படும் 15 இலட்சம் நஷ்டத்தை நிறுத்த கேட்டுக்கொள்கிறேன், (மணியடிக்கப்பெற்றது).

என் தொகுதியைப் பற்றி ஒரு சில குறிப்புகள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். என் தொகுதி திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆதீனத்திற்குச் சொந்தமாக அதிக நிலங்கள் உள்ள தொகுதி ஆகும். அங்கு ரிஜிஸ்தர் செய்வதற்கு போதுமான பட்டா நிலங்கள் இல்லாததால் வருமானங்கள் மிகக் குறைவாக இருப்பதால் என் தொகுதிக்கு அதிகமாக நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதி



30 கிலோ மீட்டர் விஸ்தீரணம் உள்ளது. $1\frac{1}{2}$ இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளார்கள். தொடர்ந்தாற்போல் கிராமங்கள் உள்ளன. 6 நகாப் பஞ்சாயத்துக்கள் உள்ளன. என் தொகுதிக்கு தொகுப்பு வீடுகள், குடிதண்ணீர் பம்புகள் சாலை வசதிகள் மின்சார விளக்குகள் பள்ளிக்கூடம், சத்துணவு மையம், பஞ்சாயத்துக் கட்டிடங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், சானல்கள் தூர் அகற்றுதல், கசிவுநீர்குட்டைகள், சிறுபான்மை குளங்கள் மேம்படுத்துதல் போன்றவற்றை செய்து தர வேண்டும். இவைகளுக்கு அதிக அளவில் வரும் ஆண்டில் பணம் ஒதுக்கி மக்கள் சுபிட்சமாக வாழ வழிவகை செய்ய வேண்டுமெனக் கேட்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ் 7 நிமிடங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட கோரிக்கை எண். 28 49 மற்றும் 50-ன் கீழ் நடைபெறுகின்ற விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பை அளித்ததற்கு முதலாவது எனது பணிவான நன்றியைக் கூறிக்கொண்டு சில கருத்துக்களை நான் உங்களுடன் பகிர்ந்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். முதலாவது ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, இவைகளுக்கான நிர்வாகம் வருவதற்கு முன்பு வெகு விரைவில் அதற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அந்தந்த பேரூராட்சி, நகராட்சிகளை நிர்வகிக்கின்ற விதத்தில் தேர்தலை இந்த அரசு காலதாமதம் இன்றி உடனடியாக நடத்திட முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை முதலாவதாக வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

காரணம் இன்றையதினம் மக்களுடைய குறைகளை நிர்வாக அதிகாரிகளிடம் தெரிவிக்கின்றபோது அதனுடைய முக்கியத்துவத்தை கருதாதக் காரணத்தால் அவர்களுக்குத் தோன்றிய இடங்களில் இன்றைக்கு வேலைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான, அத்தியாவசியமாக செய்பட வேண்டிய வேலைகள் புறக்கணிக்கப்படுகின்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே உடனடியாக தேர்தல் நடத்த சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்கின்ற விதத்தில், தலைவர்கள் அங்கே வருகின்ற விதத்தில் அரசு தேர்தலை நடத்த வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் எந்த எந்தப் பகுதிகளில் குறைகள் நிறைந்து இருக்கின்றனவோ அவைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று சொல்லி நாங்கள் மனுக்களை கொடுத்தால் அவைகளை நிராகரிக்கின்ற சூழ்நிலையில் காண்டிராக்டர்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1992 ஏப்ரல் 6

களுடைய கருத்துரையின் அடிப்படையில்தான் இன்றைக்கு
பெரும்பாலான வேலைகள் நடந்து வருகின்றன. ஆகவே,
அப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாற்றிட வேண்டும் என்று கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றையதினம் நான் சட்டமன்ற உறுப்பின
ராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அந்தப் பகுதியில் கன்னியா
குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு மழையின் காரணமாக
வேங்கோடு என்ற பாலம் உடைக்கப்பட்டது. அதை நான்
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், அதனுடைய
இயக்குநரின் கவனத்திற்கும் கொண்டு சென்று தனியாக
ஆர்டர் வாங்கி 7½ லட்சம் ரூபாய் அனுமதி பெற்று கிட்டத்
தட்ட 7,8 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் இதுவரைக்கும்
அந்தப் பணம் கிடப்பில் இருக்கிறது, பணிகள் தொடங்கப்பட
வில்லை. ஏன் என்று சொன்னால் காண்டிராக்ட் யாருக்குக்
கொடுக்க வேண்டும் என்பதில் தகராறு. இப்படிப்பட்ட சூழ்
நிலைகள் இருக்கின்ற காரணத்தால் அவைகளை தகர்க்கின்ற
விதத்தில் அரசு அனுமதி அளித்த பிறகும்கூட அந்தப் பணம்
முதலீடு செய்யாமல் இருக்கக்கூடிய அந்த பஞ்சாயத்து யூனியன்
ஆணையாளர் மீது நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதேபோல் ஊராட்சி ஒன்றியங்களில் 2 ஆணையாளர்கள்
இருக்கிறார்கள். நிர்வாகம் என்றும் புரோகிராம் என்றும்
2 பேர் இருக்கிறார்கள். இரண்டு பேரும் மாறி மாறி போட்
டிப் போடக்கூடிய சூழ்நிலையில் சிலருக்கு அதில் சந்தோஷம்
இல்லாமல் பணியாற்றுகிறார்கள். ஒரே நிர்வாகத்தில் இருக்கின்ற
சிலர் சந்தோஷமாக பணியாற்றுகிறார்கள். காரணம் என்ன
வென்று சொன்னால் கான்டிராக்டர்கள் கவனிக்கின்ற விதத்தில்
அந்த செயல்பாடுகள் இருக்கின்றன அல்லது அவரிடம் சொன்
னால் நீங்கள் அவரிடம் சொல்லுங்கள் என்றும் அவரிடம்
சொன்னால் நீங்கள் இவரிடம் சொல்லுங்கள் என்றும் மாறி
மாறி தட்டிக் கழிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்
கிறது. எனவே ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆணையாளர்
போதும் என்ற விதத்தில் நீங்கள் அதை மாற்றி ஒரு ஆணை
யாளருக்கே முழு பொறுப்பையும் கொடுக்கின்ற விதத்தில்
சட்ட திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்திக்
கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் ஒன்று, மிகப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்வது
நம்முடைய தமிழகத்தில் பரவலாக எல்லா பகுதிகளுக்கும்
செல்வோம் என்று சொன்னால் கழிப்பிடங்களுக்குச் செல்வதற்கு
கட்டணங்கள் விதிக்கின்ற ஒரு சூழ்நிலைஇருக்கிறது. கட்டணங்கள்
கொடுத்து கழிப்பிடங்களுக்குச் சென்றாலும் அங்கே சுத்தமாக
இருக்கின்ற சூழ்நிலை இல்லை. எனவே தமிழகத்திலுள்ள



1992 ஏப்ரல் 6 [டாக்டர் தே. குமாரதாஸ்]

அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கட்டண கழிப்பறைகளை
நீக்கிவிட்டு இனாமாக செல்லுகின்ற விதத்தில் ஒரு வாய்ப்பை
ஏற்படுத்தித் தந்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
பல கோடி ரூபாய்க்கு நீங்கள் பல திட்டங்களை அறிவிக்கின்ற
நேரத்தில் இங்கே நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்பு
கிறேன். சென்னையில் உள்ள ஒரு கழிப்பறைக்குச் செல்ல
வேண்டுமென்றால் 10 காசு; அதுவே நீங்கள் திருச்சிக்குச் செல்லு
கின்றபோது 25 காசு: போகப் போக விலை ஏற்றம் ஏறிக்
கொண்டிருக்கிறது. எனவே, குத்தகைதாரர்கள் அவர்கள்
போட்டப் பணத்தைப் பிடிப்பதற்காக சம்பந்தம் இல்லாமல்
அதிகமான கட்டணத்தை விதிக்கிறார்கள். இதிலேயும் பெண்கள்
என்று சொன்னால் 25 காசு என்பது 50 காசாக மாறுகின்றது.
கழிப்பறைகளும் சுத்த மோசமான வகையில் அதற்குள் போய்
வற்தாலே நோய் வந்த விடும். அந்த அளவுக்கு மோசமாக
இருக்கிறது. பைசாக்களை நீங்கள் பெற்றாலும் பயன் இல்லாத
சூழ்நிலை இருக்கிறது. எனவே, நீங்கள் அனைத்து கட்டண
கழிப்பறைகளையும் மாற்றி இலவசமாக அந்தப் பகுதிகளில்
ஆக்கித் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றையதினம் துப்புரவுப் பணியாளர்களைப்
பொறுத்தவரைக்கும். இன்றுவரை சுகாதாரத்திற்காக மிக
அடிப்படை வசதிக்காக துப்புரவுப் பணியாளர்கள் செயல்பட்டு
கொண்டு வருகிறார்கள். ஆனால் இந்த துப்ரபுவுப் பணியாளர்கள்
எந்தப் பகுதிகளில் பணியாற்றி வருகிறார்களோ அவர்கள் ஓய்வு
பெற்ற பின்னால், ரிடையர் ஆன பின்னால் அங்கே புதியதாக
துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை அரசின்
கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.
குறிப்பாக நாகர்கோவில் நகராட்சியில் மட்டும் 36 துப்புரவு
பணியாளர்கள் ஓய்வு பெற்று இருக்கிறார்கள். அதற்காக
அந்தப் பகுதியில் அந்த நகராட்சியால் இன்னும் புதிதாக
துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்படாத ஒரு சூழ்நிலையை
நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர கடமைப்பட்
டிருக்கிறேன்.

அதேபோல் துப்புரவுப் பணியாளர்களை சரியாக பயன்
படுத்தப்படாத சூழ்நிலையை உங்களுடைய மேலான கவனத்
திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் ஊராட்சிக் பகுதிகளில் பணிபுரிந்து வருகின்ற
பகுதி நேர ஊழியர்களுக்கு அதேபோல் 10
சுமார் 3,600 பகுதி நேர பணியிழந்து மீண்டும் பணியில் நியமிக்கப்பட்டு
ஆண்டுகளாக பணியிழந்து மீண்டும் பணியில் நியமிக்கப்பட்டு
இருக்கின்ற கிராம முன்சிப் மற்றும் கர்ணம் ஆகியவர்கள்
பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்
1-1-91—ல் பணியில் மொத்தம் 9 ஆயிரம் பேர் இன்றைக்கு
5,400 பேர், ஆக மொத்தம் 9 ஆயிரம் பேர் இன்றைக்கு
பகுதி நேர ஊழியர்களாக பணியாற்றி வருகிறார்கள். அவர்களை
நீங்கள் நிரந்தரம் செய்திட வேண்டும் என்று இந்த சந்தர்ப்
பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-05

குடிநீரைப் பொறுத்தவரையிலே, நாகர்கோவில் நகராட்சியைப் பொறுத்தவரை, எல்லா பத்திரிகைகளிலும் மிகத் தெளிவாகப் போட்டிருக்கிறார்கள், ஒருவாரத்திற்கு ஒருமுறை குடிதண்ணீர் வழங்குகிற ஒரு சூழ்நிலை நாகர்கோவில் நகராட்சியில் ஏற்பட்டிருக்கிறது. பலகோடி ரூபாய் வருமானமுள்ள அந்த நாகர்கோவில் நகராட்சிக்கு தினசரி குடிநீர் கொடுப்பதற்கான வாய்ப்பினை நீங்கள் ஏற்படுத்தித் தந்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகராட்சியைப் பொறுத்தவரையில் அங்கே லாரிகளில் தண்ணீர் கொடுப்பதற்கு அங்கேயுள்ள நகராட்சி ஆணையருக்கு அரசின் மூலமாக அறிவுரை தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது டெம்பரரி ரிலீப். பெர்மனன்டாக ஆண்டுதோறும் இப்படிப்பட்ட பிரச்சினை வந்து கொண்டிருக்கிறது. எனவே, ஆண்டாண்டுதோறும் நீங்கள் இப்படிச் செலவு செய்கிற பணத்தை ஒட்டுமொத்தமாக செலவு செய்து, நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள். நாகர்கோவில் நகராட்சி பகுதிக்கு நிரந்தரமாக குடிநீர், தினமும் கொடுக்கிற விதத்தில் நீங்கள் ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல், இன்னும் ஒன்றை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, அரசினுடைய நல்ல பல திட்டங்களைச் செயல் படுத்துவதற்கு நிர்வாக அதிகாரிகள் வேண்டும். ஆனால் கன்னியா குமரி மாவட்டத்திலே மாத்திரம் 18 இடங்களில் ஒய்வு பெற் றும், அங்கே நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படாமல் இருக் கிறார்கள். அப்படியென்றால், 2 பேரூராட்சிக்கு ஒரு நிர்வாக அதிகாரி என்ற வகையில் 'அடிஷனல் சார்ஜ்' போட்டு, இரண் டையும் ஒருவரே நிர்வகிக்கிற ஒரு சூழ்நிலையினால், இரண்டு பேரூராட்சிகளும் உருப்படாத ஒரு சூழ்நிலை வந்துவிடும். எனவே அந்த 18 பேரூராட்சிகளுக்கும் நிரந்தரப் பணியாளர்களை நியமித்துத் தந்திட வேண்டுமென்ற இந்தக் கோரிக்கையை இங்கே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன். நிறைய பேச வேண்டும், இருந்தாலும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே உங்களுடைய கவனத்திற்கு இன்னும் ஒன்றைக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய கன்னியாகுமரி



மாவட்டத்தில் குதிரையாற்றுக் கூட்டுக்குடிநீர்த் திட்டம் என்கிற ஒரு திட்டம். இது மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம். கிட்டத் தட்ட 4½ கோடிக்கான திட்டத்தில் இன்றைக்கு, ரூ. 4¼ கோடி செலவாகி விட்டது. இன்னும் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யாதக் காரணத்தினால் கிட்டத்தட்ட ஒரு வருடகாலமாக பணிகள் ஒன்றும் நடைபெறாத சூழ்நிலையை உங்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன். உடனடியாக அந்தப் பணத்தை ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பைங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்கிற ஒரு திட்டம்; அதுவும் 1½ கோடி ரூபாய்க்கு அங்கே செலவு செய்யப்பட்டு, இப்போது அந்த வேலை பணம் இல்லாமல் தடங்கல்பட்டு இருக்கிற ஒரு சூழ்நிலையை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல், இன்னும் மங்காடுவாவளை என்கிற கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டத்தையும் எடுத்து, பல்லாண்டு காலம் ஆகிவிட்டது. ஆனால், நடைமுறைக்கு, செயல்பாட்டுக்கு வரவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதேபோல், என்னுடைய மாவட்டத்திற்குட்பட்ட பல பகுதிகளில் குடிநீர் வேண்டுமென்று, குடிநீர்வடிகால் வாரியத் திற்கு நான் வேண்டுகோளாகக் கொடுத்திருக்கிறேன். அதற்கு அவர்கள் தந்திருக்கிற பதில்களை வாசித்தால், அதிக நேரம் ஆகிவிடும், குறிப்பாக, தாளத்தான்விளை, செம்முதல்விளை, தரல்வளை, நெடுவிளை, மருதவளை, மரக்காவளை இப்படிப் பட்ட பகுதிகளில், நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அங்கேயெல்லாம் 100 குடும்பங்கள், 200 குடும்பங்கள் இருக் கின்றன. அங்கு போதுமான தண்ணீர் இருக்கிறது என்று பதிலைத் தந்திருக்கிறார்கள். நான் நேரடியாக அவர்களோடு இருந்து அவர்களிலே ஒருவனாக வாழ்ந்து வருகிறேன். அந்தப் பகுதிகளிலே அவர்கள் படுகிற குடிநீர்க் கஷ்டத்தை நான் நேரடியாகப் பார்த்து வருகிறேன். ஆனால், தேவையான தண்ணீர் இருக்கிறது என்று தவறானத் தகவலைத் தருகிறபோது, நாம் என்ன செய்வது என்றே புரியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட பகுதிகளிலெல்லாம் கிணறுகள் தோண்டுவதற்கு ஆரம்பித்தால், தோண்டிய 10 அல்லது 15 அடிகளிலே பாறைகள் வந்துவிடுகின்றன. ஆக, இந்தப் பகுதி களுக்கு 'போர்-வெல்' போட்டாலும் தண்ணீர் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பெரிய கூட்டுக்குடிநீர்த் திட்டத்தினுடைய கிளைகளை, அந்தப் பகுதிகளுக்கும் நீட்டித்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இறுதியாக, அரசுக்கு ஒரு வேண்டுகோளை வைத்து, என்னுடைய உரையை நிறைவு செய்யலாமென்று கருதுகிறேன். குறிப்பாக, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகளில் பணியாற்றுகிற அதிகாரிகள் வாரத்தில், நீங்கள் எந்த நாள் போனாலும்; திங்கள் போனாலும், செவ்வாய் போனாலும் வாரத்தில் 5 தினங்களும் இருக்க மாட்டார்கள். கேட்டால், 'கேம்ப்' சென்றிருக்கிறார்; மாவட்ட ஆட்சித் தலைவருடைய கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்; இப்படிப்பட்ட பதில்கள்தான் ஒட்டுமொத்தமாக வந்து கொண்டிருக்கிறது. எனவே, நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக, ஒன்று அல்லது இரண்டு தினங்கள் மாத்திரம் தான் அவர்கள், மாவட்ட அட்சித் தலைவருடைய அலுவலகத்திற்கோ அல்லது 'கேம்ப்' போக சொல்ல வேண்டும். மற்ற தினங்கள் நிச்சயமாக அலுவலகத்தில் இருக்க வேண்டு மென்ற ஆலோசனையை இந்த அரசு பிறப்பிக்குமென்றால், நம்பிக்கையோடு நாம் சென்று அதிகாரிகளைச் சந்திப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். எனவே, அப்படிப்பட்ட ஒரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்க கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்து விடுங்கள்.

டாக்டர் தே. குமரதாஸ் : மற்றும், நம்முடைய கிராமப்புறப் பகுதிகளில், சத்துணவுக் கூடங்கள் அமைக்கப்படுவதில், சில பகுதிகளில், தேவையான இடங்களைக் கொடுத்தாலும்கூட, அவை புறக்கணிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைந்த நேரத்தில் அங்கே போர்டு ஸ்கூலோ, யூனியன் பள்ளிக் கூடங்களோ கிடையாது. அந்த நேரத்தில் —— 1956-ல் அனைத்தும் அரசுப் பள்ளிக் கூடங்களாக இருந்தன. அவை, அப்படியே தமிழக அரசோடு வந்த பிறகும் அப்படியே இருக்கிற சூழ்நிலை அங்கே யுள்ள பள்ளிகளைப் பராமரிப்பதற்கு என்று பஞ்சாயத்தோ பஞ்சாயத்து யூனியனோ பணங்களை ஒதுக்கீடு செய்வது கிடையாது. எனவே, அங்கேயுள்ள பள்ளிகளை பராமரிப் பதற்காக அரசு தனியாக பணம் ஒதுக்கீடு செய்து தந்திட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி. பேசுகிற வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. த. க. இராதாகிருஷ்ணன்.

திரு. த. க. இராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம், சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய மானியக் கோரிக்கை களின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





''கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி''.

கொடை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன் என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாக்கிற் கொப்ப, தமிழக முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக ஒரு நல்லாட்சியை எப்படி நடத்திக் காட்ட வேண்டும் என்று எடுத்துக்காட்டாக, கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றார்கள்.

குடிநீர் வாரியத்தின் பொறியாளராக, பணியாற்றிய என்னை இந்த மாபெரும் சபையில் உறுப்பினராக்கிய புரட்சித் தலைவியின் பாதங்களில் என் நன்றியைத் தெரிவித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன்.

''நீரின்றி அமையாது உலகம்'' என்ற முதுமொழிக்கேற்ப நன்குணர்ந்த நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தபின் குடிநீர் ஆதாரம் எதுவுமில்லாத 2,483 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்வித் துள்ளார்கள். இப்பொழுதிருக்கும் பெரும் பிரச்சினை, கோடை காலத்தில் குடிநீர் இல்லாத குடியிருப்புகள் பல உள்ளன. அதற்காகப் புரட்சித் தலைவி அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் 9,000 குடியிருப்புகளுக்கு ரூபாய் 474 கோடி செலவில் புதிய விரிவான திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளார்கள். அதையறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஒருசில கருத்துக் களைக் கூற விரும்புகின்றேன். இன்றைய சூழ்நிலையில், தென் மாவட்டங்களில், குறிப்பாக மதுரையில் கடுமையான வறட்சி நிலவுகின்றது. ஆனால் கேரளத்திலோ, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பை, அச்சன்கோயில், கல்லாறு போன்ற ஆறுகளின் நீர் உபரியாகக் கடலில் வீணாகக் கலக்கின்றது. இந்த உபரி நீரைத் தடுத்து நமது தமிழகத்திற்குத் திருப்பி விடுவோமேயானால் தென் மாவட்டங்கள் அனைத்துக்கும் குடிநீர்ப் பற்றாக்குறை தீரும். இன்றைய சூழ்நிலையில் இதற்கு ஒரே வழி, ஆறுகள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான், குடிநீர்த் தாவாக்கள் அனைத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இந்தக் கூட்டத்தொடரிலே ஆறுகள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை இந்த சபையில் கொண்டு வர வேண்டுமென்பதே எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

முன்பிருந்த காலங்களில் ஊருணி என்றால் பல வரத்துக் கால்வாய்கள் இருக்கும், மழை பெய்கின்ற காலத்திலே அந்த ஊருணிக்கு நீர்வரத்து இருக்கும். ஆனால், இன்றைய சூழ்நிலையில் வரத்துக் கால்வாய்கள் தூர்ந்து போய் ஊருணிக்கு நீர்வரத்து

[திரு. த. க. இராதாகிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 6

இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. ஒரு ஊருணி நிரம்பியிருந்தால் அதை சுற்றியுள்ள பகுதியில் நிலத்தடி நீரின் அளவு கூடியிருக்கும். That is ground-water will be re-charged. ஆகையா , போர்க் கால அடிப்படையில், ஊருணிகளின் வரத்துக் கால்கள் அனைத்தும் சரி செய்யப்பட வேண்டுமென்பது எனது தாழ்மை யான வேண்டுகோளாகும்.

ஒரு அணை கட்டுகின்ற சூழ்நிலையில், அதன் கொள்ளளவில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதமாவது குடிநீருக்காக ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், பல அணைக்கட்டுகளில் குடிநீருக்காக ஒதுக்கீடு செய்ததாகத் தெரியவில்லை. உதாரணத்திற்கு, நமது வைகை அணைக்கட்டையே எடுத்துக் கொள்ளுவோம். குடி நீருக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம், அதை டிசைன் செய்து கட்டுகிறபோது குடிநீருக்காக ஒதுக்கப்படவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகள் Di ick Rural water Supply Agency இடம் ஒப்படைக்கப்பட வேண்டு மென்று அரசாணை நம்பர் 22 இந்த வருஷம் பிறப்பிக்கப் பட்டுளளது. அதைக் கனிவுடன் மாண்புமிகு முதல்வரவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற எனது தாழ்மையான வேண்டுகோளை விடுக்கிறேன்.

எந்தவொரு குடிநீர்த் திட்டமாக இருந்தாலும் அந்தக் குடி நீர்த் திட்டத்தின் புரப்போசல் மற்றும் சோர்ஸ் கிரியேஷன் அந்த மாவட்ட ஆட்சியரிடம் concurrence பெற்றுத்தான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற ஒரு சிறிய மாற்றத்தைச் செய்தாலே போதும். அதைப்போல, duplication of work இதனால் avoid செய்யப்படும். இதற்கு ஒரு தனி முகமை தேவையில்லை என்பது எனது தாழ் மையான கருத்தாகும். மேலும் இந்தத் தனி முகமை ஆரம்பிக் கப்படுமாயின், அதில் உள்ள சில பிரச்சினைகளை எடுத்துரைக்க விரும்புகிறேன். மாவட்ட ஆட்சியருக்கு அதிகமான வேலைப் பளு உள்ளது. அதில் கூடுதலாக இதையும் சேர்க்க வேண்டியிருக்கும். தனிக் கவனம் செலுத்த நேரம் இருக்காது. அதைப்போல மாவட்டம் விட்டு மாவட்டம் செல்லும் கூட்டுக் குடிநீர்த் திட்டங் களுக்குச் செயல் படுத்துவதில் நடைமுறைச் சிக்கலை ஏற்படுத்தும் நிர்வாக அமைப்பை மாவட்ட ரீதியாகப் பிரிக்கும்பொழுது இரு பதாண்டுகளாகப் பணியாற்றிய நூற்றுக்கணக்கில் உள்ள பொறி யாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள் பதவி இறக்கம் மற்றும் பணி இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆகையால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆணையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற எனது தாழ்மையான வேண்டுகோளை விடுக்கிறேன்.

பிற்பகல் 12-15

எனது திருமங்கலம் தொகுதி மக்கள் வறட்சியின் கோரப் பிடியிலே சிக்கி அல்லாடிக்கொண்டு இருக்கிறார்கள். பல கிராமங்களில் குடிநீர் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. தாயுள்ளங் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள், திருமங்கலம் தாலுகாவை



992 ஏப்ரல் 6] [திரு. த. க. இராதாகிருஷ்ணன்]

றட்சிப் பகுதியாக அறிவித்து, இந்த ஆண்டு நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்ற தாழ்மையான வேண்டுகோளையும் டுத்து, குடிநீர் வழங்கல் மானியக்கோரிக்கையில் பேச வாய்ப் ளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு ன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். பணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வ.சத்திய மூர்த்தி.

*திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவையினுடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அவையில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்லி அமைய இருக்கிறேன். இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சி யில் தமிழகத்தினுடைய உள்ளாட்சி நிர்வாகம் ஒரு பொற்கால ஆட்சியைக் கண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையா காது. 1982 இல் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் புரட்சிகரமாக, தன்னிறைவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய காலகட்டத்தில் கூட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 48 இலட்சம் ரூபாய்க்குத்தான் பணிகள் நடைபெற்றன. ஆனால் இன்றையதினம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்மூலம் ஒரு கோடி ரூபாயும் அது அல்லா மல் ஜவஹர் வேலவாய்ப்புத் திட்டம்மாநில அரசு இணைந்து செயல் படுத்துகின்ற திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 200 கோடி ரூபாய்க்கும் மேல் ஊராட்சி ஒன்றியங்களில் செலவு செய்யப்பட்டு வருகிறது. இங்கே பேசுகின்றபோது, இன்று இல்லையென்று சொன்னாலும், சில சந்தர்ப்பங்களில்,ஒரு ஊராட்சிக்கு ஒரு கோடி என்று சொல்வது சரியாகாது என்ற கருத்தைக்கூட சொன்னார்கள். அப்படியல்ல, அதை மின்சார இலாகாவிற்கு கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படியல்ல என்பதை நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1990—91இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி, 1989—90-லும் சரி, ஒரு மாவட் டத்திற்கு தெரு மின் விளக்குகள் என்று சொன்னால், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று ஒரு ஆண்டுற்கு அவர்கள் ஒதுக்கியது வெறும் 500 தெரு மின்விளக்குகளைத்தான் ஒதுக்கிக் கொடுத்தார்கள். அதிலும், எந்த ஊராட்சி ஒன்றியத்தில், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் நிர்வாகத்தில் இருக்கிறார்கள் என்று பார்த்து அதற்குத்தான் தெரு மின் விளக்குகளை ஒதுக்கிக் கொடுத் தார்கள். குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்தில், கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் சத்தியமூர்த்தி, ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர் என்ற காரணத்தினால் ஒரு தெரு மின் விளக்குகூட ஒதுக் கப்படவில்லை. அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆனால், இந்தச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி

ஒன்றியத்திற்கும் இந்த நடப்பு ஆண்டில் ஏறக்குறைய இரண்டாயிரத்திலிருந்து மூன்று ஆயிரம் வரையில் தெரு மின்விளக்குகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி, ஒளி பெறாத கிராமங்களெல்லாம், தெருக்களெல்லாம், வீடுகளெல்லாம் இன்றைய தினம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஒளிபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ் ஒரு மாவட்டத்தில் மொத்தத்தில் 5 அல்லது 10 கிலோ மீட்டர்கள் தான் தார்ச்சாலைகளாக ஆக்கப்படும். இன்றைய தினம் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தபட்சம் ஏறக்குறைய 10 கிலோ மீட்டர்கள் தார்ச் சாலைகளாக ஆக்கப்பட்டு பேருந்துகள் செல்கின்ற நிலைக்கு இன்றைய தினம் உயர்த்தப்பட்டு வருகின்றது. அதுவும் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ்தான் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்றால், ஏறக்குறைய நமது தமிழகத்தில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான கிராமியச் சாலைகள் தார்ச்சாலைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமும் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமும், தார்ச்சாலைகளாக ஆக்கப்பட்ட சாலைகளை உடனடியாக நெடுஞ்சாலைத்துறையின் கீழ் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். புதிய ஆடையை நாம் விலை கொடுத்து வாங்கினாலும் அதை அடுத்து அடுத்து சுத்தம் செய்து கொண்டால்தான் அது பிரயோசனப்படும். அதுபோன்று இன்றையதினம் மிக அழகான தார்ச்சாலைகள் கிராமங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமும் போட்டு கொடுத்து விட்டீர்கள். அதைப் பராமரிப்பதற்கு அந்தந்த ஊராட்சியிடமோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திடமோ விட்டு விடுவீர்களேயானால், பராமரிப்பதற்கான தொகை இல்லாமல் அந்தச் சாலைகள் மேலும் பழுதுபட்டு விடக்கூடாது என்பதை இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டு பேசுகின்றபோது கூட நான் சொன்னேன். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அதிகமான சாலைகளில் கல் பரப்பப்படுகின்றது. அதைப் பரப்புவதற்கான ரோடு ரோலர்கள் இல்லை என்பதை அலுவலர்களிடம் கூட நான் நேரிடையாக அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறேன். ஆனால் பரிசீலிக்கிறீர்களே தவிர, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் போடப்பட்டு வருகின்ற சாலைகளுக்கு உடனடியாக கல் பரப்புகின்ற வேலையை அந்த நிதி ஆண்டுக்குள்ளே முடிக்கப்பட வேண்டுமானால் அதற்கு ரோடு ரோலர்கள் கிடைக்கிறதா என்பதை நீங்கள் சரிபார்க்கிறீர்களா என்பதே எனக்குச் சந்தேகக் குறியாக இருக்கிறது.



பிற்பகல் 12.20

எங்களது இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 1990–91 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் கூட ரோடு ரோலர்கள் இல்லாத ஒரே காரணத்திற்காக முடிக்கப்படாமல் இருக்கின்றன. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற நிதியில் ஒரு கணிசமான தொகையை ரோடு ரோலர்களுக்கு ஒதுக்குவதற்கு அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீரைப் பொறுத்தமட்டில் எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் கனிவோடும், பரிவோடும் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு மாவட்டம் ஆகும். புதிய ஒரு கொள்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். மழை நீரைக் கடலிலே விடாமல் அதைத் தேக்கி, நிலத்தடி நீரை அபிவிருத்தி செய்வதோடு குடிநீருக்கும் பயன்படுத்தலாம் என்று சொல்லி 70 கோடியில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த இந்த அவையில் அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தை முதற்கட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக எங்களுடைய கடலாடி தொகுதியில் நீங்கள் பரிட்சார்த்தமாக செய்து பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

1985இல் ராஜகம்பீரம் என்ற இடத்திலிருந்து கடலாடி பகுதி, முதுகுளத்தூர் பகுதிகளில் 84 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 4½ கோடி செலவிலே அனுமதிக்கப்பட்டது. ஆனால், இந்தத் திட்டம் இன்றுவரை 10 கோடிக்கு மேலே அதிகம் நிதி ஒதுக்கியும் நிறைவுபெறாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பதில் சொல்லும்போது கூட சொன்னீர்கள். அங்கு ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்திற்கு தண்ணீர் எடுத்துச் செல்லும்போது சில இடங்களிலே தடங்கல் ஏற்படுகிறது என்று சொல்லி அந்தத் திட்டத்தைப் பொறுத்த மட்டில் எடுக்கிற இடத்திற்குத் தண்ணீர் கொடுக்கிறோம்; எடுத்துச் செல்கின்ற வழிகளில் எல்லாம் இருக்கின்ற கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் 1980-ல் பதிக்கப்பட்ட குழாய்கள் திருடு போய்விட்டன. அவைகள் சேதம் அடைந்திருக்கின்றன. அதனைச் சோதனை முறையில் நாங்கள் தண்ணீர் எடுத்துச் செல்கின்றோம் என்று இல்லாமல், ஒட்டுமொத்தமாகக் குழிகளைத் தோண்டி, எங்கெங்கு பைப்புகள் இல்லையோ அங்கெல்லாம் பைப்புகளைப் பதித்து அந்தப் பணியை முழுமையாக நிறைவேற்றிய பிற்பாடு இந்தத் தண்ணீரை 'பைலட் சப்ளை' மூலம் அவர்கள் சோதனை செய்வார்களேயானால் நிச்சயம் அது வெற்றிகரமாக அமையும். இரண்டு, மூன்று ஆண்டு காலமாக 'பைலட் சப்ளை' கொடுக்கிறோம் என்று சொல்லி அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் திட்டம் இன்றைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1983இல் சாயல்குடி நகருக்கு கொள்கைப் பரப்புச் செயலாளர் என்ற முறையில் வந்தபோது வாக்குறுதி அளித்து வந்து, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களிடம் கோரிக்கையாக வைத்து அனுமதி பெற்றுத் தந்த திட்டம் ஆகும். அந்தத் திட்டம் இன்று நடைமுறைப்படுத்தப்படுவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கையில்தான் இருக்கிறது என்பதைச் சொல்லி, மிக முக்கியமான என்னுடைய கோரிக்கையை அதாவது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடலாடி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து அமைக்க வேண்டுமென்று கடந்த 10,12 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றோம். தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் குறிப்பாணை அனுப்பி அந்தக் கருத்துருவைப் பெற்றிருக்கின்றார்கள். அக்கருத்துரு இன்றைய தினம் செயலகத்தில் இருக்கிறது. இன்றைய மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் பிற்பட்ட பகுதிமீது கருணை கூர்ந்து கடலாடி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து சாயல்குடியை புதிய ஊராட்சி ஒன்றியமாக ஆக்கவும், கடந்த ஆண்டு வாக்குறுதி அளிக்கப்பட்ட பிரகாரம் கீழக்கரை பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்தித் தரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு அனுமதி தந்த உங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைக் கூறிக் கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாகம் பற்றிக் கூறுகையில், சாதாரண ஏழை எளிய மக்கள், கிராமப்புற மக்களின் நலன்களைப் பெரிதும் பாதுகாக்கக்கூடிய இந்தத் துறையின் மூலமாக நகராட்சி நிர்வாகம், ஊராட்சி நிர்வாகம், மாநகராட்சி நிர்வாகம், தமிழகத்திலே அநேகமாக அதிகாரிகளுடைய நிர்வாகமாகத்தான் இன்றையதினம் அமைந்திருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாவிட்டாலும் கூட அதிகாரிகளைக் கொண்டுதான் நிர்வாகம் நடைபெறுகிறது.

தமிழகத்திலே வறட்சி தோன்றிய காரணத்தினால் பல்வேறு மாவட்டங்களிலே குடிதண்ணீர் தட்டுப்பாடு துவங்கிவிட்டது. அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி பல்வேறு கேள்விகளுக்குப் பதிலுரை அளித்து இருந்தாலும் கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாடு உள்ள இடங்களை





அதிகாரிகளைக் கொண்டு உடனடியாக சர்வே செய்து அதற்குப் போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–25

அதேபோன்றுதான் இன்றைக்குப் பார்க்கும்போது கிராமப் புறத்தில் இருக்கக்கூடிய சாலைகள் எல்லாம் பல ஆண்டுக்காலமாக சீர்கேடான நிலைமையில்தான் இருந்துகொண்டிருக்கின்றன. பல ஆண்டுக்காலமாக கிராமப்புறச் சாலைகளைப் பொறுத்தவரையில் அரசாங்கம் கவனம் செலுத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதன் விளைவாக ஜல்லி சாலைகள் எல்லாம் அனேகமாக கப்பி சாலைகளாகவும், கப்பி சாலைகள் எல்லாம் மண் சாலைகளாகவும், மண் சாலைகள் எல்லாம் இருக்கிற இடம் தெரியாமலும் போய் இருக்கின்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. எனவே, கிராமப்புறச் சாலைகளை நீங்கள் மேம்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும். நகரங்களை அழகுப்படுத்துவது மட்டுமல்ல, கிராமப் புற நலன்களையும் பேணிக்காத்து அங்கேயுள்ள சாலைகளையும் நீங்கள் நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும். பல்வேறு ஊர்களில் இன்றைக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற தொட்டிகள் கட்டி அதற்கான இணைப்புகள் கொடுக்கமுடியாமல் இன்றும் கூட அந்தத் தொட்டிகள் அப்படியே இருக்கின்றன.

அதுபோன்று பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆழ்குழாய்க் கிணறுகள் பல இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. பல ஆண்டுகளாக அவை சுத்தம் செய்யப்படாமல் இன்றையதினம் அதிலேயிருந்து சப்ளை செய்யக்கூடிய, மக்கள் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. ஒரு காலத்தில் கோடைகாலம் வந்தால் அதுபோன்ற கிணறுகளைச் சுத்தப்படுத்துவது, அந்த நீரை இறைத்துச் சுத்தப்படுத்துவது என்பது பேரூராட்சி, நகராட்சி போன்ற நிர்வாகங்களின் மூலமாகச் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இன்றையதினம், எந்த ஊராட்சியும், நகராட்சியும், பேரூராட்சியும் அந்தக் குழாய்க் கிணறுகளைச் சுத்தப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

அதேபோன்று குளங்களில் வளரக்கூடிய செடிகளை அவ்வப்போது அப்புறப்படுத்துவார்கள். அந்தக் குளங்களில் உள்ள படித்துறைகளில் இருக்கக்கூடிய பாசிகளைக்கூட சுத்தப்படுத்தி கழுவுவது என்பது வழக்கமாக இருந்து வந்தது. அந்த நிலைகள் எல்லாம் இல்லாத வகையில் இன்றையதினம் உள்ளாட்சி நிர்வாக அமைப்புகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்றுதான் தெருவிளக்கு. இன்றைக்கு தெருவிளக்குகள் பல இடங்களில் முழுமையாக எரியாமலும், பழுதுபார்க்கப்பட முடியாமலும் இருக்கின்றன. பல இடங்களில் மின்னிணைப்பு கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதற்கு பிரதான காரணம் என்னவென்றால் மின்சார வாரியத்தில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள் ஒரு பல்பு மாட்ட வேண்டும், ஒரு ட்யூப் லைட் மாட்ட வேண்டும் என்று சொன்னால் ஊராட்சி நிர்வாகத்தில் ஒரு ரூபாய், 50 காசு கொடுக்கவேண்டும். அவர்களுக்கு சுமார் 5 ரூபாய், 2 ரூபாய் கொடுத்தால்தான் ஏறி லைட் போடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கத்தின் மூலமாக கட்டாய மாக போதுமான தொழிலாளர்களை நியமிக்க வேண்டும். ஏனென்றால் தொழிலாளர்கள் போதாத நிலைமை இருக்கிறது. அதனால் அந்தப் பணிகள் பூர்த்தி அடையாமல் இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்க அமைச்சர் அவர்கள் உடனடியாக முயற்சி மேற்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதேமாதிரிதான் இன்றைக்கு சாக்கடை வசதிகள். இன்றைக்கு கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறம் வரை உள்ள மக்கள் எல்லோரும் கொசுத் தொல்லையால் படக்கூடிய துன்பத் துயரங்கள் ஏராளமாக இருக்கின்றன. பல்வேறு தொத்து வியாதிகள் வந்துகொண்டிருக் கின்றன. அதாவது புதிய, புதிய வியாதிகள் வருவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே சாக்கடை வசதிகளை எற்படுத்தி, பாதாளச் சாக்கடைகளைப் பொறுத்த வரையில் நகராட்சி, பேரூராட்சிகள் மூலமாக சுத்தப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதேபோல் சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் 18 ஆண்டுக்காலமாக அதிகாரிகளுடைய நிர்வாகத்தின் கீழ் அமைந்து இருக்கிறது. இப்போது புதிய, புதிய அதிகாரிகள் எல்லாம் பொறுப்பேற்று இருக்கிறார்கள். அவர்கள் சுறுசுறுப்பாக நன்றாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நல்ல பெயர் இன்றையதினம் சென்னை மாநகராட்சிக்கு வந்திருக்கிறது. இதற்கு முன்பாக பல்வேறு தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர கடமைப்பட்டிருக் கிறேன். இதிலே சொல்லக்கூடிய கணக்குக் கூட 92 கோடி ரூபாய் வருவாய். அதாவது 92.40 கோடி ரூபாய். ஆனால் செலவு 96 கோடி 47 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அனேகமாக 4 கோடி ரூபாய் அதிகமாக செலவாகியிருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருப்பதை நான் குறிப்பேட்டிலே பார்க் கிறேன்.

நான் அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது எல்லாம் இன்னும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பெரிய, பெரிய பங்களாக் களில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து





பல்லாயிரக்கணக்கான ரூபாய் பாக்கி வரவேண்டி இருக்கிறது. அதையெல்லாம் வசூல் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். நீங்கள் அதை கண்காணிக்க வேண்டும் என்பதற்காக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிகாரிகள் அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தாலே அரசுக்கு வரக்கூடிய பணமெல்லாம் பாழாகிக் கொண்டிருக்கிறது.

அடுத்து அங்கே பணிபுரிகின்ற அதிகாரிகள் எல்லாம் அங்கே 18 ஆண்டுக்காலமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பதவி உயர்வு வேண்டும் என்பதற்காகக் கோர்ட்டுக்குச் சென்று இருக்கிறார்கள். கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது. ஆனால் நம்முடைய மாநகராட்சி நிர்வாகம் மறுக்கிறது. இது என்ன நியாயம் என்பது தெரியவில்லை. அவர்களைப் பரிவோடு பார்த்து அந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு அளிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று நான் சார்ந்திருக்கிற புதிய மாவட்டமான நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில், நாகப்பட்டினத்தில் உள்ள நிலைமையை நான் சென்னைக்கு வந்தவுடன் பத்திரிகையில் பார்க்கிறேன். அதாவது ஒரு குடம் தண்ணீர் 2 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. ஆக அப்படிப்பட்ட கடலோரப் பகுதியிலே குடிதண்ணீர் இல்லாத காரணத்தினால் போர்க்கால அடிப்படையிலே வாகனம் மூலமாக நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் –30

அதேபோன்று என்னுடைய பேரூராட்சி ந்தது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெ ப்புக்கு வந்த பின்னால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னால், பல நாட்களாக அந்த கோரிக்கை நிறைவேற்ற முடியாமல் இருந்ததை, இன்றைக்கு அந்த பேரூராட்சியை நகராட்சியாக மாற்றிக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனப்பூர்வமான வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) அதே போன்று அனேகமாக நகரில் பல பகுதிகள் கோயில்களுடைய நிர்வாகத்திற்குச் சொநதமாக இருப்பதனால் பல்வேறு திட்டங்களை தொடங்கமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே பள்ளிக் கட்டடமாக இருந்தாலும், பேரூராட்சியினுடைய கட்டடங்களாக இருந்தாலும், கட்டடங் களை உருவாக்க வேண்டும் என்று சொல்லும்போது சட்டச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்த்து அந்த நகரத்திலே இருக்கக்கூடிய சாக்கடை வசதியின்மை, குடிநீர் வசதியின்மை ஆகிய குறைகளை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடிக்க மாட்டேன் என்கிறீர்களே, முடியுங்கள். முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். அதே போக்கு இன்னொரு முக்கியமான விஷயத்தை நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தில் இருக்கிற அவனியாபுரம் என்கின்ற ஊரிலே அங்கே ஒரு கிணற்றிலேயிருந்து இறைக்கும்படியான தண்ணீரை எடுத்து சாப்பிட்டவர்கள் 5 பேர்களுக்கு அந்த தண்ணீர் சாப்பிட்டதன் மூலமாக காலரா ஏற்பட்டு இறந்திருக்கிறார்கள். அதிகாரிகளிடத்திலே மனு கொடுத்து இதுவரையில் பார்க்கவில்லை. அதற்கான மருந்துகள் இல்லை. மருத்துவர்கள் வந்து பார்க்கவில்லை என்ற குறையிருக்கிறது. அவர்களே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு பேசுவதற்கு அனுமதி தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. கண்ணன்.

திரு. வே. கண்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகம் பற்றி பேச வாய்ப்பு அளித்த நம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது இயக்கத்தின் தலைவர் வாழப்பாடியார் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பாரத அரசியலில் ஜொலித்துக் கொண்டிருக்கும் பெண் குலத்தின் பெரும் தலைவியே, தங்களுக்கு மீண்டும் என் தொகுதி மக்களின் நன்றியையும் தேவைகளையும் தெரியப்படுத்துகிறேன்.

திருவண்ணாமலை நகராட்சியைப் பொறுத்தமட்டில் அதன் நிர்வாகத்தை தங்கள் கைகளிலே வைத்துக் கொண்டுள்ள அலுவலக அதிகாரிகளே நிர்வாகத்தின் முதல் தடையாக உள்ளனர். அவர்கள் நியமன நாள் முதல் ஓய்வு பெறும் நாள் வரை ஒரே இடத்தில் பணியாற்றுகின்றனர். இதனால் தாங்கள் மனம் போனபடி செயல்படுகின்றனர். எங்கள் நகராட்சி அலுவலர்கள் மக்களின் நலனுக்காக பணிபுரிவதில்லை. இதே நிலை நீடித்தால் நகராட்சி அலுவலர்களின் பொழுதுபோக்குக்கூடமாக ஆகிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. ஒரு சுயநலம் கொண்ட சமூக விரோத கூட்டம் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் உடனே அந்த கட்சியின் கரை வேட்டியை அணிந்து தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். இதனால் மாண்புமிகு முதல்வர் அவர்களின் நல்ல



பெயருக்கும், காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் களங்கம் ஏற்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த விஷயத்தில் அருள்கூர்ந்து கவனித்து இதில் உள்ள களையை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை நகராட்சியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட சலவை தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவரை பணி நீக்கம் செய்து விட்டு, அரசு விதிக்கு எதிராக வேறு ஒரு நபரை பணி நியமனம் செய்திருக்கிறார்கள். ஆகவே பாதிக்கப்பட்ட நபருக்கு உடனே வேலைவாய்ப்பு வழங்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனேகமாக சுமார் 10 லட்சம் பக்தர்கள் வருகை தரும் திருவண்ணாமலையார் திருக்கோயிலைச் சுற்றியுள்ள சாலைகளை தார் சாலைகளாக மாற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை நகரில், யானைக்கால் நோய் பெருகி வருவதால், குப்பைகளை அகற்றி, சுகாதார வசதிகளை, தேவைகளை பூர்த்தி செய்ய இரண்டு புதிய லாரிகளை வழங்க உடனே நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

தற்போது நகராட்சியில் உள்ள ஜீப் செயலற்ற நிலைமையில் உள்ளதால் நகராட்சிக்கு புதிய ஜீப் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். திருவண்ணாமலை நகரம் தீப நகரம் என்று பெயர் பெற்றது. ஆனால் நகர மையப் பகுதி தவிர மற்ற பகுதிகளில் மின் விளக்குகள் எரிவதில்லை. அதைப்போலவே, புதிய சாலைகளை அமைப்பதிலும் அவைகள் மையப் பகுதிகளிலே மட்டுமே செயற்படுத்தப்படுகிறது.

சுகாதார விஷயத்தில் நகராட்சி அதிகாரிகள் துளியும் கவனம் செலுத்துவதில்லை. அவைகளை அரசு உடனே நிவர்த்தி செய்து தரவேண்டும்.

மாவட்டத் தலைநகரமாக இருக்கும் திருவண்ணாமலை நகரில் சோடியம் விளக்கு அமைக்கவும், நகரின் சுற்றுப்புறத்தில் கட்டணக் கழிப்பிடங்கள் அமைத்து சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

திருவண்ணாமலை பஞ்சாயத்து யூனியனில் 67 பஞ்சாயத்து ஒன்றியங்கள் செயல்படுகின்றன. இது எண்ணிக்கையில் அதிகமானதால் அரசு அளிக்கும் நிதியில் திட்டங்களைப் பரவலாக செயல்படுத்தமுடியவில்லை. ஆகவே அரசு அதிக நிதி ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

திருவண்ணாமலை பஞ்சாயத்து யூனியனை இரண்டாகப் பிரித்து மக்கள் நலனைப் பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தயவுசெய்து திருவண்ணாமலை பஞ்சாயத்து யூனியனை இரண்டாகப் பிரித்து நிர்வாகம் மேம்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கீழ்பென்னாத்தூர் பஞ்சாயத்து யூனியன் நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாடு மற்றும் சட்டமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கு கட்டுப்படாத நிலை இருக்கிறது. அரசு திட்டத்தை சரியாக செயல்படுத்துவதில்லை. கடன் வழங்குகிற திட்டங்களையும் சரியாக செயல்படுத்துவதில்லை. முறைகேடுகள் நடப்பதாகவும் தெரிய வருகிறது. ஆகவே, அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

திருவண்ணாமலை பஞ்சாயத்தில் உள்ள கீழ்பாளையப்பட்டு, மேலதிக்கான் ஆகிய பகுதிகள் குடிதண்ணீர் பிரச்சினையில் தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. நீர்த் தேக்கத் தொட்டி எதுவும் இல்லை. மேலதிக்கான் கிராமத்தில் போடப்பட்ட ஆழ் துளைக் கிணற்றின் உப்பு நீராக தண்ணீர் இருப்பதால் பொது மக்கள் பயன்படுத்தமுடியாத நிலைமையில் அது உள்ளது. மேற்கண்ட இரண்டு கிராமங்களுக்கும் நல்ல குடிதண்ணீர் வசதி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, சாத்தனூர் அணையிலிருந்து வரும் தண்ணீர் குழாயில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. தற்போது மேலும் ஒரு புதிய மையக் குழாய் பொருத்தியுள்ளனர். ஏற்கெனவே உள்ள குழாயை அகற்றாமல் அதனை சிறப்பாக பராமரிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை நகரில் நரிக்குறவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுத்தும், சுய வேலை வாய்ப்புக்கான கடன் உதவி போன்றவற்றை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரத்தில் தண்ணீர் வசதியில்லாத பகுதிகளில் எல்லாம் போர் வெல்லுக்கு அனுமதி கொடுக்க ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். தற்போது 3 நாளைக்கு ஒரு நாள் தான் குழாய் களில் தண்ணீர் கிடைக்கிறது. தினமும் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழையெளிய மக்கள் நகரத்தில் புறம்போக்கில் வீடு கட்டியுள்ள இடத்திற்கு பட்டா வழங்க அரசு ஏற்கெனவே தடை செய்துள்ளது. அதை நீக்கி பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகரத்தில் கொசு மருந்து சரிவர அடிப்பதில்லை. தினமும் கொசு மருந்து அடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



குடிநீர் வழங்குகின்ற பொறுப்பை குடிநீர் வடிகால் துறையானது ஒன்றியத்திடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் ஒப்படைப்பதாக தெரிகிறது. அவ்வாறு செய்யாமல் தற்போது உள்ளபடி நேரடி நிர்வாகம் செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி உதவியாளர்களை பணி நிரந்தரம் செய்வதுடன், சம்பளத்தை உயர்த்தி கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ. டி. செல்லசாமி.

திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி, குடிநீர் வழங்கல் மற்றும் சமுதாய நலன் பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது எனக்கு பேச வாய்ப்பளித்திருக்கும் இந்திய திருநாட்டின் ஒப்பற்ற தலைவியும், ஏழை எளிய மக்களின் நல்வாழ்வில் ஒளிவிளக்காய் விளங்கி, இந்திய திருநாட்டில் தமிழகத்தை சிறந்த மாநிலமாக உருவாக்கி, பொற்கால ஆட்சியை நடத்தும் எங்களது இதயத் தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் வணங்கி என் நன்றியைத் தெரிவித்து என் உரையை தொடங்குகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் பதவி ஏற்ற உடன் நிதிநிலை பற்றாக்குறை இருந்தபோதிலும் பல ஆண்டுகளாக தேங்கி கிடக்கும் பிரச்சினைகளை, கிராமப்புற மக்களுக்கு அடிப்படையான வசதிகளை பூர்த்தி செய்யும் வகையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 1 கோடி ரூபாய் நிதியுதவி செய்கின்ற திட்டத்தை-கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதியான ரோடு அமைத்தல், சாக்கடை அமைத்தல், பழுதடைந்த ரோடுகளை செப்பனிடுதல் போன்ற வேலைகளை எல்லாம் துரிதமாக செயல்படுத்தி வரும் மாண்புமிகு இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை தமிழக மக்கள் அனைவரும் இன்றையதினம் உளமார பாராட்டுகிறார்கள்,

உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள ஊராட்சிகளின் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்குதல், தெருவிளக்குகள் பராமரித்தல் மற்றும் சுகாதார வசதி ஏற்படுத்தல் ஆகிய மூன்று முக்கிய கடமைகளை சிறந்த முறையில் செயல்படுத்த தற்போது செயல் முறையில் உள்ள சில இடர்பாடுகளை நீக்க வேண்டியது அவசியமாகிறது.

ஊராட்சி ஒன்றியங்களில் குறிநீர் வழங்குதல், தரைமட்ட தொட்டிகள் அல்லது மேல்நிலைத் தொட்டிகள் மூலமாகவும், ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் கைப்பம்புகள் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீருக்காகப் பயன்

படுத்தும் மின் மோட்டார்கள் பழுதடைந்தால் உடனடியாக பழுதை நீக்கி பயன்படுத்த முடியாதபடி சில நடைமுறை இடர்பாடுகள் உள்ளன. ஒரு மினி மோட்டாரோ அல்லது கைப்பம்போ பழுதடைந்துவிட்டால் கோட்ட வளர்ச்சி அலுவலகத்திலுள்ள எலக்ட்ரிசியன்கள் பழுதடைந்த மின் மோட்டாரை பார்வையிட்டு மதிப்பீடு செய்து உதவி செயற்பொறியாளரிடம் அங்கீகாரம் பெற்று ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் அனுப்ப வேண்டியுள்ளது.

அந்த மதிப்பீட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அங்கீகாரம் பெற்று மூன்று பழுது நீக்குநர்களிடம் டெண்டர் பெற்று, அதில் குறைந்த டெண்டர் கொடுத்தவரிடம் வேலை உத்தரவு வழங்க வேண்டும் என்று தற்போது நடைமுறையில் உள்ளது. இதனால், ஒரு மின் மோட்டார் பழுது நீக்கம் செய்ய குறைந்தது 20 நாட்கள் முதல் 1 மாதம் வரை ஆகிறது. குடிநீர் இருந்தும் மின் மோட்டார் பழுதடைந்தால், மோட்டாரை சீர்செய்ய காலதாமதம் ஆனதால் கிராம மக்கள் குடிநீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்நிலைக்கு மாற்றாக பழுதான மின்மோட்டாரை அப்பகுதி ஊர்நல அலுவலர் மூலமாக கிராமத்தில் உள்ள ரீவைண்டிங் கடையில் ஆணையர் உத்தரவு மட்டும் பெற்று, அதற்குண்டான கட்டணத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையாளரே வழங்க உத்தரவிட வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-40

ஊராட்சிகளுக்குத் தேவையான புதிய குடிநீர் ஆதாரங்கள் தற்போது குடிநீர் வடிகால் வாரியத்தில் மூலம் கண்டறியப்பட்டு வருகிறது. இவர்கள் இப்பணியை மேற்கொள்ளும்போது சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து ஆலோசனை செய்வதில்லை. இதன் காரணமாக கை பம்புகளே இல்லாத ஊர்கள் இருக்கும்போது ஒரே ஊரில் ஒரே இடத்தில் இரண்டு, மூன்று கைப்பம்புகள் உள்ள நிலையும் உள்ளது. எனவே, இவர்கள் குடிநீர் ஆதாரங்களை கண்டறிய வரும்போது சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரையும், ஊராட்சி ஒன்றியம் வழங்கும் ஆலோசனைகளையும் ஏற்று செயல்பட உத்தரவிட வேண்டுகிறேன்.

மின் வசதியைப் பொறுத்தவரை தெரு விளக்குகள் பராமரிப்பு உள்ளாட்சித் துறையும், மின் வாரியமும் இணைந்து செய்து கொண்டு வருவது மாற்றப்பட வேண்டும். இத் துறைகளில் உள்ள நிர்வாகச் சிக்கல்கள் காரணமாகவும், பணியாளர்களின் பிரச்சினைகள் காரணமாகவும் ஊராட்சிகளின் தெரு விளக்குகள் மாட்டப்படுவதில் மிகுந்த தாமதம் ஏற்படுகிறது. மேலும், நிதி வசதி இல்லாத ஊராட்சிகளில் மின் விளக்குகள் வாங்கவும், மின் கட்டணம் செலுத்தவும் வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே, இந்நிலை மாற தெரு விளக்குகளின் பராமரிப்பு மின் வாரியத்திடமே ஒப்படைக்கப்பட வேண்டும்.





ஊராட்சிக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் பற்றிய விவரங்கள், ஊராட்சிகளின் எல்லை, தெருக்கள் பற்றிய விவரங்களைத் தொகுத்து, வரைபடமாக வரைந்து, வருவாய்த் துறையினர் மூலம் பொதுமக்கள் கூடும் இடங்களிலும், கிராமச் சாவடிகளிலும், ஊராட்சி அலுவலகங்களிலும் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் கடும் வறட்சி உள்ளது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 817 அடி குழாய்கள் உள்ளன. அதில் 112 அடி குழாய்களில் தண்ணீர் இல்லாமல் 26 மின் மோட்டார்களின் குழாய்கள் சுத்தமாக தண்ணீர் இல்லாமல் வறண்டுவிட்டது. தனியார்களின் கிணறுகளில் ஏர் கம்பர்சர் மூலம் சுமார் 300 அடியிலிருந்து 500 அடி வரை போர் போட்டிருப்பதால், அரசு மூலம் அமைக்கப்படும் அடிக்குழாய்கள் பெரும்பாலும் தண்ணீர் இல்லாமல் வறண்டு விடுகிறது. இந்நிலையை தவிர்க்க அரசு அடிக் குழாய்களை அதிகமான ஆழத்தில் போர் போட நடவடிக்கை எடுத்து, தண்ணீர் சீராக வழங்க ஏற்பாடுகள் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா மாவட்டத்தில் ஒட்டன் சத்திரத்தில்தான் மழை குறைவு என அரசு குறிப்பில் உள்ளது. எனவே தொகுதி முழுவதும் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. எனவே நீர்த் தேக்கமே இல்லாத ஒட்டன்சத்திரம் பகுதியில் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தும், வடிகுழாய்கள் அமைத்தும், குடிநீர் பஞ்சத்தினை போக்கிடவும் அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெளியப்பூர் ஊராட்சியில் நங்காஞ்சி ஆற்றின் அருகில் ஒரு அடிக் குழாய் போடப்பட்டு அதில் தண்ணீர் நிறைய உள்ளது. இதிலிருந்து பைப் லைன்கள் அமைத்து, நாகப்பன்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்துதர குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் உத்திரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குத்திலுப்பை கிராமத்தில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் அனைத்தும் கோடைகாலத்தில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. இதனால் அக்கிராமத்தில் உள்ள பொதுமக்கள் குடிநீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நிரந்தர அடிப்படையில் குடிநீர் வாரியம் மூலமாக நிரந்தரமாக குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்கு பவர் பம்பு அடிக் குழாய் பராமரிப்பு செலவில் அரசின் மூலம் ஒரு பகுதி மட்டும் மானியமாக வழங்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து செலவழிக்க இயலாத நிலையில் நிதிப்பற்றாக்குறை

உள்ளது. எனவே பவர் பம்ப் அடிக் குழாய் பராமரிப்பு செலவினங்களுக்கு, முழு மானியம், ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதி இல்லாததால், கிராமங்களில் தெரு விளக்கு எரிய பல்புகள், சோக்குகள் வாங்க அரசு சிறப்பு நிதி வழங்கியும், பாதிக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு மின் விளக்கு எரிய வசதி கிடைக்கவில்லை. எனவே, மீதி விளக்குகளும் எரிய பல்பு, சோக்குகள் வாங்க மேலும் அரசு சிறப்பு நிதி வழங்க வேண்டுகிறேன். ஒட்டன்சத்திரம் ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள் நன்கு பராமரிக்கப்படாமல் இருக்கிறது. மேற்படி கட்டிடத்தைப் பராமரிக்க நெடுஞ்சாலைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் 50 பஞ்சாயத்துக்களைக் கொண்ட பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருப்பதால், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை, கள்ளிமந்தயத்தை மையமாகக் கொண்டு இரண்டாகப் பிரித்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் ஏதுவாக இருக்கும் எனத் தங்களின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தி. சாத்தையா.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வைரத்தில் எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும் ஒளி வீசிக்கொண்டிருப்பதைப்போல எனது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் ஒவ்வொரு துறையின் செயல்பாடுகளும் ஒளி வீசத் தொடங்கியுள்ளது. "எங்கெங்கு காணினும் சக்தியடா" என்று சொன்னான் பாரதி. இன்று சக்தியின் வடிவில் தமிழகம் காண்பதோ புரட்சி, எதிலும் புரட்சி, புரட்சித் தலைவியின் தலைமையில் தமிழகம் காண்பதோ பொற்கால ஆட்சி. மருத்துவ நலத் திட்டத்தின்கீழ், மக்களின் நல் வாழ்க்கையில் ஒரு புரட்சி; அறிவொளி இயக்கத்தில் கல்விப் புரட்சி; தேங்கியும் நலிந்தும் கிடந்த தொழில் வளம் பெருக்க ஏற்படுத்திய திட்டங்களில் தொழிற் புரட்சி; மின்வெட்டு இல்லாத மின்வளப் புரட்சி; ஆன்மீக அறநெறி வளர்த்து சமூக விரோத தீய சக்திகளை அழித்து, அதனால் தமிழகம் காண்பதோ அமைதிப் புரட்சி. இது ஜனநாயக விழிப்புணர்ச்சியாகும். உலக வரலாற்றில் இடம் பெற்றதோ பிரஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி. இன்று தமிழகம் காண்பதோ இந்தியாவின் "ஜோன் ஆப் ஆர்க்" டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சி. இப்பொற்கால



ஆட்சியில் ஏற்படும் புரட்சிகர முன்னேற்றங்களைப் பார்த்து பொறுக்காத ஜீரணிக்க முடியாத சிலர், வீண் பூசல்களை ஏற்படுத்தி வருகின்றனர். அது தலைமுறை இடைவெளியினால் ஏற்படும் காழ்ப்புணர்ச்சியாகும். It is the defect of generation gap அதனைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. புதிய சிந்தனை, எழுச்சி, போக்கு, இன்றைய தேவை. பத்தாம்பசலித்தனம் கொண்டவர்களைக்கண்டு நாம் அஞ்சவும் வேண்டாம், கவலைப்படவும் வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, இவ்வாட்சியில் இந்த உள்ளாட்சித்துறை மானியத்தின்மீது பேச விழைகிறேன்.

பிற்பகல் 12-45

தற்போது உள்ளாட்சித் துறையின் கவனத்திற்கு நான் சில முக்கிய கோரிக்கைகளை பேரவையின் முன் வைக்க விரும்புகிறேன். சென்னை நகரில் கொசுக்களை ஒழிக்க, ஹெல்த் டீம் கழவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பற்றி முக்கியமான தகவலைத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது மாநகராட்சியில் முக்கியமான தொல்லைகளில் ஒன்று கொசுத் தொல்லையாகும். சென்னை மாநகரம் கொசு உற்பத்தியின் கேந்திரமாக விளங்குகிறது. இதற்கு முக்கிய காரணமாக இருப்பது கழிவுநீர் தேக்கமாகும். இவற்றால் கொசுக்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. கொசுக்களை ஒழிப்பதற்கு முதல் கட்டமாக ஒரு ஹெல்த் டீம் அமைத்து இந்த அமைப்பின் மூலம் கழிவுநீர்த் தேக்கம் கொண்ட இடங்களைக் கண்டறிந்து கொசுக்களை ஒழிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு ஃபில்டரோடு கூடிய கழிவுநீர் பம்பிங் ஸ்டேஷன்களை அமைத்து தேங்கிய கழிவு நீரை ஓடும் கழிவு நீராக மாற்றினால் ஓடும் நீரில் கொசுக்கள் முட்டையிடாது என்பதால் கொசு உற்பத்தி குறையும். இன்னும் ஒருபடி மேலே போனால், மாநகரத்தில் உள்ள எல்லா கழிவு நீரையும் பைப் மூலமாக மூடப்பட்ட முறையில் ஓரிடத்திற்குக் கொண்டுவந்து பொது கழிவுநீர் சுத்திகரிப்புக்கூடத்தில் வைத்து அதை சுத்திகரித்து, சுத்தம் செய்யப்பட்ட நீரை நகரின் பல்வேறு இடங்களில் உள்ள பூச்செடிகளுக்கும் பூங்காக்களுக்கும் பயன்படுத்தலாம். சுத்தமான நீரைச் சேமிக்கலாம். அதே நேரத்தில் இந்த நிலையத்திலிருந்து கிடைக்கும் திடப்பொருட்களை நல்ல உரமாகவும் பயன்படுத்தலாம்.

Standardisation of City roads construction என்ற முறையில், நகரில் உள்ள சாலைகளைப் பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். இதை ஒரு தொலைநோக்குப் பார்வையோடு ஒரு ஸ்டாண்டர்டு ஏற்படுத்தப்பட வேண்டும். சாலையின் எந்தெந்த இடங்களில் மின்சார கேபிள்கள் போடவேண்டும். எந்தெந்த இடங்களில் தொலைபேசி கேபிள்கள் போட வேண்டும், எந்தெந்த இடங்களில் கழிவு நீர் மற்றும் குடி நீர்க் குழாய்கள் அமைக்கப்பட வேண்டுமென்பன போன்றவைகளைத் திட்டமிட்டு, அந்தந்த

இடங்களில் அவற்றை நிர்ணயம் செய்து வரைமுறையோடு அமைக்கவேண்டும். இவற்றைச் செயல்படுத்த அந்தத் துறை அதாவது கார்ப்பரேஷன். மெட்ரோ வாட்டர், டெலிபோன் துறை, மின்சார வாரியம், போன்ற துறைகளின் அதிகாரிகளை அழைத்து, ஒரு ஒருங்கிணைப்புக் குழு ஒன்றினை ஏற்படுத்தி அவற்றின் மூலம் நான் சொன்ன சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும். அதோடு புதிய புதிய சாலைகள் அமைப்பதிலும், பழைய சாலைகளைச் சீர்திருத்தம் செய்வதிலும் இந்த ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்தின்படி காலதாமதமின்றி செயல்படுத்த முடியும். இதனால் நமக்கு கிடைக்கும் பயன்கள் என்னவென்றால், மக்கள் சாலைகளை முழுமையாகப் பயன்படுத்த ஏதுவாகவும் இருக்கும். விபத்துக்களைத் தவிர்க்கலாம். சாலை உடைப்புகளைத் தவிர்க்கலாம். போக்குவரத்துத் தாமதங்களையும் தவிர்த்துவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தற்போது இருக்கும் நகர்ப்புற சாலைகளைப் பயன்படுத்த நல்ல ஒரு முறையை நிர்ணயித்து செயல்படுத்தவேண்டும். சென்னை மாநகர சாலைகளைப் பொறுத்த வரையில் 1 நிமிட நேரத்தில் கடக்க வேண்டிய 1 கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்க இப்போது பத்து நிமிடங்கள் கூட ஆகின்றன. இந்த மீதமுள்ள 9 நிமிடங்களில் எரிபொருளும், நேரமும் விரயமாகிறது. இதைத் தடுத்து, இப்போது இருக்கும் சாலை வசதிகளை முழுமையாகப் பயன்படுத்த, அரசு நல்ல திட்டங்களை வகுத்து, சாலை விதிகளைக் கடுமையாகச் செயல்படுத்தவும் வேண்டிக் கொள்கிறேன்.

உதாரணமாக மாநகரச் சாலைகளை உபயோகிப்பதில், மோட்டார் வாகனங்களுக்கு அதிவேகப் பிரிவு என்றும் மெது வேகப் பிரிவு என்றும் பாகுபடுத்த வேண்டும். மீதமுள்ள மோட்டார் பொருத்தாத வாகனங்களான சைக்கிள்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள், டயர் வண்டிகள், மாட்டு வண்டிகள் போன்றவற்றிற்கு ரோட்டில் ஒரு ஓரப் பகுதியை ஒதுக்கித் தரவேண்டும் இவ்வாறு செயல்படுத்த, அரசை வேண்டுகிறேன். இதனால் சாலைப் பயனை மக்கள் முழுமையாகப் பயன்படுத்த ஏதுவாகும். விபத்துக்களையும் குறைக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன.

அடுத்ததாக மாடுகள் தொல்லை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். மாநகராட்சி எல்லைகளில், குறிப்பாக சென்னை நகரில் வளர்க்கப்படும் மாடுகள், போன்றவற்றால் போக்குவரத்து இடர்ப்பாடுகள் ஏற்படுவது மட்டுமல்லாமல், இவ்வகை மாடுகளுக்கு சிலவகை ஊசிகள் போடப்பட்டு பால் அதிகம் கறக்கப்படுகிறது. அந்தப் பாலை மட்டும் குடிப்பதால் நல்வாழ்வுக்குக் கேடு உண்டாகிறது. இப்போது எல்லாம் சென்னை நகரில் வைக்கோல் கன்றுக்குட்டிகளை நாம் காண முடியாததற்குக் காரணம், ஊசிகளைப் போட்டு மாடுகளிடம் முற்றாக பாலைக் கறக்க ஒரு வழிமுறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதனால்



மாடு வளர்ப்பவர்களுக்கு வருமானம் பெருகும். மாடுகளின் எண்ணிக்கை கூடும். இதனால் போக்குவரத்து நெரிசல்களும், விபத்துக்களும் அதிகமாகும். எனவே நகர்ப்புறத்தில் மாடுகளின் எண்ணிக்கையைக் குறைக்க, இத்தகைய மருந்துகள், ஊசிகள் சட்டத்தின்கீழ் தடுப்பு முறை கொண்டுவந்து, இவை தடுக்கப்படவேண்டும். சாலைகளில் இருந்து மாடுகளை அப்புறப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சிகளில் மின்துறையினர் மின்சாரக் கம்பிகளில் மரங்கள் படுவதால் விபத்து நேராதவண்ணம், சாலையோர மரங்களை வெட்டுகின்றனர். இதனால் பசுமைப் படர்வு (கிரீன் கவரேஜ்) பெருமளவு குறைகிறது. மின்துறையினர் வேலையும் வீணாகி, மரம் வெட்டுவதில் அவர்கள் ஈடுபடுவதால், அவர்களின் வேலைத்திறன் குறைகிறது. எனவே நகராட்சிகள் மாநகராட்சிகளில் நிலத்தடி கேபிள்கள் அமைக்கக் கேட்டுக் கொள்கிறேன். இதனால் மரங்கள் வளரும் மின்துறை பணி நேரம் வீணாகாது. விபத்துக்கள் ஏற்படாது. அதன்மூலம் மின்துறையில் தேவையில்லாமல் நஷ்டஈடு கொடுக்கத் தேவையில்லை. அதே போன்று மாநகராட்சிச் சாலைகளில் உள்ள மின்விளக்குகள் ஆன்—ஆப் செய்வதற்கு ஆட்டோமோடிக் போட்டோசெல் கண்ட்ரோலைப் பயன்படுத்த உள்ளாட்சித் துறையை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த முறையைப் பயன்படுத்துவதன்மூலம், தேவையில்லாத நேரங்களில் தெரு விளக்குகள் தானாக அணைந்துவிடும். இதனால் மின்சாரம் விரயமாகாமல் தடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதே போன்று மாநகராட்சி, உணவகங்களுக்கு உரிமம் வழங்கும்போது சரியான சோதனை மேற்கொள்ளுவதில்லை. கார்ப்பரேஷனுக்கு பணம் கட்டிய பின் எந்தவிதமான சோதனையும் செய்யாமல் உரிமம் வழங்கப்படுகிறது. எனவே முறையான சோதனைகளை நடத்தியதன் பிறகே உரிமம் வழங்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது). முக்கியமாக எனது தொகுதிக்கு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் அ. செல்லக்குமார்.

டாக்டர் ஆ. செல்லக்குமார்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி குறித்த மசோதாவிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு எழில்மிகு சென்னை இரண்டாயிரம் அமைத்துக் கொண்டிருக்கிற வேளையில், சென்னை மாநகராட்சி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமைக்கின்ற விதத்தில் தேவைகள் அமைகின்ற விதத்தில் மக்கள் கொண்டுவரும் விதமாக

மக்களுடைய பிரதிநிதிகளை மாநகராட்சி நிர்வாகத்தில் மாநகராட்சி தேர்தலை உடனடியாக நடத்துமாறு உங்களை நான் முதற்கண் பணிவன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஏனைய மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் மாதத்திற்கு ஒரு முறை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் சென்னையில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில், இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக நாங்கள் இருந்தாலும் கூட, அந்த மாநகராட்சி நிர்வாகத்தில் அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை தட்டிக் கேட்பதற்கோ அல்லது பொது மக்களுடைய பிரச்சினைகளில் இது போன்ற நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என்று சொல்லுவதற்கோ எந்தவிதமான மன்றமும் இல்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொண்டு, தயவு செய்து ஏனைய மாவட்டங்களைப் போல சென்னை மாவட்டத்திலே வளர்ச்சி மன்றக் கூட்டத்தை நடத்துவதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை அண்ணா நகர் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்தகரையும், மேத்தா நகர், கக்கன்ஜி நகரையும் இணைக்கின்ற வகையில் ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று எண்ணம் பொது மக்களுடைய மத்தியிலே நீண்ட நெடு நாட்களாக இருந்து வருகிறது. ஆனால் கடந்த இரண்டு முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோதும் சரி, அதற்கு முன்பும் சரி இரண்டு முறை அமைச்சர்கள் வந்த அந்த பாலம் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டிவிட்டு சென்றிருக்கிறார்களே தவிர, அடிக்கல் நாட்டப்பட்ட நிலையிலேதான் இன்று வரை அந்த இடம் இருக்கிறதே தவிர, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான முயற்சியை இதுகாறும் யாரும் எடுக்கவில்லை. தயவு செய்து இந்த ஆட்சியிலேயாவது அந்தப் பகுதியினுடைய மக்கள் பலன் அடையும் வகையில் அந்தப் பாலத்தைக் கட்டும் நடவடிக்கையில் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை, அரும்பாக்கம் என்பது நடுத்தர மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதியில் இருக்கின்ற ஜெய் நகர் முதற் தெருவை, ஜவகர்லால் நேரு நெடுஞ்சாலையில் உள் வட்டச் சாலையை இணைக்கும் வகையில் ஒரு இணைப்புச் சாலை—லிங்க் ரோடு அமைக்க வேண்டும் என்று நீண்ட காலமாக வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக மாநகராட்சியினுடைய அதிகாரிகளை பல முறை அணுகியிருக்கிறார்கள். அந்த பகுதியைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் செல்லுவதற்கு வசதியாக அந்தச் சாலை அமைந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதி நெடுஞ்சாலைத் துறையினுடைய



கண்ட்ரோலில் இருந்தாலும், ஏறத்தாழ 100 அடி நீளத்திற்கான இடத்தை கார்பரேஷனுக்கு நெடுஞ்சாலைத் துறை ஏற்கெனவே கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி கடிதத்தில் எழுதியிருக்கிறார்கள். ஆனால் கார்பரேஷனுடைய காலதாமதத்தின் காரணமாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததன் காரணத்தால் அந்தப் பகுதியில் மக்கள் செல்லுவதற்கு மிகவும் சிரமப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இரவு நேரங்களில் பஸ்களில் வந்து இறங்கி வீட்டுக்குச் செல்லும்போது பெண்கள், தாய்மார்கள் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம் சமூக விரோதிகளுடைய கையிலிருந்து அவர்கள் தப்புவதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே உடனடியாக மாநகராட்சி நடவடிக்கையில் ஈடுபட்டு அந்தப் பகுதியை இணைத்து அந்த 'லிங்க் ரோட்டை' அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கோடை நெருங்க, நெருங்கசென்னை மக்கள் மத்தியிலே ஒரு பீதி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. காரணம் பல இடங்களில் இன்றைக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு வந்துகொண்டிருக்கிறது. இன்றைக்குக் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக 'டாங்குகள்' மூலமாக தண்ணீர் சப்ளை செய்து கொண்டிருந்தாலும்கூட, அந்த டாங்குகளின் நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும். காரணம் லாரிகளின் மூலமாக தண்ணீரைக் கொண்டுவந்து விட்டுவிட்டால் அரை மணி நேரத்திற்குள் அந்த தண்ணீர் வீணாகி விரையமாகிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணத்தை அந்த அலுவலரைக் கேட்கிறபோது, புதிதாக டாங்குகளை வாங்க அனுமதி இல்லை, டாங்க் சப்ளை இல்லை என்று சொல்லி, இருக்கின்ற டாங்குகளைத்தான் நாங்கள் வைக்க முடியும், நாங்கள் என்ன செய்வோம் என்று சொல்லி கையை விரிக்கிறார்கள். தண்ணீர் வீணாகி விரையமாகிறதே தவிர குடிதண்ணீருக்கு மக்கள் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கவனத்திலே கொண்டு, உடனடியாக போர்க்கால நடவடிக்கையாக, இந்தக் கோடையிலிருந்து மக்களைக் காப்பாற்ற, குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் முகத்தான் புதிய டாங்குகளை வாங்குவதாக இருந்தாலும் சரி, அல்லது சில இடங்களில் உயர்வான இடங்களில் குழாய் இணைப்பு செய்யப்பட்டிருப்பதை தாழ்வான இடத்திற்குக் கொண்டு வந்து சீர்படுத்தி தண்ணீர் வசதி அந்த மக்களுக்குக் கிடைக்கும் விதத்தில் நல்ல திட்டத்தை நீங்கள் தீட்ட வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

எழில்மிகு சென்னை இரண்டாயிரத்தைப் பற்றி நாம் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்னும் சென்னை மாநகரில் பல்வேறு பகுதிகளை எடுத்துக்கொண்டால் அடிப்படை வசதிகளான 'ட்ரெயினேஜ்' வசதி கூட இல்லாத சூழ்நிலையில்

ஏழை எளிய மக்கள், வாழ்கின்ற பல்வேறு பகுதிகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஏழை தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்ற பகுதிகள் அடிப்படை வசதிகள் கூட பெறாமல் இருக்கின்றன. இத்தனை ஆண்டுகள் ஆன பின்னாலும் சென்னை மாநகரில் ட்ரெயினேஜ் வசதி இல்லாத, அடிப்படை வசதி இல்லாத இப்படிப்பட்ட பகுதிகள் இருக்கின்றன என்று சொல்லுகிறபோது, அத்தியாவசியத் தேவையாக இருந்தாலும்கூட, கடந்த ஆட்சி செய்த தவறு என்று சுட்டிக்காட்டாமல் அந்த மக்கள் பயன் அடைகின்ற வகையில் இந்த அரசு அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டுமென்பதை ஒரு விண்ணப்பமாக வைக்கிறேன்.

சென்னை மாநகரில் சாலைகளினுடைய வசதி என்ன என்பது உலகறிந்த உண்மை. அமைச்சர் அவர்கள் செல்லுகின்ற பாதையிலே கூட பார்த்திருப்பார்கள். சாலை எந்த அளவுக்கு பழுதடைந்திருக்கிறது என்பதைப்பற்றி, இதன் காரணமாக அரசுப் போக்குவரத்தாக இருந்தாலும் சரி, தனியார் வாகனங்களாக இருந்தாலும் சரி அவை விரைந்து தேய்மானம் அடையும் நிலையில் இருக்கின்றன. எனவே, சாலைகளைச் சீர்படுத்துவதன் மூலமாக போக்குவரத்து வாகனங்களின் தேய்மானங்களைத் தவிர்க்கலாம்.

அது மட்டுமல்ல, அந்த மக்கள் காலையிலே வேலைக்குப் போகும்போது, போக்குவரத்தில் செல்கிறபோதும் சரி, நடந்து செல்கிறபோதும் சரி, ஸ்கூட்டர் போன்ற இரண்டு சக்கர வாகனங்களில் செல்கிறபோதும் சரி, ஒவ்வொரு பள்ளத்திலும் உருண்டு எழுந்து அலுவலகத்திற்கு வரும்போது ஏதோ காலையிலிருந்து மாலை வரையில் வேலை பார்த்து களைப்படைந்ததைப் போன்றுதான் இருக்கிறார்கள். ஆகையால் அந்தச் சாலைகளை சீர்படுத்தி, செம்மைபடுத்தி நல்லமுறையில் அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தச் சாலைகளைச் சீர்படுத்த மாநகராட்சி நடவடிக்கை எடுத்து சாலைகளைப் போடும்போது, சில பகுதிகளிலே அவர்கள் போட்ட சாலைகளுக்கு 6 மாதம் கூட லைஃப் இல்லை. இது ஏன் என்பதை அறிந்து, என்ன தவறு நடக்கிறது என்பதை புரிந்து கொண்டு இந்த மாதிரி தவறுகள் இல்லாமல் சாலைகளைப் போடவும் சாலைகளைப் பழுது பார்க்கவும் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். குறைந்தபட்சம் இரண்டு ஆண்டு காலமாவது இந்த சாலைகளுக்கு வாழ்வு இருக்கக்கூடிய வகையில் நல்ல முறையில் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மெயின்ரோடுகளைத் தவிர, உள்ளே இருக்கிற காலனிகளில், ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் சென்று பார்த்தால் அந்த பகுதிகள் பெரும்பாலும் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன



ஏறத்தாழ 100 தெருவிளக்குகள் இருந்தால் அதிலே ஒன்றுகூட எரிவதில்லை. அந்த அளவுக்கு மிகவும் மோசமான நிலைமை இருக்கிறது. மாநகராட்சி அலுவலர்களை வற்புறுத்தி நாம் தெரு விளக்குகளைப் போட்டாலும்கூட அந்த விளக்குகள் ஒரு வார காலம் கூட எரிவதில்லை. அதனுடைய காரணம் என்ன என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியது போல் சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் சுமார் 3 கோடி ரூபாய் அளவில் புதிய பல்புகளும், லைட்டுகளும், பிலிப்ஸ் கம்பெனி மூலம் வாங்கப்பட்டு, அவை தற்போது போடப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தரம் தாழ்ந்த பல்புகளையும் லைட்டுகளையும் நாங்கள் போடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. செல்லக்குமார்: நான் இந்த அரசு போட்டதாகச் சொல்லவில்லை; கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சியைத்தான் சுட்டிக்காட்டினேன். நான் சட்டமன்ற உறுப்பினரான பிறகுகூட மாநகராட்சி அதிகாரிகளையும் அழைத்துச்சென்று, மக்கள் சொல்லுகின்ற குறைகள் தவறாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் பரிசோதித்துப் பார்ப்பதற்காக நேரிலே சென்று பார்த்திருக்கிறேன். ஒரு வாரம் கூட அந்த விளக்குகள் எரியவில்லை என்பதை நடைமுறையில் நான் கண்டறிந்த உண்மை அது. மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்த நடவடிக்கைகளை இங்கே குறிப்பிட்டார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரில் பண்டித ஜவகர்லால் நேரு நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிவிட்டோம். ஆனால் எனது தொகுதியில் பூவிருந்தவல்லி சாலையில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் பெயரில் ஒரு பூங்கா இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு அது வந்திருக்கிறதா என்று தெரியவில்லை. பூங்கா என்று சொன்னால் இப்படித்தான் இருக்குமோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிற அளவுக்கு சென்னை மாநகரிலுள்ள அத்தனை கழிப்பிடங்களையும் ஒட்டுமொத்தமாக அங்கே சேகரிக்கின்ற ஒரு அவல நிலையில் அந்த பூங்கா இருக்கிறது. அந்த பூவிருந்தவல்லி சாலை போக்குவரத்து நெரிசல் மிகுந்த ஒரு சாலை. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் மக்கள் சென்று வரக்கூடிய ஒரு சாலை. அந்தச் சாலையின் இடதுபுறத்தில் இந்த பூங்கா இருக்கிறது. பண்டித ஜவகர்லால் நேருவின் பெயருக்கு

அவமரியாதை ஏற்படாமல் இந்தப் பூங்காவை செம்மைப்படுத்தி அழகுபடுத்த தயவுசெய்து இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கிற சுகாதார அலுவலர்களைக் கண்காணிக்கின்ற பொறுப்பை, அதாவது சானிட்டரி இன்ஸ்பெக்டர்களைக் கண்காணிக்கின்ற பொறுப்பை கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மருத்துவ அதிகாரிகளிடமிருந்து கைப்பற்றி, நகராட்சி ஆணையர்களிடம் கொடுத்துள்ளது. மருத்துவம் சம்பந்தப்பட்ட நடவடிக்கை என்பதைப்பற்றி 'இம்முனிசேஷன்' புரோகிராம் போன்றவற்றைபற்றி எல்லாம் மருத்துவ அதிகாரிகளால்தான் கண்டறிந்து, சரியான நேரத்தில் சரியான நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர மருத்துவத்தைப் பற்றித் தெரியாத மாநகராட்சி ஆணையர்களால் சரியாக நடவடிக்கை எடுக்க முடியாது என்பதை அரசுக்குத் தெரிவித்து, கடந்த காலத்தில் அரசு ஏதோ சந்தர்ப்பச் சூழ்நிலையின் காரணமாக தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாகக் கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டத் திருத்தத்தை மாற்றி, மீண்டும் சுகாதார அலுவலர்களைக் கண்காணிக்கும் பொறுப்பை மருத்துவ அதிகாரிகள் கையிலே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் எல்லா மாநகராட்சிகளிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மென் இல்லாத காரணத்தினால் அந்த அறைகள் மூடப்பட்டு இருக்கின்றன. ஆனால், தயவுசெய்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மென் இல்லாவிட்டாலும்கூட அதே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அந்த அலுவலகத்தை திறந்துவைத்து, அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்து மக்கள் குறைகளைக் கேட்பதற்காக இருந்தாலும்சரி, ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இருந்தாலும்சரி, அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று, முனிசிபாலிட்டி, பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கின்ற ஜீப்புகளை சட்டமன்றஉறுப்பினர்கள் பயன்படுத்த அனுமதி நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1.00

கடந்த மரியாதைக்குரிய ராமமூர்த்தி அவர்களுடைய தலைமையில் இருக்கின்ற அந்த பிளானிங் கமிஷன் 28 பக்க அறிக்கையை தாக்கல் செய்து இருக்கின்றது. தாக்கல் செய்து இருக்கிற அந்த அறிக்கையில் லோக்கல் பாடிக்காக, அந்த நகராட்சிக்காக உள்ளாட்சித் துறைக்காக ஒதுக்கப்பட்டு இருக்கின்ற பணங்கள் சரியான முறையிலே பயன்படுத்தப்படவில்லை என்கின்ற ஒரு அறிக்கை, ஒரு குற்றச்சாட்டு அந்த 23 பக்கம் அறிவிக்கவேண்டி



இருக்கின்றது. அதனை அரசு கவனத்திலே கொண்டு வந்து அது போன்ற உள்ளாட்சித் துறைக்காக ஒதுக்கப்படுகின்ற பணம் அந்த மக்களுக்குச் சென்றடைகின்ற விதத்தில் நீங்கள் திட்டத்தினைத் தீட்டி, அந்தத் தவறினை நீங்கள் திருத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே ஊரக வளர்ச்சித் துறையிலே ஒதுக்கப்படுகிற நிதிகளை முறையாக, நிறையோடு தமிழக மக்களுக்கு அளித்து வருகிற திட்டங்களைத் தீட்டித்தான் செயல்படுகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது பிளானிங் கமிஷன் ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது என்று சொன்னார். இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிற காலம் எது? அது எந்த பீரியட்-க்கு கொடுக்கப்பட்ட அறிக்கை? எந்த ஆட்சி தமிழகத்தில் இருந்தது என்பதை விளக்குவாரா? அதுமட்டுமல்லாமல், இந்த அறிக்கை வெளியிடப்பட்ட அறிக்கையா; அது எப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கிடைத்தது என்பதையும் தெரிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் அ. செல்லக்குமார்: பிளானிங் கமிஷனுடைய அறிக்கை என்பது கடந்த கால அரசைப்பற்றித் தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. கடந்த காலத் தவறுகள், இந்த ஆட்சியில் நடக்கக் கூடாது; அதற்கான வாய்ப்பினை உருவாக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கருத்தினை இங்கே சொல்லவேண்டி இருக்கின்றதே தவிர, இந்த ஆட்சியில் நடைபெற்றது என்கின்ற வாதத்தை நான் இங்கே சொல்லவில்லை. அதுபோல், சென்னை மாநகரத்தில் இன்றைக்குக் குப்பைகளைப் பொறுத்தவரையில்.. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அது இந்த அவையில் வைக்கப்பட்ட அறிக்கையா? வெளியிடப்படாமலே இருக்கிற அறிக்கையா அப்படி வெளியிடப்படாமல் இருக்கிற அறிக்கையாக இருந்தால்,

மாண்புமிகு உறுப்பினருக்கு அது எப்படி கிடைத்தது, என்கிற விவரத்தைத் தங்களிடமிருந்து அறிய விரும்பி இருக்கிறார்கள். அதுபற்றி நீங்கள் எதுவும் சொல்லவில்லையே. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த அறிக்கை குறித்துச் சொல்ல வேண்டும்.

டாக்டர் அ. செல்லக்குமார்: தலைவர் அவர்களே, அறிக்கை என்பது, கடந்த காலத்திலே தவறுகளை சுட்டிக்காட்டி வெளியிடப்பட்ட அறிக்கை. இது குறித்தத் தகவலை......

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த அவைக்குச் சரியான தகவல்களைக் கொடுக்க வேண்டும். பிளானிங் கமிஷனுடைய அறிக்கை என்றால், அது அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கையா? எப்போது வெளியிடப்பட்டது? எந்த அவையிலே வெளியிடப்பட்டது? அது இந்த உறுப்பினருக்கு எப்படிக் கிடைத்தது என்பதை அவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்லக்குமார் 'நீங்கள் அதை பிளானிங் கமிஷனுடைய' அறிக்கை என்று சொல்லி அதனுள் இருக்கிற விவரங்களையெல்லாம் சொல்லி, அது அவைக் குறிப்பிலே ஏறி இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட கமிஷனுடைய அறிக்கை என்று சொல்லி வந்ததற்குப் பிறகு அதைப் பற்றிய விவரம் நீங்கள் தெரிவித்து அது அவைக் குறிப்பிலே இருக்கும்போது எந்த வகையிலே அது உங்களுக்குக் கிடைத்தது அதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு முழுவதுமாகச் சொல்ல வேண்டிய பிரச்சினை. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல, உங்களுக்கு அது எப்படிக் கிடைத்தது, அந்தத் தகவல் எப்படி உங்களுக்கு வந்தது என்கிற எல்லா விவரமும் சொன்னால்தான் நீங்கள் ஏற்கெனவே சொல்லி அவைக் குறிப்பிலே இருக்கிற அந்தப் பிரச்சினையை ஊர்ஜிதப்படுத்த முடியும்.

பிற்பகல் 1—05

டாக்டர் அ. செல்லக்குமார்: அந்த அறிக்கை என்பது ஒரு தகவலாக தெரிவிக்கப்பட்ட அறிக்கையே தவிர...

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அப்படிச் சொன்னால் எனக்கு கிடைத்த தகவல் என்று சொல்லலாமே தவிர நீங்கள் அறிக்கை என்றே சொன்னீர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மானியக் கோரிக்கையின் மீது எந்த உறுப்பினர் பேசினாலும், தவறான தகவல்களை



அவைக்குக் கொடுத்து அவையை மிஸ்லீட் செய்வது என்பது ஒரு சீரியஸ் தவறாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு சட்டபூர்வமாகவே வேறுவிதமான நடவடிக்கையெல்லாம் எடுப்பதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறது. எனவே, ஒரு அறிக்கை—அதுவும் பிளானிங் கமிஷனுடைய அறிக்கை என்று சொல்லி எப்படி தவறான தகவலை ஒரு உறுப்பினர் இந்த அவைக்கு தரலாம்? இதெல்லாம் முறையல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படியானால் கிடைத்த தகவலின் பேரில் ஒரு அரசாங்கத்தின் மீது குறை கூறுவது போலப் பேசுவதானால், எல்லா உறுப்பினர்களுக்கும் எத்தனையோ இடங்களிலிருந்து பல்வேறு தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றையெல்லாம் இந்த அவையிலே நாம் ஆதாரங்களாக வைத்துப் பேச முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் பிளானிங் கமிஷன் தெரிவித்து இருக்கிறது என்று சொல்லி ஆரம்பித்து அந்தக் கருத்துக்கள் அவைக்குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறபோது, அது என்னிடத்திலே இருக்கிறது என்று உறுதியாக நம்பித் தெரிவித்து இருக்க வேண்டும். அப்படி அவரிடத்தில் அது இருந்திருக்குமானால் பேரவைத் தலைவர் இடத்திலாவது அதைக் காண்பித்து, இதை என்னுடைய பேச்சில் மேற்கோளாகக் காட்டவிருக்கிறேன் என்று அனுமதி பெற்றிருக்க வேண்டும். அதுவும் செய்யவில்லை. கடைசியில் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது, எதிலிருந்து கிடைத்தது என்று கேட்டபோது, இல்லை, எனக்கு கிடைத்த தகவல் என்று சொன்னார். ஆகவே, அது அவருக்குக் கிடைத்த தகவல் என்பது, பிளானிங் கமிஷனுடைய தகவலாக இருக்க முடியாது. எனவே, அவர் அதுபற்றி தெரிவித்த அந்த கருத்துக்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்தத் தகவல் தவறானது என்பதை அவரே ஒப்புக்கொண்டு விட்டார். அதுவும் அவைக் குறிப்பில் இருக்கிறது. எனவே, முன்பு அவர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டாம். அது அவைக்குறிப்பிலே இருக்கட்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்ன தகவலும் அது பிளானிங் கமிஷனிலிருந்து நான் சொல்கிற தகவல் அல்ல. எனக்கு கிடைத்த தகவல் என்று சொன்னதும், இரண்டும் அவை குறிப்பில் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சில உறுப்பினர்களுக்கு எப்படியாவது அரசாங்கத்தை குறை கூறவேண்டும் என்று ஒரு தீராத தாகம்,

தணியாத தாகம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர்கள் வெளியில் பத்திரிகைகளில் அவ்வப்போது சில அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். அதைப்பற்றி இந்த அவையிலே பேச முடியாது. அதனால் ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அதற்கு நேரமும் கிடையாது என்று விட்டு விடுகிறோம். ஆனால், அத்தகைய 'இர்ரெஸ்பான்சிபிள்' பொறுப்பற்ற கருத்துக்களை இந்த அவையிலே தெரிவிக்கிறபோது அவர்கள் சிக்கிக் கொள்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் இந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அரசாங்கம் ஏதோ சரியாக செயல்படவில்லை என்பதைப் போல ஒரு குற்றத்தை சுமத்தினார். இது எந்த பீரியடில் நடந்தது என்று கேட்டால், பிறகு முந்தைய ஆட்சியில் நடந்தது என்று சொல்கிறார். அதை முன்பே ஏன் அவர் விளக்கவில்லை? அதன் பின்னர் பிளானிங் கமிஷன் கொடுத்த அறிக்கையில் இந்த அரசாங்கத்தின் மீது குறை கூறப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார். பின்னர் கேள்வி கேட்டபோது, அது பிளானிங் கமிஷன் அறிக்கையே இல்லை; வெளியில் கிடைத்த தகவல் என்கிறார். எனவே, உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், சரியான ஆதாரத்துடன் பேச வேண்டும். அவைக்கு, பொது மக்களுக்கு, இந்த அவையின் மூலம் தவறான தகவல்களைத் தரக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தின் தெருக்களில் எல்லாம் இன்றைக்கு திரும்புகிற இடங்கள் எல்லாம் குப்பை கூளங்களாக இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தக் குப்பைகளை அகற்றுகிற வாகனங்கள் என்பது ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு மேலான வாகனங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழகம் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு சென்னை மாநகராட்சியில் பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்களைச் செய்து, இந்த குப்பை கூளங்களை அகற்றுவதில் தீவிரமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கெங்கே குப்பை கூளங்கள் இருக்கின்றன என்று என்னிடத்தில் தெரிவித்தால், அவைகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி)

டாக்டர் அ. செல்லக்குமார் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குப்பை கூளங்கள் எங்கெங்கு இருக்கிறது என்று சொன்னால் அவைகளை அகற்று



வதாகச் சொன்னார்கள். உள்ளபடியே இன்றைக்கு மாலைக்குள் அல்லது நாளை காலைக்குள் அந்த இடங்களை குறிப்பிட்டு, என்னுடைய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அத்தனை இடங்களையும் குறிப்பிட்டு....

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, சில இடங்களைக் குறிப்பிட்டு, பேசியிருந்தால், இன்று மாலைக்குள் அந்த இடத்தில் குப்பைக் கூளங்கள் அகற்றப்பட்டு இருக்கின்றதா என்பதைக் கண்டறியலாம். அவர் என்ன சொன்னார். சென்னையிலே எங்கே பார்த்தாலும், குப்பைக் கூளங்களாக இருக்கின்றன என்றார். இப்போது, கோட்டைக்கு வருகின்ற வழியிலே எவ்வளவு பெரிய சாலை இருக்கிறது, அங்கே என்ன குப்பைக் கூளங்களா இருக்கின்றன. சென்னையிலே அண்ணா சாலை இருக்கிறது. ஆர்ட்டிரியல் ரோட், அங்கே என்ன குப்பைக் கூளங்களா இருக்கின்றன. எனவே தவறான தகவல்களைத் தரக்கூடாது. எங்கே பார்த்தாலும் குப்பைக் கூளங்களாக எங்கே இருக்கின்றன ? நீங்கள் எங்கே என்று சொல்லுங்கள், அவற்றைச் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. செல்லக்குமார் நான் முதலிலே சொன்னது. நீங்கள் ஏதாவது ஒரு பிரச்சினையைச் சொல்வதாக இருந்தால், ஊர்ஜிதமாக உங்களுக்குத் தெரிந்த இந்தந்தத் தகவல்கள் முழுமையும் எனக்குத் தெரிந்த, நான் தெரிவிக்கிற தகவல்கள் என்கிற அடிப்படையிலேதான் நீங்கள் சொல்ல வேண்டும். பொதுக் கூட்டத்திலே கருத்துக்களைச் பேசுவது வேறு, இங்கே பேசுகிறபோது, பேசுகின்ற ஒவ்வொரு பிரச்சினைக்கும் பொறுப்பேற்றுக் கொண்டு, இருக்கிற ஆதாரங்களை கையிலே வைத்துக்கொண்டு பேச வேண்டிய பிரச்சினை. அந்த வகையிலே பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் அ. செல்லக்குமார் : அந்த வாகனங்கள் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு மேலான வாகனங்கள், பழுதடைந்த நிலையில் இருக்கின்றன என்பதையும், அதன் காரணமாக குப்பைகளை அகற்ற முடியாத நிலை இருக்கின்றன. (குறுக்கீடு) குப்பைகளை அகற்றுகின்ற வாகனங்கள், அவைகள் பழுதடைந்திருக்கிற காரணத்தால், குப்பைகளை அகற்ற முடியாத நிலைமை இருக்கின்றது.

என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகள், குறிப்பிட்டுச் சொல்வதாக இருந்தால், நேற்றுகூட சென்னை, அரும்பாக்கம் என்ற இடத்திற்குச் செல்லுகின்ற போதும் சரி, டி.பி. சத்திரப் பகுதிக்குச் செல்கிறபோதும் சரி,—அந்தப் பகுதிகள், ஆதி ஆந்திர மக்கள் வாழ்கின்ற ஜோதி நகர் போன்ற பகுதிகள். ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற அந்த பகுதிகளுக்குச் செல்கிறபோது, தெருவிலே குப்பைகள் கூட்டப்படவில்லை. நீண்ட நாட்களாக அந்தக் குப்பைகளை எடுத்துச் செல்கின்ற வாகனங்கள் வரவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்ன காரணத்தால்தான், இதனை இந்த மாமன்றத்திலே சொல்லுகின்ற கடமை எனக்கு இருக்கிற காரணத்தால், இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோன்று, பொதுமக்கள், அவர்களுடைய அன்றாடப் பிரச்சினையை நிவர்த்தி செய்கின்ற விதமாக, அது சாலை வசதியாக இருந்தாலும் சரி, குடிநீர் வசதியாக இருந்தாலும் சரி, கழிவு நீரை அகற்றுகின்ற பணியாக இருந்தாலும் சரி, டிரெயினேஜ் வசதியாக இருந்தாலும் சரி, இன்னும் பல்வேறு பகுதிகளிலே அவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. சென்னை மாநகரம் தமிழகத்தினுடைய தலைநகரமாக இருக்கிற காரணத்தால், அதிலும் குறிப்பாக இன்றைக்கு ஆட்சியிலே இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெயரிலே இருக்கிற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் அமைந்திருக்கிற அந்த சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டு இருக்கிற பல பகுதிகளுக்கு இன்னும் டிரெயினேஜ் வசதி செய்து தரப்படாமல் இருக்கிற சில பகுதிகளுக்கு நீங்கள் உடனடியாக அந்த வசதியைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சென்னை மாநகரத்திலே இருக்கிற முக்கியமான பிரச்சினை என்னவென்றால், பல்வேறு பகுதிகளிலே அரசு அதிகாரிகளை அணுகி, இங்கே சாலை வசதி செய்துதரவேண்டும், குடிநீர் வசதி செய்து தர வேண்டும் என்று சொல்கிறபோது, 2 கருத்துக்களைச் சொல்லிவிடுகிறார்கள். ஒன்று, அவை தனியாரிடம் இருக்கிறது என்று சொல்கிறார்கள், இல்லை என்றால், கோவில் இடம் என்று சொல்லிவிடுகிறார்கள். நான் உங்களைக் கேட்டுக் கொள்வது, கடந்த 20 ஆண்டுக் காலமாக, 30 ஆண்டுக் காலமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த இடங்களிலே வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒன்று நீங்கள் அவர்கள் அந்தப் பகுதியிலே வாழ்வதற்கு செல்கின்றபோது, நீங்கள் அதைத் தடை செய்திருக்கவேண்டும். கடந்த கால அரசு, தவறு செய்து விட்ட காரணத்தால், அதை அனுமதித்துவிட்டது. பிறகு.... (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுக்காலமாக இருக்கிறது என்று சொன்னார்கள். 20 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் யார் இருந்தார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். இவைகள் எல்லாம் தொடர்ந்து நடந்துவிட்ட பிரச்சினைகள். நீங்கள் ஆட்சியமாக, வேகமாக குப்பையையே கிளறிக்கொண்டு இருக்கிறீர்கள். எனவே இதெல்லாம் தொடர்ந்து வந்துவிட்ட பிரச்சினைகள். இதைத் தீர்ப்பதற்காக மிகத் தீவிரமான நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் மிகப் பெரிய ஒரு திட்டத்தையே அறிவித்திருக்கிறார்கள். நீங்கள் சொல்கிற பிரச்சினை, அதுவும் ஒரு நாளிலே தீர்க்கக்கூடிய பிரச்சினை அல்ல என்பது உங்களுக்கேத் தெரியும். நீங்கள் சொல்கிறபோது கூட, கடந்த ஆட்சிக் காலத்திலே நடந்ததை, இப்போது நடந்ததைப்போல ஒவ்வொரு முறையும் சொல்கிறீர்கள். எனவே, இதைச் சொல்லியும்கூட அதைத் திருத்திக் கொள்ளாமல் சொல்லிக் கொண்டு இருப்பது, வருத்தமாக இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

164976

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இங்கே எல்லாம், இந்தப் பகுதிகளில் மக்கள் குடியேறாமல் நீங்கள் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார். பின்னர், அவரே, 20 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தத் தவறுகள் நடந்திருக்கின்றன என்று கூறுகிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினரைப் பார்த்து, 20 ஆண்டுகளுக்கு முன்னால் உங்கள் ஆட்சிதான், அது. அந்தத் தவறைத் தடுத்து இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1-15

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேசுகின்ற உறுப்பினர் டாக்டர் அ. செல்லக்குமார். நீங்கள் பதில் சொல்ல எழுந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். எந்தக் கருத்தில் நீங்கள் பதில் சொல்ல விரும்புகிறீர்கள் ?

<u>*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்</u> : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் ஆட்சி நடந்தது என்று சொன்னார்கள். 1967-ஒரு காங்கிரஸ் ஆட்சி தமிழகத்திலே முடிந்தது. அதற்குப் பிறகு 25 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள், இப்போது இருக்கிற முதல்வர் அவர்கள், இவர்களுடைய ஆட்சிதான் நடக்கிறதே ஒழிய.......(குறுக்கீடு).

Y 21;3'/092
N92.23.1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் சொன்னது. 20 ஆண்டுகளுக்கு முன்னால் என்று தான் சொன்னார்கள். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணாநகர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பேசுகின்றபோது அது எந்த ஆட்சியில் நடைபெற்றது என்று தெளிவுபடுத்தியிருந்தால், இந்தப் பிரச்சினைக்கே இடமில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் அவர்தான் சொல்லவேண்டும். இது இடையிலே ஒரு குறுக்கீடுதான். அதற்கு அவரே பதில் சொல்லலாம். மாண்புமிகு கல்வியமைச்சர் :

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற பிரச்சினை, டாய்லெட் பிரச்சினை. டாய்லெட் தேவை என்கின்ற ஒரு முடிவை எடுத்து பல நகரங்களிலேயும் அதைச் செயல்படுத்தவேண்டுமென்ற முயற்சி எடுத்துக் கொண்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான். அப்போது பல்வேறு மாநகரங்களிலே முயற்சிகள் எடுத்திருக்கிறோம். கோவை மாநகரத்திலேயும் எடுத்திருக்கிறோம். இந்த டாய்லெட் கட்டுவதில் என்ன பிரச்சினை என்றால், அதை எந்த இடத்தில் கட்டுகிறோமோ அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள், அதை எதிர்க்கிறார்கள். அதுதான் அதற்குத் தடை... ஆகவே மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அந்த இடங்களைத் தேர்வு செய்து, எந்த இடத்தில் கட்டுங்கள் என்று சொன்னாலும், அங்கே கட்டுவதில் ஒன்றும் சிரமம் இல்லை. மாநகராட்சி அதற்கான முயற்சிகளிலே நிச்சயமாக ஈடுபடும். டாய்லெட் பிரச்சினை என்பது ஒரு அடிப்படைப் பிரச்சினை, முக்கியமான பிரச்சினை. எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆகவே இப்போது பொதுமக்களுடைய எதிர்ப்பு இருக்கின்ற காரணத்தால்தான் பல்வேறு இடங்களில் கட்டமுடியாமல் இருக்கிறது. அது எல்லா நகரங்களிலேயும் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாநகர் உருவாக்கப்பட்டதே 1969-க்குப் பிறகுதான். அதற்கு முன்பு அண்ணாநகரே உருவாகவேயில்லை. அங்கே டிரேட் ஃபேர் நடந்ததற்குப் பிறகு தான். அதை விரிவாக்கும் பொருட்டு, அந்தச் சாலைகள் மற்ற வசதிகள் எல்லாம் வந்தன. அதற்குப் பிறகுதானே தவிர, அதற்கு முன்னால் அண்ணா நகரே இல்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் குறிப்பிடுகின்றபோது 20 ஆண்டுகளுக்கு முன்னால் என்று தான் குறிப்பிட்டார்களே ஒழிய, அதற்குப் பின்னால் என்று குறிப்பிடவில்லை. ஆகவே உங்களுடைய ஆட்சிதான் 20 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது நானே அப்போதே குறிப்பிட்டுச் சொன்னேன். 20 ஆண்டுகளுக்கு முன்னால் என்கின்றபோது அது அப்போதிருந்த ஆட்சியைக் குறிக்கிற வகையிலே அப்போதே வந்துவிடுகிறது. டாக்டர் அ. செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார் : இதுகாறும் நான் குறிப்பிட்ட பிரச்சினை என்பது அந்த அரசு நிர்வாகத்திலே வருகின்ற ஒரு சிக்கலின் காரணமாகத்தான் அதைக் குறிப்பிட வேண்டியிருந்தது. ஏனென்று சொன்னால், அங்கே எந்த வசதி செய்வதாக இருந்தாலும், கோயில் நிலமாக இருந்தால், அரசு செய்யமுடியாது. தனியார் நிலமாக இருந்தாலும் அரசு செய்யமுடியாது. அதற்குரிய கட்டணத்தை அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அது கோயில் நிலமாக இருந்தாலும், தனியார் நிலமாக இருந்தாலும், குறிப்பிட்ட 7, 8 ஆண்டுகளுக்கு முன்பிருந்து குடியிருந்துவரும் அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று இதற்கு முன்பிருந்த முன்னாள் மாண்புமிகு முதல்வர், எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் இருந்தபோது ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள். ஆனால் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு, நடைமுறையில் அது செயல்படவில்லை. எனவே நீங்கள் அதைச் செய்யவேண்டுமென்பதை விளக்குவதற்காகத்தான் நான் இந்தக் கருத்தை இங்கே சொல்லிக் கொண்டிருந்தேன். யாருடைய ஆட்சியில் இது செய்தது என்பது அல்ல. இன்றைக்கு அங்கேயிருக்கின்ற ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக் கூடாது. சுதந்திரம் பெற்று 45 ஆண்டுகளாகியும் அந்த அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் இருக்கின்ற அந்த மக்களுக்கு அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதற்குத்தான் இந்தக் கருத்தை நான் இங்கே சொன்னேன். அதனை உடனடியாக நீங்கள் மனதிலே கொண்டு, முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சட்டத்தை மனதிலே கொண்டு, நீங்கள் அவர்களுக்கு ஒன்று அந்த நிலத்தை பட்டா செய்து கொடுத்து அவர்கள் வாழ்வதற்கு அந்த நிலத்தை சொந்தமாக்கிக் கொடுக்கவேண்டும். இல்லையென்று சொன்னால்,

அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளையாவது அரசு பொறுப்பேற்று, அரசினுடைய சொந்த செலவிலே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றிகூறி, விடை பெறுகிறேன்.

பிற்பகல் 1.20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி திட்டங்கள், குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகிய மூன்று மானியக் கோரிக்கைகளின் மீது இன்று இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்ததற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள், மேற்கண்ட துறைகளின்மீது தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு, என்னுடைய விளக்கங்களைத் தெரிவிப்பதற்குமுன், சில தேவையான கருத்துக்களை, அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வர ஆசைப்படுகிறேன்,

'இந்தியாவின் ஆத்மா' கிராமங்களில் தான் வாழ்கிறது என்றார் மகாத்மா காந்தி. அத்தகைய கிராம மக்களின் ஆத்மாவாய் வாழ்கின்ற பெருமை பெற்ற புரட்சித் தலைவியைத்தான், நாம் இன்று, தமிழக முதல்வராகப் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்கள், உலகம் இன்று ஆர்வத்தோடு கவனித்து வருகிற இளைய தலைமுறையின் வழிகாட்டி. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இந்திய துணை கண்டத்திலேயே இன்று மிகத் துணிவோடு நல்லாட்சி நடத்துகிற தலைசிறந்த நிர்வாகி. பயங்கரவாதமும் வன்முறைகளும் தலை தூக்கியிருக்கிற மாநிலங்களிலேயெல்லாம் இப்படி ஒரு முதல்வர் எங்களுக்கு இல்லையே என்று ஏங்குகிற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அராஜகத்தை இரும்புக் கரம் கொண்டு அடக்கிய பெருமைபெற்ற சாதனையாளர்.

அப்படிப்பட்ட சொல்லாட்சி மிக்க மாபெரும் தலைவியின் அமைச்சரவையில் உள்ளாட்கித் துறை அமைச்சராக இருக்கிற நான், அவரது ஆதரவைத் தவிர, அரவணைப்பைத் தவிர, பாதுகாப்பைத் தவிர வேறு எந்தத் தனித்த பெருமையையும் பெறாத ஒரு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த சாதாரண மனிதன், சாமானியன் ஒருவன் இந்தச் சரித்திரப் புகழ்பெற்ற சட்டமன்றத்தில் மானியக் கோரிக்கைக்குப் பதில் அளிக்கிற மகத்துவம் எப்படி வந்தது? 'தலைமையைச்' சரியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டால் மற்ற பெருமைகள் தானாகக் குவியும் என்பது அனுபவம் வாய்ந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல தொண்டனை



அடையாளம் கண்டு நாட்டுக்கு அறிமுகப்படுத்துகிற ஒரு மாபெரும் மக்கள் தலைவரின் மனிதாபிமான வெளிப்பாட்டால் எனக்கு வந்த பெருமை இது வீட்டுக்கு தன்னிறைவுத் திட்டம் போட்ட மனிதர்களுக்கு மத்தியில் நாட்டுக்குத் தன்னிறைவுத் திட்டம் போட்ட ஒரு நல்ல தலைவி வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித்தலைவியின் சமுதாய நீதியின் சமுத்துவ வெளிச்சம் வழங்கிய விளைவுதான் இந்தப் பெருமை.

சாதாரண மனிதன் மாண்புமிகு ஆவதும் அதைத் சாதித்துக் காட்டிய தலைவி தெய்வமாவதும் (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு நடப்பாக, நடைமுறைச் செயலாக இன்று நடைபெற்று வருவதற்கு, எத்தனையோ பல்வேறு சிறப்புக் காரணங்கள் இருக்கின்றன. எங்கள் அரசில் ஊராட்சி, உள்ளாட்சி, நகராட்சி மாநகராட்சி என்பதெல்லாம் வெறும் நிர்வாக அமைப்புகளின் பெயரல்ல; அவை எங்கள் தலைவியை நம்பியிருக்கிற கோடிக் கணக்கான ஏழை எளிய மக்களின் இரத்த ஓட்டம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வசதியானவர்களுக்கு மட்டுமே எதிலும் வாய்ப்பளிப்பதற்காக வாக்களிக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அல்ல எங்கள் அரசு. இது அசதி நிறைந்த ஏழை மக்கள் தேவையான வசதி பெறுவதற்காக அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் வழி வந்த புரட்சித் தலைவியின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி.)

ஆகவேதான் விளக்கம் கேட்டு வெட்டுத் தீர்மானங்களை உறுப்பினர்கள் வேகமாக வழங்குகிறபோது, அவைகளை எங்கள் தலைவி எங்களுக்கு எதிரான வெட்டுத் தீர்மானங்களாகக் கருதாமல், எங்கள் மாநில புனரமைப்புக் திட்டப் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட கட்டுமானப் படிக்கற்களாகக் கருதி, பதிலளிக்கப் பணித்திருக்கிறார்கள். இது எங்கள் தலைவியின் பெருந்தன்மையின் மறுபக்கம் ; அதனால்தான் சாமானிய மக்கள் எப்போதும் அவர் பக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தங்களை நம்பி இருக்கிற அப்படிப்பட்ட ஏழைஎளிய மக்களின் குறைகளைக் கேட்கத்தான், அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றத்தான், உயிரையும் பொருட்படுத்தாது, காவல் துறையினரின் அறிவுரையையும்மீறி, இன்று எங்கள் முதல்வர் மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் மக்களின் மனதில் இமயமாய் எழுந்து நின்று கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இமயத்தைத்தான் எறும்புகள் அசைத்துப் பார்க்க நினைக்கின்றன. துரும்புகள் வீண் சண்டைக்கு இழுத்து விளையாடிப் பார்க்கின்றன. அவர்களுக்கெல்லாம் நான் கூறுகிற ஒரே பதில் மக்களின் மன ஓட்டத்தை. நீங்கள் கவனிக்க மறந்து விட்டால் மக்களின் நினைவோட்டத்திலிருந்து நீங்கள் விரைவில் விரட்டப்படுவீர்கள் என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே சிலருக்கு ஏற்பட்டுள்ள தோல்வியும் ஏமாற்றமும், அவர்களுக்குப் புதிய மன மாற்றத்தை வழங்க வேண்டுமே தவிர, சித்த பிரமையை உண்டு பண்ணிவிடக் கூடாது என்று நான் கவலைப் படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் பொறுத்த வரையில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்கிற திட்டங்களைச் செயல்படுத்துகிற அமைச்சர் என்கிற பெருமை ஒரு புறம் இருக்கிறது. தீட்டப்பட்ட திட்டங்கள், அலுவலர்களால், உடன் செயல்படுத்தப்படவில்லை என்று அதிகமாகத் திட்டப்படுகிற இகழ்ச்சி இன்னொருபுரம் இருக்கிறது. எங்கள் இலக்கு, ஏற்கனவே, தீர்மானிக்கப்பட்டுள்ளதால், தேவையில்லாத எதிர்ப்புகளின் மூலம், மக்கள் பணியில், நாங்கள் கொண்டிருக்கிற ஈர்ப்பை, எந்தச் சக்தியாலும், திசை திருப்பிவிட முடியாது. மக்கள்தான் நாங்கள், நாங்கள்தான் மக்கள்: (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-25

எனவேதான், கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கு— நகரங்களில் வாழ்கிற மக்களுக்கு—மாநகரங்களில் வாழ்கிற மக்களுக்கு —அவர்களது இன்றியமையாத, அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவும், வாழ்க்கை வசதிகளை விரைந்து விரிவு படுத்தவும் வளமான வாழ்க்கைக்கு உத்தரவாதத்தை வழங்கவும், எதிர்காலத்தில் நலமிக்க வாழ்க்கைக்குரிய நம்பிக்கையை வளர்க்கவும், எங்கள் அரசு இதுவரை செயல்படுத்தியுள்ள திட்டங்களை—இனி, செயல்படுத்தவுள்ள திட்டங்களைப் பற்றிய விளக்கங்களை, நான் பொறுப்பேற்றுள்ள துறைகளின், மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலுரை அளிக்கிற, சந்தர்ப்பத்தின் மூலம் விழைகிறேன்.

தமிழகத்தில், 12,612 ஊராட்சிகளும், 386 ஊராட்சி ஒன்றியங்களும் அமைந்துள்ளன. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், மக்களுக்கு இன்றியமையாத பணிகளை முழுமையாகச் செய்து தருவதற்காக தொடங்கப்பட்ட அமைப்புகள்தான் இந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்.

மக்களுடைய அடிப்படைத் தேவைகளான, சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, சுகாதாரம் மற்றும் துப்புரவு ஆகிய பணிகளைச் செவ்வனே செய்து முடிப்பதற்கு, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமையை கவனிப்பாரற்று, ஒதுக்கப்பட்ட நிலையில், சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற இயலாத அளவிற்கு, இந்த அமைப்புகள் செயலிழந்த நிலையிலேதான், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தமிழகத்தின் பட்டிதொட்டிகளில் எல்லாம் பயணம் செய்தபோது, தனக்கு ஏற்பட்ட



அனுபவங்களின் அடிப்படையில் கிராமங்களிலே வாழ்கின்ற மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில், ''சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தினை'' அறிவித்தார்கள். எலும்புக் கூடுகளாகக் காட்சியளித்த ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு, சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தினை அறிவித்து, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு வலிமை ஊட்டுகின்ற அமைப்பாக மாற்றி காட்டினார்கள்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில், 1991–1992-ல் ஒதுக்கப்பட்ட 192 கோடி ரூபாயில், 31–3-1992 வரை, 24,827 திட்டப் பணிகள் 131 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள், மிக விரைவில் முடிக்கப்படும் என்ற உறுதியினை இங்கு நான் தர விரும்புகிறேன்.

1992–93-ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்திற்கு 192 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், 92,920 திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலமாக, கிராமங்களில் வாழ்கின்ற மக்களுடைய கனவுகள் நனவாக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது, (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் 60 கோடி ரூபாய் உட்பட, பிற திட்ட ஒதுக்கீடுகளையும் சேர்த்து, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, மாபெரும் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இதனைப் புரிந்து கொள்ளாமல் ''ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரூபாய் 1 கோடி என்பது உண்மை அல்ல. சாதாரண விளம்பரத்திற்காக அறிவிக்கப்பட்டுள்ளது'' என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இந்த மாமன்றத்தில் பேசியபோது குற்றம் சாட்டினார்.

விளம்பரத்திற்காக வேடமிட்ட வேடதாரிகளின் சுயரூபத்தை மக்கள் உணர்ந்து பல நாட்களாகிவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி), இப்படிப்பட்ட விளம்பரங்கள் ''மக்கள் தலைவி'', தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு அவசியம் இல்லை என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்த சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்ட 1991–92-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையிலேயே தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் இருக்கிற 12,612 ஊராட்சிகளில், 51,634 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் உள்ளன. ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் 38,100 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இருக்கின்றன.

இந்தச் சாலைகளையெல்லாம் பராமரிப்பதற்காக, இதுவரை ஆண்டு ஒன்றுக்கு 5.32 கோடி ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. மக்கள் ஆட்சியாக எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி மலர்ந்த பின்புதான், மக்களுடைய அடிப்படைத் தேவைகளான, இந்தச் சாலைகளின் பராமரிப்பிற்கு 9 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சிகளின் வரலாற்றிலேயே, இதுபோன்ற, ஒரு நிதி ஒதுக்கீடு இருந்ததில்லை என்பதை பெருமிதத்துடன், இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சிகளில் மொத்தம் 7 இலட்சத்திற்கும் அதிகமான தெருவிளக்குகள் உள்ளன. எங்களுடைய ஒப்பற்ற தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு, தெருவிளக்குகள் எரியவில்லை என்ற புகார் இருந்துகொண்டே இருந்தது.

தரமில்லாத பல்புகள், சோக்குகள் மற்றும் தரமற்ற இதர மின் பொருட்களே பயன்படுத்தப்பட்டதால்தான், அதுபோன்ற நிலைமை இருந்தது.

ஊருக்கெல்லாம் வெளிச்சம் போடக் கொடுத்த பணத்திலே தனக்கு வெளிச்சம் போட்டுக் கொண்டதாலே (மேசையைத் தட்டும் ஒலி) தெருவிளக்குகள் எரியாத நிலைமை இருந்து வந்தது. இதெல்லாம் நடந்து முடிந்த கதை.

எங்களுக்கு போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவியேற்றபிறகு, தரம் வாய்ந்த எச்.எம்.டி. மைசூர் லேம்ப் போன்ற நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்திரவினாலே எரியாத விளக்குகளே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.
பிற்பகல் 1-30

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, மின்சார வாரியத்திற்கு மின் கட்டணம்கூட செலுத்த இயலாத நிலைமை இருந்ததையெல்லாம் மாற்றி, மின் கட்டண பாக்கியைக் கட்டுவதற்காகவும், மின் பொருட்களை வாங்குவதற்காகவும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 3 கோடி ரூபாயும், பேரூராட்சிகளுக்கு 1 கோடி ரூபாயும் சேர்த்து மொத்தமாக 4 கோடி ரூபாய், 1991-92 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி



அவர்களால்ஒதுக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மின் கட்டண பாக்கிகளைக் கட்டுவதற்காகவும், மின் பொருட்களை வாங்குவதற்காகவும் 1992-93-ல் ரூபாய் 5 கோடி ஒதுக்கித் தருவதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சம்மதித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமங்களில், மிகவும் இன்றியமையாத தேவை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகும். அதை நிறைவேற்றுகின்ற வகையில் ஒன்றியங்களில், தற்போது 1 லட்சத்து 33 ஆயிரத்து 638 கை இறைப்பான்கள் உள்ளன. 23 ஆயிரத்து 682 விசை இறைப்பான்கள் உள்ளன.

தமிழகத்தில் எந்த ஒரு கிராமத்திலும் கை இறைப்பான் அல்லது விசை இறைப்பானில் பழுது ஏற்படுமானால், ஒரு வாரத்திற்குள் பழுது நீக்கப்பட்டு, இயங்கச் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கை இறைப்பான் மற்றும் விசை இறைப்பான்களின் பராமரிப்பிற்கென 1990-91 ஆம் ஆண்டில், 1 கோடியே 84 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், 1992-93 ஆம் ஆண்டிற்கு 5 கோடியே 64 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேன்.

மேற்கண்ட திட்டங்களைத் தவிர உலக வங்கி நிதி உதவியுடன் 1991-92 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் மூலம் 5 ஆண்டுகளில் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின் முதற்கட்டமாக சேலம், தென்னாற்காடு, தர்மபுரி மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களில் 500 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3,000 ஆழ்குழாய் கிணறுகள், கை இறைப்பான்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் முக்கியப் பணியாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 46 கோடி செலவில் ஏறத்தாழ 1½ இலட்சம் குடும்பங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்பட்டது. வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களுக்கு ஒரு நிலையான வருவாய் தரக்கூடிய சொத்துக்களை ஏற்படுத்திக் கொடுப்பது இந்தத் திட்டத்தின் மிக முக்கிய நோக்கம் ஆகும். 1992-93 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 46 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. அழகு திருநாவுக்கரசு] [1992 ஏப்ரல் 6

ஊரக வளர்ச்சித் துறையின் முக்கியதிட்டங்களில் ஒன்றுகிராமப்
புற இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டமாகும். இத்திட்டத்
தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களைச்
சார்ந்த இளைஞர்கள் சுயவேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ளும்
வகையில் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.
பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சி காலத்தில் மாதம் ரூ. 100-ம்,
தொழில் செய்வதற்கு வேண்டிய கருவிகள் ரூ. 600-மதிப்
பீட்டிலும் வழங்கப்படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டில் இத்
திட்டத்தின்கீழ் 26,880 இளைஞர்களுக்கு ரூபாய் 2 கோடியே
37 இலட்சம் செலவில் இந்தத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டது
இதில் பெண்களும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களும்
அதிக அளவில் பயன் பெற்றுள்ளார்கள். இந்த வருடம் தர்மபுரி
மாவட்டம் பர்கூரிலும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத்
மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலும் தொழில்
நுட்பம் சார்ந்த பணிகளில் பயிற்சி அளிப்பதற்கென்று பயிற்சி
நிலையம் அமைக்கப்படும் என்பதை மெத்த மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக
கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்
உருவாக்கப்பட்டு சில மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு
வந்தது. இந்த வருடம் செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மற்றும்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டங்களில் இத்திட்டம் விரிவுபடுத்தப்
படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வளர்ச்சித் திட்டப் பணிகளை விரைவாகச் செய்வதற்கு
வசதியாகவும், மக்கள் எளிதில் அலுவலர்களை அணுகுவதற்கு
வசதியாகவும். உத்திரமேரூர் ஒன்றியத்தை இரண்டு ஒன்றியங்
களாகவும், கடலாடி ஒன்றியத்தினை இரண்டு ஒன்றியங்களாகவும்
ஒரத்தநாடு மற்றும் தஞ்சாவூர் ஒன்றியங்களை மூன்று ஒன்றியங்
களாகவும் வ.உ.சி. மாவட்டத்தில் இருக்கின்ற ஒட்டப்பிடாரம்
ஒன்றியத்தை இரண்டு ஒன்றியங்களாகவும் பிரிக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி).

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற வாக்கினை
மெய்யாக்கி தாய்திரு நாடான தமிழ்நாட்டை விட்டு பல்லாயிரக்
கணக்கான மைல்களுக்கு அப்பால் அயல்நாட்டிற்குச் சென்று
தங்களுடைய அயரா உழைப்பால் உயர்ந்து சீரும், சிறப்புமாக
வாழ்ந்து கொண்டிருக்கும் பெருமைமிகு தமிழக மக்கள் பல்வேறு
சந்தர்ப்பங்களில், தமிழகத்திற்கு, குறிப்பாக தாங்கள் பிறந்து
வளர்ந்த கிராமத்திற்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற
எண்ணம் கொண்டவர்களாக இருக்கிறார்கள், ஆனால் அதை
எப்படி செயல்முறைப்படுத்துவது? யார் மூலமாக செயல்
படுத்துவது? தனியாரிடம் கொடுத்தால் இத்தகைய முயற்சிகள்



1992 ஏப்ரல் 6] [திரு. அழகு திருநாவுக்கரசு]

வெற்றி பெறுமா? தாங்கள் அனுப்புகிற தொகை தங்களுடைய
இலட்சியங்கள் ஈடேறாமல் வேறு எதற்கும் பயன்படுத்தப்படுமா?
என்ற ஐயப்பாட்டில், தான் பிறந்து வளர்ந்த மண்ணிற்கு
ஏதாவது செய்யவேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும்கூட,
செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்
களை நனவாக்கிடவும், அவர்களுடைய நல்லெண்ணத்திற்கு
உருகொடுத்து கிராமப்புறங்களிலே புதிய மறுமலர்ச்சியை
ஏற்படுத்திடவும் ஒரு திட்டத்தினை தமிழக அரசு ஏற்படுத்தி
யிருக்கிறது. அயல் நாடுகளிலே வாழும் தமிழர்களது எண்ணங்
களை நனவாக்கிட புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக
முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ள நிறுவனம் தமிழ்நாடு
ஊரக வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு ரூரல் டெவலப்மெண்ட்
அத்தாரிட்டி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்நியச்
செலாவணி மூலம் தங்களுடைய நன்கொடைகளை இந்த நிறு
வனத்திற்கு வழங்குவார்களேயானால் அவர்கள் விரும்புகிற
திட்டங்களை அவர்களுடைய கிராமங்களிலேசெயல்படுத்தப்படும்.
மேலும் உருவாக்கப்படுகிற நிலையான சொத்துக்களுக்கு
நன்கொடையாளர்களின் பெயர்களைச் சூட்ட வழிவகை
செய்யப்படும். இந்தப் புதிய அமைப்பின் மூலம் அயல் நாடுகளில்
வாழும் தமிழர்கள் உதவியோடு கிராமப்புறங்களில் ஒரு
மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க இயலும் என உறுதியாக இந்த
அரசு நம்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-35

கிராமப்புற பகுதி முழுமையிலும் ஊராட்சிகளை அமைத்து
அவற்றை தன்னாட்சி நிறுவனமாக செயல்பட வைக்க வேண்டு
மென்பது அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்
தாகும். அந்த வகையிலே தமிழகத்திலே, ஊராட்சி,
பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய அமைப்புகளெல்லாம் தோற்று
விக்கப்பட்டன. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த அளவில்
நிலையான நிர்வாக அமைப்பு இருக்கிறது. ஆனால் ஊராட்சி
களைப் பொறுத்த அளவில் நிலையான அமைப்பு இல்லாத ஒரு
நிலைமை இருந்து வருகிறது. ஊராட்சி பகுதிகளிலே வருவாய்
வசூல் பணிகளை மேற்கொள்ளவும், ஊராட்சிக்கு ஒப்படைக்கப்
பட்டிருக்கும் புறம்போக்கு நிலங்களைப் பேணி பாதுகாக்கவும்,
ஊராட்சி ஒன்றியங்களிலே பல்வேறு பணிகளை ஊராட்சி
அளவிலே மேற்கொள்ளவும் ஒரு நிலையான அமைப்பாக இரண்டு
அல்லது மூன்று ஊராட்சிகள் அடங்கிய, ஒரு தொகுதிக்கு ஒரு
கிராமப்புற மேம்பாட்டு அலுவலர், வில்லேஜ் டெவலப்மெண்ட்
ஆபீசர் கொண்ட ஒரு அமைப்பினை இந்த அரசு அமைக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி)

ஊராட்சி பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள், கை இறைப்
பான்கள், விசை இறைப்பான்கள் குடிநீர்க் குழாய்கள் மற்றும்
வானொலி, தொலைக்காட்சி பெட்டிகள் ஆகியவற்றைத் திறம்பட

[திரு. அழகு திருநாவுக்கரசு] [1992 ஏப்ரல் 6

செயல்படுத்துவதற்காகவும் கிராமப்புற மேம்பாட்டு அலுவலருக்கு
உதவியாக ஊராட்சி செயலர் என்ற வில்லேஜ் செக்கரட்டரி
என்ற ஒரு பதவியும் தொழில் நுட்ப உதவியாளர் அதாவது
டெக்னிக்கல் அசிஸ்டெண்ட் என்ற ஒரு பதவியும் ஏற்படுத்தப்
படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி).

சாதி சமயமற்ற சமுதாயத்தினை அமைத்து, அனைத்து
சமுதாயத்தினரும் சுமுக உறவோடு வாழ வழிவகுக்கும் ''புரட்சித்
தலைவி ஜெயலலிதா நகர்'' என்ற புதுமை நிறைந்த ''மாதிரி
நகர்'' (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்று தர்மபுரி மாவட்டம்
பர்கூர் கிராமத்தில் உருவாக்கும் பணி நடைபெற்றுக் கொண்
டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சுகாதார நல மையம்,
நூலகம், கரிம வாயு கலன், பள்ளிக்கூடங்கள், வணிக வளாகமையம்,
பூங்கா வசதி, இந்து, இஸ்லாமியர், கிருத்துவர் ஆகியோர்களுக்கான
கோவில்கள் ஆகியவற்றுடன் ரூபாய் மூன்று கோடி செலவில்
பர்கூரில் இந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உயர்
நோக்கம் கொண்டு உருவாக்கப்படும் இந்த நகரைப் போன்றே
தமிழகத்தில் உள்ள மற்ற 21 மாவட்டங்களிலும் ''புரட்சித்
தலைவி ஜெயலலிதா நகர்'' என்ற பெயரில் (மேசையைத் தட்டும்
ஒலி) ''மாதிரி நகர்களை'' இந்த ஆண்டு அரசு உருவாக்கும்
என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களாட்சி அமைப்பின் அடித்தளமாக விளங்குவது ஊராட்சி
ஒன்றியங்கள் ஆகும். மக்களுடைய அடிப்படைத் தேவைகளை
நிறைவேற்றும் பணிகளை அதன் பொறுப்பிலே உள்ளவர்கள்
ஆர்வத்தோடும் சிறப்பாகவும் செய்தல், மக்களிடையே
ஏற்படும் இனவேறுபாடுகளைக் களைவது மற்றும் ஊராட்சி
ஒன்றியங்களுக்கு தேவையான நிலம், கட்டிடங்கள் இவற்றை
நன்கொடையாகப் பெறுவதில் ஆர்வம் காட்டுதல் போன்ற
வற்றில் சிறப்பாகச் செயல்படும் அலுவலர்கள் மற்றும்
ஊழியர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்டு
ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கப் பதக்கம் வழங்க மாண்புமிகு
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி).

அதிக அளவில் பரிசுகள் பெற்ற மாவட்டத்தில் உள்ள திட்ட
அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியாளர் ஆகியோர் மாநில
அளவில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் 'தங்கப் பதக்கம்'
வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பரிசுக்குரியவர்
களைத் தேர்ந்தெடுப்பதற்கு, ஊரக வளர்ச்சித் துறை செயலாளர்,
ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்
அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும்
ஒலி).



1992 ஏப்ரல் 6] [திரு. அழகு திருநாவுக்கரசு]

பேரூராட்சிகள். தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் 1 கோடி
மக்களுக்கு மேலாக 630 பேரூராட்சிகளிலும் 16 நகரியங்களிலும்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பேரூராட்சிகள்,
ஊராட்சி ஒன்றியங்கள் போன்று மக்களுடைய அடிப்படைத்
தேவைகளைப் பூர்த்தி செய்கிற அமைப்பாகும். கிராமத்திற்கும்
நகரத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்கி வருவது இந்தப்
பேரூராட்சிகள் ஆகும். இந்தப் பேரூராட்சிகளில் நிதிப் பற்றாக்
குறை காரணமாகப் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெறாமல்
இருப்பதால் இந்தப் பேரூராட்சிகளுக்கு அரசு மானியம் வழங்கி
பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.
இருப்பினும் முழுமையாகப் பேரூராட்சிகளில் தேவைகள் பூர்த்தி
செய்யப்படாமல் உள்ளன. இதைக் கருத்தில்கொண்டு,
பேரூராட்சிகளின் அடிப்படை வசதிகளை முழுமையாகச் செய்து
தர, சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் இந்த ஆண்டு முதல்
செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

1992–93 ஆம் ஆண்டு தொடங்கி மூன்றாண்டுகள் கால
கட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 50 கோடியாக மூன்றாண்டு
களில் சுமார் 150 கோடி ரூபாயில் சிறப்புத் தன்னிறைவுத்
திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்
மூலம் பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்குத் தொகுப்பு
வீடுகள்; அடிப்படை வசதிகளான தெரு விளக்குகள், சாலைகள்,
குடிதண்ணீர் வசதிகள், வடிகால்கள்; சமுதாயக் கூடம்; பேருந்து
நிலையம், வணிக வளாகம், மாட்டு வண்டிகளுக்குப் பதிலாக
பவர் டில்லர் மூன்று சக்கர மிதி வண்டி வாங்குதல்; கட்டணக்
கழிப்பிடங்கள் கட்டுதல் ஆகியவற்றை மூன்றாண்டுகளில்
முழுமையாக முடித்துக் கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்
கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் ஒரு கோடி
மக்களுக்கு அதிகமாக வாழ்கின்ற பேரூராட்சிகளுக்கு மாண்புமிகு
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி உள்ள
சிறப்புப் பரிசு என்பதை மன நிறைவோடு தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தின் முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த
நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

பேரூராட்சிகளில் சிறப்பாகச் செயல்படும் அலுவலர்கள்
மற்றும் ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும்
ஒரு தங்கப் பதக்கம் வழங்கப்படும்.

திருச்சி மாவட்டத்திலுள்ள நாவல்பட்டு, நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள திருவாரூர் மற்றும் வேதாரண்யம், சேலம் இரும்பு எஃகு தொழிற்சாலைப் பகுதிகள் அடங்கிய இடங்கணச்சாலை ஆகிய மூன்று பேரூராட்சிகளை நகரியமாக்குவதற்குத் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாய நல வளர்ச்சித் திட்ட மானியத்தில் 46 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் திரு. ஆண்டி அம்பலம் உள்பட மாண்புமிகு உறுப்பினர்கள் 6 பேர் கொள்கை பற்றி விவாதிக்க வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கை பற்றி, கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றை என்னுடைய பதிலாக எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

மற்ற வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்த அளவில் பெரும்பாலான உறுப்பினர்கள், சாலைகள் அமைக்கக் கோரியும், சமுதாயக் கூடங்கள் கட்ட வேண்டிய அவசியம் பற்றியும், கழிப்பிடங்கள் கட்ட வேண்டிய அவசியம் பற்றியும், சத்துணவுக் கூடங்கள் அமைப்பது பற்றியும், சமுதாய கட்டுவது பற்றியும், ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் கட்டுவது பற்றியும், புதிதாக ஒன்றியத்தை ஏற்படுத்துவது குறித்து, பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்ப்பது பற்றியும், குடிநீர் வழங்குவது பற்றியும், ஆதி திராவிட மக்களுக்கு வீடுகளில் மின் வசதி செய்து கொடுப்பது பற்றியும், தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றியும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகள் எழுப்பியுள்ள இடங்களில், கேட்டிருக்கக்கூடிய வசதிகள் பற்றிப் பரிசீலனை செய்து, தேவையின் அடிப்படையிலும், நிதி நிலைமையைப் பொறுத்தும், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும் நிறைவேற்றக் கூடிய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் சரிவர செயல்படுத்தப் படாமல் தேங்கிக் கிடக்கும் நிலையை மாற்றுவது குறித்து விவாதிக்க, ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள். சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்துவது குறித்து வழிமுறைகள் மத்திய மற்றும் மாநில அரசு வகுத்துள்ளன. அவ்வழிமுறைகளின் அடிப்படையில் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு



திரு. ஞானசேகரன் அவர்கள் எந்த ஊராட்சி ஒன்றியத்தில் சரிவர செயல்படவில்லை என்று சொன்னால் அதன் மீது நடவடிக்கை யெடுத்து நன்கு செயல்பட இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களுக்காக, அதிக அளவிலே நிதி உதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மக்கள் தொகை அடிப்படையிலும் எடுத்துக் கொள்ளப்படுகிற பணிகளின் அடிப்படையிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த வகையிலே நாகை—காயிதே மில்லத் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டில் எந்தவிதக் குறையும் இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. சுவாமிநாதன் அவர்கள், பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள சமுதாய மக்களின் வறுமையைப் போக்க நல்ல திட்டங்களைக் கொண்டுவர, விவாதிக்க வேண்டிய அவசியம் குறித்து ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள சமுதாய மக்களின் வறுமையைப் போக்க மாநில அரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களைப் பொருளாதார நிலையில் பின் தங்கிய மக்களுக்கு, வறுமையைப் போக்கும் நிலையிலே அமல்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு உறுப்பினர், திரு. நடேசன் அவர்கள், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட ஒதுக்கீட்டை பேரூராட்சிகளுக்குத் தனியாக ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசின் அறிவுரைகளின்படி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டினை, மக்கள் தொகையின் அடிப்படையில் ஊராட்சி, பேரூராட்சி என்ற பாகுபாடு இல்லாமல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மற்றும் பேரூராட்சிக்கென்று தனியாக ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து நகராட்சிகள். தொட்டியிலிருந்து சுடுகாடு வரை மக்களுடைய வாழ்க்கையைப் பிரச்சினைகளோடு, பின்னிப் பிணைந்திருப்பது நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் நிர்வாகம். நகர மக்களுடைய அடிப்படைத் தேவையான பொதுச் சுகாதாரம், கழிவுப் பொருட்களை அகற்றுதல், சாலை வசதிகள், கல்வி, நோய்த்தடுப்பு, குடிநீர் வசதிகள் ஆகியவற்றைச் செய்து தருகின்ற அமைப்புகள்தான், இந்த நகராட்சி மற்றும் மாநகராட்சிகளாகும்.

இத்தனை அத்தியாவசியப் பணிகளையும் செய்கின்ற இந்த நகராட்சி மற்றும் மாநகராட்சி அமைப்புகளின் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலைமையில் இருந்து வருகிறது மக்களுடைய எதிர்பார்ப்புகள், ஒவ்வோராண்டும் கூடிக்கொண்டே வருகின்றன. அதேபோல, மக்கட்தொகையும், நகரங்களைப் பொறுத்தவரை, அதிக அளவில் பெருகிக் கொண்டே இருக்கிறது. பெருகிவரும் மக்கட்தொகைக்கேற்ப, அடிப்படை வசதிகளை விரிவுபடுத்தப்பட வேண்டிய கட்டாயம், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் இருக்கிறது. ஆனால், இந்த அமைப்புகளுடைய நிதிநிலைமை பல ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி இருந்ததோ, அதே நிலைமைதான் இன்னும் இருந்து வருகிறது. விலைவாசி ஏற்றம், பணிபுரியும் ஊழியர்களின் சம்பள உயர்வு, பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை உயர்வு ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், நகராட்சி மற்றும் மாநகராட்சி அமைப்புகளின் நிதிநிலைமைக்கும், மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய அடிப்படை வசதிகளின் தேவைக்கும் இருக்கின்ற, பற்றாக்குறை, மிகப் பெரிய அளவிலே இருக்கிறது. இதனால்தான், 1–4–1992 முதல், தொழில் வரியை, புதிய விகிதங்களில் வசூலிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கும், நகராட்சிகளின் பல்வேறு பணிகளில் இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு, திறம்பட செய்வதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கும், நகராட்சி நிர்வாகச் சீர்திருத்தத்திற்கும், ''வல்லுநர் குழு'' ஒன்று அமைக்கப்பட இருக்கிறது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், நகராட்சி நிர்வாகத்தினை மேம்பாடு அடையச் செய்யும் நோக்குடன், நகராட்சிப் பணிகளைக் கண்காணிப்பதற்காகவும், மேற்பார்வை ...டுவதற்காகவும், ''மக்கள் கண்காணிப்புக் குழுக்கள்'' அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நகராட்சி, நகர்ப்புற மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி, ...ரும் 5 ஆண்டுகளில் 101 நகராட்சிகளிலும், 7 நகரியங்களிலும், ... மாநகராட்சிகளிலும் ரூபாய் 250 கோடி செலவில், வளர்ச்சி மற்றும் சமுதாய நலன் பயக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



நகராட்சி ஆணையர்கள், மக்களுடைய குறைகளை நேரில் கேட்டறிந்து, அவர்களுடைய குறைகளை, உடனுக்குடன் களைவதற்கு வசதியாக, நகராட்சிகளைப் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து, வாரத்திற்கு ஒரு நாள், இதற்கென ஒதுக்கி, அந்தப் பகுதிகளுக்குச் சென்று மக்களின் குறைகளைத் தீர்க்க ''குறை தீர்க்கும் நாள்'' இந்த ஆண்டு முதல் நடத்திட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையை தட்டும் ஒலி) இதன் மூலம் மக்களுடைய குறைகளை நன்கு தெரிந்து கொண்டு. அதனைப் போக்குவதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நகராட்சிப் பகுதிகளில் உலர் கழிப்பிடங்கள் இருப்பதனால்' துப்புரவுப் பணியாளர்கள் கழிப்பிடங்களைச் சுத்தம் செய்து' மலம் சுமந்து செல்ல வேண்டிய அவல நிலைமை இருந்து வருகிறது. மனிதனே, மனிதனின் மலத்தைச் சுமக்கின்ற அவல நிலை இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இது, முழுமையாகக் களையப்பட வேண்டுமென்ற அடிப்படையில், ஹட்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடன், குறைந்த செலவில் கழிப்பிடங்கள் அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1991-92 ஆம் ஆண்டில் 37 நகராட்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 1 லட்சத்து 49 ஆயிரத்து 913 தனி வீட்டுக் கழிப்பிடங்களும், 296 பொதுக் கழிப்பிடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. மிகவிரைவில் இந்தப் பணிகள் முழுமையடையும். இதற்கான செலவு, சுமார் 55 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன், 1776 துப்புரவுத் தொழிலாளர்கள், மலம் அகற்றும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, மாற்றுப் பணிகளில் அமர்த்தப்படுவர். 1992-93 ஆம் ஆண்டில் 40 நகராட்சிகளில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். 1994 ஆம் ஆண்டிற்குள் நகராட்சிகளிலுள்ள உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் அறவே அகற்றப்பட்டு, மனிதனே மனிதனின் மலத்தை அகற்றும் இந்தப் பாவச் செயல் முழுமையாக நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

நகராட்சிகளில் மிக முக்கியமான பணி துப்புரவுப் பணியாகும் தினந்தோறும் இப்பணி நடைபெற்றாலும், வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாவது, நகராட்சிகளின் முக்கியமான பகுதிகளில், ''சிறப்புத் தூய்மைப் பணிகள்'' மேற்கொள்ளப்பட்டு, கழிவுப் பொருட்களை முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சிகளில் தோன்றக்கூடிய இன்னொரு முக்கியமான பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினையாகும். கோடை காலத்தில் இந்தப் பிரச்சினை மிகவும் கடுமையாக இருக்கும் என்பதனால், இக்குடிநீர்ப் பிரச்சினையை நீக்குவதற்கு, போர்க்கால அடிப்படையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் இணைந்து, தக்க நிவாரண நடவடிக்கைகள் மேற்கொண்டு, நகராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையே இல்லாதவாறு பார்த்துக் கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாகத் தமிழகப் பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

அடுத்ததாக, நகராட்சிகளில் நிலவி வரும் ஒரு முக்கியமான பெரிய பிரச்சினை, கொசுத் தொல்லையாகும். பல்வேறு வகையிலும் இதனைக் கட்டுப்படுத்த நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தீவிர நடவடிக்கைகளின் மூலமும், புதிய யுக்திகளைக் கையாள்வதன் மூலமும் இந்தப் பிரச்சினையை அறவே ஒழிக்க முடியாது என்றாலும், கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. புதிய தொழில்நுட்ப முறைகளையும், புதிய அணுகுமுறைகளையும், கொசு ஒழிப்பில் பயன்படுத்த வேண்டும் என்று நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் அறிவுரை வழங்கி உள்ளேன். அதன் அடிப்படையில், புகை தெளிப்பான் கருவிகள் மூலமும் புகை மூலமும், கொசுக்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் அவற்றை 'லார்வா' பருவத்திலேயே ஒழிப்பதற்காக நீர்நிலைகள் மற்றும் தண்ணீர் தேங்கக்கூடிய இடங்களில் கொசு மருந்து தெளிப்பதன் மூலமும், தற்போது கொசுவின் தொல்லை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் Biological Vector Control என்ற முறையில் கொசுக்களைக் கட்டுப்படுத்த முடியுமா அவற்றைப் பயன்படுத்தலாமா, என்பது பற்றியும் அரசு ஆலோசனை செய்து வருகிறது. பொது மக்களும், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளோடு கொசுக்களை ஒழிப்பதற்குத் தங்களுடைய ஒத்துழைப்பை நல்கி, கொசுத் தொல்லையை அறவே ஒழிப்பதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிப் பகுதிகளில், தெரு விளக்குகள் அமைப்பது மற்றும் பராமரிப்பது ஆகியவற்றையும் நகராட்சிகள் செய்து வருகின்றன. 1992-93 ஆம் ஆண்டிற்கு, நிதி குறைந்த நகராட்சிகளில் புதிதாகத் தெரு விளக்குகள் அமைப்பதற்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு ஒரு கோடி ரூபாயை வழங்குவதற்குப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள், நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், சிறு தொழில் மூலம் வேலை வாய்ப்பிற்கு நிதி உதவி செய்தல், நலிவுற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல் ஆகியவற்றைச் செவ்வனே நடத்தி வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக, நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நகராட்சிகளுக்கு 17.75 கோடி ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது நகராட்சிகளில், ஏறத்தாழ 34 ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர். அவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர், துப்புரவு மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஆவர். நகராட்சிப் பணியாளர்களுடைய பணி நிலைமை மேம்படுத்தப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு மிக்க ஆர்வம் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நகராட்சி ஊழியர்களுக்குக் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்து தரலாம் என அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(1) தெரு விளக்குப் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு ரப்பர் கையுறைகள் வழங்குதல்;

(2) வாகனங்களை ஓட்டுபவர்களுக்கு, வருடம் ஒரு முறை காலணிகள் வழங்குதல்;

(3) பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் பணியாற்றுகின்ற துப்புரவுத் தொழிலாளர்களுக்கு, கை உறைகள், ரப்பர் காலணிகள் மற்றும் விஷ வாயு தடுப்புக் கவச சாதனங்களும் வழங்குதல்.

பணியில் இருக்கும் போது அகால மரணம் அடைந்த நகராட்சிப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட நகராட்சியில் பதவி காலி இல்லை என்றால், பிற நகராட்சிகளில் வேலை வாய்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

துப்புரவுப் பணியாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

'ஹட்கோ' நிறுவன நிதி உதவியுடன் நகராட்சிப் பணியாளர்களுக்கு வரும் 5 ஆண்டுகளில் 10 ஆயிரம் பேர்களுக்கு வீடு கட்டுவதற்குக் கடன் உதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களின் வீடுகளை வருடம் ஒரு முறை பழுது பார்த்து பராமரிப்புச் செய்யப்படும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் அயற்பணி முறையில் பணியாற்றும் பொறியாளர்களும், மருத்துவர்களும் மாற்றப்பட்டு, நேரடியாக துறை அலுவலர் களாக நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் நகராட்சிப்பகுதிகளை இணைத்து, ''திருநெல்வேலி மாநகராட்சி'' அமைக்கப்படும் என்பதனைத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, தமிழகத்தில் இருக்கிற ஐந்து பேரூராட்சிகளை, உசிலம்பட்டி, கூத்தாநல்லூர், குளித்தலை, ஆவடி, வந்தவாசி பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி வழங்கி யுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் சிறப்பாகப் பணி யாற்றும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தெரிவு செய்யப் பட்டு ஒவ்வொருவருக்கும் 'தங்கப்பதக்கம்' வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

நகராட்சி நிர்வாகத்தில் ஒட்டு மொத்தமாக சிறந்த சாதனை செய்யும் ஐந்து நிலை நகராட்சிகளில், ஒவ்வொன்று தேர்ந் தெடுக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒரு 'தங்கப்பதக்கம்' வழங்கப் படும்.

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் நிர்வகிக்கும் பள்ளி களில் சிறப்பாகச் செயல்படும் பள்ளிகளில் ஒவ்வொரு நிலை யிலும் ஒரு பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றிற்கு 'தங்கப் பதக்கம்' வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்ற பள்ளியின் தலைமை ஆசிரியருக்கும் ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

நகராட்சிகளில் வரி கொடுப்பவர்கள் தற்போது வங்கிகள் மூலம் வரி செலுத்துகின்றனர். அவ்வாறு வங்கிகளில் நேரடியாக வரிப்பணம் கட்டுபவர்கள் தொடர்ந்து கட்டலாம்.

வருவாய் உதவியாளர்களும் வரி செலுத்தும் மக்களிடமிருந்து நேரடியாகப் பணம் வசூலித்து, நகராட்சி அலுவலகங்களில் செலுத்தலாம்.

நகராட்சிகளில் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு, அவை களுக்கு ''புரட்சித் தலைவி ஜெயலலிதா'' திருமண மண்டபம் என்று பெயர் இடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).





பிற்பகல் 1-55

அதேபோல் பல நகராட்சிகளில் விளையாட்டு அரங்குகள் இல்லாமல் இருக்கின்ற நிலைமை மாற்றப்பட்டு, விளையாட்டு அரங்குகள் கட்டப்பட்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா விளையாட்டு அரங்கம் என்ற பெயர் சூட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து மாநகராட்சிகள். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, சென்னை நகரை அழகுபடுத்துவதற்காக அரசு 'எழில்மிகு சென்னை 2000' என்ற மாபெரும் திட்டத்தை 1,250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்து வதாக அறிவிக்கப்பட்டது. அதில் முதற்கட்டமாக, சாலைகள், பாலங்கள், அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம், போக்குவரத்து மேம்பாடு, மழைநீர் வடிகால்கள், தெரு விளக்குகள், கால்நடை களை அகற்றுதல் போன்ற பணிகள் சுமார் ரூபாய் 240 கோடி செலவில் இந்த ஆண்டு துவக்கப்படும்.

சென்னை மாநகராட்சியில் உள்ள பல்வேறு பணிகளை மேம் படுத்தும் நோக்கத்துடன் இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல் பணியைச் சேர்ந்த 5 அதிகாரிகளை துணை ஆணையாளர் களாக அரசு அண்மையில் நியமித்தது. அவர்களுக்குச் சட்டப் பூர்வமான அதிகாரங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்னை மாநகராட்சியில் இவர்கள் நியமிக்கப்பட்ட பின் சொத்து வரியைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ரூபாய் 10 கோடி கூடுதலாக வசூலிக்கப்பட்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போலவே, தொழில் வரியும் ரூபாய் 1.25 கோடி கூடுதலாக வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் சிறப்பாகச் செயல்படும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தங்கப் பதக்கம் வழங்கப்படும்.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான மிகப் பழமையான தெரு விளையாட்டு அரங்கத்தினை இடித்துவிட்டு சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டுகள் நடத்திட சர்வதேச விளையாட்டு அரங்கிற்கு நிகரான ஒரு விளையாட்டு அரங்கத் தினை 30 கோடி ரூபாய் செலவில் அமைத்திட அரசு முடிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்திடலின் கீழ்ப் பகுதியில் மாநகராட்சிக்கு நிரந்தரமான வருவாய் தருகின்ற வகையில் அங்காடிகள் அமைத்திடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு வாய்ந்த திட்டத்தினை 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் முடித்திடவும் முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

அதன்படி 1993 ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற 10-வது ஜவகர்லால் நேரு சர்வதேச கால்பந்துப் போட்டி அந்த விளையாட்டு அரங்கத்தில் நடத்தப்படும். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைத் தலைவராகக் கொண்டு உயர்மட்டக் குழு ஒன்றினை அரசு இது தொடர்பாக அமைத் திருக்கிறது என்பதையும் இந்தத் தருணத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னை மாநகராட்சிக்கு நகர்ப்புற மேம்பாட்டு நிதியி லிருந்து வருவாய் ஈட்டக்கூடிய வணிக வளாகங்களைச் சென்னையில் கட்டுவதற்கு ரூபாய் 2.83 கோடி செலவிலும், தெரு விளக்குகள் சீர்படுத்துதல், துப்புரவுப் பணிகளை மேம் படுத்துதல் ஆகிய திட்டங்களை ரூ. 31.5 கோடி செலவிலும் சென்னை மாநகராட்சி கடனாகப் பெற்று வளர்ச்சிப் பணி களைச் செய்துமுடித்திடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மெரினா கடற்கரையைச் சுத்தப்படுத்தும் பணி இதுவரை பொதுப்பணித் துறையிடம் இருந்து வந்தது. இனி இந்தப் பணியைச் சென்னை மாநகராட்சி மேற்கொண்டு கடற்கரைப் பகுதியைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் சொத்துக்களின் மதிப்பு பன்மடங்கு உயர்ந்துள்ளது. ஆனால் சொத்து வரி உயர்த்தப்படாமல் அப்படியே இருந்து வருகிறது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை 17 ஆண்டுகளுக்கு முன்பு விதிக்கப்பட்ட வரி இன்னும் மாற்றியமைக்கப்படாமல் இருக்கிறது. ஆகையினால், மூன்று மாநகராட்சிகளுக்கும் சேர்த்து சொத்து வரியை மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளைப் பரிசீலனை செய்து அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் நடைபாதைவாசிகள் இரவில் தங்குவதற் கென ரூபாய் 40 இலட்சம் செலவில் மூன்று இடங்களில் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. அதேபோல, கோயம்புத்தூர் மாவட்ட நடைபாதை வாசிகள் இரவில் தங்குவதற்கென ரூபாய் 20.50 இலட்சம் செலவில் கட்ட அரசு அனுமதித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் மற்றும் புதிதாக ஏற்படுத்தப் படும் மாநகராட்சிகளுக்கும் பொருந்தும்வகையில் பொதுவான மாநகராட்சிச் சட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

---



பிற்பகல் 2.00

மதுரை மாநகராட்சியில் ரூ. 3 கோடி செலவில் நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு நிதியிலிருந்து கடன் பெற்று வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ. 3.81 கோடி செலவில் கடன் பெறப்பட்டு மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடப்படும்.

சென்னை மாநகராட்சியில் மத்திய வெப்ப தார் கலவை நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தனிப்படி வழங்க வேண்டும் என்று பலஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இதை ஏற்று, இந்த ஆண்டு முதல் அவர்களுக்குத் தனிப்படி வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. மழைநீர் வடிகால்களில் துப்புரவுப் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்களுக்குக் கையுறை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிப் பணியாளர்களுக்கு வீடுகட்ட வீட்டுக் கடன் ரூ. 65 லட்சத்திலிருந்து ரூ. 130 லட்சமாக உயர்த்தப் படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் வெளியிட்ட ஒரு அறிவிப்பு சரியாகப் புரியவில்லை என்று கருதுகிறேன். அதனால் அதனை மீண்டும் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதாவது கழிவுநீர்க் குழாய்களில் சிலசமயம் அடைப்புகள் ஏற்பட்டு விடுகின்றன. இந்த அடைப்பு களை அகற்றுவதற்காக துப்புரவுப் பணியாளர்கள் கீழே இறங்கிச் செல்கின்றபோது, விஷவாயு தாக்கி அவர்கள் மரணம் அடைகிறார்கள். இதுபோன்று பல சம்பவங்கள் நடைபெற்றிருக் கின்றன. எனவே இத்தகைய நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்காக 'சூவேஜ் பைப்'களுக்குள் இறங்கிப் பணிபுரியும் அத்தகைய பணியாளர்களுக்கு இனிமேல் முகத்தின் மீது துப்புரவுப் 'கேஸ் மாஸ்க்கு'கள் கொடுக்கப்படும் என்பதனை அணியக்கூடிய அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தார்கள். மாண்புமிகு (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் வீடு கட்ட முன்பணம் வேண்டி கோரிக்கை விடுத்துள்ளார்கள். இதைக் கருத்தில் கொண்டு மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசு நிதியிலிருந்து முன்பணம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பகுதிநேர துப்புர வாளர்கள் சம்பளம் உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். இதைக் கருத்தில் கொண்டு ரூ. 70-லிருந்து ரூ. 100-ஆக உயர்த்த அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் நகராட்சிகள், மாநகராட்சி களாக விரைவில் உயர்த்தப்படும். மேலும், திருநெல்வேலி, பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் நகராட்சிப் பகுதிகளை இணைத்து திருநெல்வேலியை மாநகராட்சியாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாநகரில் ரூபாய் 800 இலட்சம் செலவில் விவசாய வாய்க்கால்களையும் மற்றும் மழைநீர் வடிகால்களையும் தூர்வாரி பக்கச்சுவர்கள் அமைத்து அபிவிருத்தி செய்யப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதல் தெரு விளக்குகள் ரூ. 25 லட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூபாய் 262 இலட்சம் செலவில் நவீனக் கழிப்பிடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சாலைகள் சுத்தமாக இருப்பதற்கு நடைபாதை மேடைகளில் "தார்சீல் கோட்" அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

வைகை ஆற்றின் குறுக்காக கல்பாலத்திற்கு மேலாக ரூபாய் 700 இலட்சம் செலவில் உலக வங்கியின் உதவியுடன் ஒரு மேம் பாலம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாநகராட்சியிலுள்ள பேருந்து நிலையம் பல இடங் களில் அமைந்திருப்பதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். பேருந்து நிலையத்தினை ஒரே இடத்தில் அமைக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளனர். எனவே, மதுரையில் தற்போது மத்திய பேருந்து நிலையம் அமைந்துள்ள இடத்திலேயே பல அடுக்கு மாடிகளைக் கொண்ட நவீன பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டதாக



அமையும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும். பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் இந்த ஆண்டே துவங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சி ரூபாய் 400 இலட்சம் செலவில் சாலைகளை மேம்பாடு செய்யத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ரூபாய் 20 இலட்சம் செலவில் புதிதாக தெரு விளக்குகள் அமைக்கப்பட உள்ளது. சத்தியமூர்த்தி சாலையில் ரூபாய் 3 இலட்சம் செலவில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ரூபாய் 53 இலட்சம் செலவில் 5 தாய்சேய் நல விடுதிகள் மாநகராட்சியால் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரை 64 வெட்டுத் தீர்மானங்கள் மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இதில் 7 வெட்டுத் தீர்மானங்கள் "கொள்கை பற்றி விவாதிப்பதற்காக" மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹெச். எம். இராஜு உட்பட ஏழு உறுப்பினர்களால் கொடுக்கப் பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக மானியக் கோரிக்கை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. அதில் உறுப்பினர்களுடைய கொள்கை பற்றி விவாதங்களுக்குத் தக்க பதில்கள் உள்ளன. அதையே என்னுடைய பதில் உரையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோருகிறேன்.

மற்ற வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில், பெரும்பாலான வெட்டுத் தீர்மானங்கள் சாலைகள் அமைப்பது பற்றியும், துப்புரவுப் பணி செய்யாததைக் குறித்தும், கழிப்பிடங் களைப் பராமரித்தல் குறித்தும், பல்வேறு இடங்களில் பேருந்து நிலையங்களில் நடைபாதைக் கடைகளை அகற்றுவது குறித்தும், திருமண மண்டபங்கள் கட்டுவது குறித்தும், நகராட்சிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்குவது பற்றியும், பாதாள சாக்கடைத் திட்டங்கள் அமைப்பது பற்றியும், வளர்ச்சிப் பணிகளைத் தீவிரப் படுத்துவது பற்றியும், புதிய பேருந்து நிலையங்கள் அமைப்பது பற்றியும், நகராட்சிகளில் கூடுதலாகத் துப்புரவுப் பணியாளர் இடங்களைத் தோற்றுவிப்பது குறித்தும், நகராட்சிகளின் நிதி நிலைமையை வளப்படுத்துவது குறித்தும், சில பேரூராட்சிகளை நகரியங்களாகவும், நகராட்சிகளை மாற்றக் கோரியும், வறட்சிக் காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவது குறித்தும் வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்து இருக்கிறார்கள்.

[திரு. அழகு திருநாவுக்கரசு]
பிற்பகல் 2-05 [1992 ஏப்ரல் 6

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் நிதி நிலைமைக்
கேற்ப, மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய திட்டங்கள்
நிறைவேற்றப்படவும், சுட்டிக்காட்டிய குறைபாடுகள் களையப்
படவும், இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல நடைபாதைகளில் ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி,
மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்
கிறார்கள். நடைபாதைகளில் ஆக்கிரமிப்புகள் இருக்குமேயா
னால் நிச்சயமாக அவை அகற்றப்படும் என்பதை இந்த நேரத்
தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள்
நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்
பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக ஆக்குவதற்கான அவசியம்
குறித்து, ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.
மொத்தம் 29 பேரூராட்சிகள், நகராட்சிகளாக உயர்த்தப்படு
வதற்கு பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அனுமதியுடன் ஓசூர்
பேரூராட்சி 15-1-1992-லிருந்தும், திருத்துறைப்பூண்டி பேரு
ராட்சி, 1-4-1992-லிருந்து நகராட்சிகளாக உயர்த்தி உத்தரவுகள்
வெளியிடப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி).

மற்ற வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரை, அவை
களுக்கு பதில்கள் எனது பதிலுரையில், அல்லது கொள்கை
விளக்கக் குறிப்பேடுகளில் உள்ள பதில்களில் கிடைத்திருக்கும்
என்று நம்புகிறேன். அதேசமயத்தில் வெட்டுத் தீர்மானங்களில்
உள்ள கருத்துக்கள் மீதும் இந்த அரசு பரிசீலனை செய்து நட
வடிக்கை எடுக்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொண்டு
வெட்டுப் பிரேரணைகள் கொண்டுவந்த மாண்புமிகு உறுப்பினர்
கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக்
கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு வேண்டி விரும்பிக்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்த் திட்டங்கள். தமிழகத்தின் அனைத்து
பகுதிகளுக்கும் நிரந்தரமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும்
திட்டத்திற்கு இந்த அரசு பெருமளவில் முன்னுரிமை அளித்து
வருகிறது. இதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும்
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று
வாரியமும் பல திட்டங்களை தீட்டி நிறைவேற்றி வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊரக பகுதிகளில்
குடிநீர்த் திட்டம், நகர்ப்புற குடிநீர் வசதி திட்டங்கள் மற்றும்
வடிகால் திட்டங்கள் ஆகிய திட்டங்களின் மூலம் மக்களுடைய
குடிநீர் மற்றும் வடிகால் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுகொண்டி
ருக்கிறது.



[திரு. அழகு திருநாவுக்கரசு] [1992 ஏப்ரல் 6

ஊரகப் பகுதிகளில் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 1991-92
ஆம் ஆண்டு ரூ. 73 கோடி செலவில் 5,170 ஊரகக் குடியிருப்பு
களுக்கு குடிநீர் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு இந்த
மாமன்றத்தில் மாண்புமிகு தமிழகமுதலமைச்சர் டாக்டர்புரட்சித்
தலைவி அவர்கள் பேசுகின்றபோது குடிநீர் வசதியற்ற ஆதி
திராவிட குடியிருப்புகள் அனைத்திற்கும் முன்னுரிமை கொடுத்து
குடிநீர் வழங்கப்பட வேண்டும் என ஆணையிட்டார்கள்.
மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்
களின் ஆணையை சிரமேற்கொண்டு ரூ 14. கோடி செலவில்
1,418 ஆதிதிராவிடகுடியிருப்புகளுக்கு போர்க்கால அடிப்படையில்
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது
என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி) 1992-93 ஆம் ஆண்டிற்கு,
ரூ. 72.19 கோடி ஊரக பகுதிகள் குடிநீர்த் திட்டத்
திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். இதன்மூலம் 3,653 ஊரக குடியிருப்புகளுக்கு
குடிநீர் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். (மேசையைத்
தட்டும் ஒலி) அதேபோல 33 பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வழங்கு
வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நகர்ப்புற குடிநீர் திட்டங்கள் மூலமாக சென்னையைத்
தவிர மற்ற மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் நகராட்சி மற்றும்
பேரூராட்சிப் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தமிழ்நாடு
குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படுகிறது.
1991-92-ஆம் ஆண்டில் 5 நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்தித்
திட்டம் ரூ. 5 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன. அதே
போல ரூ. 4.42 கோடி செலவில் 7 பேரூராட்சிகளுக்கு
1991-92 ஆம் ஆண்டு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்
டன. நடப்பு ஆண்டைப் பொறுத்தவரையில் 6 நகராட்சிகளில்
ரூ. 23.54 கோடி செலவில் நிறைவேற்றப்படும் திட்டத்தின்மூலம்
3,74,867 நபர்கள் பயன் அடைவர். அதேபோல 11 பேரூராட்சி
களில் ரூ. 7.34 கோடி செலவில் இந்த ஆண்டு குடிநீர்த்
திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 1,26,803 நபர்கள்
பயனடைவார்கள்.

வடிகால் திட்டங்களைப் பொறுத்தவரையில் இரண்டு
மாநகராட்சிகள் உள்பட 16 நகரங்களில் பாதாளச் சாக்கடைத்
திட்டங்கள் முழுமையாகவும், பகுதி நிறைவேற்றப்பட்டவையாக
வும் செயல்படுத்தப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டிற்கு
சேலம் மற்றும் கோயம்புத்தூர் பாதாள சாக்கடைத் திட்டத்
திற்கு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதியுதவியுடன் 1991-92 ஆம் ஆண்டில் 8 நகரங்
களில் ரூ. 6.7 கோடி செலவில் குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.
1992-93 ஆம் ஆண்டில் ரூ. 132.72 கோடியில் உலக வங்கி

நிதியுதவியுடன் 14 நகரங்களில் குடிநீர் வசதித் திட்டங்கள்
மேற்கொள்ளப்படும். இதனால் 5 லட்சம் நபர்கள் பயனடை
வர். 1992–93 ஆம் ஆண்டிற்கு வறட்சி நிவாரணப் பணிக்காக
ரூ. 6.72 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத்
தட்டும் ஒலி) இதில் 100 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும்
திறந்தவெளிக் கிணறுகள் உறை கிணறுகள் அமைக்கப்படும்.

பிற்பகல் 2-10

தர்மபுரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்
தங்கிய மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் பொருளாதாரம்
மேம்பாடு அடையவும், தொழில் வளர்ச்சி பெறவும் ஒகேனக்கல்
நீர்வீழ்ச்சியிலிருந்து தர்மபுரி மாவட்டத்திற்குத் தண்ணீர் வழங்கு
திட்டம் தீட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)
இதன் மூலம் 1,700 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும். இப்பணி
தொடர்பாக பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது
என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பெரியார் மாவட்டம், காங்கேயம் குடிநீர்த்
திட்டம் 86 பஞ்சாயத்துகளிலும், 6 பேரூராட்சிகளிலும், 2 நக
ராட்சிகளிலும் உள்ள மக்கள் பயன் பெறுகிற வகையில் ரூபாய்
20.43 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான
அரசு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரை குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவுநீர் அகற்றுவது, சென்னை குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியமாகும். மாண்புமிகு தமிழக
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும்,
மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் அவர்களும்
ஆலோசனை செய்து அறிவித்துள்ளவாறு 1995 ஆம் ஆண்டிற்குள்
கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை நிறைவேற்றுகிற நோக்கத்தோடு
சென்னை மாநகரத்திற்குள் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான
முக்கிய பணிகளை மேற்கொள்ள இருக்கிறது.

1992-93 ஆம் ஆண்டில் செங்குன்றத்தில் குடிநீர் சுத்திகரிப்பு
நிலையம் மற்றும் குழாய்கள் பதிக்கும் பணிகள் ஆகியவற்றை
செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில்
சென்னையில் ரூ. 4 கோடி செலவில் 250 தெருக்களுக்கு குடிநீர்
குழாய்கள் போடப்பட்டன. அதேபோல, இந்த ஆண்டும்
ரூ. 4.40 கோடி செலவில் இதுவரையில் குடிநீர்க் குழாய்கள்
போடப்படாத தெருக்களில் குடிநீர்க் குழாய்கள் போடப்படும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி).



ஏழை எளிய மக்கள் வசிக்கின்ற குடிசைப் பகுதிகளில் இப்
பொழுது குடிநீர்த் தொட்டிகளின் மூலம் வழங்கப்பட்டு வரு
கிறது. இவற்றில் சில இடங்களில் குடிநீர்த் தொட்டிகள் பழுது
பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும் ரூ. 30 இலட்சம் செலவில்
குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்படும் சீரமைக்கப்படும்.
(மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 7 இலட்சம் மக்கள்
பயனடைவார்கள்.

1978-ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தோடு இணைக்கப்
பட்ட 12 ஊராட்சிகளில் இதுவரை 3 ஊராட்சிகளில்தான் கழிவு
நீர் அகற்றும் வசதி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
மீதமுள்ள 9 ஊராட்சிகளில் இன்னும் 2 ஆண்டுகளுக்குள் கழிவு
நீர் அகற்றும் வசதிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு ரூ. 40 கோடி செலவிடப்
படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் ,380 தனியார் தெருக்கள் கழிவுநீர்
இணைப்புகள் இல்லாமல் இருக்கின்றன. இந்த நிதி ஆண்டில்
730 தனியார் தெருக்களுக்கு ரூ. 5.5 கோடி செலவில் கழிவுநீர்
அகற்றும் வசதி ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகரத்தில் சில பகுதிகள் தாழ்வான இடங்களில்
அமைந்துள்ளன. இந்தப் பகுதிகளில் கழிவுநீர் தேங்கி சுகாதார
கேடு ஏற்படுகிறது. நெடுங்காலமாக இருந்துவரும் இந்தப்
பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் சூளைமேடு நமச்சிவாய
புரம், அடையாறு கிரீன்வேஸ் சாலை மற்றும் தெற்கு கேசவ
பெருமாள்புரம், அயனாவரம் திருவள்ளுவர் நகர் ஆகிய இடங்
களில் கழிவுநீர் அகற்றும் பணிக்காக ரூ. 65 லட்சம் செலவில்
பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், ஈக்காட்டுத்தாங்கல்,
ஆர். வி. நகர், செம்பியம் போன்ற இடங்களில் கழிவுநீர் அகற்றும்
பணிகளுக்காக ரூ. 3.06 கோடி ஒதுக்கப்படும்.

50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கழிவுநீர் பாதைகளும்,
குழாய்களும் தூர்ந்துபோய் சில இடங்களில் இயங்காமல்
பழுதான நிலையில் உள்ளன. இதைச் சரிபடுத்த இந்த நிதி ஆண்டில் ரூ. 12.5
லட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது நாட்டிலே சென்னை மாநகரில்தான் முதன்முதலாக
கழிவுநீரை சுத்தப்படுத்தி மீண்டும் பயன்படுத்துகிற வசதி ஏற்
படுத்தப்பட்டிருக்கிறது. சென்னையை ஒட்டியுள்ள 2 அல்லது 3
தொழிற்சாலைகளில் கழிவுநீரை சுத்தப்படுத்தி தொழிற்சாலை
உபயோகத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் இப்பொழுது இருந்து
வருகிறது. பல்வேறு தொழிற்சாலைகளும் இந்தத் திட்டத்தில்

ஆர்வம் காட்டி வருகின்றன. இதனால் சேமிக்கப்படும்
குடிநீர் சென்னை நகர மக்களுக்குக் கூடுதலாக வழங்க உபரி
புள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் வாய்ப்
துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்
பிற்பகல் 2-15

குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை 78 வெட்டுத் தீர்மானங்
களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள்.
இதில் கொள்கை பற்றி விவாதிப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர்
திரு. ரங்கநாதன் உட்பட 5 உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்
கள். குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்
தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, அவை உறுப்பினர்
களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதில் உறுப்பினர்களுடைய
கொள்கை பற்றிய விவாதங்களுக்குத் தக்க பதில்கள் உள்ளன.

எஞ்சியுள்ள வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில்,
பெரும்பாலான வெட்டுத் தீர்மானங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத்
தொட்டி அமைத்தல், கூட்டுக்குடிநீர்த் திட்டம், புதிதாக குடிநீர்
வசதி கோருதல், செயலில் உள்ள திட்டங்கள் மற்றும் குடிநீர்
வினியோகம் செய்தல், பாதாள சாக்கடை அமைத்தல், குடிநீர்த்
திட்டங்கள் செயல்படுத்த இயலாமல் இருத்தல், நீர் ஆதாரம்
பற்றாக்குறை காரணமாக திட்டம் முடிக்கப்பட்டு உபயோகத்தில்
இல்லாமல் இருத்தல், வறட்சி நிவாரணம், புதிதாகக் குடிநீர்
வசதி கோருதல் ஆகியவை குறித்து வெட்டுத்தீர்மானங்களையும்
மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள்.

புதிய திட்டங்களை அமைத்தல் சம்பந்தமாக கொள்கை
விளக்கக் குறிப்பிலேயே, எங்கெங்கு குடிநீர்த் திட்டங்கள் நிறை
வேறிக் கொண்டிருக்கின்றன என்பது பற்றிச் சொல்லப்பட்டு
இருக்கிறது. அந்தத் திட்டங்கள் அத்தனையும் விரைந்து
முடிக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
ஆட்சிப் பொறுப்பேற்றபிறகுதான், இந்த அரசு 'வருமுன் காப்
போம்' என்ற கொள்கையில் செயல்பட்டு வருகிறது. இதற்கு
ஒரு உதாரணமாக, வறட்சி வருவதற்கு முன்பே வறட்சிக் காலத்
தில் குடிநீர்ப் பற்றாக்குறையை எப்படியெப்படி சமாளிக்கவேண்டு
மென்பது குறித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். இது சம்பந்
தமாக இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்படி பேரவை விதி 110-ன்
கீழ் ஒருவிவர அறிக்கையை 1-4-1992 அன்று சமர்ப்பித்துள்ளேன்.
நீர் ஆதாரம் வறண்டுவிட்ட இடங்களில் மாற்று நீர் ஆதாரம்
கண்டுபிடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ராஜாராமன், திரு. சா. பன்னீர்செல்வம் ஆகியோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி குறித்து வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் 1,418 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் அறவே குடிநீர் வசதி செய்து தரப்படாமல் இருந்தது. எங்களுடைய போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடன், ஒரு ஆய்வு நடத்தி, அந்த 1,418 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் 31–12–1991–க்குள் ஒரு குடிநீர் ஆதாரமாவது செய்து தரப்படவேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அதன்படி செய்து முடிக்கப்பட்டுவிட்டது என்பதைப் பெருமைப்பட தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெட்டுத் தீர்மானங்கள்மீது இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொண்டு. 1991-92-ஆம் ஆண்டில் நடைபெற்ற வரவு–செலவுக் கூட்டத் தொடரில், ''அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்துவிட்டு, அவர்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் இந்த அரசுக்கு எந்தத் தடையும் இல்லை'' என்று தெரிவித்தேன். உள்ளாட்சி அமைப்புக்களில் பணியாற்றி வருகிற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் எனக்கு அந்த நம்பிக்கையை அளித்துள்ளதன் காரணமாகவே இந்தக் கூட்டத் தொடரில் தங்கப் பதக்கங்கள் பரிசளிக்கின்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமல்ல, உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் குழந்தைகளின் எதிர்காலம் ஒளிமிக்சதாக அமையவேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் கீழ்க் காணும் திட்டங்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

உள்ளாட்சி அமைப்புகளில் சென்னைக் குடிநீர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உட்பட சுமார் 3 லட்சம் அலுவலர்களும், பணியாளர்களும் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரிடமும் அவரவர் தகுதிக்கேற்ப ஒரு சிறு தொகையை நன்கொடையாகப் பெற்று, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் பெயரில் ஒரு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் துவங்கப்படும், (மேசையைத்தட்டும் ஒலி)

இந்தக் கல்லூரிகளில் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீத அளவு இடங்கள் ஒதுக்கப்படும். இதில் துப்புரவுப்

பணியாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்
களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீத இடங்கள் ஒதுக்கப்படும்,
(மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சி அமைப்புகளான ஊரக வளர்ச்சித்துறை,
நகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
மற்றும் சென்னைக் குடிநீர் ஆகிய துறைகளின் பல்வேறு
அலுவலர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இவைகள் ஒன்றுக்
கொன்று தொடர்பில்லாமல் இயங்கி வருகின்றன. வளர்ந்து
வரும் மக்கள் தொகைக்கேற்ப அலுவலர்களையும், பணியாளர்
களையும் அதிகப்படுத்த இயலவில்லை. குறைந்த அளவு
அலுவலர்களும், பணியாளர்களும் பணியாற்றி சிறப்பாகச் செயல்
பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதற்காக தற்போது
உள்ளாட்சி அமைப்புகளில் தனித்தனியாக இயங்கி வரும் பல்வேறு
பயிற்சி நிறுவனங்களை ஒருங்கிணைத்து, ஒரே அமைப்பின்கீழ்
செயல்படுவதற்கு; ,உள்ளாட்சி நிர்வாகப் பயிற்சி நிறுவனங்
களின் இயக்ககம் (Directorate f Institutes of Local Administration)
என்ற அமைப்பு உருவாக்கப்படும். இந்த இயக்ககம், நான்
முன்பு சொன்ன மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல்
கல்லூரிகளை நிர்வகிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்
கிறேன். ஒவ்வொரு துப்புரவுப் பணியாளரின் குழந்தையும்
எதிர்காலத்தில் ஒரு மருத்துவராகவோ, ஒரு பொறியாளராகவோ
வரவிருக்கின்ற அந்த அரிய வாய்ப்பினை மாண்புமிகு முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தியத் துணைக்கண்டத்
திலேயே முதன்முதலாக அளித்துள்ளார்கள் என்பதை நான்
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி)

பிற்பகல் 2-20

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி
பொறுப்பேற்ற பிறகு மட்டுமே ஒவ்வொரு துறையிலும்
மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களே நேரிடையாக
ஆய்வுக் கூட்டத்தை நடத்தி நிர்வாகச் சிக்கல்களுக்கு அவ்வப்போது
தீர்வுகள் கண்டு, செயல் திட்டங்களுக்கு ஒரு காலக்கெடு நிர்ண
யிக்கப்பட்டு, அந்த காலக் கெடுவுக்குள் நிறைவேற்ற வேண்டும்
என்று ஆணையை பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத்
தட்டும் ஒலி)

அதேபோன்று 1992—93-ஆம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்டுள்ள
திட்டங்களை விரைவாகவும், முழுமையாகவும் நிறைவேற்றுவோம்
என்ற உறுதியை இங்கே கூறிக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள்
தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்ப பெற்றுக்
கொண்டு, மானியக் கோரிக்கைகளை ஏகமனதாக நிறைவேற்றித்
தரும்படி கேட்டுக்கொள்கிறேன்,





மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஆவடி
நகரீயத்தை, நகராட்சியாக மாற்றியதற்காக முதலிலே நான் நன்றி
தெரிவித்துக்கொண்டு பர்கூரிலே அமைக்க இருக்கின்ற புரட்சித்
தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் பெயரில் அமைக்க
இருக்கும் நகரைப் போலவே சென்னையிலேகூட ஒரு பெரிய
நகரத்தை அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிராமத்திலே அமைக்க
இருக்கின்ற நகரைப் பற்றிச் சொன்னார். நகரத்திலே ஒரு
நகரத்தை அமைக்க எங்கே இடம் வைத்திருக்கிறீர்கள்?
திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம். (குறுக்கீடு) ஒரு விளக்கம்
தானே! கேட்கலாம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய
உரையிலே, உள்ளாட்சிகளுக்கும். நகராட்சிகளுக்கும் தேர்தல்
நடத்துவதைப் பற்றி அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம்.
ஆனால் அவர் ஒன்றும் கூறவில்லை. உள்ளாட்சிகளுக்கும்,
நகராட்சிகளுக்கும் எப்போது தேர்தல் நடக்கும் என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியை வேறு ஒரு
சந்தர்ப்பத்தில் வேறு ஒரு மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய
போது, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் மே 31-ஆம் தேதி நடக்க
இருக்கின்றன; அந்த தேர்தல்கள் முடிந்த பின்னர் உள்ளாட்சி
அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறும் என்று ஏற்கெனவே
தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

*திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்று எல்லா நகராட்சிகளிலும் சேர்மெனுக்கு என்று
இருக்கக்கூடிய ரூமை யாருமே எம்.எல்.ஏ.க்களுக்கு திறந்துவிட
மறுக்கிறார்கள்; அதற்கு ஆணை இல்லை என்று சொல்லு
கிறார்கள். இன்று மக்களுடைய பிரச்சினைகளை அன்றாடம்
சந்தித்துக் கொண்டிருக்கிற எங்களுக்கு, தேர்தல் வருகிற
வரையிலாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய
கருணையோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய
பரிவோடும் அந்த சேர்மென் ரூம்களை திறந்துவிட வேண்டும்
என்றும், சேர்மென் மீட்டிங் ஹாலைச் கிளார்க்குகளை எல்லாம்

எம்.எல்.ஏ.க்கள் தேர்தல்வரை தங்கள் உதவியாளர்களாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் ஆணையிட வேண்டும் என்று வேண்டி அமைச்சர் அவர்கள் அதற்கு உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், ஆன்சர் வேண்டும் என்று நீங்கள் கேட்க முடியாது. உங்களுடைய கருத்தை, கோரிக்கையைச் சொல்லலாம். (குறுக்கீடு) அதாவது அமைச்சர் பேசியதில் விளக்கம் கேட்டால் விளக்கம் சொல்வார். அவர் பேசாத பிரச்சினைக்கு விளக்கம் கேட்டால் எப்படி? (குறுக்கீடு) அந்த வெட்டுத் தீர்மானம் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அப்படியிருந்தால் நீங்கள் எழுந்து கேட்டிருக்கவே கூடாது. பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேர்மென் இருக்கும்போது உறுப்பினர்கள் எங்கே கூடி பேசுவார்களோ அந்த இடத்திலே இப்போதும் கூடிப்பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வி. இராஜேந்திரன்:

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துவதற்கோ அல்லது டிவிஷன் கேட்பதற்கோ எங்களால் இயலாது என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் பெருந்தன்மையோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களுக்கு பதிலை தந்திருக்கிறார்கள். குறிப்பாக வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு போன்ற பல ஊர்களுக்கு வர வேண்டிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் நீண்ட நாட்களாக செயல்படாமல் இருக்கிறது. காரணம் காயிதே மில்லத் மாவட்டத்திற்கு தண்ணீர் வருவதை** மறுக்கக் கூடும். மறுத்தும் இருக்கிறார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வி. இராஜேந்திரன், நீங்கள் ஏற்கெனவே இந்தப் பிரச்சினையை ஒரு முறை எழுப்பி அதற்குப் பதில் வேறு சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. இல்லை. அதாவது நீங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி இதற்குப் பதிலும் பெற்றிருக்கிறீர்கள். (குறுக்கீடு). ஏற்கெனவே இந்த அவையில் கிளப்பியபோது பதில் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிற் கொள்கையின்மீது விவாதத்தின்போது தமிழகத்தினுடைய முதல்வர் என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பல்வேறு தொழிற்சாலைகளை வழங்கி, எங்கள் மாவட்டத்தினுடைய உணர்வுகளை எல்லாம் புரிந்துகொண்டு எங்களுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த வகையிலே பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்குகிற நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே குடிநீர் திட்டத்தைப் பொறுத்த அளவிலே ஒரு நீண்ட காலக் கண்ணோட்டத்தோடு பல கோடி ரூபாயிலே துட்டம் தீட்டப்பட வேண்டி இருக்கின்ற காரணத்தினாலே, அதை தமிழகத்தின் முதல்வர் அவர்களோடு கலந்துபேசி, அது பற்றி விரைவாக செயல்படுத்துவதற்கு இந்த அரசு இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.பி.வி. இராஜேந்திரன் பேசியதில் ** என்கிற சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) போதும். அது நீக்கப்பட்டுவிட்டது.

அடுத்து, இன்னொரு விளக்கம், அமைச்சர் அவர்கள். திருச்சி, சேலம், திருநெல்வேலி மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில் வெட்டுத் தீர்மானங்களுக்குப் பதில் அளிக்கிறபோது மூன்றும் பரிசீலனையில் இருக்கிறது என்பது போல பதில் அளித்தீர்கள். அதற்கு முன்னர் சொல்கிறபோது, நெல்லை மாநகராட்சி இந்த ஆண்டே உருவாகிறது என்று அறிவித்து இருக்கிறீர்கள். திரும்பச் சொல்கிறபோது பரிசீலனையில் இருப்பதாக அறிவித்து இருக்கிறீர்கள். அதுபற்றி விளக்கம் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பணியாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளித்து அவர் களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீத இடங்கள் ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சி அமைப்புகளான ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைக் குடிநீர் ஆகிய துறைகளின் பல்வேறு அலுவலர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இவைகள் ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமல் இயங்கி வருகின்றன. வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப அலுவலர்களையும், பணியாளர் களையும் அதிகப்படுத்த இயலவில்லை. குறைந்த அளவு அலுவலர்களும், பணியாளர்களும் பணியாற்றி சிறப்பாகச் செயல் பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதற்காக தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் தனித்தனியாக இயங்கி வரும் பல்வேறு பயிற்சி நிறுவனங்களை ஒருங்கிணைத்து, ஒரே அமைப்பின்கீழ் செயல்படுவதற்கு; ,உள்ளாட்சி நிர்வாகப் பயிற்சி நிறுவனங் களின் இயக்ககம் (Directorate of Institutes of Local Administration) என்ற அமைப்பு உருவாக்கப்படும். இந்த இயக்ககம், நான் முன்பு சொன்ன மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளை நிர்வகிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன். ஒவ்வொரு துப்புறவுப் பணியாளரின் குழந்தையும் எதிர்காலத்தில் ஒரு மருத்துவராகவோ, ஒரு பொறியாளராகவோ வரவிருக்கின்ற அந்த அரிய வாய்ப்பினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தியத் துணைக்கண்டத் திலேயே முதன்முதலாக அளித்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-20

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மட்டுமே ஒவ்வொரு துறையிலும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களே நேரிடையாக ஆய்வுக் கூட்டத்தை நடத்தி நிர்வாகச் சிக்கல்களுக்கு அவ்வப்போது தீர்வுகள் கண்டு, செயல் திட்டங்களுக்கு ஒரு காலக்கெடு நிர்ண யிக்கப்பட்டு, அந்த காலக் கெடுவுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்று ஆணையை பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று 1992–93-ஆம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை விரைவாகவும், முழுமையாகவும் நிறைவேற்றுவோம் என்ற உறுதியை இங்கே கூறிக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்ப பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கைகளை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.



திருமதி ரமணி நல்லதம்பி இருக்கையில் இல்லாததால் அவர் களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

''குடிநீர் வழங்கல் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக் கையின்கீழ் ரூ. 171,06,65,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)<br>
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)<br>
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.<br>
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.<br>
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(உ) கோரிக்கை எண் 50—நகராட்சி நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண்—50 நகராட்சி நிருவாகம். வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப் படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் இருக்கையில் இல்லாததால் அவர் களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

''நகராட்சி நிருவாகம் பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 69,09,18,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)<br>
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)<br>
எற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.<br>
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.<br>
(மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்குக் கோரிய தொகை வழங்கபபெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7–4–1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

80. பெருந்தொழில்கள் பற்றிய சாதனை விளக்க ஆய்வுரை, 1991–92 (ஆங்கிலம்).

81. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையர், இந்திய அரசு, அவர்களின் இருபத்தொன்பதாவது அறிக்கை, 1987–88 (ஆங்கிலம்).



47—ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

## சமுதாய நல வளர்ச்சி.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டம், சாதி, சமய, பொருளாதார வேறுபாடுகள் இன்றி, கிராமச் சமுதாயம் முழு வளர்ச்சி எய்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது; இத் திட்டம் கிராம மக்களின் பொருளாதார வாழ்க்கையை மேம்படுத்தும் பணியில் நாட்டம் உடையதாகும்.

2. 1981 ஆம் ஆண்டிலிருந்து 1991 ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் கிராம வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பான சில முக்கிய அம்சங்களை 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தெளிவாக்குகிறது. அவைகள்:—

(1) கிராம மக்கள் தொகையும் நகர்ப்புற மக்கள் தொகையும் 1981 ஆம் ஆண்டில் 67 : 33 என்ற விகிதத்திலும், 1991 ஆம் ஆண்டில் 66 : 34 என்ற விகிதத்திலும் மாற்றமடைந்து உள்ளது.

(2) கிராம மக்கள் தொகையில் 13 சதவீதம் அதிகரிப்பு இருந்த போதிலும் கிராமத்தில் படித்தறிவு உள்ளோரின் எண்ணிக்கை 38.5 சதவீதத்திலிருந்து 47.5 சதவீதமாக உயர்ந்து உள்ளது.

(3) கிராம மக்கள் தொகையில் சிறு விவசாயிகள்/குறு விவசாயிகள்/வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோரின் விகிதாச்சாரம், 1979-80, 1986-87 ஆகிய ஆண்டுகளில் நடந்த வேளாண்மைக் கணக்கெடுப்புக்கிடையில் 1209059/5014754/603760 ஆகிய எண்களிலிருந்து 1260306/5497725/7846190 ஆகிய எண்களுக்கு மாற்றமடைந்துள்ளது. இதன் மூலம் சிறு விவசாயிகளைப் பொறுத்து மாற்றமில்லை எனத்தெரிகிறது. குறு விவசாயிகளில் 10 சதவீதம் உயர்வு ஏற்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 30 சதவீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் முதலிய கிராம வேலை வாய்ப்புத் திட்டங்கள் இன்று சிறப்பான முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.

8. வரும் ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறையின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்க்கண்டவாறாகும் :—

(அ) கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே யுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து உதவித்தொகை, நிறுவனக் கடனுதவி அளிப்பதன் மூலம் அவர்களை வறுமைக்கோட்டிற்கு மேல் கொண்டு வர உதவி செய்தல் ;

(ஆ) கிராமப் பகுதிகளிலுள்ள நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர் களுக்கும் வேலை வாய்ப்பின்றி இருப்பவர்களுக்கும் (ஆண், பெண் ஆகிய இருசாரருக்கும்) பொதுப்பணித் திட்டங்கள் மூலம் பயனுள்ள கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்குதல் ;

(இ) கிராமப்புறங்களிலுள்ள ஏழை மக்கள் பொருளாதார நிலை விரைந்து வளர்ச்சியடையவும், அவர்களுடைய வருமானம் படிப்படியாக உயரவும் வழிவகுக்கும் கிராமப்புற அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்குரிய நீண்ட காலம் நிலைத்திருக்கும் சமுதாயச் சொத்துக்களை ஏற்படுத்துதல் ;

(ஈ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மாற்றுவகை எரி பொருளைக் கண்டுபிடித்து அதன் உற்பத்தியைப் பெருக்குவதற் குரிய தேசியத் திட்டத்தின் ஓர் அங்கமாகத் தனி நபருக்கும் சமுதாய அமைப்புகளுக்கும், சாண எரிவாயு அடுப்புகளையும், புகையில்லா அடுப்புகளையும் நிறுவுதல் ;

(உ) தேசியக் காடு வளர்ப்புப் பெருந்திட்டத்தின் ஒரு பகுதியாகக் காடுகள் அழியாமல் பாதுகாத்தல் உயிரின வாழ்க்கைச் சூழல் சமன்பாட்டினைப் பேணுதல் ஆகிய இரு தேவைகளையும் கருத்தில்கொண்டு ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இயன்ற அளவு நிலப்பரப்பில் காடு வளர்த்தல் ;

(ஊ) சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் மூலம் கிராமப்புற வாழ்க்கை வசதிகளை மேம்படுத்திக் கிராம மக்கள் நகர்ப்புறங் களுக்குக் குடிபெயர்ந்து செல்வதைத் தடுத்தல் ;

பேரூராட்சிகள் துறை உட்பட ஊரக வளர்ச்சித்துறை தொடர்பான கோரிக்கை எண். 28 சமுதாய நலத் திட்டங்களுக்கு 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 380,92,54,000 ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநர் ஆகிய துறைத்தலைவர்கள் இத்துறையின் கீழ் பணி யாற்றி வருகின்றனர். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஆகியவற்றை நிர்வகித்தல் கண்காணித்தல் ஆகிய பொறுப்பு களை ஊரக வளர்ச்சி இயக்குநரும், பேரூராட்சிகள், பஞ்சா யத்து நகரியங்கள் ஆகியவற்றின் நிர்வாகப் பொறுப்பைப் பேரு ராட்சிகள் இயக்குநரும் மேற்கொண்டுள்ளனர்.





**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :**

ஊரகப் பகுதிகளில் வாழுகின்ற ஏழை மக்களில் மிக ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு, வருவாய் கிடைக்கக்கூடிய சொத்துக்களை வாங்க உதவியளித்து, அந்த ஏழை மக்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டுவர உதவி செய்வதே மத்திய அரசு பொறுப்பேற்கும் இந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் பொருளாதார நடவடிக்கைகளுக்காக, மானிய உதவியும், நிறுவனக் கடன்களும் வழங்கப்படுகின்றன. அவற்றின் விவரம் வருமாறு :—

தனிப்பட்டவர்களுக்கு/குடும்பத்திற்கு.

| | | |
|---|---|---|
| (அ) சிறு உழவர்கள் | 25 சதவீதம். | வறட்சிப் பாங்கான பகுதிகள்/மாவட்ட வளர்ச்சி திட்டப் பகுதிகள் அல்லாத பிறப் பகுதிகளிலுள்ள குடும்பம் ஒன்றுக்கு உயரளவாக ரூ. 3,000 வறட்சிப் பாங்கான பகுதிகள் திட்டம்/மாவட்ட வளர்ச்சித் திட்டப் பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு உயரளவாக ரூ. 4,000. |
| (ஆ) குறு உழவர்கள், வேளாண் தொழிலாளர்கள், வேளாண்மைத் தொழிலாளர் அல்லாத தொழிலாளர்கள், ஊரக கைவினைஞர்கள். | 33 1/3 சதவீதம். | |
| (இ) இவர்களில், ஆதிதிராவிடர் பழங்குடியினத்தைச் சேர்ந்த குடும்பங்கள், உடல் ஊனமுற்றவர்கள். | 50 சதவீதம். | அனைத்து ஊரகப் பகுதிகளிலும் குடும்பம்ஒன்றுக்கு ரூ. 5,000. |

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலமாக, நிதி நிறுவனக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வறுமைக் கோடு என்பதற்கு ஊரகப் பகுதிகளில், ஆண்டொன்றுக்கு 6,400 ரூபாய் அல்லது அதற்கு குறைவான வருவாய் பெறும் குடும்பம் என்ற அளவுகோல் பின்பற்றப்பட்டது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்த வறுமைக் கோட்டிற்கான அளவுகோல் 11,000 ரூபாய் என உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது. ஏழைகளிலும் மிக ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு முதலில் உதவி கிடைக்கும் பொருட்டு, 3,500 ரூபாய் வரை ஆண்டு வருமானம் பெறும் குடும்பங்களுக்கு முதலில் உதவி அளிக்கப்படுகிறது.

கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும்.
தொடர்புடையனவாகும். ஒன்றோடொன்று
வசிப்பவர்கள் என்று வறுமைக் கோட்டிற்குக்கீழ்
களைச் சேர்ந்த கண்டறியப்பட்ட கிராமக் குடும்பங்
மேம்பாட்டுத் மகளிர் கிராமப் பகுதிகளில் மகளிர், சிறார்
ஒருங்கிணைந்த திட்டத்தில் உறுப்பினர்களாகலாம். அத்துடன்
முறைக் ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் காணும் வழி
பயனீட்டாளர்களுக்கான குறிப்புகளில் வரையறுக்கப்பட்ட பல்வேறுவகை
உச்சவரம்புக்கு ஒட்டுமொத்த உதவித் தொகையின்
திட்டத்தின்கீழ் உட்பட்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்
லாம். உதவித் தொகையும், கடன் தொகையும் பெற
திட்ட ஊரகப் பகுதிகளில் மகளிர் சிறார் மேம்பாட்டுத்
திட்டத்திற்கான இலக்குத் தொகுதியும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்
இலக்குத் தொகுதியும் ஒன்றே ஆகும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு
குடும்பத்தை, ஒரு பிரிவாகக் கொண்டு உதவி அளிக்கப்படுகின்றது.
அவ்வாறன்றி மகளிர் பலரை ஒரு குழுவாக அமைத்து, உதவி
யளிப்பது, ஊரகப் பகுதிகளில் மகளிர் சிறார் மேம்பாட்டுத்
திட்டத்தின் தனி அம்சமாகும். ஊரகப் பகுதிகளில் மகளிர் சிறார்
மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மகளிர் அவரவருடைய திறமை,
ஆற்றல், உள்ளூர் நிலைமை ஆகியவற்றுக்கு ஏற்ப பொருளாதாரப்
பணிகளை மேற்கொள்ளுவதற்காக தம்மை 10—15 பேர்
அடங்கிய சிறு குழுக்களாக அமைத்துக் கொள்கின்றனர். ஊரக
மக்களை ஒன்றுதிரட்டும் நோக்கத்துடன் அவர்களுடைய
வருமானத்திற்கு வகை செய்து அவர்களுடைய சுயதேவைகளை
நிறைவேற்றி கொள்கின்ற வாய்ப்புகளைத் தடை செய்யும் சமூகக்
கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறியும் எண்ணத்துடனும் கூட்டுக்
கொள்கை பின்பற்றப்படுகிறது.

இத்திட்டங்களைச் செயலாக்க, மாவட்டங்களைத் தேர்ந்
தெடுக்கப் பின்பற்ற வேண்டிய விதிகள்—பொதுவான பிற்பட்ட
நிலை, எழுதப்படிக்கத் தெரிந்த மகளிர் எண்ணிக்கை குறைவாக
இருத்தல், குழந்தை இறப்பு வீதம் அதிகமாயிருத்தல் ஆகியவை
யாகும். மேலும், பணிகளை ஒருமுனைப்படுத்துவதற்காக
புதிய மாவட்டங்கள், இயன்றவரையில் ஒருங்கிணைந்த குழந்தை
மேம்பாட்டுப் பணிகளை ஏற்கனவே செயலாக்கி வருகின்ற
மாவட்டங்களாக இருக்க வேண்டும்.

தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக
வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் உதவித் தொகை வழங்கப்
படுவதுடன் ஊரகப் பகுதிகளில் மகளிர் சிறார் மேம்பாட்டுத்
திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மகளிர் குழுவினருக்கும் சுழல்
நிதியாக ரூ. 15,000 ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படு
கிறது. இத்தொகையை, மத்திய அரசு, மாநில அரசு, '' யூனி



செப் '' நிறுவனம் ஆகிய மூன்றும் சேர்ந்து சமஅளவில் வழங்கு
கின்றன. சுழல் நிதி, பின்வரும் நோக்கங்களுக்காக, குழு
பயன்படுத்தும் பொருட்டு ஏற்பட்டதாகும்.

(1) மூலப் பொருட்களை வாங்கலும் விற்றலும்.

(2) குழு அமைப்பாளருக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 50
ஓராண்டிற்கு வீதம், மதிப்பூதியம் வழங்குதல்.

(3) குழு, வருமானம் ஈட்டுவதற்கும் அதன் பிற
நடவடிக்கைகளுக்கும் அடிப்படை ஆதரவு அளித்தல்.

(4) குழந்தை நலப் பணிகளுக்கு ஒரு முறை ஆகும்
செலவுத் தொகை அளித்தல்.

(5) குழுவில் உறுப்பினர்கள், வங்கிகள் முதலியவற்றுக்குச்
சென்றுவர பயணப்படியாக, ரூ. 500க்கு மிகாமல் ஒருமுறை
அளித்தல்.

மேலும், குழு அமைப்பாளர், பயணப்படி வகையில்,
ஓராண்டிற்கு ரூ. 200 பெறத் தகுதி உடையவராவர். இ
செலவை மத்திய அரசும், மாநில அரசும், சமமாக ஏற்கும்.

இத்திட்டம், தமிழ் நாட்டில், 1983-84ஆம் ஆண்டிலிருந்து
செயலாக்கப்பட்டு வருகிறது. இதுவரை, மத்திய அரசு,
இம்மாநிலத்தில் 3,393 குழுக்களை அமைக்க அனுமதி அளித்
துள்ளது. மொத்தம் 3,393 குழுக்களில் 3,237 குழுக்கள்,
தருமபுரி, பெரியார், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு, வட
ஆற்காடு—அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர்,
புதுக்கோட்டை, சேலம் தஞ்சாவூர்; திருநெல்வேலி கட்ட
பொம்மன், கோயம்புத்தூர், பசும் பொன் முத்துராமலிங்கத்
தேவர், நாகப்பட்டிணம் காயிதே மில்லத் ஆகிய 13 மாவட்டங்
களில், 54,880 மகளிர் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்
டுள்ளன. பயன்பெறும் மகளிர் 54,880 பேரில், 21,707 பேர்
ஆதி திராவிடர்கள், மற்றும் 1,021 பேர் பழங்குடியினர்.

ஊரகப் பகுதிகளில் மகளிர், சிறார் மேம்பாட்டுத்
திட்டத்தை மேலும் இரண்டு மாவட்டங்களில், அதாவது செங்கல்
பட்டு—எம்.ஜி.ஆர்., மற்றும் திண்டுக்கல்—அண்ணா ஆகிய
மாவட்டங்களில் 1992-93ஆம் ஆண்டில் செயலாக்கக் கருதப்
பட்டுள்ளது.

<u>ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் :</u> .992 ஏப்ரல் 6

ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த தேசிய ஊரக
வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை
வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றை ஒருங்
கிணைத்து 1—4—1989 முதல் ஜவஹர் வேலைவாய்ப்புத்
திட்டம் என்ற பெயரில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
இத்திட்டத்திற்கான மொத்த செலவில் 80 சதவீதம் மைய
அரசும், 20 சதவீதம் மாநில அரசும் ஏற்றுக்கொள்ளும்.

இத்திட்டத்தின் நோக்கம் :

கிராமப்புறங்களில் வாழும் வேலைவாய்ப்பற்ற மற்றும்
போதிய வேலைவாய்ப்பற்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும்
இலாபகரமான கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்குவதே
இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். வேலை வாய்ப்பு
களை உருவாக்கும்பொழுது, கிராமப்புறங்களில் முழுமை
யான வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி வறுமை நிலை
யிலுள்ள பிரிவினருக்குத் தொடர்ந்து பயனளிக்கும் உடை
மைகளை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின் இதர நோக்க
மாகும்.

பயன்பெறுவோர் :

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள உழைக்கும் ஆர்வமுடைய
மக்களே இத்திட்டத்தின் மூலம் பயன்பெற தகுதியுடையவர்
ஆவர். இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பில் ஆதி திராவிடர்
மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்
திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் மொத்த வேலைவாய்ப்
பில் குறைந்தபட்சம் 30 சதவீதம் வேலைவாய்ப்பு பெண்
களுக்கு வழங்கப்படுகிறது.

நிதி ஒதுக்கீடு :

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு, மாநிலங்களுக்கான
நிதி மாநிலங்களில் நிலவும் ஏழ்மையின் அடிப்படையில் வழங்
கப்படுகிறது. மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதி, மாவட்டங்
களுக்கு பகிர்வு செய்யப்படும்போது மாவட்டங்களின் பின்
தங்கிய நிலையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. மாநிலத்
திற்கு வழங்கப்படும் மொத்த ஒதுக்கீட்டுத் தொகையில் 6
சதவீதம் இந்திரா நினைவு குடியிருப்புகளுக்கும், 20 சதவீதம்
மில்லியன் கிணறுகள் திட்டத்திற்கும் பகிர்வு செய்யப்படும்.
இவ்வாறு ஒதுக்கீடு செய்தது போக, எஞ்சிய நிதியில் 80 சத
வீதம் நிதியினை மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி
களுக்கும்/பேரூராட்சிகளுக்கும் அவற்றின் மக்கள் தொகை
அடிப்படையிலும் மீதம் 20 சதவீதம் நிதியினை மாவட்ட
ஊரக வளர்ச்சி முகமைகளுக்கும் பிரித்து வழங்கி வளர்ச்சி



பணிகளை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.
ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி
ஊராட்சி ஒன்றிய தலைமையிடத்தில் உள்ள துணை அஞ்ச
லகத்தில் ஒவ்வொரு ஊராட்சியின் பெயரில் துவக்கப்பட்டுள்ள
அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கில் வைக்கப்படுகின்றன.
இத்திட்டத்தின் கீழ், தினக்கூலி ரூ. 15 வீதம் (ஆண், பெண்
இரு சாராருக்கும்) வழங்கப்பட்டு வருகிறது.

குறிப்பிட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு உதவிடும்
வகையிலான பணிகளுக்கு 15 சதவீத நிதி ஒதுக்கீடு செய்து
அப்பணிகளை மேற்கொள்ளவும் எஞ்சிய நிதியினை ஊராட்சி
பேரூராட்சிக்குட்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவை
களைப் பூர்த்தி செய்யும் வகையிலான பணிகளை எடுத்துக்
கொண்டு செயல்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில்
2 சதவீதம் பணியாளர்களின் ஊதியத்திற்கு ஒதுக்கப்படுகிறது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கிய 20 சதவீத
நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்கண்ட விகிதாச்சாரப்படி பணிகள்
தவறாமல் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(அ) பொருளாதார ரீதியாகப் பயனளிக்கும் திட்டப்
பணிகள் (சிறுபாசன அபிவிருத்தி, மண்வள பாதுகாப்பு போன்ற
பணிகள்) 65 சதவீதம்.

(ஆ) சமூகக் காடுகள் வளர்ப்பு 25 சதவீதம்.

(இ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான
பணிகள் 15 சதவீதம்.

(ஈ) சாலை மற்றும் கட்டிடப் பணிகள் 25 சதவீதம்.

இத்திட்டத்தின் கீழ் பணிகளை நிறைவேற்ற ஒப்பந்தக்
காரர்களை ஈடுபடுத்தக்கூடாது.

**1991-92ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் செலவின விவரம் :**

| வரிசை எண். | விபரம். | மத்திய அரசு பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | மாநில அரசு பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒதுக்கீடு | 13,778.93 | 3,444.73 | 17,223.66 |
| 2. | மாநில அரசின் கூடுதல் நிதி | — | 258.78 | 258.78 |
| | ஆர்.சி.சி. கூரைக்காக | — | 2,000.00 | 2,000.00 |
| | மாநில அரசின் பள்ளிக் கட்டிடம்/சத்துணவுக் கூடம் மற்றும் சிறு பாசனக் குளங்களுக்கான சிறப்பு ஒதுக்கீடு | — | 1,659.42 | 1,659.42 |
| | மொத்தம் | 13,778.93 | 7,362.93 | 21,141.86 |
| 3. | 29-2-92 முடிய செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | | | 17,444.89 |

4\. மனித உழைப்பு நாட்கள்

| | |
|---|---|
| இலக்கு | 758.040 இலட்சம். |
| சாதனை 29-2-92 முடிய | 674.857 இலட்சம். |

**5. எடுத்துக்கொள்ளப்பட்ட மற்றும் முடிக்கப்பட்ட பணிகள் விபரம் :**

| வரிசை எண். | விபரம். | எடுத்துக் கொள்ளப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. 29-2-92 முடிய |
|---|---|---|---|
| அ) | தொகுப்பு வீடுகள் எண்ணிக்கை | 50,000 | 19,482 |
| ஆ) | பள்ளிக்கட்டிடங்கள் (எண்ணிக்கை) | 1,066 | 171 |
| இ) | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையக்கட்டிடங்கள் (எண்ணிக்கை) | 1,409 | 210 |
| ஈ) | ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள் (எண்ணிக்கை) | 1,014 | 667 |
| உ) | தார் சாலைகள் | 2,436 கி.மீ. | 287.31 கி.மீ. |
| ஊ) | கிணறுகள் (எண்ணிக்கை) | 9,000 | 119 |
| எ) | கசிவு நீர்க்குட்டைகள் | 843 | |
| ஏ) | சிறுபாசனக் குளங்கள் | 1,980 | |
| ஐ) | ஊராட்சிப் பணிகள் | 15,584 | 5,749 |



**ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1992-93 ஆண்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள்.**

| வரிசை எண். | விபரம். | எண்ணிக்கை. | தோராயமான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | தொகுப்பு வீடுகள் (13,000 முந்தைய ஆண்டின் முடிவுறாப் பணிகள் மற்றும் 24,000 புதிய பணிகள்). | 37,000 | 5,000.00 |
| 2 | தார்ச்சாலைகள் | 2,423 கி.மீ. | 4000.00 |
| 3 | பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல் | 1,130 | 500.00 |
| 4 | சத்துணவுக்கூடங்கள் கட்டுதல் | 1,470 | 500.00 |
| 5 | பாசன கிணறுகள் வெட்டுதல் | 4,000 | 2,445.00 |
| 6 | பாசன ஏரிகளை மேம்படுத்துதல் | 1,300 | 500.00 |
| 7 | கசிவு நீர்க்குட்டைகள் | 500 | 500.00 |
| 8 | சமூகக்காடுகள் வளர்ப்புப் பணிகள் | 10,000 ஹெக்டேர். | 861.00 |
| 9 | ஊராட்சிகள் செய்யும் பணிகளுக்காக | | 2,917.00 |
| | மொத்தம் | | 17,223.00 |

## சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்.

இந்த துறையானது ஊரகப் பகுதிகளில், அடிப்படை மற்றும் வளர்ச்சிப் பணிகளை உள்ளாட்சி நிறுவனங்களின் வாயிலாக நிறைவேற்றி வருகிறது. கடந்த 40 வருடங்களில், பல்வேறு திட்டங்கள் செயலாக்கப்பட்ட போதிலும், ஊரகப் பகுதிகளில் போதுமான அளவு அடிப்படை வசதிகள் செய்யப்படவில்லை. எனவே, கீழ்க்காணும் இனங்களில் ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 1.00 கோடி வீதம், மொத்தம் ரூ. 386.00 கோடி முதலீட்டில், சிறப்பு தன்னிறைவுத் திட்டம் ஒன்றினை அரசு செயலாக்க ஆணையிட்டுள்ளது.

1. ஊரகக் குடிநீர் வழங்கல்
2. கிராம சாலைகள்
3. தெரு விளக்குகள்
4. பள்ளிக் கட்டிடங்கள்
5. சிறு பாசன குளங்களை மேம்படுத்துதல்
6. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவு மையக் கட்டிடங்கள் கட்டுதல்.
7. தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்

அரசு இச்சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தை செப்டம்பர் 1992 முடிய ஓராண்டில் செயல்படுத்தும் அளவில், மேற்படி திட்ட ஒதுக்கீடு ரூ. 386.00 கோடியை இரண்டு நிதியாண்டுகளில் வழங்க முடிவு செய்துள்ளது. அதன்படி ரூ. 194.62 கோடியை அரசு 1991-92 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 1991-92 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. ஊரகக் குடிநீர் வழங்குதல் .. | 5,999 குடியிருப்புகள் |
| 2. கிராமச் சாலைகள் .. | 3,880 கி. மீ. |
| 3. தெரு விளக்குகள் .. .. | 70,000 (எண்ணிக்கை) |
| 4. பள்ளிக் கட்டிடங்கள் .. | 1,068 (எண்ணிக்கை) |
| 5. (அ) சிறுபாசனக் குளங்கள் மேம்படுத்துதல் . . | 1,333 (எண்ணிக்கை) |
| (ஆ) கசிவு நீர்க்குட்டைகள் . | 343 (எண்ணிக்கை) |
| (இ) சானல்கள் தூர் அகற்றுதல் | 1,312 கி.மீ. |
| 6. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவு மையக் கட்டிடங்கள் கட்டுதல் . .. | 1,409 (எண்ணிக்கை) |
| 7. தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் .. .. | 978 (எண்ணிக்கை) |



## 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்டம்.

1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 194.00 கோடி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

1992-93 ஆம் ஆண்டிற்கும், எல்லா திட்ட அலுவலர்களாலும், திட்டம் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. ஊரகக் குடிநீர் வழங்குதல் | 2,973 குடியிருப்புகள் |
| 2. ஊரக சாலைகள் (தார் சாலைகள்) | 3,628 கி.மீ. |
| 3. தெரு விளக்குகள் .. .. | 80,508 |
| 4. பள்ளிக் கட்டிடங்கள் .. | 1,130 |
| 5. (அ) சிறுபாசனக் குளங்கள் .. | 1,231 |
| (ஆ) கசிவுநீர் குட்டைகள் .. | 344 |
| (இ) சானல்கள் தூர் அகற்றுதல் | 1,598 கி.மீ. |
| 6. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவு மையக் கட்டிடங்கள் கட்டுதல் .. .. | 1,470 |
| 7. தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் .. .. | 883 |

ஆனால், இவ்வாண்டில் பகிர்வு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்பவும், இவ்வாண்டில் திட்ட செயலாக்கத்திற்கு ஏற்பவும் திருத்தப்பட்ட திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

## சமூகக் காடுகள் திட்டம்.

தமிழ்நாட்டில் சமூகக் காடுகள் திட்டம் 1985-86 முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதி அளிப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் மக்கள் திட்டமாக செயல்பட்டு வந்தது. 1989-90 முதல் இத்திட்டம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு :

1. கிராமத்தில் வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல்.
2. கிராமப்புற மக்களுக்குத் தேவையான அளவு எரிபொருள் கிடைக்கச் செய்தல்.
3. சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதுகாத்தல்.
4. சுற்றுப்புறத்தை மேம்படுத்துதல்.

இந்த மரம் வளர்ப்புத் திட்டத்தில் நாற்றங்கால்கள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் ஊராட்சி நிலங்களில் நடப்பட்டு வருகிறது. இதைத் தவிர சமுதாய புறம்போக்கு நிலங்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் பட்டா நிலங்களிலும், கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கட்கு வழங்கப்பட்ட நிலங்களிலும், காசநோய் மருத்துவமனை, மறு வாழ்வு இல்லங்கள், அநாதை இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களில் உள்ள நிலங்களிலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங் குடியினர் வாழும் வீடுகளின் அருகிலுள்ள காலி நிலங்களில் வீட்டுச் செடிகளும் நடப்பட்டு வருகின்றன.

தோப்பு நடவாக இருந்தால் 10 முதல் 50 ஏக்கர் வரை உள்ள செடிகளை பாதுகாக்க மற்றும் வரிசை நடவாக இருந்தால் 3 முதல் 5 கி.மீ. வரை உள்ள செடிகளை பாதுகாக்க ஒரு பாது காவலர் நியமிக்கப்படுகிறார். அவருக்கு மாதம் ரூ. 350 ஊதியமாக வழங்கப்படுகிறது.

பட்டா நிலங்களில் பயிரிடப்பட்ட செடிகளைப் பராமரிக்க நில சொந்தக்காரர்களுக்கு செடி நட்ட நாளிலிருந்து பராமரிப்புத் தொகை மூன்று வருடங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

1992-93 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 625 இலட்சம் செலவில் 4,000 ஊராட்சிகளில் 10,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் 270 இலட்சம் மரக் கன்றுகள் நட்டு பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 25,000 ஆதி திராவிடர் குடியிருப்புகளில் வீட்டு செடி வளர்ப்புத் திட்டமும் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

சமூகக் காடுகள் திட்டத்தில் சாதனை விபரம்.

1990—91.

| வரிசை எண். | விபரம். | இலக்கு. | சாதனை. | விழுக்காடு. |
|---|---|---|---|---|
| 1 | செடிகள் உற்பத்தி (லட்சத்தில்). | 300.00 | 282.18 | 94 |
| 2 | செடிகள் நடுதல் (லட்சத்தில்). | 300,00 | 306.10 | 102 |
| 3 | மொத்த பரப்பு ஹெக்டேரில். | 10,000.00 | 104,90.68 | 105 |
| 4 | நிதி செலவினம் (ரூபாய் லட்சத்தில்.) | 610.930 | 677.570 | 110 |



1991-92 (பிப்ரவரி முடிய).

| ிசை ண். | விபரம். | இலக்கு. | சாதனை. | விழுக்காடு. |
|---|---|---|---|---|
| | செடிகள் உற்பத்தி (லட்சத்தில்). | 300.00 | 285.61 | 95 |
| | செடிகள் நடுதல் (லட்சத்தில்). | 300.00 | 291.56 | 97 |
| | மொத்த பரப்பு (ஹெக்டேரில்). | 10,000.00 | 10,636.00 | 106 |
| 4 | நிதி செலவினம் (ரூபாய் லட்சத்தில்) | 625.17 | 505.03 | 81 |

தேசிய கரிம வாயுத் திட்டம்.

1. மாட்டுச் சாணத்திலிருந்து உரத் தன்மையை அதிரித்தல்.

2. மகளிர் மற்றும் குழந்தைகள் தினந்தோறும் தலைச்சுமையாக விறகு எடுத்துச் செல்வதையும், மழைக்காலங்களில் விறகு சேமித்து வைக்க ஏற்படும் சிரமங்களையும் தந்தல்.

3. எரிப்பொருள் தட்டுப்பாட்டைக் குறைத்தல்.

4. புகையினால் ஏற்படும் தீமையிலிருந்து மகளிர் மற்றும் குழந்தைகளைக் காப்பாற்றுதல்., சமையல் நேரத்தைக் குறைத்தல், பாத்திரங்கள் கரி பிடிக்காமல் இருத்தல்.

5. காடுகளில் உள்ள மரங்களை வெட்டாமல் பாதுகாப்பதால் இயற்கை சூழல் பாதுகாத்தல்.

இத்திட்டம் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் 1981-82 முதல் தமிழ் நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் மார்ச் 1991 ஆண்டு முடிய 95,857 கலன்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்கு 8,000 கலன்கள் ரூ. 222 லட்ச நிதி மதிப்பீட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 31—1—1992 முடிய 4,458 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு 7,500 கலன்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

கலனுக்கான மானியங்கள், கலனின் அளவைப் பொறுத்தும் கல்ன் அமைப்போரில் பிரிவினைப் பொறுத்தும் (தாழ்த்தப்பட்டவர்/பழங்குடியினர்) வழங்கப்படுகிறது. கலன் அமைக்க மான்யம் (ரூபாய்) 1991-92-ல் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:—

| கலன்கள் கொள்ளளவு. | மலைப்பகுதி. | ஆதி திராவிடர், பழங் குடியினர். | சிறு/குறு விவசாயி மற்றும் நிலமற்ற ஏழை எளியவர்கள். | மற்றவர்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 2,400 | 2,000 | 2,000 | 1,700 |
| 2 | 3,600 | 2,100 | 3,100 | 2,200 |
| 3 | 4,300 | 3,600 | .. | 2,600 |
| | 4,900. அதற்கு மேலும். | 3,600 | .. | 2,800 |

மேலும் கலன்கள் அமைக்க சுழற்சாவி முகவர்களுக்கு ரூ. 409 ஒரு கலனுக்கு வழங்கப்படுகிறது. கிராம நல ஊழியர்களுக்கு ரூ. 50 ஒரு கலனுக்கு வழங்கப்படுகிறது.

கரிமவாயுத் திட்டத்தில் கலன்கள் அமைக்க திறமை வாய்ந்த பணியாளர்கள் தொகுப்பினை ஏற்படுத்த கீழ்க்காணும் பயிற்சிகளை 1991–92ல் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது :—

1. கலன்கள் கட்டுமானம் மற்றும் பராமரித்தல் பயிற்சி.

2. புத்தூட்டு பயிற்சி.

3. மகளிருக்கான ஒரு நாள் பயிற்சி (மற்றும்)

4. சாணத்தை மீண்டும் உரமாக மாற்றல் பயிற்சி, விவசாயிகளுக்கு அளித்தல்.



1992–93'ம் ஆண்டு முதல், பயனீட்டாளர்களின் திட்ட ஈடுபாட்டினை அறியும் பொருட்டு, வருடம்தோறும் சுமார் 50,000 பயனீட்டாளர்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. தேசிய கரிமவாயுத் திட்டத்தின் சீரிய நோக்கங்களை பரப்பும் பொருட்டு, மிகப் பெரிய அளவில் விளம்பரம் செய்ய மத்திய அரசின் நிதி உதவியினை நாடுவதற்கு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது ஊக்கம் மிகுந்த பயனீட்டாளர்கள் மற்றும் நிரந்தர கலன்கள் உபயோகிப்பவர்களுக்குத் திட்டத்தின் மீது ஆர்வத்தை தூண்ட வழி செய்கிறது.

## தேசிய மேம்படுத்தப்பட்ட ''சூளாத்திட்டம்''

தேசிய மேம்படுத்தப்பட்ட '' சூளாத் திட்டம், மத்திய அரசு முறைசாரா எரிபொருள் ஆதாரத் துறையால் 1983 ''டிசம்பர்'' முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித்துறையால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மகளிருக்கென ஏற்படுத்தப்பட்ட தனித்தன்மை வாய்ந்த இத்திட்டம், குறிப்பாக ஊரகப் பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலும் சுகாதாரத்தை பேணுவது மட்டுமின்றி எரிபொருள் சிக்கனம், வன பாதுகாப்பு ஆகியவைகளையும் பேணுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு :—

1. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் பயன்படுத்தப்படும் விறகினைக் குறைத்து அதன் முழுப் பயனையும் அடைதல்.

2. காட்டு மரங்கள் அழிப்பதை தடுத்தல்.

3. கிராமப்புறங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் மூலம் சூளா அடுப்புகள் கட்டப்படுவதால் வேலை வாய்ப்பினை அதிகரித்தல்.

4. சமையலறையிலிருந்து வெளிப்படும் புகையின் காரணமாக பெண்களுக்கு ஏற்படும் நுரையீரல் தொடர்புடைய நோய்கள் வராமல் பாதுகாத்தல்.

இத்திட்டம் துவங்கப்பட்ட 1983 ஆம் ஆண்டில் இருந்து 1990-91 ஆம் ஆண்டு வரை 7,86,968 மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 1991—92'ம் ஆண்டில் இத்திட்ட இலக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஆக நிருணயிக்கப்பட்டு 83,464 அடுப்புகள் 31—1—1992 வரை அமைக்கப்பட்டு உள்ளன. 1992–93 ஆம் ஆண்டுக்கு 1,20,000 சூளாக்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருவகையான '' சூளா -- அடுபபுகள் நிறுவப்படுகின்றன. ஒன்று நிலையான அடுப்பு. இதன் மொத்த விலையான ரூ. 67 ல் ரூ. 62 மானியமாக அளிக்கடபடுகிறது,

இரண்டாவது எடுத்துச் செல்லத்தக்க '' சூளா -- அடுப்பு. இதற் கான மொத்த விலையான ரூ. 120'ல் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு 75 விழுக்காடு மானியமும், ஏனையோரு க்கு 50 விழுக்காடு மானியமும் அளிக்கடபடுகிறது. இத்திட்டம் ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள் மூலமாக வும், மற்றும் காந்தி நிகேதன் ஆசிரமம், காந்தி கிராம பொறுப் பாட்சி, ஊரக தொழில் நுட்ப மையம், திருநெல்வேலி, ஊரக உரிய தொழில் நுட்ப மையம், நாகர்கோவில் போன்ற தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கோயம்புத்தூரில உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் பயிற்சி அளிக்கப்பட்ட சுய வேலை வாய்ப்பு பணி யாளர்களைக் கொண்டு இத்தகைய அடுப்புகள் நிறுவப்படுகின் றன. மேலும் சுய வேலைப பணியாளர்கள் ஒவ்வொரு சூளா அடுப்பினையும் ஒவ்வொரு மாதமும் பராமரித்து வருகிறார்கள். இதற்கென ஆண்டொன்டுக்கு அடுப்பு ஒன்றுக்கு ரூ. 10 வீதம் பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது.

## கிராம வேலைத் திட்டம்.

### இணைப்புச் சாலைகள் :

இணைப்புச் சாலைகள் மேம்படுத்துதல் போன்ற பணிகளை இத்திட்டத்தின் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்று கின்றன. 1992–93–ல் இத் திட்டத்திற்கென ரூ. 1,000 மட்டும் வரவு செலவுத் திட்டத்தில் அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 1989–90 முதல் இணைப்புச் சாலைப் பணிகள் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட நிதியிலிருந்தும், சிறப்புத் திட்ட நிதியிலிருந்தும் மேற்கொள்ளப்படுகின்றது.

### கால்நடை பராமரிப்பு மானியம் :

இந்த மான்யத்திற்கான நிதி ஒதுக்கீடு கால்நடை பரா மரிப்பு சம்பந்தமாக ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளு கின்ற வேலைத் திட்டங்களுக்காக உள்ளது. இந்த மான்யத் தைப் பெற ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், சம்பந்தப்பட்ட திட்டத்திற்கான பங்குத் தொகையை திரட்ட முன்வர வேண்டும்.

இந்த மான்யங்கள் வேலை முடிந்தவுடன் கொடுக்கப்படும் அடிப்படையில் வெளியிடப்படும். அதாவது, செலவினமானது முதலில் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டு பின்னர் கோட்ட வளர்ச்சி அலுவலகங்களால் ஒன்றிய நிதிக்கு ஈடு செய்யப்படும்.

1992–93–ஆம் ஆண்டிற்கு மேற்படி திட்டத்திற்கு அரசு ரூ. 7.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





### தலப்பாசன மானியம் :

தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 86 (1) பிரிவின்படி 100 ஏக்கர் ஆயக்கட்டுக்குட்பட்டுள்ள சிறுபாசன ஆதாரங்கள் தற்போது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிற்கு மாற்றப் பட்டுள்ளது. அதன் மூலம் 3,28,076 ஹெக்டேர் ஆயக்கட்டு களுக்கு 23,761 சிறுபாசன ஏரிகளை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தி லுள்ள அனைத்து சிறு பாசன ஏரியையும் ஐந்து வருட சுழற்சி முறையில் பராமரிப்பதற்கு திட்டம் வரையப்பட்டு தலப்பாசன மானியம் வழங்கப்படுகிறது.

1992–93–ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சமூகக் கல்வி மான்யம்

நமது மாநிலத்தில், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 384 தகவல் மையங்களும், 12,612 சமூகக் கல்வி மையங்களும் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

அரசு மான்யம், நிதியுதவியாக மேற்படி சமூகக் கல்வி மையம் ஒன்றுக்கு ரூ. 100–ம், தகவல் மையம் ஒன்றுக்கு ரூ. 400–ம் அளிக்கப்படுகிறது. மேற்படி நிதியுதவியில் (1) தமி ழரசு (2) திட்டம் ; (3) பஞ்சாயத்து செய்தி ; (4) பஞ்சா யத்து ராஜ் ஆகிய பத்திரிகைகள் வாங்குதல் மற்றும் மாவட்ட மாநில அளவில் நடைபெறும் பொருட்காட்சிகளில் பங்கேற்றல், குடியரசு தின அலங்கார அணிவகுப்பில் ஊரக வளர்ச்சித் துறை சார்பாக பங்கேற்றல் ஆகியவை மேற்கொள்ளப் படுகின்றன.

1992–93–ஆம் ஆண்டிற்கு ரூ. 15.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஊரக குடிநீர் வழங்கல் :

#### கை இறைப்பான்கள் மற்றும் விசை இறைப்பான்கள் பராமரிப்பு.

சமுதாயத்தில் நல்வாழ்விற்கு நல்ல குடி நீர் ஒரு முக்கிய மான தேவையாகும். தமிழ் நாட்டில் அனைத்து குடியிருப்பு களுக்கும் நல்ல குடிநீர் வழங்கிடத் தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் முனைப்புடன் மேற்கொண்டுள்ளது. இந்த பகிர்வு முறை, முறையாக நடைபெற்றிட, இறைப் பான்கள் பராமரிப்பு மூன்று அடுக்கு முறையில் கீழ்க்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

கிராம அளவில்—கை இறைப்பான்கள் பராமரிப்பதற்கென் பயன்பெறுவோர் மத்தியிலிருந்து ஒரு பராமரிப்பாளர் நியமனம்.

வட்டார அளவில்—பயிற்சி பெற்ற பொருத்துநர்.

கோட்ட அளவில்—உதவிப் பொறியாளருடன் கூடிய நடமாடும் குழு.

இதுதவிர மாவட்ட அளவில் ஒரு உதவி நிர்வாக பொறியாளரின் தலைமையில் விசை இறைப்பான் பராமரிப்பு பிரிவு செயல்பட்டு வருகிறது.

கிராமப் பகுதிகளில் 102,063 ஆழ்துளைக் கிணறு கை இறைப்பான்கள் 35,450 வடிமுனை குழாய் கை இறைப்பான்கள் 25,221 விசை இறைப்பான்கள் இயங்கி வருகின்றன. கை இறைப்பான்கள் மற்றும் விசை இறைப்பான்கள் பராமரிப்பு தொடர்பான அரைத் திங்களுக்கு ஒரு முறை ஊரக வளர்ச்சி ஆணையர் அவர்கள் திறனாய்வு செய்து தேவையான அறிவுரைகள் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளாக பழுதுகளின் விகிதம் இரண்டு விழுக்காட்டிற்குள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. பழுதுகளை உடனுக்குடன் நிவர்த்திசெய்து தங்கு தடையற்ற குடிநீர் விநியோகம் செய்வதற்கு மாவட்ட அளவில் உதிரி பாகங்கள் வாங்கி இருப்பில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கை இறைப்பான்களை பராமரிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு திருத்தி தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1. கை இறைப்பான்—வடிமுனை—ரூபாய் 100.
2. கை இறைப்பான்—ஆழ்குழாய்க் கிணறு—ரூபாய் 700
3. விசை இறைப்பான்—ரூபாய் 2,000.

பராமரிப்புச் செலவினை ஊராட்சி ஒன்றியமும் அரசும் கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ளும்.—

| ஆண்டொன்றுக்கு. (1) | அரசு மானிய உதவி. (2) | ஊராட்சியின் பங்கு. (3) |
|---|---|---|
| | | (சதவீதம்) |
| 1. ரூ. 5,000-த்திற்கு கீழ் வருமானம் உள்ள ஊராட்சிகள் | 100 | .. |
| 2. ரூ. 5,001-க்கு மேலும் ரூ. 10,000-குள் வருமானம் உள்ள ஊராட்சிகள் .. | 75 | 25 |
| 3. ரூ. 10,001-க்கு மேல் ரூ. 20,000-குள் வருமானம் உள்ள ஊராட்சிகள் .. | 50 | 50 |
| 4. ரூ. 20,001-க்கு மேல் வருமானம் உள்ள ஊராட்சிகள் | .. | 100 |



இத்தொகையில் 70 சதவீதம் ரூ. 395.15 இலட்சம் 1991–92-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த முழுத் தொகையான ரூ. 564.51 இலட்சம் 1992–93-ல் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| கை இறைப்பான்கள் .. .. .. | 319.07 |
| விசை இறைப்பான்கள் .. .. .. | 245.44 |
| மொத்தம் .. | 564.51 |

**ஊரகத் தொடர்புத் திட்டம்:**

கிராமப்புற மக்களிடையே கல்வி அறிவை வளர்க்க மட்டுமின்றி பொழுதுபோக்கு அம்சமாகவும், ஊரக தொடர்புத் திட்டம் இத்துறையின் மூலம் செயல்பட்டு வருகிறது. இதுவரை, 12,602 தொலைக்காட்சிப் பெட்டிகளும், 46,447 வானொலிப் பெட்டிகளும் அமைக்கப்பட்டு இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சிக்கும் குறைந்த பட்சம் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியாவது இருக்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கையாகும். அவ்வகையில், இது வரை 7,114 ஊராட்சிகளில், 12,602 தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து வாங்கிய தொலைக்காட்சிப் பெட்டிகளும் இவற்றில் அடங்கும். எஞ்சிய 6,150 ஊராட்சிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டும். வரும் ஆண்டுகளில் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 1991-92 முதற்கொண்டு அரசு செயல்படுத்தியுள்ள சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் சமுதாயத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குவது ஒரு முக்கியப் பணியாகக்

சேர்க்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 1992 மார்ச் வரை
யில் 978 தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குவதற்கு ரூ.
1.45 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் முதற்
கொண்டு நிறைவேற்றப்படவிருக்கும் சிறப்புத் தன்னிறைவுத்
திட்டத்திற்கு இரண்டாவது கட்டமாக 1992-93 ஆண்டிற்கு
883 தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குவதற்காக ரூ.
131.00 இலட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஊராட்சி
கள் தங்களுடைய நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகள்
வாங்குவதற்கு அரசு அனுமதித்துள்ளது. ஊராட்சிகள் ஏற்
றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் பட்டியல்களில் உள்ள தொலைக்
காட்சிப் பெட்டிகளை ஒப்புக் கொள்ளப்பட்ட விலைக்குத்
தங்கள் விருப்பம் போல் வாங்கிக் கொள்ளலாம்.

ஊராட்சிகளில் நிறுவப்பட்டுள்ள சமுதாயத் தொலைக்
காட்சிப் பெட்டிகளை இத்துறை பராமரித்து வருகிறது.
ஏறத்தாழ 250 தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு ஒரு
தொழில் நுட்ப உதவியாளர் என்ற முறையில் இத்தொலைக்
காட்சிப் பெட்டிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஒரு
தொலைக் காட்சிப் பெட்டிக்கு ஓர் ஆண்டிற்கு ரூபாய் 100
என்ற விகிதத்தில் பராமரிப்புச் செலவாக ஒவ்வொரு ஊராட்சி
யும் வழங்க வேண்டும்.

இதே போன்று சமுதாய வானொலிப் பெட்டிகளைப்
பராமரிக்க ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு மேற்பார்வை
யாளர் உள்ளார். அவர் 600 முதல் 800 வரையிலான சமு
தாய வானொலிப் பெட்டிகளைப் பராமரிக்கிறார். இதற்
காக ஓர் ஆண்டிற்கு ஒரு வானொலிப் பெட்டிக்கு ரூ. 30
எனும் விகிதத்தில் ஒவ்வொரு ஊராட்சியும் முதல் மூன்று
பெட்டிகளுக்கும், அதற்கு கூடுதலாக உள்ள ஒவ்வொரு
பெட்டிக்கும் 10 ரூபாய் எனும் வீதத்திலும் பராமரிப்புத்
தொகை செலுத்த வேண்டும். இவ்வகையில், ஒவ்வொரு
ஆண்டிற்கும் வருமானம் ரூ. 28 இலட்சம் அரசுக்குக் கிடைக்
கிறது.

<u>பயிற்சித் திட்டங்கள்.</u>

தமிழ்நாட்டிலுள்ள 1. பவானிசாகர், 2. பட்டுக்கோட்டை,
3. தே. கல்லுப்பட்டி, 4. எஸ்.வி. நகரம், 5. கிருஷ்ணகிரி
ஆகிய 5 ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள்
பின்வரும் அலுவலர்களுக்கு நடத்தப்படுகின்றன. ஊராட்சி
விரிவாக்க அலுவலர்கள் பயிற்சி, ஊராட்சி விரிவாக்க அலு
வலர் அல்லாத இதர விரிவாக்க அலுவலர்களுக்கான ஒருங்
கிணைந்த பயிற்சி, ஊர் நல அலுவலர் மற்றும் அமைச்சுப்
பணியாளர்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி, தொழில்
நுட்ப விரிவாக்க அலுவலர் பயிற்சி மற்றும் துணை வட்டார
வளர்ச்சி அலுவலர் பயிற்சி.



மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் நீங்கலாக, ஊர்நல அலு
வலர் (மகளிர்)க்கான பயிற்சி, விரிவாக்க அலுவலர் (சத்
துணவு, ச.ந.)-க்கான பயிற்சி, ஊரக விரிவாக்கப் பயிற்சி
நிலையம் சத்திய விஜய நகரம் மற்றும் தே. கல்லுப்பட்டி,
பயிற்சி நிலையங்களில் நடத்தப்படுகிறது.

மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் புத்தறிவு
பயிற்சிகள் 'துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும்,
விரிவாக்க அலுவலர் (பேரூராட்சி), மற்றும் கோட்ட வளர்ச்சி
அலுவலர்களுக்கும், அறிமுகப் பயிற்சி வட்டார வளர்ச்சி
அலுவலர்களுக்கும் நடத்தப்பட்டு வருகின்றன.

பயிற்சித் திட்டத்தில் மேலும் சில புதிய பயிற்சித் திட்
டங்களை சேர்க்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. 1. உதவியாளர்
மற்றும் ஊர்நல 'அலுவலர் நிலை 1 ஆகியவர்களுக்கு 15
நாட்கள் கணக்கு சம்பந்தப்பட்ட பயிற்சி மேலும்
வட்டார அளவில், 2. குழந்தை நல அமைப்பாளர்களுக்கான
3 நாள் பயிற்சி. 3. ஊராட்சி உதவியாளர்களுக்கான 5
நாள் பயிற்சி.

<u>நிதியுதவி பெறும் திட்டங்கள்.</u>

(அ) பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்பு டானிடா
ஆதரவு பெற்ற தருமபுரி மாவட்டம் தனிவளர்ச்சி வட்
டாரத்தில் நடைபெறும் சிறப்புப் பொதுப்பணி திட்டம்.

ஜெனிவாவிலுள்ள பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்பு
தருமபுரி மாவட்டத்திலுள்ள தனி வளர்ச்சி வட்டாரத்தில்
ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக 14.97 இலட்சம் அமெரிக்க
டாலர் நிதியுதவியுடன் (ரூ. 2.55 கோடி) பழங்குடியினர்
ஆதி திராவிடர், ஊரக நிலமற்ற தொழிலாளர்கள், சிறு
விவசாயிகள், குறு விவசாயிகள் ஆகியோருக்காக வேலை
வாய்ப்பை பெருக்கி வருமானம் கிடைக்கச் செய்யும் நட
வடிக்கைகளுக்காக பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்
பின் தொழில் நுட்ப உதவியுடன் சிறப்பு பொதுப்பணித் திட்டம்
ஒன்றை மேற்கொண்டுள்ளது. இந்த திட்டம் 1989 ஆம் ஆண்டு
ஜனவரி மாதம் ஆரம்பமானது. இந்த திட்டத்தின்கீழ் சிறு
பாசன திட்டங்கள், சமுதாயக்காடு வளர்ப்பு, கிராமப்புறச்
சாலைகள், கதர்-கிராமத் தொழில்கள், பட்டுப்புழு வளர்த்
தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1993
ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும்.

தருமபுரி மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தலைவராக
உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த திட்டத்தினை
செயற்படுத்தும் திட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்
பட்டுள்ளார். ஓசூரிலிருக்கும் சார் மாவட்ட ஆட்சியர் திட்ட
அலுவலராக பணி புரிகிறார்.

(இ) மத்திய ஊரக சுகாதாரத் திட்டம்.

மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக தீவிர சுகாதாரத் திட்டம் 1988–89 ஆம் ஆண்டு முதல் பெரியார் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத் தின் கீழ் யூனிசெப் நிதி உதவியுடனும் 35,000 கழிப்பிடங் கள் ரூ. 1600 செலவில் கட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரையிலும் 28,625 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தனியார் கழிப்பிடம் ஒன்றிற்கு ஆகும் செலவு ரூ. 1600 இத்தொகை, பயன்பெறுவோர் மத்திய அரசு, மற் றும் மாநில அரசுகளால் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படு கிறது.

| | ரூபாய். |
|---|---|
| (i) ஒரு கழிப்பிடத்திற்கு ஆகும் செலவு | 1 600.00 |
| (ii) (அ) பயனாளி பங்குத் தொகை, தாழ்த்தப் பட்டவர், பழங்குடியினர் மற்றும் வறு மைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் | 80.00 |
| (ஆ) மற்றவர்கள் | 320.00 |
| (iii) யூனிசெப் பங்கு | 400.00 |
| (iv) மாநில அரசின்பங்கு | மீதித் தொகையில் 50% |
| (v) மத்திய அரசின் பங்கு | மீதித் தொகையில் 50% |

இத்திட்டம் அடைந்த அமோக மதிப்பீட்டினைத் தொடர்ந்து 1991–92 ஆம் ஆண்டிற்கு பெரியார் மாவட்டத்தில் மேலும் 10,000 கழிப்பிடங்கள் கட்டுவதற்கு குறியீடு நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டதினை 1992–93 ஆம் ஆண்டிலும் தொடரு வதற்கு மத்திய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.





(உ) டானிடா உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த ஊரக சுகாதாரம் மற்றும் குடிநீர் திட்டம்.

ஒருங்கிணைந்த ஊரக சுகாதாரம் மற்றும் குடிநீர்த் திட்டம் தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலோரத் தைச் சேர்ந்த மரக்காணம் மற்றும் பரங்கிப் பேட்டை ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களில் டானிடா நிதி உதவி யுடன் கீழ்காணும் திட்டப்பணிகளை நிறைவேற்றும் பொருட்டு செயல்படுத்தப்படுகின்றது.

1. திட்டமிட்ட கிராமங்களில் ஒருங்கிணைந்த ஊரக சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள் செய்து கொடுப்பதன் மூலம் மக்களின் சுகாதாரத் தரத்தை மேம்படுத்துதல்.

2. சுகாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு மற்றும் திட்ட விரிவாக்கம் இவற்றின் மூலம் ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகளை பெருக்கி கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது.

3. ஊரக குடிநீர் வழங்கல் மற்றும் சுற்றுப்புற சுகாதாரத் திட்டப் பணிகளை செயல்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவது.

4. குடிநீர் மற்றும் சுகாதார நலப்பணிகள் குறித்த கருத்துகளை ஊரக மக்களிடையே குறிப்பாக பெண்கள் இடையே ஊக்குவிப்பது.

இத்திட்டத்தை $3\frac{1}{2}$ ஆண்டு காலத்தில ரூ. 822.90 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

1992–93 ம் ஆண்டிற்கு ரூ. 254.07 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) உலக வங்கித் திட்டம் :

உலக வங்கி நிதியுதவியுடன் ஊரக குடிநீர்த் திட்டம் ரூ. 47,683 கோடி செலவில் நடைமுறைப் படுத்துவதற்கு ஊரக வளர்ச்சித் துறையால் நிர்மா ரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 5 ஆண்டுகளில் சேலம், தென்னாற்காடு, தர்மபுரி, மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய நான்கு மாவட்டங் களிலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 10,000 ஆழ்துளை கிணறுகளும் 2,000 வடிமுனைக் குழாய் களும் நிறுவப்பட உள்ளது. மற்றும் கைஇறைப்பான்களின் பராமரிப்பு செலவிற்காகவும் இத்தொகையில் ஒரு பகுதி செலவிடபபட்டுள்ளது. இத்திட்டம் 1991–92-ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

1991-92-ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ. 201.62 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 171.56 இலட்சங்கள் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக வழங்கப் பட்டுள்ளது. மேலும் 1991-92'ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 500 ஆழ்துளை கிணறுகள் 4 மாவட்டங்களில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு இப்பணி முடியும் தருவாயில் உள்ளது. 1992-93 ம் ஆண்டில் 3,000 ஆழ்துளை கிணறுகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பேரூராட்சிகள் நிர்வாகம் :

தமிழ்நாட்டின், மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கான சுமார் ஒரு கோடி மக்கள் 647 பேரூராட்சிகளில் வாழ்கி றார்கள். பேரூராட்சிகள் நான்கு நிலைகளைக் கொண் டுள்ளது,

| | | |
|---|---|---|
| | இரண்டாம் நிலை | 77 |
| | முதல் நிலை | 263 |
| நகரியம் | தேர்வுநிலை | 291 |
| | தேர்வுநிலை | 3 |
| | சிறப்புநிலை | 13 |
| | | 647 |

## பேரூராட்சிகளின் கடமைகள்

பேரூராட்சியின் கடப்பாடு பணிகளில் சாலைகள் அமைத்து பராமரித்தல், தெரு விளக்குகள் அமைத்தல், தெருக்களை தூய்மைப்படுத்துதல் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் ஆகியவை அடங்கும்.

## பேரூராட்சியின் நிதி ஆதாரங்கள் :

வீட்டுவரி, தொழில்வரி, மற்றும் வாகன வரி ஆகியவை பிரதான வருவாயாகும். முத்திரை வரி தண்டம், கேளிக்கை வரி, பலன்தரத்தக்க இனங்களிலிருந்து கட்டணம் வசூலித்தல் கட்டிடங்கள் அனுமதி கட்டணம் மற்றும் தண்ணீர் வரி ஆகியவை பேரூராட்சிகளின் இதர முக்கிய வருவாய்களாகும்.

## குடிநீர் வழங்குதல் :

பேரூராட்சி பகுதியில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங் குதல் பேரூராட்சிகளின் அடிப்படை பணிகளில் ஒன்றாகும். ரூ. 3.00 லட்சம் மதிப்பீட்டிற்குமேல் உள்ள பாதுகாக் கப்பட்ட குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டப்



பணிகள் ஆயுள் காப்பீட்டுக் கழகம், உலக வங்கி மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழக நிதி உதவியுடன் செயல்படுததப்படுகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியததின் மூலம் செயல்படுத்தப்படும் ஊரக குடிநீர் திட்டப் பணிகள் இனிமேல் மாவட்ட ஊரக குடிநீர் விநியோக முகமை மூலமாக செயல்படுததப்படும். இம் முகமை ஊரகப் பகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டததையும் செயல்படுத்தும்.

647 பேரூராட்சிகளில் 354 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 141 பேரூராட்சி களில் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் இருந்து வருகின்றன. மீதமுள்ள 152 பேரூராட்சிகளில் திட்டம் செயல்படுத்தப் பட வேண்டும்.

மக்களின் உடனடித் தேவைகளை கவனிக்க பேரூராட்சிகள் நகரியங்கள் உள்பட 18,937 கைஇறைப்பான்களையும், 3,371 விசைஇறைப்பான்களையும் பராமரித்து வருகின்றன. இவைகள் தவிர திறந்த வெளிக் கிணறுகளும் உள்ளன. மேற்படி இறைப்பான்களை பராமரிக்க ஆண்டுத் தேவை ரூ. 50,00 லட்சம் ஆகும். ஆனால் இறைப்பான்கள் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 36.55 லட்சம் மட்டுமே அரசு மானியமாக ஒதுக்கீடு செய்யப் படுகிறது. ஒதுக்கீட்டிற்கு மேல் ஏற்படும் செலவினத்தை நிதி வசதியுள்ள பேரூராட்சிகள் தங்கள் பொது நிதியி லிருந்து ஏற்கின்றன.

1991-92'ம் ஆண்டுகளில் சிறிய அளவிலான குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ. 30.00 லட்சம் 15 பேரூராட்சி களுக்கு அரசு மானியமாக அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத் தின் கீழ் ஒன்று அல்லது இரண்டு ஆழ்துளை கிணறு அமைக்கவும், சிறிய மேல்நிலை தேக்கத் தொட்டி மற்றும் பொதுக் குழாய் அமைக்க பேரூராட்சிகளில் வேலை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

## துப்புரவு மற்றும் வடிகால் திட்டம் :

முறையாக துப்புரவு செய்தலும், கழிவுநீர் மற்றும் வடிகால் நீரை அகற்றுவதும் பேரூராட்சிகளின் தலையாய கடமை களில் ஒன்றாகும். பேரூராட்சிகளில் உள்ள மொத்த 12,662 கி. மீ. நீளமுள்ள தெருக்களில் 4,932 கி.மீ. நீளத்திற்கு மட்டும் வடிகால் அமைக்கப்பட்டுள்ளன 1991—92 ம் ஆண் டிற்கு ரூ. 10.00 லட்சம் அரசு மானியமாக அனுமதிக்கப் பட்டுள்ளது. 1992-93'ம் ஆண்டிற்கும் ரூ. 10.00 லட்சம் மானியமாக இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

வடிகால் திட்டத்துடன் மிகவும் நெருக்கமாக இணைந்துள்ளது துப்புரவுபணியாகும். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் கழகத்தின் கடனுதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த குறைந்த செல விலான கழிப்பிடம் அமைக்கும் திட்டம் 10 பேரூராட்சிகளில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.. இதன் மூலம் 2534 உலர் கழிப் பிடங்கள் சுகாதாரக் கழிப்பிடங்களாக மாற்றப்பட உள்ளன. கீழ்க்கண்ட நிதி அடிப்படையில் இத்திட்டம் செயலபடுத்தப் பட்டு வருகிறது.

| (1) | தரை மட்டம் வரை (2) | மேற் கூரைக்கு (3) |
|---|---|---|
| | விழுக்காடு. | |
| 1. மைய அரசு நிதி உதவி .. | 45 | .. |
| 2 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழக கடனுதவி. | 50 | 90 |
| 3. பயனடைவோர் பங்கு .. | 5 | 10 |

இத்திட்டம் தவிர சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் மூலம் உலக வங்கி நிதி உதவியுடன் சென்னை பெருநகரைச் சுற்றி அமைந்துள்ள பேரு ராட்சிகளில் 14 பொது கழிப்பிடங்கள் ரூ. 21.00 லட்சம் மதிப பீட்டில அமைக்கப்பட உள்ளன.

<u>சாலைகள் :</u>

பேரூராட்சிகள் கீழ்க்கண்ட சாலைகளை பராமரித்து வரு கின்றன.—

1. கான்கிரீட் சாலைகள்
2. தார் சாலைகள்
3. கருங்கல் சாலைகள்
4. சரளைக்கல் சாலைகள்
5. மண் சாலைகள்.

நலிந்த நிதிநிலை காரணமாக பேரூராட்சிகள் சாலைகளைப் பராமரிக்க முடியாத நிலையில் உள்ளன. பேரூராட்சிகளின் சாலைகளைத் தரம் உயர்த்த 1991-92-ம் ஆண்டிற்கு ரூ. 40.00 லட்சமும், 1992-93-ம் ஆண்டிற்கு ரூ. 40.00 லட்சமும் மானிய மாக அனுமதிக்கப்பட்டுள்ளது.



மேலும் பேரூராட்சி பகுதியில் தூசிப்படியாத சாலை அமைக் கும் திட்டங்களின்கீழ் 1991-92-ம் ஆண்டிற்கு ரூ. 50.00 லட்ச மும், 1992-93-ம் ஆண்டிற்கு ரூ. 50.00 லட்சமும் மானியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

<u>தெரு மின் விளக்குகள் பராமரிப்பு :</u>

நலிவுற்ற பேரூராட்சி பகுதியில் உள்ள தெரு மின்விளக்கு களை சரிவரப் பராமரிக்கவும், நிலுவை மின்கட்டணத்தைச் செலுத்தவும், பழுதற்ற மின் சாதனங்களை புதுப்பிக்கவும் 1991 -92-ம் ஆண்டிற்கு மானியமாக ரூ. 100.00 லட்சம் அரசு மானியம் அனுமதிக்கப்பட்டு எல்லா மாவட்டங்களுக்கும் பிரித் தளிக்கப்பட்டுள்ளது.

<u>பொது சுகாதாரம் :</u>

பேரூராட்சி மற்றும் நகரியங்களில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்கள் மழைக்காலங்களில் பொது சுகாதாரப் பணிகளை தடையின்றி மேற்கொள்ள 50 சதவீத அரசு மானியம், 50 சதவீத உள்ளாட்சிகளின் பங்கு என்ற அடிப்படையில் மழைக்கோட்டு 1991-92-ம் ஆண்டில் எல்லா மாவட்டங்களுக்கும் 4610 மழைக் கோட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

<u>பயன்தரத்தக்க முயற்சிகள் :</u>

<u>ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் :</u>

பேரூராட்சிகளில் நிதி ஆதாரத்தைப் பெருக்கவும், அந்நிதி யைக் கொண்டு தாமாகவே செயல்படவும் அரசு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தை பேரூராட்சிகளில் அறி முகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் பேருந்து நிலையங்கள் கட்டுதல், கடைகள் வளாகம், அங்காடிகள், தங்குமிடங்கள் கட்டுதல் போன்ற பயன்தரத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன. இத்திட்டம் இதுவரை 125 பேரூராட்சிகளில் ரூ 1,822.90 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

<u>சிறிய மற்றும் நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டம் :</u>

இந்திட்டம் இதுவரை 7 பேரூராட்சிகளில் ரூ 628.00 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.—

1. பேருந்து நிலையங்கள் கட்டுதல்.
2. கடைகள் வளாகம்.
3. சிறிய கடைகள் மற்றும் தங்குமிடங்கள்,

**ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் :**

இத்திட்டம் 1990-91-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 1991-92-ம் ஆண்டில் ரூ. 1422.80 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பேரூராட்சிகள் மற்றும் நகரியங்களில் 8086 எண்ணிக்கையுள்ள சமுதாய சொத்துக்கள் உருவாக்கும் வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவை கீழ் வருமாறு :

| (1) | நிதி ஒதுக்கீடு (2) | (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. தொகுப்பு வீடுகள் கட்டுதல .. .. | 5938 | 8,33.13 |
| 2. சாலைகள் .. .. | 474 | 2,44.47 |
| 3. வடிகால்கள். .. .. .. | 181 | 39.16 |
| 4. சிறு பாலங்கள் .. .. | 53 | 4.88 |
| 5. இதர வேலைகள் .. .. | 1440 | 3,01.16 |
| மொத்தம் .. | 8086 | 14,22.80 |

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

நீலகிரி மாவட்டத்தில மலைப் பகுதியில் அமைந்துள்ள பேரூராட்சிகளுக்கு 1991-92-ம் ஆண்டில் கீழ்க்கண்ட வேலைகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

| திட்டம். (1) | ஒதுக்கீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. தடுப்புச் சுவர் கட்டுதல்) (7 பேரூராட்சிகள், 9 வேலைகள்). | 4.00 |
| 2. குடிநீர் வழங்கும் திட்டம் (4 பேரூராட்சிகள், 6 வேலைகள்). | 3.00 |
| | 7.00 |



**மானியக் கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்.**

**1992–93.**

**(ரூ. 171.0665 கோடி)**

**தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம்.**

**1. முன்னுரை :**

தமிழகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே தனது தலையாய பொறுப்பாக தமிழக அரசு கருதுகின்றது. தமிழக அரசு இதற்கென முன்னுரிமை கொடுத்து குடிநீர் மற்றும் துப்புரவு பணிகளை துரிதபடுத்தும் பொருட்டு 1971 ஆம் ஆண்டு 'தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்' என்றதொரு அமைப்பினை உருவாக்கியது. இந்த வாரியம் 14–4–1971-ல் இருந்து செயல்பாட்டில் இருந்து வருகிறது. சென்னை பெருநகர்ப்பகுதி தவிர்த்து தமிழகத்தின் ஏனைய பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் அளிக்கும் பொருட்டு இவ்வாரியத் திட்டம் பணிக்கப்பட்டுள்ளது. 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்' வெவ்வேறு அளவுகளில் குடிநீர்த் திட்டங்களை ஆய்வு செய்து உருவாக்கி நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாளடைவில் குடிநீர்த் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றத் தக்க வகையில், நிலநீர் இயல். ஆழ்துளையிடுதல் குடிநீர் தரக்கண்காணிப்பு போன்ற பிரிவுகளில் போதிய அனுபவமும் திறமையும் பெற்றுத் திகழ்கிறது.

**2. ஊரக குடிநீர் வழங்கல் :**

ஊரகப் பகுதியில் குடிநீர்த் திட்டங்கள் மத்திய அரசின் துரிதப்படுத்தப்பட்ட ஊரக குடிநீர்த்திட்டம் (Accelerated Rural watersuppy Programme) மற்றும் மாநில அரசின் குறைந்தபட்ச தேவை திட்டம் (Minimum Needs Programme) ஆகியவற்றின் கீழ் முழு மான்யமாக நிறைவேற்றப்படுகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்தும் கடனாக நிதி பெற்று, ஊரக குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. குறைந்தது நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் அளவுக்காவது குடிநீர் வழங்கி கிராம மக்களின் முழு குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வது என்பதே தலையாய நோக்கமாகும். ஊரக மக்களுக்கு குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டு போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும் இந்த குறிக்கோளை அடைவதில் மக்கள் தொகைப் பெருக்கம் புதிய குடியிருப்புகள் உருவாக்கம், போதிய நீர் ஆதாரமின்மை ஆகிய எண்ணற்ற காரணங்களினால் தாமதம் ஏற்படுகிறது.

அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தமிழகத்தில் குடியிருப்புகளின் எண்ணிக்கை, எவ்வாறு கடந்த ஆண்டுகளில் அதிகரித்துக் கொண்டே வந்திருக்கின்றன என்பதை கீழ்க்கண்ட விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

| ஆய்வு செய்த ஆண்டு: | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1977 | 47,085 |
| 1985 .. .. .. | 64,083 |
| 1996 .. .. .. | 75,780 |

இந்த ஆய்வுகள் ஊரகப் பகுதிகளின் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாய் திகழ்கின்றன. கடந்த 1990–91 மற்றும் 1991-92 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபின் 29–2–1992-ன் நிலவரப்படி தமிழகத்தில் உள்ள ஊரக குடியிருப்புகளின் குடிநீர் வசதி குறித்த விவரம் வருமாறு:—

| தகுதி. | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|
| முழு அளவு குடிநீர் வசதி பெற்றவை.. | 34,882 |
| குடிநீர் பற்றாக்குறை உள்ளவை.. | 40,876 |
| குடிநீர் வசதி இல்லாதவை.. | 22 |
| மொத்தம் .. | 75,780 |

1–4–1991-ன் நிலவரப்படி 2,483 ஊரகக் குடியிருப்புகள் குடிநீர் வசதியே இல்லாமல் இருந்தன. இந்த குடியிருப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு 29–2–92 வரை 2,461 குடியிருப்பு களுக்கு குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது உருவாக்கி கொடுக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 22 குடியிருப்புகளுக்கும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது விரைவில் உருவாக்கிக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தாம் பதவியேற்றதும் மாநிலத்தின் குடிநீர் நிலவரம் பற்றி ஆய்வு நடத்தி, அதன் அடிப்படையில் மாநிலத்தில் குடிநீர் வசதி அளிக்கப்படாமல் இருக்கும் அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 1991-ஆம் ஆண்டு இறுதிக்குள் குடிநீர் வசதி அளிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். இதன்படி இப்பணியின் செயலாக்கம் போர்க்கால அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டது. 1–4–1991-ன் நிலவரப்படி குடிநீர் வசதி அளிக்கப்படாமல் இருந்த 1,418 ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் குடியிருப்புகளுக்கும் 1991-ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒவ்வொரு குடியிருப்பிலும் குறைந்தது ஒரு நீராதாரமாவது உருவாக்கப்பட்டுள்ளது.



1991-92—ம் ஆண்டில் குடிநீர் வசதி இல்லாத மற்றும் குடிநீர் பற்றாக்குறை உள்ள 5,849 குடியிருப்புகளுக்கு ரூபாய் 65.50 கோடி செலவில் முழு அளவு குடிநீர் வசதியளிக்க திட்டமிடப் பட்டது. இதில் 29–2–92 வரை 4,329 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில் குறைந்தது ரூபாய் 14.00 கோடியாவது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு பயன் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இதன்படி 14–1–1992—ல் தமிழக கிராமங்களின் குடிநீர் நிலவரம் கீழ்வருமாறு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

| தகுதி. | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|
| முழு அளவு குடிநீர் வசதி பெற்றவை | 36,706 |
| குடிநீர் பற்றாக்குறையுள்ளவை .. | 39,074 |
| மொத்தம் .. | 75,780 |

1992-93 ஆம் ஆண்டில் 3,653 குடிநீர் பற்றாக்குறையுள்ள குடியிருப்புகளுக்கு ரூபாய் 60.19 கோடி செலவில், குடிநீர் வசதி யளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் துரிதப்படுத்தப்பட்ட ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் (Accelerated Rurel Water-Supply Programme) மத்திய அரசின் நிதியுதவி ரூ. 30.00 கோடியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஊரகக் குடிநீர் திட்டத் தின் குறைந்தபட்சத் தேவை திட்டத்தின் கீழ் (Minimum Needs Programme) 1992-93ம் ஆண்டில் 33 ஊரக பேரூராட்சிகளுக்கு ரூபாய் 10.00 கோடி செலவில் குடிநீர் வசதியளிக்கப்பட திட்ட மிடப்பட்டுள்ளது:

ஊரகப் பகுதியில் குடிநீர்த் திட்டங்களை திட்டமிட ஊரக குடியிருப்புகளில் குடிநீர் வசதி அளவுகள் (Servic Leval) முதன்மை யாக கருத்தில் கொள்ளப்படுகிறது. 1990-ஆம் ஆண்டின் மறு ஆய்வின் முடிவுகளின்படி 1–4–1992-ல் ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி பற்றிய நிலவரம் பின்வருமாறு;

| நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு கொடுக்கப்படும் நீரின் அளவு. | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|
| '0' லிட்டர் .. .. | 9,918 |
| 11—10 லிட்டர் .. .. | 4,436 |
| 11—20 லிட்டர் .. .. | 15,604 |
| 21—30 லிட்டர் .. .. | 7,642 |
| 31—39 லிட்டர் .. .. | 1,474 |
| 40 லிட்டர் மற்றும் அதற்கு மேலும் | 36,706 |
| மொத்தம் .. .. | 75,780 |

[1992 ஏப்ரல் 6

மேலே குறிப்பிடப்பட்டவைகளில் குடிநீர் வசதியளவு பூஜ்ஜியமாக உள்ள குடியிருப்புகளுக்கு முதலில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு பின்னர் குறைந்த அளவு குடிநீர் வசதி உள்ள குடியிருப்புகள் அவ்வப்போது நிலவும் குடிநீர் வசதிக்கேற்ப கருத்திற் கொள்ளப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

எப்பொழுதும் ஊரக குடியிருப்புகளுக்கு போதுமான அளவு குடிநீர் வசதி அளிப்பதே பிரத்தியேகமாக கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையின் மேலும் ஒரு படியாக சுமார் 9,000 ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டு ரூ. 530.00 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு உலக வங்கியின் நிதியுதவி கோரப்பட்டுள்ளது

1–4–1992–ம் தேதி நிலவரப்படி ஊரக குடியிருப்புகளில் உள்ள குடிநீர் வசதியை கணிக்கும் பொருட்டு மறு ஆய்வு நடத்துமாறு இந்திய அரசு மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டது. இதன்படி மறு ஆய்வு செய்வதற்கான பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இனிவரும் எதிர்கால திட்டங்கள் இந்த மறு ஆய்வின் முடிவினைச் சார்ந்து மேற்கொள்ளப்படும்.

இந்திய அரசு கிராம குடிநீர் திட்டப் பணிகளை விரைந்து செயலாக்கி துரிதமான முன்னேற்றம் காணும் பொருட்டு தொழில் நுட்ப இயக்கம் (Technology Mission) என்ற செயல் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இராமநாதபுரம் சேலம், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்கள் இதன்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் பணி முன்னேற்றம் மற்றும் நிதிநிலை முன்னேற்றம் பற்றிய அறிக்கைகள் பின்வருமாறு:

(1) பணி நிலை முன்னேற்றம்.

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | நீர் ஆதாரம் அமைத்தல். | | முடிக்கப்படும் திட்டங்கள். | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை. | இலக்கு | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. இராமநாதபுரம் | 496 | 496 | 179 | 156 |
| 2. தென் ஆற்காடு | 451 | 416 | 100 | 82 |
| 3. சேலம் .. | 725 | 706 | 117 | 97 |



1992 ஏப்ரல் 6]

(2) நிதி நிலை முன்னேற்றம் :

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | ஒப்புதல் வழங்கப் பட்ட தொகை. | பெறப் பட்ட தொகை. | செலவழிக் கப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| 1. இராமநாதபுரம் .. | 419.259 | 403.857 | 323.35 |
| 2. தென் ஆற்காடு | 230.850 | 220.000 | 193.74 |
| 3. சேலம் .. .. | 460.060 | 277.500 | 350.13 |

தொழில் நுட்ப இயக்கத்தின் கீழ் 20 உவர்ப்பு நீர் சுத்திகரிக்கும் நிலையங்கள், 11 புளூரைடு சுத்திகரிக்கும் நிலையங்கள் மற்றும் 1 இரும்பு பிரித்தெடுக்கும் நிலையம் முன்னோட்டமாக நிறுவப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணப் பணிகள் :

1991–92-ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் ரூ. 6.21 கோடி செலவில் 1,773 ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் 1,548 ஆழ்துளை குழாய் கிணறுகள் ரூ.5.60 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன மீதம் உள்ள கிணறுகள் விரைவில் அமைக்கப்படும்.

போதிய மழையின்மையால் 1992-93-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சில மாவட்டங்கள் கடுமையான வறட்சியினை எதிர் நோக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேவைகளுக்கேற்ப அம்மாவட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

3, நகரக குடிநீர் வசதி ;

தமிழ்நாட்டில் நகர வளர்ச்சி அதிவேகமாக உள்ளதால் குடிநீர்த் தேவையும் மிக அதிகமாக உள்ளது. நகர பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகள் கடன் மற்றும் நிதியுதவி அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன. நகராட்சிகளில் குடிநீர் திட்டங்கள் 100 சதவீதம் அரசு கடன் மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. பேரூராட்சிகளில் திட்டங்கள் 70 சதவீதம் அட்கோ, அல்லது ஆயுள்காப்பீட்டுக் கழகக் கடன் மூலமாகவும் 30 சதவீதம் அரசு நிதியுதவி மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன. அண்மையில் குடிநீர் திட்ட பணிகளுக்காக கடனுதவி பெறும் பொருட்டு 'அட்கோ' நிறுவனத்தை அணுகப்பட்டது.

**1-4-1991-ஆம் தேதியின்படி, நகர குடிநீர் நிலவரம் வருமாறு:**

| வரிசை எண். | நகர தகுதி. | மொத்தம். | குடிநீர் வழங்கப்பட்டு உள்ளவை. | குடிநீர் வழங்கப்பட வேண்டியவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | மாநகராட்சிகள் .. | 2 | 2 | .. |
| 2. | நகராட்சிகள் .. | 99 | 95 | 4 |
| 3. | நகராட்சி நகரியங்கள் | 7 | 5 | 2 |
| 4. | பேரூராட்சிகள்— | | | |
| | நகரம் .. .. | 366 | 245 | 121 |
| | ஊரகம் .. .. | 266 | 61 | 205 |
| 5. | ஊராட்சி நகரியங்கள் | 16 | 9 | 7 |
| | மொத்தம் .. | 756 | 417 | 339 |

1991-92-ஆம் ஆண்டில் 12 நகர குடிநீர் திட்டங்கள் (புதியவை மற்றும் அபிவிருத்தி திட்டங்கள்) திட்டமிடப்பட்டு அனைத்தும் முடிக்கப்பட்டது. 1992-93-ம் வருடத்தில் ரூ. 31.80 கோடி செலவில் 17 குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்படும்.

1-1-1992-ல் நகரிய நகரங்களின் குடிநீர் நிலவரம் பின் வருமாறு இருக்கும் என்று ஆய்வு செய்யப்பட்டுள்ளது:

| வரிசை எண். | நகரதகுதி. | மொத்தம். | குடிநீர் வசதி அளிக்கப்பட்டவை. | குடிநீர் வசதி அளிக்கப்பட வேண்டியவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | மாநகராட்சிகள் .. | 2 | 2 | .. |
| 2. | நகராட்சிகள் .. | 100 | 99 | 1 |
| 3. | நகராட்சி நகரியங்கள் | 7 | 5 | 2 |
| 4. | பேரூராட்சிகள்— | | | |
| | நகரம் .. ... | 365 | 261 | 104 |
| | ஊரகம் .. .. | 265 | 86 | 180 |
| 5. | ஊராட்சி நகரியங்கள் | 16 | 13 | 3 |
| | மொத்தம் .. | 756 | 466 | 290 |



**4. நகர வடிகால் திட்டங்கள் :**

பாதாள சாக்கடை திட்டங்கள் 2 மாநகராட்சிகள், 12 நகராட்சிகள், 1 நகராட்சி நகரியம், 1 ஊராட்சி நகரியம் ஆகிய 16 நகரங்களுக்கு முழுமையாகவும் பகுதியாகவும் நிறைவேற்றப் பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், சேலம், திருச்சி ஆகிய மூன்று நகரங்களில் முன்னேற்றத்தில் உள்ள பாதாள சாக்கடை திட்டப் பணிகளை முடிக்கும் பொருட்டு ரூ 0.84 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் 29-2-92 வரை ரூ. 0.72 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு சேலம், கோயம்புத்தூர் பாதாள சாக்கடை திட்டங்களை செயல்படுத்த ரூ. 2.00 கோடி ஒதுக்கீடு உத்தேசிக்கப் பட்டுள்ளது. 1992-93-ல் கோவை பாதாள சாக்கடை திட்டம் முடிக்கப்படும்.

**5. உலக வங்கி திட்டம் :**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உலக வங்கி கடனுதவி யுடன் தமிழ்நாடு குடிநீர் மற்றும் துப்புரவு திட்டத்தை நிறை வேற்றி வருகிறது. முதலில் இத்திட்டம் ரூ. 149.42 கோடி களுக்கு மதிப்பிடப்பட்டு கீழ்க்கண்ட துணைத் திட்டங்களை உள்ளடக்கியிருந்தன:

| துணைத் திட்டத்தின் பெயர். | பயன்பெறும் நகரங்கள். |
|---|---|
| (1) | (2) |
| பகுதி 1—கோயம்புத்தூர் குடிநீர் துணைத் திட்டம். | கோவை மாநகராட்சி, 20 நகர பேரூராட்சிகள் 521 ஊரக குடியிருப்புகள். |
| பகுதி 2—மதுரை குடிநீர் துணைத் திட்டம். | மதுரை மாநகராட்சி. |
| பகுதி 3—சேலம் குடிநீர் | சேலம், சூரமங்கலம் மற்றும் ஆத்தூர் நகராட்சிகள். 9 நகர பேரூராட்சிகள் மற்றும் 267 ஊரக குடியிருப்புகள். |
| பகுதி 4—44 நடுத்தர நகரங்களுக்கான குடிநீர் துணைத் திட்டம். | சீர்காழி நகராட்சி மற்றும் 43 நகர பேரூராட்சிகள். |
| பகுதி 5—குறைந்த செலவு துப்புரவு துணைத் திட்டம். | 14 நகராட்சிகள். |

இத்திட்டத்திற்கு உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன் தொகை 70.60 மில்லியன் எஸ்.டி..ஆர் Special Drawing Rights) ஆகும். இந்திய ரூபாயின் மதிப்பை விட எஸ்.டி.ஆரின் மதிப்பு உயர்ந்ததால் உலக வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை மீதமாகும்.

இவ்வாறு மீதமாகும் உலக வங்கியால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகையை முழுவதும் பயன்பெறும் வகையில் மேலும் 6 நகராட்சிகள், 2 நகர பேரூராட்சிகள், 2 ஊரக பேரூராட்சிகள் மற்றும் 170 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் துணைத் திட்டங்கள், ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்களுடன் சேர்க்கப்பட்டு இத்திட்டம் ரூ. 321 86 கோடிக்கு திருத்தியமைக்கப்பட்டுள்ளது இத்திட்டத்தினால் பயன்பெறும் மொத்த மக்கட் தொகை சுமார் 45.41 இலட்சங்களாகும்.

இத்திட்டம் துவக்கப்பட்டது முதல் மார்ச் 31, 1991 வரை 34 நகர பேரூராட்சிகளில் குடிநீர் திட்டம் அமைக்கப்பட்டு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 14 நகராட்சிகளில் குறைந்த செலவு துப்புரவுத் திட்டம் அமைக்கப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இத்திட்டம் துவக்கப்பட்டது முதல் மார்ச் 31, 1991-ம்ஆண்டு வரை இத் திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ள மொத்ததொகை ரூ 98.84 கோடியாகும். 1991–92-ஆம் ஆண்டில் மேலும் 8 நகரங்களுக்கு குடிநீர் வசதி வழங்க திட்டமிடப்பட்டு அனைத்தும் முடிக்கப்பட்டது. இத்துடன் ஏற்கனவே நடைபெற்று வரும் திட்டங்களும் நிறைவேற்றப்படும். 1991–92 நிதியாண்டில் இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 50.00 கோடி., 1992–93-ஆம் ஆண்டில் மேலும் 14 நகரங்களுக்கு ரூ. 132.72 கோடி செலவில் குடிநீர் வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினால் அளிக்கப்பட்ட உதவிகள்:

நகரப் பகுதி குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் அளித்து வருகிறது. அண்மையில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஊரகப் பகுதி குடிநீர் திட்டங்களுக்கும் கடன் அளித்துள்ளது. 1969–70-ஆம் ஆண்டில் இருந்து 1991-9? ஆம் ஆண்டு வரையில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு ரூ. 229.28 கோடிவரையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கடனாக கொடுத்துள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற ரூ. 32.00 கோடி கடனாக அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற அட்கோவிடம் இருந்து கடன் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.





## 7. சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்று வாரியம்.

சென்னை மாநகரில், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல் வசதி அமைத்த மற்றும் அவற்றின் பராமரிப்பு ஆகிய பணிகள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் பொறுப்பிலுள்ளன. சென்னை மாநகரின் பரப்பளவு 175.03 சதுர கிலோ மீட்டராகும். 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் தற்காலிக மக்கள் தொகை 37.95 இலட்சங்களாகும்.

சென்னை குடிநீர் வாரியம் இரண்டு பெரிய திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

(1) உலக வங்கி உதவியுடனான சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்.

(2) கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் கீழ் சென்னைக்கு நீர் கொணர்ந்து விநியோகிக்கும் திட்டம்.

## 8. சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்:

உலக வங்கித் திட்டமானது ரூ. 150.803 கோடி மதிப்பீட்டில் 1986–87-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1991–92-ஆம் ஆண்டு இறுதி வரையில் ஆன செலவினம் ரூ. 87.00 கோடியாகும். இத் திட்டத்தை செயலாக்குவதின் மூலம் சாதாரண பருவமழைக் காலங்களில் நாளொன்றுக்கு தற்பொழுது வழங்கப்படும் குடிநீரின் அளவான 293 மில்லியன் லிட்டர்கள், 1994-95ல் நாளொன்றுக்கு 395 மில்லியன் லிட்டர்களாக உயர்த்தப்படும்.

கொடுதலையாறின் குறுக்கே இரண்டு தடுப்பணைகள் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இதன் காரணமாக 1991 ஆம் ஆண்டு பருவ மழையின் போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, ஆரணியாறு, கொடுதலையாற்று படுகைகளின் நிலத்தடி கிணற்றுத் தளத்தை செறியூட்ட உதவியது. கே. கே. நகர், விருகம்பாக்கம் மற்றும் சாலி கிராமம் பகுதிகளின் குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு செயல் நிலையிலுள்ளன.

1992–93-ல் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய பணிகளாவன:—

(1) செங்குன்றத்தில் நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறனுள்ள ஒரு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்.

(2) தூர்ந்து போன குடிநீர் குழாய்களை புனரமைத்தல் மற்றும் குடிநீர் வசதியில்லாதப் பகுதிகளுக்கு புதிய விநியோக குழாய்கள் அமைக்கும் பணிகள் தொடர்ந்து செயலாக்கப்பட உள்ளன.

(3) கொடுதலையாற்றின் குறுக்கே மூன்றாவது தடுப்பணை கட்டும் பணி.

(4) சாலிகிராமம், எம்.ஜி.ஆர். நகர்ப் பகுதிகளின் கழிவு நீரகற்று வசதியமைக்கும் திட்டங்கள் முடிக்கப்படும். ஜி. கே. எம். குடியிருப்பு, பொதுத் தெருக்கள், தனியார் தெருக்கள், நகரின் தாழ்வானப் பகுதிகள் ஆகியவற்றில் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கும் பணிகள் தொடர்ந்துசெயலாக்கப்பட்டு முடிக்கப்படும்.

## 9. கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்கீழ் சென்னைக்கு நீர் கொணர்ந்து விநியோகிக்கும் திட்டம்:

சென்னைக்கு நீர் கொணர்ந்து விநியோகிக்கும் திட்டத்தின் பணிகள் 1991–92-ல் தொடங்கப்பட்டன. 1992–93-ல் கீழ்க்கண்ட பணிகளில் முன்னேற்றம் கணிசமான அளவு இருக்கும்:

(1) செங்குன்றத்தில் சுத்திகரிக்கப்படாத நீரினை எடுத்தல் மற்றும் அதற்கான விசை இயந்திரங்களும், விசைக்குழாய்களும் அமைத்தல்.

(2) செங்குன்றத்திலிருந்து போரூருக்கு நீர் கொணரும் குழாய்கள் அமைத்தல்.

(3) (i) போரூரில் குடிநீர் தலைமை நீரேற்று நிலையம் அமைத்தல்.

(ii) குடிநீர் சேமிப்புத் தொட்டிகள் அமைத்தல்—முதற் கட்டம்.

(iii) கழிவு நீரகற்றுப் பிரிவின்கீழ் விருகம்பாக்கம், கொளத்தூர் ஆகிய முன்னாள் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கு கழிவு நீரகற்று வசதித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

1992–93-ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு ரூ. 34.00 கோடியாகும். மேலும் அதிகப்படியான நிதி ஆதாரங்களை திரட்டும் வகையில் அட்கோ நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் நிதி உதவி, கிருஷ்ணா நதியிலிருந்து முதற் கட்டமாக நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் நீரைப் பெறுவதற்கு ஏதுவாக சென்னைக்கு நீர் கொணர்ந்து விநியோகிக்கும் திட்டம் 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிவுறுவதை உறுதிசெய்ய உதவியாயிருக்கும்.

## 10. கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து மறு உபயோகம் செய்தல்:

சென்னைக் குடிநீர் வாரியம் கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இரண்டாம் நிலை சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரினை தொழிற்சாலைகளின் தேவைக்கு வழங்க உத்தேசித்துள்ளது. முதலாவதாக சென்னை சுத்திகரிப்பு நிலையம் தனது மூன்றாவது நிலை சுத்திகரிப்பு நிலையத்தை



இயக்கத் துவங்கியுள்ளது. அதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் நாளொன்றுக்கு 2.5 மில்லியன் காலன் இரண்டாவது நிலை சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீரை வழங்குகிறது. இவ்வாறே சென்னை உரத் தொழிற்சாலையும் தனது மூன்றாவது நிலை சுத்திகரிப்பு நிலையத்தை இயக்கத் துவங்கிய பின் வாரியத்திடமிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைப் பெறும்.

## 11. நகரக் குடிநீர் வழங்கல்:

1991-ல் பெய்த சாதகமான பருவ மழையின் காரணமாக, 1992 ஆம் ஆண்டு அக்டோபர்—நவம்பர் பருவ மழை வரை, சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 55 மில்லியன் காலன் வீதம் குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏதும் இருக்காது.

இயல் 1.

## தோற்றுவாய்

நகர்ப் பகுதிகள் மிக விரைவாக வளர்ந்து வரும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். நம் மாநிலத்தில் நகர்ப் பகுதிகளில், 34 சதவிகிதம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகம் திறம்பட நடந்தால் நகர்ப்புற வளர்ச்சியும் மேம்பாடு அடையும். தற்போது தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாநகராட்சிகளும், 100 நகராட்சிகளும், 7 நகராட்சி நகரியங்களும் உள்ளன. நகராட்சிகளும், நகரியங்களும் ஆண்டு வருமானத்திற்கேற்ப பின்வருமாறு ஐந்து நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன :

| வரிசை எண். | நகராட்சியின் நிலை. | வரையறை ஆண்டு வருமானம் (ரூபாய் இலட்சத்தில்). | நகராட்சிகளின் எண் எணிக்கை. | நகரியங்களின் எண் எணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | சிறப்பு நிலை | 200 | 14 | 1 | 15 |
| 2. | தேர்வு நிலை | 100 | 13 | 3 | 16 |
| 3. | முதல் நிலை | 40 | 31 | 1 | 32 |
| 4. | இரண்டாம் நிலை | 20 | 29 | 2 | 31 |
| 5. | மூன்றாம் நிலை | 10 | 13 | .. | 13 |
| | | | 100 | 7 | 107 |

2. ஒசூர் பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு 15-1-1992 முதல் செயல்படுகிறது. திருத்துறைப் பூண்டி பேரூராட்சி 1—4—92 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது.

3. திருச்சிராப்பள்ளி, சேலம் நக்ராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்த அரசு எடுத்துள்ள முடிவு ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது.

4. 1992-93 ஆம் ஆண்டுக்கான மாநில அரசின் வரவு செலவு த்திட்டத்தில் ''மானியக் கோரிக்கை 50. நகராட்சி நிர்வாகம்''-ன் கீழ் பின்வரும் விவரப்படி ரூ. 69 கோடி ஒதுக்கப்

பட்டுள்ளது. நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் அரசு தரும் சிறப்பு மானியங்களும் நகராட்சி நிர்வாக இயக்ககத்தின் செலவும் இதில் அடங்கிய முக்கிய இனங்களாகும்.

வரவு செலவு மதிப்பீடு 1992-93,

| (1) | திட்டமல்லாத செலவு. (2) | திட்டச் செலவு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பகுதி 1 | 66.71 | 1.38 | 68.09 |
| பகுதி 2 | .. | 1.00 | 1.00 |
| | 66.71 | 2.38 | 69.09 |

5. ''நகராட்சி நிர்வாகம்'' என்னும் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 69 கோடி தவிர, நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் கடன் மற்றும் நிதி உதவி அளிக்க பிற மானியக் கோரிக்கைகளிலும் பின்வரும் நிதி ஒதுக்கங்கள் செய்யப் பட்டுள்ளன :—

| | வரவு-செலவு மதிப்பீடு 1992-93, (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **மானியக் கோரிக்கை எண். 62. கடன்கள்—** | |
| நகராட்சி ஊழியர்களுக்கு வீட்டுவசதிக் கடன், | 50 |
| நகராட்சி நகர்ப்புற மேம்பாட்டு நிதிக்குக் கடன்—தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் | 23,00 |
| நகராட்சிச் சாலைகள், பாலங்கள் அமைக்கக் கடன் | 1,00 |
| அங்காடிகள் போன்றவை கட்டவும், விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் கடன் | 1,00 |
| | 25,50 |

6. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலை சீரடைய உடனடி கவனம் தேவைப்படுகிறது. அவற்றின் நிதி நிலை முழுமையாக சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. நகராட்சி நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் செய்வது குறித்து பரிந்துரைக்க உயர் மட்ட வல்லுநர்க்குழு ஒன்றை அரசு அமைக்கவிருக்கிறது.



7. நகராட்சிகள், மாநகராட்சிகளின் நிர்வாக மேம்பாட்டிற்காக கொள்கைகளை நிர்ணயித்து, தொலைநோக்குத் திட்டங்களை வகுப்பதுடன் திட்டங்களின் செயற்பாட்டைக் கண்காணிக்க மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் மாநில ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்படும். நகராட்சி நிர்வாகம் மேம்பாடு அடையும் நோக்குடன் நகராட்சிப் பணிகளை கண்காணித்து மேற்பார்வையிட மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

8. நகராட்சிகள், மாநகராட்சிகளின் பணியாளர்களையும் அதிகாரிகளையும் ஊக்குவிக்கவும் கௌரவிக்கவும் பதக்கங்களும், பரிசுகளும் வழங்கும் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது.

9. நகராட்சிகள், மாநகராட்சிகளின் முக்கிய வருமானம் சொத்து வரியேயாகும். நகராட்சிகள் சொத்து வரித் திருத்தம் கடைசியாக 1987 அக்டோபரில் செய்யப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையான வரிச் சீராய்வு அடுத்து 1992 அக்டோபரில் செய்யப்பட வேண்டும்.

10. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் விதிக்கப்படும் சொத்துவரி விகிதம் பல ஆண்டுகளாக மாற்றப்படாமல் இருந்து வருகின்றது. நாட்டின் வெவ்வேறு நகரங்களில் வெவ்வேறு விதமான வரி விகித முறைகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. இந்த முறைகளைப் பரிசீலித்து நமது மாநிலத்துக்குத் தகுந்த முறை ஒன்றை நாம் ஏற்படுத்த வேண்டும். சொத்து வரியில் முறையான வரி விதிப்பு விகிதங்கள் குறித்து விரைவில் முடிவெடுக்க ஏதுவாக இருக்கும் வகையில் ஒரு ஆய்வு மேற்கொள்ள இருக்கின்றோம்.

11. தொழில்கள், வணிகங்கள், கைவினைகள் மற்றும் வேலைகள் மீதான தொழில் வரியை விதிக்கத் தேவையான சட்டங்கள் கொண்டு வரப்படும். மாதம் ஒன்றுக்கு ரூ. 1,500-க்குக் கீழ் ஊதியம் பெறும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இந்த வரி விதிப்பு முறையானது குறைந்த வருமானம் உள்ள பிரிவினருக்குக் குறைவாக இருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வரியின் மூலம் வசூலிக்கப்படும் முழுத் தொகையும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்கும். இந்த மாற்றியமைக்கப்பட்ட வரி விகிதம் 1-4-1992 முதல் அமுலுக்கு வரும்.

## இயல் II.

## நகராட்சி நிருவாகம்

நகராட்சிகளில் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லை. 1990–91 புள்ளி விவரப்படி அனைத்து நகராட்சிகளின் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 191 கோடி. செலவு 185 கோடி. அரசிடமிருந்தும் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்தும் நகராட்சிகள் பெற்ற கடன் தொகைகளுக்காக குறிப்பிட்ட காலத்தில் கட்ட வேண்டிய தவணைகள் கட்டப்படாமல் ரூ. 98.44 கோடி நிலுவையில் உள்ளது. அந்நிலுவைத் தொகைகளைக் கட்டாததனால்தான் செலவு குறைவாகத் தோன்றுகிறது. அந்நிலுவைகளைக் கணக்கிற்கொண்டால் 1990-91ல் நிகரப் பற்றாக்குறை ரூ. 92.44 கோடி என்று ஆகும். நகராட்சிகளின் செலவில் 56 சதவீதம் நகராட்சி பணியாளர்களின் சம்பளச் செலவாகும்.

2. நகராட்சிகள், நகராட்சி நகரியங்கள் அனைத்தின் 1990-91-ஆம் ஆண்டு மொத்த வரவு-செலவு குறித்த தோராய புள்ளி விவரங்கள் வருமாறு :—

| வரவு. | ரூ. (லட்சம்) | செலவு. | ரூ. (லட்சம்) |
|---|---|---|---|
| அ. சொத்துவரி | 48,92 | பொது நிர்வாகம் | 17,86 |
| தொழில் வரி | 2,73 | பொதுப் பணிகள் | 4,87 |
| பிற வரிகள் | 24,36 | குடிநீர் வழங்கல்;- வடிகால். | 5,03 |
| ஆ. சொத்துகளில் வருமானம். | 10,81 | நகரமைப்புத் திட்டம் | 2,51 |
| இ. வருமானம் தரு திட்டங்கள் மூலம் வருவாய். | 1,25 | இன்றியமையாச் செலவுகள் | 51,32 |
| ஈ. பல்வகை வரவுகள் | 16 | | |
| உ. வரிகளிலிருந்து நகராட்சிகளுக்கு அரசு தரும் பங்கு, கேளிக்கை வரி. | 16,55 | பிற செலவுகள் | 30,76 |
| | | வருமானம் தரும் திட்டங்கள் குறித்த செலவு. | 8,65 |
| உந்து வண்டி வரி | 14 | கடன்கள் | 12,48 |
| சொத்து விற்பனை வரி. | 8,45 | வைப்புத் தொகைகள் | 51,52 |
| பிற இனங்கள் | 10,93 | | |
| ஊ. அரசு மானியங்கள் | 18,17 | | |
| எ. அரசுக் கடன்கள் | 7,12 | | |
| ஏ. வைப்புத் தொகைகள். | 41,48 | | |
| மொத்தம். | 191,00 | மொத்தம். | 185,00 |



3. நகராட்சி வரிகள் சொத்துவரியை பொறுத்த வரையில் 1—10—1989-லிருந்தும், ஏனைய வரிகளைப் பொறுத்த வரையில் 1—4—1990-லிருந்தும் வங்கிகள் மூலம் வசூலிக்கப்படுகின்றன. இப்புதிய முறையில் சில நடமுறைச் சிரமங்கள் உள்ளன என்பதும் அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

4. தற்பொழுது பின்வரும் விவரப்படி நகராட்சிப் பணியாளர் எண்ணிக்கை 33,571 ஆகும் :—

| | | |
|---|---|---|
| 1. | பொது நிருவாகம் | 2,677 |
| 2. | பொது சுகாதாரம் மற்றும் துப்புரவுப் பணியாளர். | 2,0888 |
| 3. | வரி வசூலிப்பவர்கள் | 1,521 |
| 4. | மருத்துவப் பணியாளர் | 1,032 |
| 5. | பொறியியல் பணியாளர் | 1,742 |
| 6. | நகரமைப்புப் பணியாளர் | 6,07 |
| 7. | குடிநீர் விநியோகம் மற்றும் கழிநீர் பணியாளர் | 1,966 |
| 8. | தெருவிளக்கு பணியாளர் | 665 |
| 9. | பிற பணியாளர்கள் | 2473 |

நகராட்சிப் பணியாளர்கள் 15—9—1989 முதல் அரசுப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இம்முடிவுக்கேற்ப 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கராட்சி சாலைகள் :

5. நகராட்சிகள் பராமரித்துவரும் சாலைகளின் மொத்த
ளம் 6,640 கி.மீ. அதில் மண் சாலைகளாகவும் ஜல்லி சாலை
ளாாகவும் உள்ள 2076 கி.மீ சாலைகளை தார் சாலை
ளாக மாற்ற வேண்டியுள்ளது. நகராட்சிகளின் நிதி நெருக்
கடியைக் கருத்திற் கொண்டு, ஆண்டுதோறும் படிப்படியாக
சில சேவைகளை மேற்கொண்டு கி.பி. 2,000-க்குள் இவை
யனைத்தையும் தார் சாலைகளாக மாற்றும்10 ஆண்டுத்
திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1992-93-ல் 270
கி.மீ. மண் சாலைகளும் ஜல்லி சாலைகளும் தார் சாலை
களாக மாற்றப்படும்.

6. நகராட்சிகளின் நிதிநிலைமை சரியில்லாத காரணத்தினால்
அரசு, 50 சதவீத மானியம் மற்றும் 50 சதவீதம் கடன் அடிப்
படையில் நகராட்சிகளுக்கு சாலை அபிவிருத்திப் பணிகள் மேற்
கொள்ள் வழங்குகிறது. 1991-92-ஆம் வருடத்திற்கு மானியம்
ரூபாய் 30 லட்சமும், கடன் ரூபாய் 50 லட்சமும்
வழங்கப்பட்டது. 1992-93-ஆம் வருடத்திற்கு நகராட்சிகளில்
சாலை அபிவிருத்திப் பணிகளுக்கு அரசு ரூபாய் 50 லட்சம்
மானியமும், ரூபாய் 50 லட்சம் கடனும் வழங்கும். ஏற்
கெனவே உள்ள தார் சாலையை புதுப்பிக்கவும், ஜல்லி சாலையை
தார் சாலையாக மாற்றவும் இந்த திட்டத்தில் மொத்தம்
60 கி.மீ.எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

7. முழுக்கடன் திட்டத்தின்கீழ் வருடாந்திர ஒதுக்கீடு ரூபாய்
30 லட்சம் ஆக இருந்தது. 1991-92-ம் வருட திருத்திய மதிப்
பீட்டில் ரூபாய் 50 லட்சமாக உயர்த்தப்பட்டது. இத்தொகையைக்
கொண்டு 30 கி.மீ. சாலை தார் சாலையாக மாற்
றப்படும்.

தெருவிளக்குகள் :

8. 1989 செப்டம்பரிலிருந்து நகராட்சிகளின் தெரு விளக்கு
கள் பராமரிப்பை மின்சார வாரியத்திடமிருந்து ஏற்று நக
ராட்சிகளே பணியாளர்களை நியமித்தும், தெரு விளக்குக்
கான உபகரணங்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் நிர்ண
யித்த விலையில் வாங்கியும் நகராட்சிகளே பராமரித்து வரு
கின்றன. (11 நகராட்சிகளில் தெரு விளக்குகளை ஏற்
கெனவே நகராட்சியே பராமரித்து வந்தது). அனைத்து
நகராட்சிகளும் பராமரிக்கும் விளக்குகளின் விவரம் :

| | |
|---|---|
| சோடியம் ஆவி விளக்கு | |
| பாதரச ஆவி விளக்கு .. | 7,057 |
| குழல் விளக்கு .. .. | 98,822 |
| சாதாரண விளக்கு .. .. .. | 70,264 |
| பிறவகை விளக்கு .. .. | 13,532 |
| .. .. | 2,252 |
| மொத்தம் .. | 191,927 |



நகராட்சிகள் தெருவிளக்கு பராமரிப்பை ஏற்ற பின் எரியும்
மின் விளக்குகளின் சதவீதம் தற்பொழுது கூடியுள்ளது. நிதி
வசதி குறைந்த நகராட்சிகளில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள
குடியிருப்புப் பகுதிகளுக்கு தெருவிளக்குகள் அமைக்க 1992-
93-ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ்
ரூபாய் 1 கோடியை அரசு மானியமாக வழங்கும்.

குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் :

9. நகராட்சிகளின் நிதி நிலை பற்றாக்குறையின் காரண
மாக பாதாள சாக்கடை அமைக்க இயலவில்லை. பாதாள
சாக்கடைத் திட்டம் இயங்கும் இடங்களிலும் கீழ்க்கண்ட
குறைபாடுகள் காணப்படுகின்றன:—

(1) நகர் முழுமைக்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்த
முடியவில்லை.

(2) இடப்பற்றாக்குறை மற்றும் விலையேற்றத்தின் காரண
மாக கழிவு நீர்ப்பண்ணை அமைக்க இயலவில்லை;

(3) இத்திட்டம் முழுமையாக முடிவடைந்தாலும் கழிவு
நீர்க் குழாய்களில் நாளடைவில் ஏற்படும் குறைபாடுகளைச்
சரி செய்ய இயலாமல் போகிறது.

'' குறைந்த செலவில் கழிப்பிடம் '' என்னும் புதிய திட்டம்
நகரங்களில் பின்வரும் நோக்கங்களுடன் அமுல்படுத்தப்பட்
டுள்ளது :—

(1) மனித மலத்தை கையால் எடுத்தும், தலையில்
சுமந்தும் செல்லும் பணியிலிருந்து துப்புரவுப் பணியாளர்களை
விடுவிப்பது. (2) நகர் முழுவதையும் சுகாதாரக் கேடுகளி
லிருந்து நீக்கி துப்புரவான சுற்றுப்புறச் சூழ்நிலையை ஏற்
படுத்துவது.

10. 1991-92-ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தின்படி
37 நகராட்சிகள் முழுமையாக எடுத்துக் கொள்ளப்பட்டு
மொத்தம் 1,49,413 தனி வீட்டுக் கழிப்பிடங்களும், 296 பொதுக்
கழிப்பிடங்களும் கட்டப்படவுள்ளன. உலர் கழிப்பிடங்கள்
சில கொட்டுநீர் ஊற்றும் கழிப்பிடங்களாக மாற்றப்பட
வுள்ளன. இதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய்
5,492 லட்சமாகும். (ஹட்கோ நிறுவனத்தின் கடன் ரூபாய்
3,650 லட்சமும் மத்திய அரசின் மானியம் ரூபாய் 1,225 லட்ச
மும்). இத்திட்டம் முடிவடைந்தவுடன் 1,776 துப்புரவுத்
தொழிலாளர்கள் மலம் அகற்றும் பணியிலிருந்து விடுவிக்கப்
பட்டு அந்தந்த நகராட்சியிலேயே மாற்றுப் பணியில் அமர்த்
தப்படுவர். நகராட்சி ஆணையர்கள் அறிக்கைகளைத் தயாரித்
துள்ளனர். கடன் தொகையும் மானியத் தொகையும் 11 நகராட்சி
களுக்கு வழங்கப்பட்டு விட்டன. கடன் தொகை மட்டும் மேலும்
16 நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

11. 1994-95-ஆம் ஆண்டிற்குள் நகராட்சிகளில் உலர் கழிப்பிடங்கள் அறவே அகற்றப்படும். மலமெடுக்கும் பணியிலிருந்து துப்புரவுப் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டு அவரவர் வேலை செய்யும் நகராட்சியிலேயே மாற்றுப் பணியில் அமர்த்தப்படுவர்.

12. அரசு நிதி உதவியுடன் நகராட்சிகள் செயல்படுத்திவரும் வளர்ச்சித் திட்டங்களுள் முக்கியமானவற்றைப் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## நேரு வேலை வாய்ப்புத் திட்டம்.

13. நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள நலிவுற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கோடு நேரு வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது கீழ்க்கண்ட மூன்று திட்டங்களைக் கொண்டதாகும் :—

(1) (அ) நகர்ப்புறங்களில் நலிவுற்ற மக்களுக்குச் சிறு தொழில் மூலம் சுய வேலை வாய்ப்புக்கு நிதியுதவி அளித்தல் ;

(ஆ) நகர்ப்புற ஏழைகளுக்குச் சிறு தொழில்களில் பயிற்சி அளித்தல்.

சிறு தொழில் தொடங்க 25 சதவிகிதம் மானியமும் 75 சதவிகிதம் வங்கிக் கடனும் வழங்கப்படுகிறது. மானியத் தொகை பெண்கள், ஆதி திராவிடர் பழங்குடியினர் ஆகியோருக்கு ரூ. 5,000 ஏனையோருக்கு ரூ. 4,000 என்னும் உச்ச வரம்புக்குட்பட்டது. மானியத் தொகையில் பாதியை மைய அரசு ஏற்கிறது. பாதியை மாநில அரசு / நகராட்சி ஏற்கின்றன.

(2) நகராட்சிப் பகுதிகளில் மக்களுக்குப் பயன்படுவனவும் வருவாய் தருவனவும் ஆன கட்டடம் முதலிய பொதுப் பணிகளைச் செய்வதன் மூலம் நலிவுற்ற மக்களுக்கு வேலை வாய்ப்புத் தருதல். 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஒரு லட்சத்துக்குக் குறைவான மக்கள் தொகை கொண்ட நகராட்சிகளில் இது செயல்படுகிறது. செலவில் 80 சதவிகிதத்தை மைய அரசும், 20 சதவிகிதத்தை மாநில அரசு / நகராட்சியும் ஏற்கின்றன.

(3) நலிவுற்ற மக்களின் குடியிருப்புகளை மேம்படுத்துவதற்கு நிதி உதவி அளித்து அதன் மூலம் வேலை வாய்ப்பினை அளித்தல், குடியிருப்பு மற்றும் கட்டுமானத் தொழில்களில் பயிற்சி அளித்தல்.



தாழ்த்தப்பட்ட பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களும், மகளிரும் சிறப்பாக பயன் பெறுவர். மகளிருக்கு 30 சத விதமும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினத்தைச் சார்ந்தவர்களுக்கு அந்தந்த நகரின் மக்கள் தொகையில் அவர்கள் விகிதாச்சாரப்படியும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

### (1) சிறு தொழில்களுக்கு நிதியுதவி அளித்தல்.

14. இத்திட்டம் அனைத்து நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. 1991-92-ஆம் ஆண்டுக்கான மைய அரசு மானிய ஒதுக்கீடு ரூ. 277.20 லட்சம் ஆகும். அதில் ரூ. 180.60 லட்சம் இவ்வரசுக்கு 1992 மார்ச் மாதத்தில் வரவு வந்துள்ளது. இத்திட்டம் 1992-93-ல் செயல்படுத்தி முடிக்கப்படும்.

15. மேற்கண்ட திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஏழை மக்களுக்கு தக்க பயிற்சியினை அளித்து, அதன் மூலம் அவர்கள் பல்வேறு சிறுதொழில்கள் தொடங்கவோ அல்லது போதுமான வருவாயுடன் கூடிய வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளவோ வாய்ப்பளிக்கப்படுகிறது. சராசரி நபருக்கு ரூ. 1,200 செலவில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. 1991—92-ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள மானியம் ரூ. 49.60 லட்சம், இதனால் 1,236 மகளிர் உட்பட 4,120 பேர் பயன்பெறுவர்.

### (2) நகராட்சிகளில் நலிவுற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு.

16. 1991—92-ஆம் ஆண்டுக்காக இத்திட்டத்தின்கீழ் ரூ. 334.40 இலட்சம் இம் மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ. 192.60 இலட்சம் தொகை 1992 மார்ச் மாதம் வழங்கப்பட்டு விட்டது. இத்திட்டப்பணி 1992-93-ல் நிறைவேற்றப்படும்.

### (3) குடியிருப்பு மேம்பாட்டின் மூலம் வேலை வாய்ப்பினை அளித்தல்.

17. இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின் குடியிருப்புகளை கூரை, சுவர்கள், தரை, கூடுதல் அறைகள் போன்ற வகைகளில் மேம்படுத்துவதற்கோ அல்லது புதிய குடியிருப்புகளை அமைத்துக் கொள்வதற்கோ பின்வருமாறு ரூ. 4,000 நிதியுதவி வழங்கப்படுகிறது :—

| | | (ரூபாய்) |
|---|---|---|
| ஹட்கோ கடன் | .. | 3,000 |
| மானியம் | ரூபாய் | 1,000 |
| மைய அரசு | 800 | |
| மாநில அரசு | 200 | |
| | | 4,000 |

1991-92-க்கு இத்திட்டத்தின்கீழ் மைய அரசு மானியம் ரூ. 207.80 எட்சம் இம் மாநிலத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் ரூ. 125.16 ல்ட்சம் ஹட்கோவுக்கு வழங்கப்பட்டுவிட்டது. ரூ. 18.20 இலட்சம் மாநில அரசுக்கு 1992 மார்ச் மாதம் வழங்கப் பட்டது. இப்பணி 1992—93-ல் நிறைவேற்றப்படும்.

1991—92-ல் நகராட்சிகள் 26,918 குடியிருப்புகளை மேம்படுத்து வதற்கு அரசு ஏற்பளித்துள்ளது. இது அல்லாமல், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்படாமல் உள்ள 12,000 குடியிருப்புகளை நகராட்சிகளில் செயல்படுத்த வும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஹட்கோ நிறுவனம். இத் திட்டத்தினை ஒப்புதல் செய்துள்ளது. இத்திட்டமானது 1992—93-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். 24,90,752 '' மனித வேலை நாட்கள் '' உருவாக்கப்படும்.

18. இத்திட்டத்தின்கீழ் நலிவுற்ற மக்களுக்கு குடியிருப்பு மேம்பாடு மற்றும் கட்டுமானத் தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதனால் 1,035 மகளிர் உட்பட 3,450 பேர் பயன் பெறுவர்.

## விரைவு படுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

19. குடிசைப் பகுதிகளில் சாலை மேம்பாடு, பொதுக் கழிப்பிடம், மழைநீர் வடிகால், குடிநீர் வசதி போன்ற வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ரூ. 60 இலட்சம் நகராட்சிகளுக்கும் நகரியங்களுக்கும் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் நகராட்சிகள் 22-ல் குடிசைப்பகுதிகள் மேம்படவும், அப்பகுதி மக்கள் சமூக மேம்பாடு அடையவும் ஒருங் கிணைந்த முறையில் செயல்படுத்தப்படும். செயல்படுத்த வேண்டிய திட்டங்களை உருவாக்குவதில் குடிசைப்பகுதி மகளிர் பிரதிநிதிகள் அடங்கிய குழுக்களுக்கும் இடம் தரப்படும்.

## புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டம் :

20. '' புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டம் '' 95 நகராட்சிகள் மற்றும் 5 நகரியங்கள் நடத்திவரும் பள்ளிகளில், 5—9 வயது வரம்பினருக்கும் (1—5 வகுப்புகள்) 10—15 வயது வரம்பினருக்கும் (6—10 வகுப்புகள்) செயல் பட்டு வருகிறது. அப்பள்ளிகளில் மொத்தம் 1,092 சத்துணவு மையங்கள் செயல்படுகின்றன. அமைப்பாளர்கள் 1,110 ; சமையல் காரர்கள் 1,145 ; உதவியாளர்கள் 1,135 ; ஆகியோர் இவற்றில் பணி செய்கின்றனர்.



## தமிழ் நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (நகராட்சி நகர்ப் புற வளர்ச்சி நிதி.

21. தமிழ் நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி என்பது உலக வங்கியின்மூலம் செயல்படும் தமிழ் நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் ஒரு பிரிவாகும் அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 167.2 கோடியாகும். இத்திட்டம் 1989—90 முதல் 5 ஆண்டுகளுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய திட்டமாகும். வருவாய் தரத்தக்க திட்டங்களும் சேவை நோக்குள்ள திட்டங் களும் இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் இதுவரை 36 நகராட்சிகள் 3 மாநகராட்சிகள் ஆகியவைகளுக்கான பல்வேறு திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 88.26 கோடிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

22. 1989-90 முதல் 1991-92 முடிய இத்திட்டத்தின் கீழ் ரூ. 33.50 கோடியை அரசு வழங்கி, நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியில் பெறப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் ரூ. 27.89 கோடி, நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் திட்டங்கள் செயல்பட வழங்கப்பட்டுள்ளது. திட்டங்கள் அனைத்தும் பல் வேறு நிலைகளில் செயல்பட்டு வருகின்றன.

23. 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 25 கோடிக்கு, நகராட்சி கள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவைகளின் பல்வேறு திட்டங் கள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. பெறும் கடன்தொகை யினை திரும்பச் செலுத்தக் கூடிய நிதிநிலையில் உள்ள நகராட்சி கள் அனைத்தும் இதில் சேர்க்கப்படும்.

## தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட் டுக்கழகம்:

24. தமிழ் நாட்டில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங் களின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி, தொழில் நுட்பம் மற்றும் இதர உதவிகள் அளிப்பதற்காக இக் கழகம் 21—3—90 அன்று ரூ. 2 கோடி மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஒருங் கிணைக்கப்பட்ட குறைந்த செலவுக் கழிப்பிட வசதி மற்றும் துப்புரவுப் பணியாளர்களை விடுவிக்கும் திட்டத்திற்குக்கடனுதவி பெறுவதற்காகவும், நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதிகளை வழி நடத்தும் முகவராகவும் இக்கழகத்தை அரசு நியமித்துள்ளது.

25. இக்கழகம் இதுவரை ஒப்பளிப்பு தந்துள்ள மொத்தக் கடன் மற்றும் மானியத் தொகை ரூ. 9287 லட்சமாகும். வீட்டு வசதி மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நகர்ப்புற வேலைவாய்ப்பு, ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான கழிப்பிட வசதி மற்றும் துப்புரவு பணியாளர்களை விடுவிக்கும்

திட்டம், நடைபாதைகளில் வசிப்பவர்களுக்கு இரவு தங்கும் விடு திகள் கட்டுதல், சென்னையில் அல்லிக் குளத்தில் அங்காடி வளாகம் கட்டுதல்; கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்கா மேம்பாடு ஆகிய பணிகளுக்கு இத் தொகை ஏற்பளிக்கப்பட்டது. அத் தொகையில் இக் கழகம் இதுவரை கடன் மற்றும் மானியத் தொகையாக ரூ. 2894 லட்சங்கள் வழங்கியுள்ளது.

26. இக்கழகம் வழங்கிய கடன தொகைகளை குறித்த காலத்தில் திறம்பட வசூல் செய்து 'ஹட்கோ' நிறுவனத்திற்கு தவறாமல் செலுத்தி வருகிறது. இதுவரை மூன்று காலாண்டு களுக்கான அசல் மற்றும் வட்டியினை மொத்தத்தில் 97 சத விகிதம் (விழுக்காடு) வசூல் செய்துள்ளது. ஆகவே, நகராட்சி கள் மற்றும் நகரியங்களுக்கு பல்வேறு திட்டப் பணிகளுக்கு அர சால் வழங்கடபடும் கடன்களை வசூல் செய்ய வசூல் முகவராகவும் செயல்படத் தீர்மானித்துள்ளது.

27. இக்கழகம் தன் மூலதனத் தொகையை மேலும் உயர்த் திக் கொண்டு, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வளர்ச்சிப்பணி களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு 'ஒரு வழி முகவராக' செயல் படக் கருதியுள்ளது. துப்புரவுப் பணிக்கு வேண்டிய இயந்திரப் பொறிகள் மற்றும் வாகனங்களைத் தவணை கொள்முதல் திட்டத் தில் வழங்குதல்; சிறிய குடிநீர் வடிகால் திட்டங்களுக்கு நிதி உதவி செய்தல்; ஹட்கோ உதவியுடன் நகராட்சிப் பணியாளர் களுக்கும் பொது மக்களுக்கும் வீடு கட்டும் திட்டங்களுக்கு நிதி உதவி செய்தல், ஆகிய பணிகளையும் மேற்கொள்ள இக்கழகம் கருதியுள்ளது.



இயல்—3.

**தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் :**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், நகராட்சி, மாநக ராட்சிகளின் பணி புரியும் பல்வேறுவகை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கவும், நகராட்சி நிர்வாகத்தில் ஆராய்ச்சிப் பணி களை மேற்கொள்ளவும் 1981 நவம்பரில் கோயம்புத்தூரில் ஏற் படுத்தப்பட்டது. இந் நிறுவனம் 1975-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. இப்பயிற்சி நிலையம் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்கு நர் தரத்தில் உள்ள இயக்குநரின் தலைமையின் கீழ், நகர்ப் புற நிர்வாகம், வரி விதிப்பு, நகர்ப்புற திட்டம், நிதி ஆகிய துறைகளைச் சார்ந்த பயிற்சி அலுவலர்களைக் கொண்டு இயங்கு கிறது.

3. நகராட்சிகள், நகரியங்கள், மாநகராட்சிகள் ஆகியவை ஆண்டுதோறும் தரும் பங்குத் தொகையைக் கொண்டு இந் நிறுவனம் செயல்படுகிறது.

4. இந்நிறுவனம் 138 விரிவாக்கப் பயிற்சி மற்றும் புத்தாக் கப் பயிற்சிகளை 1982 முதல் 1991 முடிய நடத்தியுள்ளதில் 3,104 பேர் பயனடைந்துள்ளனர். மேலும், மொத்தம் 520 பேர் பயனடையும் வகையில் சொத்து வரி மதிப்பீடு, நகராட்சிக் கணக்குகளை எளிதாக்குதல், நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், நிதித் திட்டம் தயாரித்தல், போன்ற விஷயங்களில் 22 சிறப்புப் பயிற்சிகள் நடத்தியுள்ளது. இந் நிறுவனம் நடத்திய பல்வேறு கருத்தரங்குகளிலும் பணிக் களரிகளிலும் மொத்தம் 450 பேர் பங்கேற்றுள்ளனர்.

5. இந்நிறுவனம் நடத்தியுள்ள ஆராய்ச்சி மற்றும் ஆலோ சனைப் பணிகளில் கோவை மாநகராட்சி நிர்வாகத்தைச் சீர மைத்தல், அதிகாரங்களைப் பரவலாக்குதல், தமிழ்நாடு பொதுமக் கள் கூடும் இட சட்டம், 1988-ன் கீழ் வரைவு விதிகள் தயாரித் தல், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 117-ன் கீழ் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வரித் திருத்தம் செய் வதிலும் வரி விலக்கு அளிப்பதிலும் கடை பிடிக்கத் தக்க, கோட் பாடுகள், போன்றவையும் அடங்கும்.

6. நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படை சேவைகள் திட் டத்தின் கீழ் மாநில, மண்டல, மாவட்ட நிலை அதிகாரிகளுக்கும் நகராட்சிப் பணியாளர்களுக்கும் பயிற்சிக்ள் நடத்த மாநில அர சும் ஐக்கிய நாடுகள் பன்னாட்டு குழந்தைகள் கல்வி நிதியத்தின் தென் மண்டல அலுவலகமும் இப் பயிற்சி நிலையத்தை கேந்திர பயிற்சி நிலையமாக அறிவித்துள்ளன. பன்னாட்டு குழந்தைகள் கல்வி நிலையம், இப் பயிற்சி நிறுவனத்திற்கு பயிற்றுவிப்பு வசதி கள் செய்ய நிதி உதவியும் தந்துள்ளது.

இயல்—4.

## சென்னை மாநகராட்சி.

நமது நாட்டில் உள்ள மாநகராட்சிகளுள் மிகத் தொன்மை
வாய்ந்தது என்ற சிறப்பைப் பெற்றுள்ளது சென்னை மாநக
ராட்சி. அது 300 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது. அதன்
பரப்பளவு தற்பொழுது 174 சதுர கிலோ மீட்டர் ஆகும்.
மொத்த மக்கள் தொகை 40 லட்சம். நகரத்துக்கு வந்து
போகும் மக்கள் 10 லட்சமாகும். மாநகராட்சி மன்றத்தின்
தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள் பதவிக்காலம் 1973-ல் முடிவடை
ந்த பின்னர் மன்றத்தின் பணிகளை தனி அதிகாரி கவனித்து
வருகிறார். மாநகராட்சியின் தலைமை நிருவாக அதிகாரி
ஆணையாளர் ஆவார். வட்டார அதிகாரிகள் 10 பேர் மாநக
ராட்சியின் அந்தந்த வட்டாரத்தில் பணிகளைக் கவனித்து
வருகின்றனர்.

2. 1991-92-ம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் வருவாய் ரூ. 92.44 கோடி என்றும் செலவு ரூ. 96.47 கோடி என்றும் மதிப்பிடப்பட்டது. 1992-93-ல் வருவாய் 142 கோடி அளவில் இருக்கும் என்றும் செலவும் அதே அளவில் இருக்கும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

### வருவாய் ஆதாரங்கள்:—

3. மாநகராட்சியின் முக்கிய வருவாய் ஆதாரங்களில் சொத்துவரி, தொழில் வரி ஆகியவையும் சொத்து மாற்றங்களின் மீது விதிக்கப்படும் தீர்வை, கேளிக்கை வரி, விற்பனை வரி மீதான மேல்வரி ஆகியவையும் அடங்கும். முன் ஆண்டுகளை விட 1991-92ல் சொத்துவரியும் தொழில் வரியும் கணிசமான அளவுக்குக் கூடுதலாக வசூலிக்கப்பட்டுள்ளன. விவரங்கள் வருமாறு:—

| | 1989-90 | 1990-91 | 1991-92 (தோராயம்) |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடி) | | |
| சொத்துவரி | 26.41 | 28.01 | 36.00 |
| தொழில்வரி | 1.14 | 1.26 | 3.00 |

1992—93ல் விற்பனைவரி மீதான மேல்வரியாக சென்னை மாநகராட்சிக்கு ரூ. 40 கோடி வருவாய் வரும்.



### மூலதனப் பணிகள் :

4. சென்னை மாநகராட்சியின் மூலதனப் பணிகளுக்காக 1992—93-ம் ஆண்டு மாநகராட்சி வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 85.63 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 1991—92-ல் ஒதுக்கிய ரூ. 40.80 கோடியைவிட இரு மடங்கிற்கும் அதிகமாகும். இதில் ரூ. 5 கோடி அளவில் குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுப் பணிகளுக்கு செலவிடப்படும்.

### சாலைகள் :

5. சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் சுமார் 1,960 கி.மீ. ஆகும். இவற்றில் பேருந்து வழித்தட சாலைகள் 260 கி.மீ. ஆகும். சாலைகளைப் புதுப்பிப்பதற்காக 1992—93-ல் ரூ. 40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநகராட்சி வரவு-செலவு மதிப்பீட்டில் சாலைப் பணிகளுக்கு 1991—92-ல் ஒதுக்கியதைப் போல 2½ மடங்காகும்.

### தெருவிளக்குகள் :

6. சென்னை மாநகராட்சியில் தற்போது 49,077 குழல் விளக்குகள் 2,409 பாதரசஆவி விளக்குகள் 7,903 சோடியம் ஆவி விளககுகள் ஆகியவை உள்ளன. 1991—92-ல் தெருவிளக்குகளுக்கு ரூ. 3 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. இது 1992—93-ல் ரூ. 11.60 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன். காரணமாக மாநகரத்தின் தெருவிளக்குப் பற்றாக்குறைப் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படும்.

### மழைநீர் வடிகால் :

7. தற்போது மாநகராட்சி வசம் உள்ள மழைநீர் வடிகால்களின் நீளம் 550 கி.மீ. ஆகும். பழைய மழை நீர் வடிகால்களை புதுப்பித்துக் கட்டவும் புதிய வடிகால்கள் அமைக்கவும் 1992—93 ஆம் ஆண்டில் ரூ. 4 கோடி செலவு செய்யப்படும்.

### துப்புரவு :

8. நகரில் துப்புரவுப் பணியை மேலும் திறம்படச் செய்வதற்காக ஊர்திகள் வாங்கிட 1992—93-ல் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று ரூ. 8 கோடி செலவிடப்படும். இத் தொகையைக் கொண்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் மாநகராட்சியில் அனைத்துப் பகுதிகளிலும் 24 மணி நேரத்திற்குள் குப்பைகள் அகற்றப்படும் நிலைமை உருவாகும்.

கட்டிடங்கள் :

9. சென்னை மாநகராட்சியின் கட்டடங்களை புதுப்பித்துக் கட்டுவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் 1992–93-ல் ரூ. 8.02 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிப் பள்ளிகளின் கட்டடப் பராமரிப்புக்கான ரூ. 2 கோடியும் இதில் அடங்கும். மக்கள் தொகைக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் ரூ. 75 லட்சம் செலவில் மருத்துவ மனைகள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நேரு வேலை வாய்ப்புத் திட்டம் :

10. நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்களை 1990 ஏப்ரல் முதல், சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது :—

(i) பயிற்சித் திட்டம்.

(ii) நகர்ப்புற சிறுதொழில் திட்டம்.

இத்திட்டங்களின் கீழ் சாதனை விவரங்கள் வருமாறு :—

(i) பயிற்சித் திட்டம்.

| ஆண்டு. | நிதி ஒதுக்கீடு. (ரூ. லட்சம்) | சாதனை | |
|---|---|---|---|
| | | செலவு. | பயிற்சி அளிக்கப் பட்டவர்கள் எண்ணிக்கை. |
| 1989–90 | 20.00 | 20.00 | 1,725 |
| 1990–91 | 4.00 | 4.00 | 361 |

(ii) நகர்ப்புற சிறுதொழில் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் 1989–90-ல் ரூ. 60 லட்சமும் 1990–91-ல் ரூ. 32 லட்சமும் ஒதுக்கப்பட்டன. மொத்தம் 5,920 நபர்கள் மானியம் வழங்கப்பட்டு வங்கிகளிடம் கடன் பெறப் பரிந்துரைக்கப்பட்டனர். வழங்கப்பட்ட மானியத் தொகை ரூ. 13.16 லட்சமாகும். 1991–92-ம் ஆண்டுக்கு மைய அரசு ரூ. 40 லட்சம் ஒதுக்கியுள்ளது. இவ்வொதுக்கீடு 1992-93-ல் பயன்படுத்தப்படும்.



மூலதனப் பணிகள் :

4. சென்னை மாநகராட்சியின் மூலதனப் பணிகளுக்காக 1992–93-ம் ஆண்டு மாநகராட்சி வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 85.68 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 1991–92-ல் ஒதுக்கிய ரூ. 40.80 கோடியைவிட இரு மடங்கிற்கும் அதிகமாகும். இதில் ரூ. 5 கோடி அளவில் குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுப் பணிகளுக்கு செலவிடப்படும்.

சாலைகள் :

5. சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் சுமார் 1,960 கி.மீ. ஆகும். இவற்றில் பேருந்து வழித்தட சாலைகள் 260 கி.மீ. ஆகும். சாலைகளைப் புதுப்பிப்பதற்காக 1992–93-ல் ரூ. 40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநகராட்சி வரவு-செலவு மதிப்பீட்டில் சாலைப் பணிகளுக்கு 1991–92-ல் ஒதுக்கியதைப் போல 2½ மடங்காகும்.

தெருவிளக்குகள் :

6. சென்னை மாநகராட்சியில் தற்போது 49,077 குழல் விளக்குகள் 2,409 பாதரச ஆவி விளக்குகள் 7,903 சோடியம் ஆவி விளக்குகள் ஆகியவை உள்ளன. 1991–92-ல் தெருவிளக்குகளுக்கு ரூ. 3 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. இது 1992–93-ல் ரூ. 11.60 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாநகரத்தின் தெருவிளக்குப் பற்றாக்குறைப் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படும்.

மழைநீர் வடிகால் :

7. தற்போது மாநகராட்சி வசம் உள்ள மழைநீர் வடிகால்களின் நீளம் 550 கி.மீ. ஆகும். பழைய மழை நீர் வடிகால்களை புதுப்பித்துக் கட்டவும் புதிய வடிகால்கள் அமைக்கவும் 1992–93 ஆம் ஆண்டில் ரூ. 4 கோடி செலவு செய்யப்படும்.

துப்புரவு :

8. நகரில் துப்புரவுப் பணியை மேலும் திறம்படச் செய்வதற்காக ஊர்திகள் வாங்கிட 1992–93-ல் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று ரூ. 8 கோடி செலவிடப்படும். இத் தொகையைக் கொண்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் மாநகராட்சியில் அனைத்துப் பகுதிகளிலும் 24 மணி நேரத்திற்குள் குப்பைகள் அகற்றப்படும் நிலைமை உருவாகும்.

**கட்டிடங்கள் :**

9. சென்னை மாநகராட்சியின் கட்டடங்களை புதுப்பித்துக் கட்டுவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் 1992-93-ல் ரூ. 8.02 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிப் பள்ளிகளின் கட்டடப் பராமரிப்புக்கான ரூ. 2 கோடியும் இதில் அடங்கும். மக்கள் தொகைக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் ரூ. 75 லட்சம் செலவில் மருத்துவ மனைகள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நேரு வேலை வாய்ப்புத் திட்டம் :**

10. நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்களை 1990 ஏப்ரல் முதல் சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது :—

(i) பயிற்சித் திட்டம்.

(ii) நகர்ப்புற சிறுதொழில் திட்டம்.

இத்திட்டங்களின் கீழ் சாதனை விவரங்கள் வருமாறு :—

**(i) பயிற்சித் திட்டம்.**

| ஆண்டு. | நிதி ஒதுக்கீடு. (ரூ. லட்சம்) | சாதனை | |
|---|---|---|---|
| | | செலவு. | பயிற்சி அளிக்கப் பட்டவர்கள் எண்ணிக்கை. |
| 1989–90 | 20.00 | 20.00 | 1,725 |
| 1990–91 | 4.00 | 4.00 | 361 |

**(ii) நகர்ப்புற சிறுதொழில் திட்டம் :**

இத்திட்டத்தின் கீழ் 1989–90-ல் ரூ. 60 லட்சமும் 1990–91-ல் ரூ. 32 லட்சமும் ஒதுக்கப்பட்டன. மொத்தம் 5,920 நபர்கள் மானியம் வழங்கப்பட்டு வங்கிகளிடம் கடன் பெறப் பரிந்துரைக்கப்பட்டனர். வழங்கப்பட்ட மானியத் தொகை ரூ. 13.16 லட்சமாகும். 1991–92-ம் ஆண்டுக்கு மைய அரசு ரூ. 40 லட்சம் ஒதுக்கியுள்ளது. இவ்வொதுக்கீடு 1992-93-ல் பயன்படுத்தப்படும்.



600 008

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் :**

11. மாநகராட்சிப் பள்ளிகளில் பள்ளி மாணவ மாணவியருக்கு இத்திட்டத்தின் கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. 1991 ஜுலை மாதத்திலிருந்து மாநகரத்திலுள்ள அரசு தனியார் மற்றும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளிலும் இத்திட்டத்தை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது. மொத்தம் 733 மையங்களில் பயன்பெறும் மாணவ மாணவியர் எண்ணிக்கை 2,05,111 ஆகும்.

**பூங்காக்களும் விளையாட்டுத் திடல்களும்:**

12. சென்னை மாநகராட்சி 88 பூங்காக்களையும் 80 விளையாட்டுத் திடல்களையும் பராமரித்து வருகிறது. இவற்றை மேம்படுத்துவதற்காக 1991–92-ல் ஒதுக்கிய தொகை ரூ. 50 லட்சமாகும். 1992–93-ல் இது கணிசமாக அதிகரிக்கப்பட்டு ரூ. 125 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே வரும் ஆண்டில் பூங்காக்களும் விளையாட்டுத் திடல்களும் இன்னும் சிறப்பாகப் பராமரிக்கப்படும்.

**எழில்மிகு சென்னை—2000 :**

13. சென்னை நகரத்தின் திட்டமிட்ட வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அரசு, "எழில்மிகு சென்னை—2000" என்னும் பெரும் திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூ. 1,250 கோடியாகும். அதில் நகர மக்களுக்கான அடிப்படை வசதிகள் அளித்திட ரூ. 135 கோடிக்கான பணிகளை சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும். மாநகராட்சி இயன்ற அளவுக்கு தனது நிதி ஆதாரங்களிலிருந்து நிதி ஒதுக்கியும் நகராட்சிகள் நகர்ப்புற மேம்பாட்டு நிதியிலிருந்து கடன் உதவி பெற்றும் இந்த ரூ. 135 கோடிக்கு அதிகமாகவே மாநகராட்சியால் செலவிடப்படும்.

## இயல்—5.

### மதுரை மாநகராட்சி.

1971 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி முதல் மதுரை மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மதுரை மாநகராட்சியில் மக்கள் தொகை 9.51 இலட்சமாகும். மாநகராட்சியின் பரப்பளவு 51.85 சதுர கிலோமீட்டர் ஆகும். வார்டுகளின் எண்ணிக்கை 72. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மாநகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டு நிலைக் குழுக்களின் பணிகளை ஆற்றி வருகிறார்.

2. 1992–93-ல் இம்மாநகராட்சியின் வரவு–செலவு பின்வருமாறு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது :—

வரவு.

| | வருவாய்க் கணக்கில் வரவு. | மூலதன வரவு. | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| பொது நிதி | 16,26 | 16.94 | 33.20 |
| தொடக்கக் கல்வி நிதி | 2.95 | 90 | 3.85 |
| குடிநீர் வடிகால் நிதி | 6.84 | 2.15 | 8.99 |
| மின் பிரிவு | 25.77 | 1 41 | 27.16 |
| | 51.82 | 21.40 | 73.22 |

செலவு.

| | வருவாய்க் கணக்கில் செலவு. | மூலதனச் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| பொது நிதி | 16,95 | 16,29 | 33,24 |
| தொடக்கக் கல்வி நிதி | 1,03 | 2,80 | 3,83 |
| குடிநீர் வடிகால் நிதி | 5,25 | 3,83 | 9,08 |
| மின் பிரிவு | 25,69 | 1,41 | 27,10 |
| | 48,92 | 24,33 | 73,25 |



### புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் :

11. மாநகராட்சிப் பள்ளிகளில் பள்ளி மாணவ மாணவியருக்கு இத்திட்டத்தின் கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. 1991 ஜூலை மாதத்திலிருந்து மாநகரத்திலுள்ள அரசு தனியார் மற்றும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளிலும் இத்திட்டத்தை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது. மொத்தம் 733 மையங்களில் பயன்பெறும் மாணவ மாணவியர் எண்ணிக்கை 2,05,111 ஆகும்.

### பூங்காக்களும் விளையாட்டுத் திடல்களும்:

12. சென்னை மாநகராட்சி 88 பூங்காக்களையும் 80 விளையாட்டுத் திடல்களையும் பராமரித்து வருகிறது. இவற்றை மேம்படுத்துவதற்காக 1991–92-ல் ஒதுக்கிய தொகை ரூ. 50 லட்சமாகும். 1992–93-ல் இது கணிசமாக அதிகரிக்கப்பட்டு ரூ. 125 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே வரும் ஆண்டில் பூங்காக்களும் விளையாட்டுத் திடல்களும் இன்னும் சிறப்பாகப் பராமரிக்கப்படும்.

### எழில்மிகு சென்னை—2000 :

13. சென்னை நகரத்தின் திட்டமிட்ட வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு அரசு, "எழில்மிகு சென்னை—2000" என்னும் பெரும் திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூ. 1,250 கோடியாகும். அதில் நகர மக்களுக்கான அடிப்படை வசதிகள் அளித்திட ரூ. 135 கோடிக்கான பணிகளை சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும். மாநகராட்சி இயன்ற அளவுக்கு தனது நிதி ஆதாரங்களிலிருந்து நிதி ஒதுக்கியும் நகராட்சிகள் நகர்ப்புற மேம்பாட்டு நிதியிலிருந்து கடன் உதவி பெற்றும் இந்த ரூ. 135 கோடிக்கு அதிகமாகவே மாநகராட்சியால் செலவிடப்படும்.

## இயல்—5.

### மதுரை மாநகராட்சி.

1971 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி முதல் மதுரை மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மதுரை மாநகராட்சியில் மக்கள் தொகை 9.51 இலட்சமாகும். மாநகராட்சியின் பரப்பளவு 51.85 சதுர கிலோமீட்டர் ஆகும். வார்டுகளின் எண்ணிக்கை 72. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மாநகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டு நிலைக் குழுக்களின் பணிகளை ஆற்றி வருகிறார்.

2. 1992–93-ல் இம்மாநகராட்சியின் வரவு–செலவு பின்வருமாறு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது :—

வரவு.

| | வருவாய்க் கணக்கில் வரவு. | மூலதன வரவு. | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் | இலட்சங்களில்.) | |
| பொதுநிதி | 16,26 | 16.94 | 33.20 |
| தொடக்கக் கல்வி நிதி | 2.95 | 90 | 3.85 |
| குடிநீர் வடிகால் நிதி | 6.84 | 2.15 | 8.99 |
| மின் பிரிவு | 25.77 | 1 41 | 27.18 |
| | 51.82 | 21.40 | 73.22 |

செலவு.

| | வருவாய்க் கணக்கில் செலவு. | மூலதனச் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் | இலட்சங்களில்.) | |
| பொது நிதி | 16,95 | 16,29 | 33,24 |
| தொடக்கக் கல்வி நிதி | 1,03 | 2,80 | 3,83 |
| குடிநீர் வடிகால் நிதி | 5.25 | 3,83 | 9,08 |
| மின் பிரிவு | 25,69 | 1,41 | 27,10 |
| | 48,92 | 24,33 | 73,25 |



3. மதுரை மாநகராட்சி மொத்தம் 523 கிலோமீட்டர் சாலைகளைப் பராமரித்து வருகிறது. 1992–93 ஆம் ஆண்டில் சாலைகள் அமைப்பதற்காகவும், செப்பனிடுவதற்காகவும் மாநகராட்சி ரூ. 2.23 கோடி செலவிடவிருக்கிறது. மனைப் பிரிவு ஒப்புதல் செய்யப்படாத பகுதிகளில் தற்போதுள்ள மண் மற்றும் சரளை சாலைகளை தார் சாலைகளாக மாற்றும் பணியும் இதில் சேர்ந்துள்ளது.

**கட்டடங்கள் :**

4. மாநகராட்சிக் கட்டடங்களை (பள்ளிக் கட்டடங்கள் உட்பட) பராமரிப்பதற்காக ரூ. 1.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

5. தத்தனேரி மயானத்தில் ரூ. 25 இலட்சம் செலவில் அரசு நிதி உதவியுடன் கட்டப்பட்டு வரும் மின் எரியூட்டும் சாதனம் கட்டி முடிக்கப்பட்டு 1992-93-ல் பயன்படுத்தப்படும்.

6. நடைபாதை வாசிகள் இரவில் குறைந்த செலவில் தங்கும் வசதிக்காக ''இரவு தங்கும் விடுதி'' மேலவெளி வீதியில் மாநகராட்சி இடத்தில் ரூ. 12.50 இலட்சம் மதிப்பீட்டில் ஹட்கோ கடன் ரூ. 8.18 இலட்சம் உட்பட நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட உள்ளது.

**துப்புரவுப்பணி :**

7. நாள் ஒன்றுக்கு சராசரியாக 400 முதல் 450 மெட்ரிக் டன் குப்பையும் 10 மெட்ரிக் டன் மலமும் சேகரிக்கப்பட்டு மேலூர் சாலையில் உள்ள உரக் கிடங்குக்கு அனுப்பப்படுகிறது. தற்போது மாநகராட்சியில் 2,604 துப்புரவுப் பணியாளர்கள் பணி செய்கின்றனர். துப்புரவுப் பணிக்கு மாட்டு வண்டிகள் 115-ம் லாரிகள், டிரக்குகள் போன்ற உந்து வண்டிகள் 49-ம் பயன்படுத்தப் படுகின்றன.

**குடிநீர் வழங்குதல் :**

8. குடிநீர், கிணற்று நீர் வழங்கும் அமைப்பின் கீழ் 805 கி.லி. அளவிற்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மொத்தம் குடிநீர்க் குழாய் இணைப்புகள் 51,239 பராமரிக்கப்பட்டு வருகின்றன. குடிநீர் வழங்கும் குழாய் பொருத்தப்படாத இடங்களுக்கு குடிநீர் 15 லாரிகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. 1992—93 ஆம் ஆண்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிக்காக ரூ. 44 இலட்சத்தில் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

**கழிவுநீர் அகற்றுதல் :**

9. சாக்கடை இணைப்புகள் மொத்தம் 41,481 பராமரிக்கப் பட்டுவருகின்றன. 1992—93 ஆம் ஆண்டில் சாக்கடை அமைத்தல், மற்றும் பராமரிப்புப் பணிக்காக ரூ. 54 இலட்சம் செலவில் வேலைகள் நடைபெறும். 11,286 மீட்டர் நீளம் திறந்த சாக்கடை கட்டுவதற்கான ரூ. 40 இலட்சமும் இதில் அடங்கும்.

10. மதுரை மாநகராட்சியில் மொத்தம் 542 கழிப்பறைகள் உள்ளன. இதுவரை தண்ணீர் வசதியுடன் 284 கழிப்பறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மீதி கழிப்பறைகளுக்கு லாரி மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்துக் கழிப்பறைகளுக்கும் ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் நிரந்தர தண்ணீர் வசதி செய்து தரும் பணி 1992—93 ஆம் ஆண்டுக்குள் நிறைவேறும்.

தெரு விளக்குகள் :

11. மாநகராட்சியில் உள்ள தெரு விளக்குகள் மொத்தம் 15,405-ல் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பஞ்சாயத்துப் பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் 5,497 தமிழ்நாடு மின் வாரியத்தினாலும், மதுரை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள மின் விளக்குகள் 9,908 தொடர்ந்து மாநகராட்சியாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மின் பிரிவு :

12. தெரு விளக்குகளைப் பராமரிப்பதுடன் மதுரை மாநகராட்சி மின்பிரிவு பின்வரும் மின் இணைப்புகளுக்கு மின்சாரம் வழங்கும் பணியையும் செய்து வருகிறது :—

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. உயர் அழுத்தம் | | 28 |
| 2. தாழ்வு அழுத்தம். | (அ) வீட்டு உபயோகம் | 58,525 |
| | (ஆ) வணிகமுறை உபயோகம் | 23,950 |
| | (இ) தொழிற்சாலைகள் | 5,009 |
| | (ஈ) குடிசைத் தொழில்கள் | 427 |
| | (உ) மற்றவை .. | 807 |
| | மொத்தம் .. | 88,746 |

1992—93-ஆம் ஆண்டில் எம்.யு.டி.எப். கடன் நிதியில் ரூ. 50 இலட்சம் கடனாகப் பெற்று 6-வது மற்றும் 7-வது புதிய மின் வழங்கு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நகரமைப்புப் பிரிவு :

13. பொது மக்கள் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மனைப் பிரிவு ஒப்புதல் அளிக்காத பகுதிகளிலும், மனைப்பிரிவு ஒப்புதலாகி சாலைகள் ஒப்படைக்கப்படாத பகுதிகளிலும் அரசு நிதி உதவியுடன் சாலைகள் அமைக்கப்படுவதோடு குடிநீர் வடிகால் வசதிகள் மற்றும் மின் வசதிகள் ஆகியவையும்



செய்யப்பட்டு வருகின்றன. சாலையமைக்கப்பட்ட பின், கட்டிட வரைபடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படும். இதன் மூலம் சாலையமைப்புக் கட்டணம், குடிநீர் வடிகால் கட்டணம், மின் கட்டணம் போன்றவற்றின் மூலமாக மாநகராட்சிக்கு வருவாய் கிடைக்கும்.

சமூக நலத் திட்டங்கள் :

14. கீழ்க்கண்ட சமூகநலத் திட்டங்கள் அரசு மானியத்துடன் மதுரை மாநகராட்சியால் 1992—93லும் தொடர்ந்து செயல் படுத்தப்படும் :

(1) புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவியர் 22,590 பேர்களுக்கு சத்துணவு.

(2) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவி.

(3) டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவி

(4) நேரு வேலை வாய்ப்புத் திட்டம்.

15. மாநகராட்சி நிர்வாகத்தில் 54 ஆரம்பப் பள்ளிகளும் 13 நடுநிலைப் பள்ளிகளும் 12 உயர்நிலைப்பள்ளிகளும் 8 மேல் நிலைப் பள்ளிகளும் உள்ளன.

16. மாநகராட்சி பள்ளி ஆசிரியர்கள் 1—4—1986 முதல் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்பட்டனர். 31—3—1990வரை இவர்களுக்கு சம்பளம் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. 1—4—1990 முதல் அரசு நிதியிலிருந்து சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. 1—2—1991 முதல் மாநகராட்சிப் பள்ளிகள் ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வரப்பட்டுள்ளன.

நகராட்சி நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் :

17. தமிழ்நாடு அரசு நகராட்சிகளின் நகர்ப்புற வளர்ச்சி நிதித் திட்டங்களின் கீழ் மதுரை மாநகராட்சிக்கு சாக்கடை, மழைநீர் வடிகால், சாலைப் பராமரிப்புக் கருவிகள், தெரு விளக்குகள் போன்ற பணிகளுக்காக ரூ. 3 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. குப்பை அகற்றுவதற்கான உந்து வண்டிகளும் சாலை உருளை உந்து வண்டிகளும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. மின் கணிப்புப் பொறி ஒன்று விரைவில் வாங்கப்படவிருக்கிறது.

18. திட்ட மேலாண்மைக் குழுமம் வருவாய் தரும் அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டுவதற்கு ரூ. 3 கோடி ஒதுக்கீடு செய்ய இசைந்துள்ளது. இத்திட்டத்தில் 1992—93-ல் அங்காடிகள், வணிக மையங்கள் ஆகியவை மதுரை நகரில் ஐந்து இடங்களில் கட்டப்படும்.

## இயல் 6.

## கோயம்புத்தூர் மாநகராட்சி.

கோயம்புத்தூர் மாநகராட்சி 1981 ஆம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதி அமைக்கப்பட்டது. மாநகரத்தின் மொத்தப் பரப்பளவு 105.60 சதுர கி.மீ. ஆகும். 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 12 இலட்சம் ஆகும். மாவட்ட ஆட்சித் தலைவர் மாநகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டு மாநகராட்சி மன்றத்தின் அதிகாரங்களை செலுத்தி வருகிறார்.

2. 1991—92-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளின்படி மாநகராட்சியின் மொத்த வரவு செலவு விவரங்கள் வருமாறு:—

| (1) | வரவு (2) | செலவு (3) |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| பொதுக் கணக்கு | 18,70 | 22,00 |
| குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதி. | 7,21 | 6,31 |
| மின் பிரிவு | 18,74 | 18,32 |
| | 44,65 | 46,63 |

3. பல்வேறு குடிநீர் வடிகால் திட்டங்களைச் செயல்படுத்த முன் ஆண்டுகளில் அரசிடமிருந்தும், ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்தும் மாநகராட்சி பெற்ற கடன் தொகைகளில் ஆண்டு தோறும் செலுத்தப்பட வேண்டிய தொகைகளை பல ஆண்டுகளாகச் செலுத்த இயலவில்லை. நிதிப் பற்றாக்குறை ஆண்டு தோறும் பெருகி வருகிறது.

4. மாநகராட்சி 608 கி.மீ. சாலைகளை பராமரித்து வருகிறது. 1991—92 ஆம் ஆண்டில் மேலும் 150 கி.மீ. சாலைகளை மேம்படுத்தக் கருதப்பட்டது. அவற்றுள் பேருந்துகள் செல்லும் பெரிய சாலைகளுக்கு கல் தள சாலைகள் போடப்பட்டதுடன், ஜல்லி சாலைகள் தார் சாலைகளாக மாற்றப்பட்டன.



5. கணபதி பகுதியையும், ஆவாரம்பாளையம் பகுதியையும் இணைக்கும் சங்கனூர் பள்ளம் பாலத்தை மொத்தம் ரூ. 28. இலட்சம் செலவில் கட்டும் பணி நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு நடந்து வருகிறது. இப்பணி 1992-93-ல் முடிவடையும்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள் :

6. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிதி மூலமாக பெறப்படும் உலக வங்கி நிதி உதவியுடன் பின்வருவம் பணிகளை அமுலாக்க கருதப்பட்டுள்ளது :—

| வரிசை எண். மற்றும் பெயர். | உத்தேச செலவு. | அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ள தொகை. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்). | |
| 1. பாலக்காடு சாலையில் சரக்குந்துகள் நிறுத்துமிடம் அமைத்தல். | 50 | 50 |
| 2. பெரியகடை வீதியில் நவீன வணிக மையம் கட்டுதல். | 400 | 210 |
| 3. குப்பை அகற்றும் பணிக்காக உந்து வண்டிகளும் தளவாடங்களும் வாங்குதல். | 121 | 121 |
| | 571 | 381 |

இதுவரை குப்பை அகற்றும் பணிக்கான வாகனங்கள் வாங்குவதற்காக ரூ. 71 இலட்சம் தரப்பட்டுள்ளது. தானே கொட்டக்கூடிய லேலண்ட் லாரிகள் 8-ம், சாலை பெருக்கும் மெகானிக்கல் சாதனம் ஒன்றும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. மேலும் மாநகராட்சிக்கு வருவாய் தரக்கூடிய வகையில் மொத்தம் ரூ. 15 இலட்சம் செலவில் கட்டணக் கழிப்பிடங்கள் கட்டவும் கருத்துருக்கள் உள்ளன.

8. இவ்வாண்டு வ.உ.சி. மைதானத்தில் உள்ள காலியிடத்தில் புதிய பூங்கா ஒன்றை ரூ.45 இலட்சம் செலவில் அமைப்பதற்கான கருத்துரு ஒன்றை மாநகராட்சி, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு அனுப்பியுள்ளது.

9. சத்தியமூர்த்தி சாலையில் 1992–93-ல் ரூ. 3 இலட்சம் செலவில் விளையாட்டு வசதிகள் மையம் ஒன்று அமைக்க கருதப் பட்டுள்ளது.

<u>குடிநீர் வழங்கல் :</u>

10. கோயம்புத்தூர் மாநகரில் மொத்தம் 575 கி.மீ. நீள குழாய் அமைப்புகள் மூலம் சிறுவாணி குடிநீர் வழங்கப்படுகிறது. குடிநீர் குழாய் இல்லாத பகுதிகளுக்கு 12 லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இம்மாநகராட்சியில் தற்போது 57,509 வீட்டு குழாய் இணைப்புகளும் 1,149 பொதுக் குழாய்களும் உள்ளன. 1992-93-ல் குடிநீர் குழாய் அமைக்கப்படாத பகுதி களில் ரூ. 70 இலட்சம் செலவில் குடிநீர் குழாய்கள் அமைக்க கருத்துரு உள்ளது. மேலும் கூடுதலாக 2,000 வீடுகளுக்கு குழாய் இணைப்புகளும், கூடுதலாக 50 பொதுக் குடிநீர் குழாய் களும் அமைக்கப்படும்

11. உலக வங்கி உதவியுடன் ரூ. 75 கோடி செலவில் பில்லூர் குடிநீர் வினியோக திட்டம் நிறைவேறி வருகிறது. இதில் மாநகராட்சியின் பங்கு ரூ. 40 கோடி ஆகும். இத் திட்டம் 1993 மார்ச் மாதத்திற்குள் முடிவடையும்.

12. தற்போதுள்ள 162 ஆழ் குழாய் கிணறுகள் ஆகியவற் றோடு வரும் கோடையில் கூடுதலாக பொதுமக்கள் பயன் படுத்துவதற்கு 45 ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்படும். கிணற்று நீரை குழாய்கள் மூலம் வழங்கும் வசதியும் விரிவாக்கப் படும்.

13. 1991-92-ல் கழிவு நீர் வடிகால் அமைக்க ரூ.. 120 இலட்சமும், ஏற்கனவே உள்ள கழிவு நீர் வடிகால்களை பரா மரிக்க ரூ. 120 இலட்சமும் ஒதுக்கப்பட்டன.

<u>மின் பிரிவு :</u>

14. மாநகராட்சி பகுதியில் மாநகராட்சியானது 16,293 தெரு விளக்குகளை பராமரித்து வருகிறது. மின்சாரம் சரியாக வழங்கப்படவும், மின் இழப்பைத் தவிர்க்கவும் 15 புதிய மின் மாற்றுகளை அமைக்கவும், ஏற்கனவே உள்ள 5 மின் மாற்றி களின் ஆற்றலை அதிகரிக்கவும் மொத்தம் ரூ. 30 இலட்சம் செலவிடப்படும். மேற்கொள்ளவிருக்கும் வேறு சில மேம் பாட்டுப் பணிகள்—

(1) கூடுதலாக தெரு விளக்குகள் அமைத்தல் ;

(2) கிராஸ் கட் சாலையில் இரயில்வே மேம்பாலப் பகுதி யில் உள்ள உயர் மின் அழுத்த மேல்நிலை கம்பிகளை மாற்றி ரூ. 56 இலட்சம் செலவில் புதிய உயர் அழுத்த கேபிள்கள் மாற்றுதல் ;



(3) மின் பழுது பார்க்கும் பணிகளை துரிதமாக செய்ய விசை ஏணி பொருத்திய லாரி வாங்குதல்.

<u>கல்வி :</u>

15.கோவை மாநகராட்சி 64 தொடக்கப்பள்ளிகள், 14 உயர் தொடக்கப் பள்ளிகள், 1 நடுநிலைப் பள்ளி, 13 உயர்நிலைப் பள்ளிகள், 9 மேல்நிலைப் பள்ளிகள், காது கேளாதோர், வாய் பேசாதோர் பள்ளி 1, ஆக 102 மாநகராட்சிப் பள்ளிகளின் நிர்வாகப் பொறுப்பை வகித்து வருகிறது. அப்பள்ளிகளின் கட்டிடங்களும் மாநகராட்சிப் பொறுப்பில் உள்ளன. இப் பள்ளிகளின் ஆசிரியர்கள் 2,004 பேரும் அரசு ஊழியர்கள் ஆவர். மாணவர் எண்ணிக்கை 56,203.

16. மேற்சொன்ன பள்ளிகளில், 95 பள்ளிகளில் மொத்தம் 36,000 மாணவ, மாணவியருக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் நடுப்பகல் உணவு வழங்கப்படுகிறது. 95 அமைப்பாளர்கள், 100 சமையல்காரர்கள் மற்றும் 100 உதவியாளர்கள் ஆகியோர் பணி புரிகின்றனர்.

<u>பொது சுகாதாரம் :</u>

17. பொது சுகாதாரப் பணிகளில் 1,857 சுகாதாரப் பணி யாளர்கள் பணி புரிகின்றனர். ஒரு நாளைக்கு 600 மெட்ரிக் டன் அளவு குப்பை சேகரிக்கப்படுகிறது. இவற்றை கொண்டு செல்ல பொது சுகாதாரத் துறையில் 30 உந்து வண்டிகள் உள்ளன.

18. மாநகராட்சி சுகாதாரப் பணியாளர்களுக்காக குடிசை மாற்று வாரியம் கட்டி வரும் குடியிருப்புகள் 288-ம் 1992-93-ல் முடிவடையும்.

19. இந்திய மக்கள் தொகை திட்டம் V-ன் கீழ் குடும்ப நலத் திட்டங்களை மேம்படுத்த பல் நோக்கு சுகாதாரப் பணி யாளர்கள் 181 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மகப்பேறு இல்லங்கள் 10, அறுவை அரங்கம் ஒன்று ஆகியவை கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஏற்பளிக்கப்பட்டு, இவற்றுள் 5 மகப் பேறு இல்லங்கள் கட்ட ரூ. 53 இலட்சம் ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது.

20. வ.உ.சி. பூங்காவில் ரூ. 3 இலட்சம் செலவில் கட்டப் பட்டு வரும் நவீன நீச்சல் குளம் 1992–93-ல் கட்டி முடிக்கப்படும்.

21. குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1992–93-ல் 1,500 குடியிருப்புகள் பயன் பெறும். இதற்காக அனுமதிக்கப் பட்டுள்ள கடன் தொகை ரூ. 47.25 இலட்சம், மானியத் தொகை ரூ. 12 இலட்சம் ஆகியவற்றைக் கொண்டு 1,500 குடும்பத்தினர் தங்கும் குடியிருப்புகளை மேம்படுத்திக் கொள்ள உதவி வழங்கப் படும்.

22. கோவை மத்திய பேருந்து நிலையத்தில் ரூ. 8.8 இலட்சம் செலவில் இரவு தங்க வேண்டியுள்ள ஏழைப் பயணிகள் தங்கும் வகையில் இரவு தங்கும் இடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இது 1992-93-ல் கட்டி முடிக்கப்படும்.

23. சிறு தொழில் திட்டத்தின்கீழ் மின் கணி பயிற்சி. துணி தைத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி பழுது பார்த்தல், புத்தக பைண்டிங் ஆகிய தொழில்களில் மொத்தம் 550 பேருக்கு ரூ. 3.78 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. மீதமுள்ள ரூ. 4.47 இலட்சம் 1992-93-ல் செலவிடப்படும்.

164976
D
V211,31(N92
N92.231